செய்யப்பட்டது. மேலும் உறுப்பினர்களுக்கு இரவு உணவு தேவையா என்பதை செயலக மார்ஷல் மூலமாகக் கேட்டறியப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள தங்களுக்கு உணவு தேவையில்லை எனறும், தண்ணீர் மட்டும் அனைவருக்கும் தந்தால் போதும் என்றும் கூறினார்கள. மேலும் தாங்கள் உண்ணா விரதம் இருப்பதாகவும், இந்த நிலையில் தங்களுக்கு உணவு வேண்டுமா என்று கேட்பது, எங்களை கிண்டல் செய்வதாக உள்ளது என்றும் அவர்கள் மார்ஷலிடம் தெரிவித்ததாகத் தெரிகிறது. உடனடியாக அவர்கள் விரும்பிய வண்ணம், தண்ணீர் மடடும் கேட்ட காரணத்தால் சுத்தப்படுத்தப்பட்ட 'டிஸ்டில்ட் வாட்டர்' பிஸ்லேரி தண்ணீர் அவர்களுக்கு வழங்கப் பட்டது. இதற்கிடையில் உறுப்பினர்கள் வெளியிலிருந்து பிஸ்கட் மற்றும் சில உணவு வகைகள் வரவழைத்து சாப்பிட்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, பிஸ்லேரி தண்ணீர் அவர்களுக்கு வழங்கப்படடது.

. . . பேரவையில் உறுப்பினர்கள் திருவாளர்கள் குமரிஅனந்தன், தம்புசாமி, பழனிசாமி, அதன் பின்னர் அவர்களோடு வந்து சேர்ந்து கொண்ட பரிதி இளம்வழுதி மற்றும் சில உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் இருக்கைக்குப் பக்கத்தில் ஒவ்வொருவரர்க வந்து நின்று பேசியதாகத் தெரிய வருகிறது. உறுப்பினர்கள் இரவிலும் பேரவையிலேயே தொடர்ந்து

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

அவை ஒத்திவைக்கப்பட்ட பிறகு சில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவையிலேயே தங்கியதுபற்றி சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

இருந்த காரணத்தால் அவர்களுக்கு தலையணை மற்றும் போர்வை தேவைப்படுமா என்று கேட்டறியப்பட்டது. ஆனால் அவர்கள் தேவையில்லை என்று கூறிவிட்டனர். உறுப்பினர்கள் வசதிக்காக முன்னாள் மேலவை மண்டபத்தில் அருகாமையில் உள்ள கழிப்பறைகளும் திறந்து வைக்கப்பட்டு இருந்தன. பெண் உறுப்பினர்கள் வசதிக்காக பெண் உறுப்பினர்கள் ஓய்வறையும் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அங்கும் கழிப்பறை வசதி இருக்கிறது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். இந்தக் கழிப்பறையை அவ்வப்போது சுத்தம் செய்வதற்குப் இரவு நேரத்திலும் கூட இங்கே துப்புரவுப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு அப்பணியையும் செய்ய அறிவுறுத்தப்பட்டார்கள்.

.. சில உறுப்பினர்கள் இரவில் வெளியிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் அறையில் தங்கியிருந்த விருந்தினர்களால் கொண்டு வரப்பட்ட உணவைச் சாப்பிட்டதாகவும் தெரிய வருகிறது. இந்த நிலையில் சட்டப் பேரவைச் செயலாளர், சில பத்திரிகைகைகளில் வந்துள்ளதைப் போல எதிர்க் கட்சித் தலைவரையோ சில உறுப்பினர்களையோ சந்திக்கவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. நேற்றைய இரவு முழுவதும் அந்த உறுப்பினர்கள் பேரவையிலேயே தங்கினார்கள். இதற்காக பேரவையிலும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இது போன்ற சம்பவங்கள் பற்றி பிரச்சினை

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

அவை ஒத்திவைக்கப்பட்ட பிறகு சில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவையிலேயே தங்கியதுபற்றி சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

வரும்போது 'கவுல் அண்ட் ஷக்தர்' எழுதிய பாராளுமன்றத் தன்மைகளும் வழிமுறைகளும் என்ற நூலில் மூன்றாம் பதிப்பு பக்கம் 254-இல் எந்த ஒரு உறுப்பினரும் பேரவை ஒத்திவைத்தபின் அதிக பட்சம் ஒருமணி நேரம் வரை பேரவையிலே இருக்கலாம் என்றும் அதற்குப் பிறகு இருக்க வேண்டுமானால் பேரவைத் தலைவரிடம் முன்னனுமதி பெற்றுத்தான் இருக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

..28—4—1965 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது மேற்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று உறுப்பினர்கள் தர்ணா உண்ணாவிரதம் மற்றும் வேறுவிதமான மதம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பேரவைக்குள் ஈடுபடக்கூடாது என பாராளுமன்றத்தில் 28—4—1965 ஆம் தேதி நடைபெற்ற விவாதத்தில் முடிவு எடுக்கப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவைத் தலைவர் அவர்களைச் சந்திக்க வந்த நிருபர்களிடமும் இந்த விளக்கத்தைத் தெரிவித்து இருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் அரசு தலைமைக் கொறடா ஆகியோரும் பேரவைத் தலைவர் அறையிலேயே இருந்தோம். பேரவைச் செயலாளரும், செயலக அலுவலர்களும் நேற்றையதினம் இரவு அலுவலகத்திலேயே இருந்தனர். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அறையிலேயும் சில விருந்தினர்கள் தங்கியிருந்தார்கள்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

அவை ஒத்திவைக்கப்பட்ட பிறகு சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையிலேயே தங்கியது பற்றி சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

..பேரவையிலிருந்த உறுப்பினர்கள் பேரவையை விட்டு வெளியே வர வாய்ப்பு இருந்ததினாலும், உறுப்பினர்கள் உள்ளே இருந்து வெளியே செல்வதற்கும், வெளியிலேயிருந்து உள்ளே வருவதற்கும் ஒரு நுழைவு வாயில் மூலமாக மாண்புமிகு பெண் உறுப்பினர்கள் ஓய்வு அறைக்கு எதிரில் உள்ள அந்த வாயில் திறந்து வைக்கப்பட்டு, உள்ளே வருபவர்களும் வெளியே செல்பவர்களும் அனுமதிக்கப் பட்டார்கள் என்பதும் நடந்த சம்பவம் ஆகும். சில செய்தித்தாள்களில் செய்திகள் வெளிவந்து இருப்பதைப் போலவும் சிலர் வெளியில் அறிக்கைகளாகக் கொடுத்திருப்பதைப் போன்றும், எந்த உறுப்பினரும் இங்கே சிறை வைக்கப்பட்டதைப் போன்றோ வெளியே செல்ல முடியாமலோ அல்லது உள்ளே வர முடியாமலோ இருந்த நிகழ்வு இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

..நேற்றையதினம் நடந்த சம்பவம் என்பது நான் இப்போது தெரிவித்த விவரங்களிலிருந்து புலப்படும். பேரவை முடிந்து ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் எவரும் பேரவைக்குள் இருத்தலாகாது என்கிற தெளிவான நடைமுறைகள் இருந்தும்கூட, அந்த உறுப்பினர்கள் இங்கேயே இருக்கப் போகிறோம் என்று வற்புறுத்திய செய்தி வந்தவுடன் அவர்களுக்கு விளக்குகளும் ஏனைய கழிவறை மற்றும் தூங்குவதற்குரிய வசதிகளும் இங்கே இயற்கையாகவே செய்யப்பட்டிருந்தன என்பது

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

அவை ஒத்திவைக்கப்பட்ட பிறகு சில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவையிலேயே தங்கியதுபற்றி சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

தான் நடந்த சம்பவமாகும். எனவே சில செய்தித்தாள்களில் வந்திருப்பதைப் போன்று எந்தவிதமான அசம்பாவிதமும் இங்கே நடைபெறுகிற சூழ்நிலை எதுவும் நேற்று நடைபெறவில்லை. விதிமுறைகளின்படி அந்த நேரத்திற்குப் பின்னரும் இருந்தவர்கள் வேறு எந்த நடவடிக்கைக்கும் ஆளாகாத அளவிற்கு அவர்கள்—மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள்—விருப்பப்படி இருக்க விரும்புகிறார்கள் என்று சொன்னால் இருக்கட்டும் என்கிற பெருந்தன்மையின் காரணமாக அவர்கள் இங்கே இருக்க அனுமதிக்கப்பட்டதையும் நான் சொன்ன வசதிகள் எல்லாம் சில செய்யப்பட்டதையும் மேலும் சில வசதிகள் செய்ய முன்வந்ததையும் நேற்றைய தினம் இரவு நேரத்தில் இங்கே இருந்த பத்திரிகை நிருபர்களும் நன்கு அறிவீர்கள் என்கிற காரணத்தாலும், இது நாட்டுக்கும் தெரியவேண்டும் என்கிற காரணத்தாலும் இதற்கு வேறு எந்த சாட்சியும் தேவையில்லை. நிருபர்களே இருந்த காரணத்தால் இது நடந்த சம்பவம் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' 367—370

''நேற்று 20—4—1993 ஆம் தேதி காவல் துறை பற்றிய மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெற்று இறுதியாகப் பேச வேண்டிய உறுப்பினர் திரு. எஸ்.எம். கிருஷ்ணன் அவர்களை முன்கூட்டியே பேச வேண்டும் என்று பெயர் கொடுக்கப்பட்டு இருந்ததால், அவர் பேச வேண்டும் என்று

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

அவை ஒத்திவைக்கப்பெறுதல்—

20—4—1993-ஆம் நாளன்று அவை திடீரென ஒத்தி வைக்கப்பட்டதாக சில பத்திரிகைகளில் வந்த செய்தி குறித்து —பேரவைத் தலைவரின் தீர்ப்பு—

அவரை அழைத்தேன். அவர் பேச ஆரம்பித்தபோது, அவர் கட்சியைச் சார்ந்தவர்களே அவரைப் பேச வேண்டாம் என்று தடுத்து, எழுந்து பேச ஆரம்பித்த உறுப்பினரையும் அருகிலே இருந்தவர்கள் வலுக்கட்டாயமாக உட்கார வைத்ததோடு, எதிர்க்கட்சித் தலைவர் முதற்கொண்டு அக்கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் உட்காருங்கள் உட்காருங்கள் என்று வற்புறுத்தியதன் காரணமாக, அவர் நான் அனுமதித்தும் பேசாத நிலையில் பேரவைக் கூட்டத்தைப் பிற்பகல் 2.16 மணிக்கு ஒத்திவைத்தேன். அவ்வாறு ஒத்திவைத்தது என்பது அன்றாட நடைமுறையின்படி, பேரவையின் ஏனைய அலுவல்கள் அனைத்தும் முடிந்தது என்று அறிவித்து அதனைத் தொடர்ந்து நாள்தோறும் கூட்டத்தை ஒத்திவைத்து மறுநாள் கூடும் என்று அறிவித்ததைப் போலவே நேற்றும் பிற்பகல் 2.16 மணிக்குப் பேரவையின் அன்றைய அலுவல்களை ஒத்திவைத்து மீண்டும் பேரவை 21—4—1993 அதாவது இன்று காலை 10.00 மணிக்கு கூடும் என்று வழக்கம் போல் அறிவித்தேன். ஆனால் சில பத்திரிகைகளில் பேரவைக் கூட்டம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று வெளிவந்துள்ள செய்தி சரியல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். திடீரென்று ஒத்திவைப்பது என்பது ஒரு நாளில் அவையை இப்போது, ஒத்திவைத்து, அடுத்து இந்த நேரத்தில் அல்லது அடுத்து

தலைவர்—தொடர்ச்சி | பக்கங்கள்

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி

20—4—1993 ஆம் நாளன்று அவை திடீரென ஒத்தி வைக்கப்பட்டதாக சில பத்திரிகைகளில் வந்த செய்தி குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு——தொடர்ச்சி.

இன்னொரு நாளில் கூடும் என்று அறிவிப்பதுதான் abruptly adjourned என்று குறிப்பிடப்படலாம். ஆனால் வழக்கம்போல் ஒத்திவைக்கின்றபோது பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்தோடு முடிவுற்றன, மீண்டும் பேரவை நாளை கூடும் என்று அறிவிக்கிற அதே வழக்கத்தின்படி அறிவித்த அறிவிப்பை சில பத்திரிகைகள் திடீரென ஒத்திவைக்கப்பட்டது என செய்திகளாக வெளியிட்டுள்ளது சரியல்ல என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்''. 366—367

உரிமைப் பிரச்சினை—நடைமுறைகள்—

அனுமதி—

தாம் கொடுத்த உரிமைப் பிரச்சினையைப் பற்றி ஓர் உறுப்பினர் வினவத் தொடங்கிய போது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

''அதை நாளைக் காலையிலே எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருந்தேன். இன்றைக்கு கேள்வி நேரம் இல்லை. காவல் துறை மானியக் கோரிக்கை இன்று எடுக்க இருக்கிற காரணத்தால் நாளை அதை எடுத்துக்கொள்ளலாம்.

..நேற்றையதினம் எடுப்பதாகச் சொல்லியிருந்தேன். நேற்று அந்த வாய்ப்பு இல்லை. இன்றைக்கும் கேள்வி நேரம் இல்லை, நேரடியாக நாம் அலுவல்களுக்குச் செல்லுகிற காரணத்தினாலே நாளைக்கு அது எடுத்துக்கொள்ளப்படும்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கைது—

பேரவையில் சில காவலர்களைத் தாக்கியதாகப் பெறப்பெற்ற புகார் மீது நடவடிக்கை—

பேரவையில் 21—4—1993 அன்று சில காவலர்களைத் தாக்கியதாக காவல் துறையில் பெற்ற புகாரின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிதி இளம்வழுதி மற்றும் சி. ஞானசேகரன் ஆகியோர் நேற்று 21—4—1993 அன்று இரவு கைது செய்யப்பட்டு, சென்னை கோட்டையில் உள்ள பி-3 காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கே காவல் நிலைய பெயிலிலேயே சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற காரணத்தால் சொந்த பெயிலிலேயே அவர்கள் செல்லலாம் என்று தெரிவிக்கப்பட்டு, அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் காவல் நிலையத்திற்குள்ளேயே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பேரவையிலேயிருந்து பெற்ற புகாரின் அடிப்படையிலே இன்னொரு சட்டமன்ற உறுப்பினரான திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்களை காவலர்கள் தேடி வருவதாகவும், அவர் இன்னும் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை என்றும் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது Thiru P. V. Rajendran, M.L.A., is still at large and all efforts are being taken to locate him என்கிற செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது

. . இன்று காலையில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும் காவல் நிலையத்திலிருந்தே அவர்கள் சொந்த ஜாமீனிலேயே செல்லலாம் என்று, காவல் துறையினர் போகலாம் என்று சொன்னதற்குப் பிறகும் அவர்கள் போக மறுத்து காவல் நிலையத்திலேயே இருக்கிறார்கள் என்றும் பேரவைக்கு அறிவித்திருந்தேன்.

. . சற்று முன் கிடைத்த தகவலின்படி, அவர்கள் காவல் நிலையத்திலிருந்து போக—

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கைது—தொடர்ச்சி

பேரவையில் சில காவலர்களைத் தாக்கியதாக பெறப் பெற்ற புகார்மீது நடவடிக்கை—தொடர்ச்சி

மாட்டோம் என்று சொன்ன காரணத்தால், நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்று, நீதிமன்றத்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள், அங்கிருந்து சென்றிருக்கிறார்கள் என்கிற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

..இன்னொரு உறுப்பினர் பற்றிய தகவல் வந்தவுடன் அது பற்றியும் தெரிவிக்கிறேன். அது பற்றி இப்போது எந்தத் தகவலும் இல்லை.'' .. 623, 699 700

உறுப்பினர்களை பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கிவைத்தல்

மானியக் கோரிக்கையின் மீது பேச அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் பேசி முடிக்க வேண்டும் என்று தலைவர் அறிவுறுத்திய போது, அவ்வுறுப்பினர் தெரிவித்த சில வாசகங்களைத் தொடர்ந்து தலைவர் அவ்வுறுப்பினரை அவையிலிருந்து வெளியேற்றியபோது தீர்ப்புரைத்ததாவது:

''..பேரவைத் தலைவரைப் பார்த்து ஒரு சமயில் ''இதுதான் வேலையா'' என்று அந்த அளவுக்குப் பேசுகின்ற ஒரு உறுப்பினரை அதற்கு மேற்கொண்டும் இந்த அவையில் பேசவிட வேண்டுமா என்பது தான் நான் வைக்கிற கேள்வி, எனவே அது முறையில்லை. நான் குறுக்கிட்டது, அவருக்கு நேரத்தைப் பற்றி நினைவுபடுத்துவதற்கே. இருந்தும், பேரவைத் தலைவருக்கு அடங்காமல் என்ன வேண்டுமானாலும் பேசுவது என்றால், அதற்கு மேற்கொண்டு அவர் பேச வேண்டியதில்லை என்றுதான் கருதுகிறேன்.''

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்—தொடர்ச்சி

..நான் அவருடைய பேச்சை முடித்து, அடுத்த உறுப்பினரை அழைத்ததற்கு பிறகு அவ்வுறுப்பினர் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. அவைத் தலைவரைப் பார்த்து மரபு மீறி நீங்கள் பேசியது அவை உரிமை மீறிய பிரச்சினை எனவே, either you resume your seat or withdraw from the House. உறுப்பினரை வெளியேற்ற உத்தரவிடுகிறேன். காவலர்கள் அவரை வெளியேற்றலாம்.

(பேரவைக் காவலர்களால் அவ்வுறுப்பினர் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

130, 131

21—4—1993 ஆம் நாளன்று பேரவை கூட்டம் தொடங்கி குறள் வழிபாடு முடிந்தவுடன் வினா விடை-நேரம் துவங்குவதற்கு முன்னரேயே எதிர்க்கட்சியினர் ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கு முயன்றபோது அதற்கு தலைவர் அனுமதி மறுத்த பிறகும் மீண்டும் மீண்டும் எழுப்ப முயன்றபோது தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

..எதிர்ககட்சித் தலைவர் மற்ற உறுப்பினர்கள் அமர வேண்டும். வினாக்கள்-விடைகள நேரத்தில் வேறு எதுவும் எடுத்துக்கொள்ள முடியாது. வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்ததற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய கருத்தை சொல்ல நான் அனுமதிக்கிறேன். இப்போது வேண்டாம்.

..வினாக்கள் விடைகள் நேரத்தில் வேறு அலுவல்களை எடுததுக்கொள்ள வேண்டுமானால், பேரவையில் ஓர் தீர்மானம் வினாக்கள்-விடைகளை ஒத்திவைப்பதற்காக நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்களை பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கிவைத்தல்—தொடர்ச்சி

நீங்கள் என்ன பிரச்சினையைச் சொல்ல வேண்டும் என்றாலும் வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்ததற்குப் பிறகு நான உங்களிடம் கேட்கிறேன். என் உங்களுக்கு இது தெரியாதது அல்ல. எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும் வினாக்கள்-விடைகள் முடிந்ததற்குப் பிறகு எடுத்துக் கொள்வதைத்தான் நம்முடைய மரபாக வைத்திருக்கிறோம். தயவுசெய்து உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

..என்னுடைய முழு ஒத்துழைப்பும் உங்களுக்கு உண்டு, தயவு செய்து உட்காருங்கள். ஜனநாயகத்தின் முறை துளிகூட வழுவாமல் தான் இதுவரையிலும் பேரவையை நடத்திக்கொண்டிருக்கிறேன். இன்றைக்கும் அப்படியே நான் நடத்த வேண்டும். விதிமுறைகள் துளி கூட மாறாமல் நடத்த வேண்டும் என்றே நான் கருதுகிறேன். தயவுசெய்து உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

..நான் பேரவையின் சார்பில்தான், பேரவை உறுப்பினர்களின் அனைவரின் சார்பில்தான், இந்த இடத்திலே அமர்ந்து, என்னுடைய அலுவல்களை கவனிக்கிறேன். விதிமுறைகளை எனக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அந்த விதி முறைகளின்படிதான் நான் நடக்க வேண்டும். எனக்கு என்று எந்த விதிமுறையும் இல்லை. தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டும்.

..எதிர்க் கட்சித் தலைவர் அவ்வப்போது விதிகளில் இருக்கிற நுணுக்கங்களையெல்லாம் எடுத்துச் சொல்கிறவர். நான் அவரை மிகுந்த மரியாதையோடுதான் நடத்துகிறேன். நான் அவருடைய கருத்தின்படியே அவையை நடத்திக் கொண்டிருக்கிறவன். ஆகவே இதில் விதிமுறைகளுக்கு

மாறாக நான் நடக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டாம். விதிமுறைகளின்படி நடக்கவேண்டும் என்று அவ்வப்போது வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறவர் எதிர்க்கட்சித் தலைவர். அந்த விதிமுறைகளுக்கு மாறாக நடக்க வேண்டும் என்று நீங்களே என்னைச் சொல்லக் கூடாது.

. . மரியாதைக்குரிய மூத்த உறுப்பினர் அவர்கள்தான் எல்லா உறுப்பினர்களையும் பதவிப்பிரமாணம் செய்துவைத்து அமர்த்தி வைத்தீர்கள். அவர் தலைமையேற்ற அவையில் எதிர்க்கட்சித்தலைவர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் என்னை அமர்த்தி வைத்தீர்கள். அமர்த்தி வைத்த நீங்கள் இரண்டு பேருமே எனக்குத் துணை இருக்க வேண்டும். குறிப்பாக, இப்படிப் பட்ட நேரங்களில் நீங்கள் தான் துணை இருக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இந்த அளவுக்கு அவை விதிகளுக்கு மாறாக நடக்க வேண்டும் என்று என்னை வற்புறுத்துவதுபோல் எழுந்து நிற்கக் கூடாது. தயவுசெய்து அமரவேண்டும். நீங்கள் எனக்கு விதிகளைக் கொடுத்திருக்கிறீர்கள். விதிகளின்படி பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் மட்டும்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. இதுவரையிலேயும் அவை மரபில் பேரவைத் தலைவர் வந்து அவையை வணங்கிய உடனேயே சத்தமிட்ட வரலாறே இல்லை. இன்றைக்கு அதையும் ஆரம்பித்தீர்கள். நான் திருக்குறள் படித்தேன். நான் திருக்குறள் படிக்கிற நேரத்திலேயும் அமைதி காக்கவில்லை. அதன் பின்னர் வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்கின்றபோது இப்படிச் செய்வது முறையல்ல. வேறு வகையில் அதற்கு ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டு வினாக்கள்— விடைகள் ஒத்திவைக்கப்பட்டாலன்றி இதுவரையிலேயும் எந்தப் பிரச்சினையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அப்படி எடுத்துக்கொண்ட

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

பக்கங்கள்

உறுப்பினர்களைப் பேரவை பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்—தொடர்ச்சி

நேரத்திலே கூட வினாக்கள் -- விடைகளை ஒத்திவைக்காமல் எடுத்தது தவறு என்று இங்கே வாதிடப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் எனக்கு ஒத்துழைக்க வேண்டும். வினாக்கள்— விடைகள் நேரம் முடிந்தவுடன் எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் வாய்ப்பு கொடுக்கிறேன்.

. . கேள்வி நேரம் என்பது மிக இன்றியமையாதது என்பது உறுப்பினர்கள் அறியாதது அல்ல. எனக்கு ஒத்துழைக்க வேண்டும்.

. . யாராவது கேள்வி நேரத்தை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு எனக்கு ஒரு கோரிக்கை வைத்திருக்கலாம். அந்த நான் பேரவை முன்னவருக்கு அனுப்பி தீர்மானத்தை முன்மொழியச் செய்திருப்பேன். ஆனால் அப்படி கோரிக்கையை என்னிடத்திலே யாரும் வைக்கவில்லை. நான் நேற்று பேரவை முடிந்ததிலிருந்து இப்போது வருகிற வரையிலேயும் என்னுடைய அறையில்தான் இருந்தேன். எனவே அந்த கோரிக்கையை கூட நீங்கள் எனக்கு கொடுத்திருக்கலாம். எனவே இதிலே மரபை மீறி விதிமுறைகளை மீறி நான் நடக்க வேண்டும் என்று வற்புறுத்தாதீர்கள். இல்லை என்றால் நான் நடவடிக்கை எடுத்துத்தான் பிறகு பேரவையை நடத்த வேண்டியிருக்கும். எனக்கு இருக்கிற 'ஆப்ஷன்' அதுதான். நான் விதிமுறைகளின்படி. நடக்கிறபோது, விதிமுறைகளின்படி நடக்க விடாமல் என்னை நீங்கள் தடுக்கிறபோது நான் பிறகு விதிமுறைகளின்படி நடவடிக்கை தான் எடுக்க வேண்டி வரும்.

. . எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் ஏனைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அவையில் நின்று கொண்டிருக்கிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி குறிப்பிடுகிறேன். உட்கார வேண்டும் அல்லது நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்களைப் பேரவை பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்— தொடர்ச்சி

. . எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் ஏனைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் நின்று கொண்டிருக்கிற அனைவரும் பேரவையை விட்டு வெளியேற வேண்டும் என்று கட்டளை இடுகிறேன்.

. . காவலர்களை எதிர்க்கட்சித் தலைவர் மிரட்டுவது சரியல்ல. அது அவர்களுடைய கடமையை ஆற்ற விடாமல் தடுப்பதாகப் பொருள். நான் உத்தரவிட்டிருக்கிறேன். நான் உத்தரவிட்டிருக்கிறபோது அவர்கள் வெளியேற்றுவார்கள். அவர்கள் வெளியேற்றுவதை தடுப்பது. அவர்களுடைய கடமையைச் செய்யத் தடுக்கிறீர்கள் என்று பொருள்படும். நான் கட்டளை இட்டிருக்கிறேன். என்னுடைய கட்டளையை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். (எதிர்க்கட்சித் தலைவரும் அவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் பேரவைக் காவலர்களால் அவையை விட்டு வெளியேற்றப்பட்டனர்.)

. . மற்ற உறுப்பினர்கள் தயவுசெய்து அமர கேட்டுக்கொள்கிறேன். பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறவர்கள் விசில் அடித்து கொண்டு செல்லுகிறார்கள் என்பதை அவையினர் இப்போது கவனித்திருக்கிறார்கள். எந்த அளவுக்கு இந்த அவையின் கண்ணியத்தையும், மாண்பையும் பாதிக்கிற செயல் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அவர்கள் எந்த அளவுக்கு கண்ணியத்தைக் காத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். பத்திரிகையாளர்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

. . திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர், காவலர்கள் மற்ற உறுப்பினர்களை வெளியேற்றுகிறபோது காவலர்களோடு இந்த அளவுக்கு மோதுவது சரியல்ல. இது முறையல்ல. அவையை விட்டு வெளியேறவேண்டும். காவலர்கள் அவரை வெளியேற்றவும்.

தலைவர்—தொடர்ச்சி

பக்கங்கள்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்—தொடர்ச்சி

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)

..(வேறு சில கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் எழுந்து நின்று குறுக்கிட்டுக் கொண்டிருந்ததையொட்டி தலைவர் குறிப்புரைத்ததாவது:)

..கேள்வி நேரத்தை ஒத்திவைக்காத சூழ்நிலையில் நீங்கள் எழுப்புகிற எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. தயவு செய்து உட்காரவேண்டும். நீங்கள் விதிமுறைகளின்படி நடக்கிற உறுப்பினர்கள், இந்த நேரத்திலே வேண்டாம். இல்லை என்றால் எதிர்க்கட்சித் தலைவருக்கு என்ன சொன்னேனோ அதுதான் உங்களுக்கும்.

..வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியிலேயும் இருக்கக் கூடாது என்று விதிமுறை இருக்கிறது. லாபியிலிருந்து கூச்சல் போடுகிற உறுப்பினர்களை அப்புறப்படுத்த காவலர்களை கேட்டுக் கொள்கிறேன்.

..கேள்வி நேரத்தை எழுப்ப விடாமல் நீங்கள் தடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் வெளியேற வேண்டும். நான் வெளியேற வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பிறகும் அவர்கள் நின்று கொண்டிருப்பது நல்ல உறுப்பினர்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற அவர்கள் இரண்டு பேருக்கும் அழகு அல்ல. எனவே அவர்களை அவையை விட்டு காவலர்கள் வெளியேற்றக் கேட்டுக் கொள்கிறேன்.

(அந்த இரண்டு உறுப்பினர்களும் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)

உறுப்பினர்களை பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்— தொடர்ச்சி

..காவலர்களால் வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியிலே உள்ள மற்ற உறுப்பினர்களை மிரட்டுவது சரியல்ல. காவலர்களோடு மோதுவது என்பது, அலுவலர்கள் தங்களுடைய பணியைச் செய்ய விடாமல் தடுக்கிற கிரிமினல் குற்றமாகும். எனவே, தங்கள் கடமையைச் செய்ய விடாமல் தடுக்கிற உறுப்பினர்களை அங்கேயிருந்தும் வெளியேற்றப்படவேண்டி வரும். பேரவையிலே இருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் என்பவர்கள், பேரவைக்கு எல்லா வகையிலேயும் புதியவர்கள் 'Strangers' என்றுதான் கருதப்படும். அவர்கள் லாபியிலே இருப்பது என்பது கூட 'Strangers' எப்படி நம்முடைய லாபியிலே வந்து நின்று கொண்டிருந்தால் அது தண்டனைக்குரிய குற்றமோ அதேபோன்று குற்றமே—லாபியிலே இப்போது இங்கே என்னால் வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் இருப்பதும் குற்றமாகும். அப்படிப்பட்ட 'Strangers'-ஐ காவலர்கள் வெளியேற்றுவார்கள். அது தவறில்லை. எனது காவலர்களை லாபியிலே இங்கேயிருந்து வெளியேற்றப்பட்டவர்கள தாக்குவதாகக் கேள்விப்படுகிறேன். காவலர்களை தாக்குவது என்பது முறைகேடானது; கிரிமினல் குற்றமாகும். அதுவும் பணியில் இருக்கிற காவலர்களை தாக்குவது என்பது மிகப் பெரிய கிரிமினல் குற்றமாகும். அதற்குரிய நடவடிக்கைகளைக்கூட, இப்படித் தாக்கிய உறுப்பினர்கள் எதிர்நோக்க வேண்டி வரும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். They are discharging their official duties. அந்த நேரத்தில் அவர்களைத் தாக்குவது என்பது மிகப் பெரிய குற்றமாகும்.

..காவலர்களை தாக்கிய குற்றத்திற்கு ஆளாக வேண்டிவரும். வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள், தற்போது பேரவை

தலைவர்—தொடர்ச்சி

பக்கங்கள்

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்—தொடர்ச்சி

வளாகத்திலே இருப்பது 'Strangers' செய்கிற குற்றமாகும். அந்தக் குற்றத்தைச் செய்கிற எவராக இருந்தாலும் அதற்குரிய தண்டனையை எதிர் நோக்க வேண்டிவரும்.

"பேரவையினுடைய காவலர்களை, வெளியே இருக்கிற சிலர் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது கேள்வி நேரம் மிக இன்றியமையாதது. ஆனால் காவலர்களை இங்கே தாக்குகிறபோது அதன் நடவடிக்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனவே இந்தப் பிரச்சினையை கேள்வி நேரம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்ள இருக்கிறேன். காவலர்களை தாக்கியவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது போன்ற பிரச்சினைகளை கேள்வி நேரம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்ள இருக்கிறேன்."

உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது காவலர்களை தாக்கிய உறுப்பினர்கள் மீது நடவடிக்கை—பேரவைத் தலைவரின் தீர்ப்பு— 275—284

21-4-1993 ஆம் நாளன்று பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க காவலர்கள் உறுப்பினர்களை பேரவையிலிருந்து வெளியேற்றியபோது காவலர்களை தாக்கிய மூன்று உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்து தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :

"இன்று காலையில் விதிமுறைகளுக்கு மற்றும் ஒத்துவராது, விதிமுறைகளுக்கு

உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது காவலர்களை தாக்கிய உறுப்பினர்கள் மீது நடவடிக்கை—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

முழுவதும் புறம்பாக இங்கே நிகழ்வுகள் நடந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிந்தீர்கள். பேரவை விதி 32, "The first hour of every sitting shall, unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. The Speaker may, in his discretion, extend the time for questions. Provided that the Speaker may dispense with the question hour on the first day if the House is to meet at or after 10 A.M. in the forenoon."

என்கிற அந்த 10.00 A.M. என்று இருப்பது ஏற்கெனவே பேரவை 8-30-க்கு கூடிக் கொண்டிருந்தபோது—இப்போது பேரவை கூடிக் கொண்டிருக்கிற நேரம் காலை 10-00 மணி என்று ஆனதற்கு பிறகு 10-00-லேயிருந்து 2.00 வரை என்று அலுவல் நேரம் என இருக்கிறபோது அந்த ரெலவன்ட் ரூல்ஸ் எல்லாம் அந்த ஒரு மணி நேரம் தள்ளி தள்ளி எல்லாவற்றிற்கும் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நன்கு அறிவீர்கள். கில்லட்டின் டைம் கூட, அந்த 9 மணி, 8½ மணி என்று கூடிக் கொண்டிருந்தபோது, 1 மணி என்று இருந்தது. இப்போது 10 மணி என்று இருப்பதால் 1½ மணி என்று திருத்தி விதிகள் குழுவில் அந்த ரெலவன்ட் விதிகள் அனைத்தும் திருத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே விதி இப்படி இருக்க பேரவையில் இன்று காலை கேள்வி நேரம் என்று குறிப்பிட்டு இந்த நிகழ்ச்சி நிரல் ஒதுக்கியதற்குப் பின்னரும் எதிர்க்கட்சித் தலைவரும் அவருடைய பல உறுப்பினர்களும் கேள்வி நேரத்தின் போதே விதிமுறைகளுக்கு மாறாக தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடித்த காரணத்தால் நா...

பக்கங்கள்

உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது காவலர்களை தாக்கிய உறுப்பினர்கள் மீது நடவடிக்கை—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

அனுமதிக்க இயலாமல் போயிற்று. இந்த விதிமுறைகளின்படி அப்படிப்பட்ட முக்கியமான அலுவல் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கருதி இருப்பார்களேயானால் முறைப்படி இந்த கேள்வி நேரத்தை ஒத்திவைக்கவேண்டும் என்கிற கோரிக்கையை என்னிடத்திலே முன் கூட்டியே தெரிவித்திருந்தாலும்கூட, இவ்வளவு முக்கியமான பிரச்சினையைப் பேச வேண்டும் என்று உறுப்பினர்கள் கேட்கிறார்கள்—ஏனென்று சொன்னால் பேரவை யுனானிமஸ்ஸாக தீர்மானித்தால் தான் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க முடியும்—பேரவை முன்னவர் அவர்களிடத்திலும் அதைத் தெரிவித்து கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கலாமா என்பதைக் கூட, நான் கேட்டிருக்க முடியும்; ஆனால் அவர்கள் அந்த வாய்ப்பையும் தவற விட்டுவிட்டார்கள். நான் இங்கே வந்தவுடன் வணங்கி இதுவரையிலேயும் மிகக் கடுமையான பிரச்சினைகள் கூட மன்றத்திலே நடைபெற்ற போதும் சரி பேரவைத் தலைவர் தன்னுடைய ஆசனத்திற்கு வந்து உறுப்பினர்களை வணங்கிய நேரத்திலே அமைதியாக இருப்பார்கள்—அதன் பின்னர் திருக்குறள் சொல்கிற நேரத்திலே அமைதியாக இருப்பார்கள். பேரவைத் தலைவர் உட்கார்ந்த பின்னர் தான் ஏதாவது கேட்க வேண்டும் என்று சொன்னால்கூட எழுந்து தங்கள் கோரிக்கையை வைப்பார்கள். நான் வந்து வணங்கிய உடனே இங்கே கோஷம் இட்டுக் கொண்டு உறுப்பினர்கள் இங்கே குழப்பம் விளைவித்த சூழ்நிலையையும் நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். எனவே இன்றைய கூட்டத்தில் எந்த அளவிலேனும் குழப்பம் செய்ய வேண்டும் என்றே அவர்கள முடிவு எடுத்து நான் வந்து வணங்கிய

நேரத்திலேகூட கோஷம் எழுப்பிய காரணத்தால் திட்டமிட்டுக் அவர்கள் குழப்பம் செய்ய வேண்டும் என்கிற நோக்கத்திலேயே இருந்தார்கள் என்பதுதான் இன்றைக்குத் தெளிவாகிறது. அதைத் தொடர்ந்து அவர்களிடத்திலே நான் பலமுறை திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டும், இப்போது வேண்டாம் கேள்வி நேரம் முடிந்தவுடன் உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன் என்று நான் திரும்பத் திரும்பச் சொல்லியும்கூட அவர்கள் அதை செவிமடுக்காது நான் வினாக்கள்—விடைகள் அலுவலைத் தொடங்குவதற்கு தடையாக, உறுப்பினர்கள் கேள்வி கேட்பதற்குத் தடையாக இங்கே வரம்பு மீறி நடந்துகொண்ட காரணத்தாலே அவர்களை வெளியேறுமாறு பணித்தேன். வெளியேற பணித்தபோது, அவர்கள் வெளியேற மறுத்த காரணத்தால் காவலர்களை விட்டு வெளியேற்ற வேண்டிய கடமை எனக்கு உண்டாயிற்று. காவலர்களை விட்டு அவர்களை வெளியேற்றினேன். காவலர்களை விட்டு வெளியேற்றிய நேரத்தில் நான் திரும்பத் திரும்பச் சொன்னேன், காவலர்கள் என்பவர்கள் என்னுடைய கட்டளையை இங்கே நிறைவேற்றுகிறார்கள், அந்தக் காவலர்களை நீங்கள் பணி செய்ய விடாமல் தடுப்பது என்பது அவர்களுடைய அலுவலைச் செய்ய விடாமல் தடுக்கிற பணியாகும், எனவே அவர்களைத் தடுக்காதீர்கள் என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தேன். பல்வேறு சம்பவங்களில் காவலர்கள் இங்கே உள்ளேயே மிரட்டப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டதை அனைவரும் நன்கு அறிவீர்கள். இன்று எதிர்க்கட்சித் தலைவரே,

அவர்களை வெளியேற்றச் சென்ற காவலர்களை மிகக் கடுமையாக எச்சரித்தார்கள். எச்சரிக்கிறேன், உங்களுக்கு எதிர்காலத்தில் என்ன விளைவு ஏற்படப் போகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அவர்களை எச்சரித்தது, எந்த நோக்கத்திலே அவர்களை எச்சரித்தார் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நேரிடையாகப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். நான் எச்சரிக்கிறேன், உங்களுக்கு எதிர்காலத்தில் பெரிய அழிவு வரும், இப்படியே இருக்கும் என்று நினைக்காதீர்கள் என்கிற அளவுக்கு அவர் எச்சரிக்கிறார் என்று சொன்னால் இந்தப் பேரவையின் கண்ணியத்தையும் மாண்பையும் குறைத்தோடு மட்டுமல்ல, காவலர்களை தங்களுடைய பணியைச் செய்ய விடாமல் வேறு ஏதோ அதிகாரம் தனக்கு இருக்கின்றது என்கிற துணிச்சலில் மிரட்டினார் என்பதுதான் இங்கே நடந்த சம்பவம். அவர்களை வெளியே தூக்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட நிலையில், காவலர்கள் வெளியே லாபியிலே போய் அவர்களை வெளியே செல்லுங்கள் என்று கூறிக் கொண்டிருந்த நேரத்தில் வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களான பரிதி இளம்வழுதி, ஞானசேகரன், பி வி இராஜேந்திரன் ஆகிய மூவரும் தங்கள் கடமையைச் செய்த காவலர்களை திரு பி. தர்மலிங்கம், எஸ் ஐ, பி. 5 காவல் நிலையம், திரு. எம் சின்னமணி, எஸ் ஐ. எச். 6 காவல் நிலையம், திரு. சுப்பிரமணி எஸ்.ஐ. பி.3 காவல் நிலையம், திரு. சீத்தாபதி, காவலர் எண். 7508. திரு. கலையரசன், காவலர் எண். 8765, எண். 2 காவல் நிலையம், திரு. அசோகன், காவலர் எண். 8124, பி.1 காவல் நிலையம், திரு. சிவன் பிள்ளை, காவலர் எண். 5872,

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது காவலர்களை தாக்கிய உறுப்பினர்கள மீது நடவடிக்கை —பேரவைத் தலைவரின் தீர்ப்பு— தொடர்ச்சி

பி1. காவல் நிலையம், திரு. சத்தியநாராயணன், காவலர் எண். 8991, எஃப். 6 காவல் நிலையம் ஆகிய 8 காவலர்களை இந்த 3 பேர் தாக்கியிருக்கிறார்கள் என்கிற சம்பவம் எந்த அளவுக்கு கண்டிக்கத் தக்கது என்பதைப் பேரவை எண்ணிப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட காரியம் பேரவை உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய எல்லா உரிமைகளையும் மீறிய ஒரு செயலாகும். காவலர்கள் என்பவர்கள் இங்கே ஒழுங்குக் கட்டுப்பாட்டை பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க செயல்படுத்துவதற்காக நிறுத்தப்பட்டிருக்கிறவர்கள் ஆவார்கள். பேரவைத் தலைவர், அவர்களுக்கு ஆணையிடுகிறபோது அந்த ஆணையைச் செயல்படுத்தத்தான் செல்கிறார்கள். அவர்களைத் தாக்குவது என்பது, மிகக் கடுமையாகத் தாக்குவது என்பது, அவர்களுக்கு வேறு ஏதேனும் ஆபத்து உண்டாக்குகிற வகையில் தாக்குவது என்பது மிகப்பெரிய கிரிமினல் குற்றமாகும் என்பதை அந்த நேரத்திலேயே எச்சரித்தேன். அதிலும், இது பேரவை வளாகத்திலே நடைபெற்றது என்றாலும், பேரவையை விட்டு வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களுக்கு, பேரவைக்குள் பேரவை உறுப்பினர் என்கிற காரணத்தாலே அவர்கள் பெற்றிருக்கிற எல்லா உரிமைகளையும் இழந்த நிலையிலே இருக்கிறவர்கள். பேரவை வளாகத்திற்குள்ளேயே இன்றைய நாள் முழுவதும் வரக் கூடாது என்கிற அளவுக்கு விதிகளில் தெளிவாக வரையறை செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் அவர்கள் இங்கேயிருந்து எது செய்திருந்தாலும் பேரவை உறுப்பினர் என்கிற உரிமைக்கும் அப்பாற்சென்று அவர்கள் செய்த காரியம் தான் என்கிற காரணத்தால் இந்தக் காவலர்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது காவலர்களை தாக்கிய உறுப்பினர்கள்மீது நடவடிக்கை— பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

களைத் தாக்கிய இந்த உறுப்பினர்கள் மீது, வெளியேற்றப்பட்டு எந்த உரிமையும் இல்லாமல் இருக்கின்ற ஒரு இடத்தில் நின்று தாக்கிய அந்தச் செயலை முறைப்படி கிரிமினல் குற்றமாகக் கருதி அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பேரவையின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

"விசிலடித்தது எல்லாம் வரம்பு மீறிய செயலில் வருகிறது, அவர்களுடைய தன்மையைக் காட்டுவது. இந்தக குறிப்பிட்ட நிகழ்வு என்பது நான் வெளியேற்றியதற்குப்பிறகு அவர்கள் முறைப்படி வளாகத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைமையிலே இருக்கிறவர்கள். வெளியே நின்று காவலர்களைத் தாக்கிய சம்பவம் என்பது மிகக் கண்டிக்கத் தக்கது என்கிற காரணத்தாலேதான் பேரவைத் தலைவர் என்கிற முறையில் பேரவை உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாக்கின்ற அதேநேரத்தில் எனக்குக் கீழே பணியாற்றுகின்ற செயலக அலுவலர்களாக இருந்தாலும், காவலர்களாக இருந்தாலும் காக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கின்ற காரணத்தினால் இந்த கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இந்த 8 காவலர்களைத் தாக்கிய இந்த 3 உறுப்பினர்கள் — வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் மீது உரிய கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகும். அந்த கோரிக்கையைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டு, இது சம்பந்தமாக தன்னுடைய கருத்துக்களை அவை முன்னவர் அவர்கள் தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும் போது காவலர்களை தாக்கிய உறுப்பினர்கள் மீது—நடவடிக்கை—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

(அவை முன்னவர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர்களின் கருத்துக்களைக் கேட்ட பிறகு தலைவர் அளித்த தீர்ப்புரையாவது)

.. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும் என்னுடைய இந்தக் கோரிக்கை நியாயமானது தான், நீங்கள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுகிறபோது, அரசாங்கம் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்ததற்குப் பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

.. இன்றைக்குத் தாக்கப்பட்டார்கள் என்று மட்டும் தான் நான் சொன்னேன். எந்த அளவிற்குத் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தி இப்பொழுது அவர்கள் மருத்துவமனைக்குச் சென்றதற்குப் பின்னர் தான் எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

.. திரு. சின்னமணி என்கிற எஸ்.ஐ., திரு. தர்மலிங்கம் என்கிற எஸ்.ஐ., திரு. சீதாபதி என்கிற காவலர்—இந்த மூவரையும் காலால் எகிறி நெஞ்சில் ஏறியதன் காரணமாகக் கடுமையான பாதிப்புக்கு ஆளாகி மருத்துவமனையில் இப்பொழுது சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்கிற தகவல் வந்திருக்கிறது.

.. இதெல்லாம் பேரவை உறுப்பினர்களாக, மாண்புமிகு உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் செய்கிற செயலா என்பதையும் எண்ணிப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

.. தாக்கப்பட்டது என்பது சாதாரணத் தாக்குதலாக இருந்தால்கூட வேண்டாமென்று விட்டிருக்கலாம். இது அவ்வளவு கடுமையாக இருக்கிறது. சரியாக இரண்டு மூன்று பேர் கூடி காவலர்களை நெஞ்சிலே ஏறி உதைத்திருக்கிறார்கள் என்கிறபொழுது அவர்களுக்கு எந்த அள

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது காவலர்களைத் தாக்கிய உறுப்பினர்கள்மீது நடவடிக்கை — பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

விற்குப் பாதிப்பு இருந்திருக்கும் என்பதையும் எண்ணிப்பார்த்து, இதுசம்பந்தமான புகாரைக் காவல் துறைக்குக் கொடுத்து உரிய நடவடிக்கை எடுப்பதற்குப் பேரவையின் ஒப்புதலைக் கோருகிறேன். பேரவையினுடைய ஒப்புதலோடுதான் நான் இந்தச் செயலைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறேன். உங்களுடைய ஒப்புதலைத் தரக் கேட்டுக் கொள்கிறேன். (ஆம்) (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை ஒப்புதலளித்து இருக்கிறது. எனவே பேரவையின் ஒப்புதலோடு இந்த மூவர் மீதும், இந்த எட்டுச் காவலர்கள், இந்த 3 பேர் கடுமையாகத் தாக்குதலுக்கு ஆளாகி இருப்பவர்கள் உள்பட இந்த 8 பேர் தாக்கப்பட்ட சம்பவம் பற்றிய புகாரை உரிய நடவடிக்கைக்காகப் பேரவையின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.', 370— 379

ஒத்திவைப்புத் தீர்மானம்—நடைமுறைகள்—

அனுமதி—

தாம் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி ஓர் உறுப்பினர் கேட்டபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

"அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்ததைப் பற்றி இங்கே நீங்கள் பேச வேண்டாம்."

ஒழுங்குப் பிரச்சினை—நடைமுறைகள்—

அனுமதி—

ஒரு உறுப்பினர் கொடுத்திருந்த கவன ஈர்ப்புக்கு அமைச்சர் பதில் அளித்த பிறகு

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒழுங்குப் பிரச்சினை—நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி—தொடர்ச்சி

அது குறித்து கவன ஈர்ப்பு கொடுத்த உறுப்பினர், அமைச்சர் தவறான தகவலைச் சொல்வதாக தெரிவித்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்புரைத்தார் :

"நீங்கள் சொல்வதற்கு அமைச்சர் பதில் சொல்லுகிறார். அதிலே ஒழுங்குப் பிரச்சினை இல்லை."

"நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் சொன்னது தவறான தகவல் என்று அமைச்சர் சொல்வதற்கு உரிமை இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? எனவே இதில் ஒழுங்குப் பிரச்சினை வராது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போதும் கேள்வி நேரத்தின் போதும் ஒழுங்குப் பிரச்சினை அனுமதிப்பது இல்லை." 8

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசிய ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு பதில் அளிக்கும் முறையில் ஒழுங்குப் பிரச்சினையை ஓர் உறுப்பினர் எழுப்பி பேசியதையொட்டி வேறு சில உறுப்பினர்கள் குறுக்கிட முயன்றதை குறித்து தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"உறுப்பினர் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. பதில் சொல்வதற்கு உரையாற்றுகிற உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது. மற்ற உறுப்பினர்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? ஏதாவது குழப்பம் செய்ய வேண்டும் என்பதற்காக எழுந்து நிற்கிறீர்களா? பதில் சொல்வதற்கு உரையாற்றுகிற உறுப்பினரை நான் அனுமதிக்கிறேன். அவரை நான் அனுமதிக்காவிட்டால் நீங்கள் எழுந்திருக்கலாம். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும்." 55

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒழுங்குப் பிரச்சினை—நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி—தொடர்ச்சி

மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது ஒரு உறுப்பினர் தெரிவித்த கருத்தை ஆட்சேபித்து ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் எழுப்பி இன்னொரு உறுப்பினர் கருத்து தெரிவித்ததையொட்டி தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்புரைத்தார் :

''நீங்கள் தெரித்த கருத்தைத்தான் அவரும் சொல்கிறார். அமைச்சர் சூழ்நிலையை விளக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே மேற்கொண்டு வேண்டாம். இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல.'' 744

ஒழுங்கு முறை—

அவையில் உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் முறை—

உறுப்பினர்கள் அமைதியாக இருக்குமாறு குறிப்புரைக்கப் பெற்றது.

ஓர் உறுப்பினருடைய பேச்சில் அமைச்சர் குறுக்கிட்டதை இன்னொரு உறுப்பினர் ஆட்சேபித்ததையொட்டி, தலைவர் அளித்த தீர்ப்புரையின்போது அவ்வுறுப்பினர்கள் நடந்து கொண்ட முறைபற்றி தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். அவரைப் பேச விடமாட்டேன் என்று சொல்லக்கூடாது. இந்த வேலையை எல்லாம் வைக்காதீர்கள். கைநீட்டுவது வேண்டாம். உட்காருங்கள்.'' 83

ஓர் உறுப்பினர் அவையிலிருந்து வெளியேறியபோது இன்னொரு உறுப்பினர் உட்கார்ந்து கொண்டே பேசியதை குறிப்பிட்டு தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் ;

தலைவர் —தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒழுங்கு முறை—தொடர்ச்சி.

அவையில் உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் முறை— தொடர்ச்சி

"..இது முறையல்ல. ஓர் உறுப்பினர் வெளியேறிப் போகிறபோது ஏதாவது சொல்கிறார் என்பதற்காக நீங்கள் அவையிலே இருக்கிற உறுப்பினர் உள்ளே உட்கார்ந்து இருப்பவர் இப்படி பேசக் கூடாது. உட்காருங்கள். வெளியே போகிறவர்கள் எதையும் பேசிவிட்டுப் போகட்டும்."

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசிய உறுப்பினர் தெரிவித்த கருத்தையொட்டி சில உறுப்பினர்கள் குறுக்கீடுகள் செய்தபோது கீழ்க்கண்டவாறு தீர்ப்புரைக்கப்பெற்றது:

"உறுப்பினர்கள் இப்படி சத்தமாகப் பேசுவதையும், குறுக்கீடு செய்வதையும் தவிர்க்க வேண்டும். அவையில் அமைதி காக்க வேண்டும்."

20–4–1993 ஆம் நாளன்று மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு கொண்டு பேசிய ஓர் உறுப்பினர் ஒரு தலைவரைக் குறித்து தவறாகப் பேசியபோது அவ்வுறுப்பினரை அவையிலிருந்து வெளியேற ஆணையிட்டு விட்டு இன்னொரு உறுப்பினரை பேச அழைத்த பிறகு யரோ ஒருவர் முறையற்ற வார்த்தையைபேசியதையொட்டியும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எழுந்து குறுக்கீடுகள் செய்ததையொட்டியும் தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

"-- உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு என்ன பேசி இருந்தாலும் அது கண்டிக்கத் தக்கது. அதை நான் கண்டிக்கிறேன். எந்த உறுப்பினர் என்பது யாருக்கும் தெரியாது. ஏதோ ஒரு குரல் வந்தது. அந்த குரலுக்கு நான் கண்டித்து இருக்கிறேன்."

தலைவர் — தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

ஒழுங்குமுறை— தொடர்ச்சி.

அவையில் உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் முறை— தொடர்ச்சி.

பக்கங்கள்

..நான் அவரை கண்டிக்கிறேன் என்று சொன்னதற்கு பிறகு, இன்னொரு உறுப்பினரைப் பேச அழைத்ததற்குப் பிறகு, எதிர்க்கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கையை விட்டு இங்கே வருவது நல்லது அல்ல. எப்போதும் எழுந்தாலும் நீங்கள் உங்கள் இருக்கையை விட்டு வெளியே ஓடி வருவது என்பது முறையல்ல. எந்த உறுப்பினர் அப்படிப் பேசியிருந்தாலும் கண்டிக்கத்தக்கது என்று நான் சொல்லியிருக்கிறேன். உங்கள் உறுப்பினர்களை நீங்கள் கண்டிக்க விடுவதேயில்லை. யார் குரல் எழுப்பினார்கள் என்பது யாருக்கும் தெரியாது பேசியது கண்டிக்கத் தக்கது. அடுத்த உறுப்பினர் பேசலாம்.

..உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் பேசுவதையே நீங்கள் குறுக்கிட்டு பேசுவது முறையற்ற செயல். உங்கள் உறுப்பினரையே பேச விடாமல் தடுப்பது சரியல்ல. நான் நிற்கிறேன். உட்கார வேண்டும். நான் அவரைப் பேச அழைத்திருக்கிறேன். அவர் பேச ஆரம்பிக்கிறார். எதிர்க் கட்சித் தலைவர் முதற்கொண்டு தங்கள் கட்சி உறுப்பினர் பேச ஆரம்பிக்கிறபோது எல்லா உறுப்பினர்களும் நின்று கொண்டு இருப்பது தங்கள் கட்சி உறுப்பினரையே பேச விடாமல் தடுக்கிற முயற்சி. இன்று காலையிலிருந்தே காவல் துறை மானியத்தில் ஏதாவது குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த முயற்சி செய்கிறார்கள். அந்த முயற்சி நிறைவேறாத காரணத்தால் கடைசி நேரத்தில் முறையற்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்திய ஒரு உறுப்பினரை நான் கண்டித்ததற்குப் பிறகும் இப்படி எழுந்து நின்று இடையூறு செய்வது முறையல்ல.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒழுங்குமுறை—தொடர்ச்சி

அவையில் உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் முறை—தொடர்ச்சி

ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்பது எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் அவர் கட்சியைச் சார்ந்தவர்களுடைய எண்ணம் என்பது தெளிவாகிறது. அந்த முயற்சி நடக்காத காரணத்தால் கடைசி நேரத்தில் இந்த முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவரும் அவரைச் சேர்ந்தவர்களும் ஈடுபடுகிறார்கள். அது கண்டிக்கத் தக்கது, முறையல்ல.

.. தங்கள் கட்சியைச் சேர்ந்த இன்னொரு உறுப்பினர் பேசுகிறபோது மற்றவர்கள் உட்கார வேண்டும் என்ற சாதாரண விதியைக் கூட தெரியாதவர்கள் அல்ல. இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர்களும் நின்று கொண்டே இந்த அளவுக்குக் குழப்பம் விளைவிக்க வேண்டும், இந்தப் பேரவையிலே குழப்பம் நடக்கிறது என்பது வெளியிலே சொல்ல வேண்டும், இது டெல்லி வரையிலேயும் பத்திரிகைக்குச் செல்ல வேண்டும் என்கிற ஒரு முயற்சி என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை.

.. இதுமுறையல்ல. தயவு செய்து உட்கார வேண்டும். நான் பேச அழைத்த உறுப்பினர் பேச வேண்டும். அவர் பேசுவதை மற்ற உறுப்பினர்கள் அனுமதிக்கவில்லை என்று சொன்னால் நான் பேரவையை இத்தோடு ஒத்திவைத்துவிட்டு, நாளையதினம் எஞ்சிய உறுப்பினர்களுக்குத்தான் பேச வாய்ப்பு அளிக்க வேண்டி வரும். அவரைப் பேச அனுமதிப்பது என்றால், பேரவை விதிமுறைகளின்படி அனைவரும் உட்கார்ந்தால்தான், அவர் பேச முடியும்.

.. தங்கள் கட்சி உறுப்பினரையே பேச விடாமல் எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர்களும் இந்த அளவுக்குக் குறுக்கிட்டு, விதிமுறைகளுக்குப் புறம்பாக,

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒழுங்குமுறை—தொடர்ச்சி

அவையில் உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் முறை—தொடர்ச்சி

இதுவரையிலே இருக்கிற மரபுகளுக்கு மாறாக நின்று கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது.'' .. 132– 134

அனுமதியின்றிப் பேசுதல்—

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த உறுப்பினர் தெரிவித்த கருத்தையொட்டி சில உறுப்பினர்கள் எழுந்து நின்று பேச முயன்றதையொட்டியும், நடந்து கொண்ட முறையையொட்டியும் தலைவர் அளித்த குறிப்புரையாவது : ..

''..உறுப்பினர் திரும்பிப் பேசுவது என்பது திட்டமிட்டு குழப்பம் செய்ய முயற்சிக்கிறீர்கள் என்று பொருள். உறுப்பினர் அவருடைய இருக்கையிலே இருந்து அந்தப் பக்கம் திரும்பிப் பேசுவது என்பது முறை இல்லை. உட்கார வேண்டும். இது முறையே அல்ல. மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும்.'' .. 50

கவன ஈர்ப்பு—நடைமுறைகள்

விளக்கம் கோருதல்—

கவன ஈர்ப்புக்கான அறிக்கையின் மீது விளக்கம் கோர விரும்பிய உறுப்பினர் விரிவாகப் பேசிக் கொண்டிருந்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் : ..

''நீங்கள் குறிப்பிட்ட இடம் பற்றி மட்டும் விளக்கம் கோர வேண்டும். வேறு இடம் பற்றி கேட்பது என்றால் தனியாகக் கேட்க வேண்டும்.'' .. 6

கவன ஈர்ப்புக்கு அமைச்சர் அளித்த அறிக்கையின் மீது, கவன ஈர்ப்பு கொடுத்த உறுப்பினர் மட்டுமே விளக்கம் கோரலாம், மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கிடையாது என்று குறிப்புரைக்கப்பட்டது. 640

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

கவன ஈர்ப்பு—நடைமுறைகள்—தொடர்ச்சி

விளக்கம் கோருதல்—தொடர்ச்சி

கவன ஈர்ப்புக்கு அமைச்சர் அளித்த அறிக்கையின் மீது விளக்கம் கோரிய உறுப்பினர் விரிவாகப் பேசிக் கொண்டிருந்த போது பின்வருமாறு குறிப்புரைக்கப் பட்டது:

"கேள்வியாகக் கேட்க வேண்டும்." 11

குறுக்கிடுகள்—

உறுப்பினர் உரையில் குறுக்கிடுதல்—

மானியக் கோரிக்கையின் மீது ஓர் உறுப்பினர் பேசியபோது தெரிவித்த கருத்தை யொட்டி சில உறுப்பினர்கள் குறுக்கிட்ட போது பின்வருமாறு தீர்ப்புரைக்கப் பெற்றது:

"உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும். அவர் பேசியதில் தவறு என்ன இருக்கிறது? பொதுவான கருத்தைச் சொல்கிறார். யாரையும் சம்பந்தப்படுத்தவில்லை. உங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது பேசலாம்." 93

உறுப்பினர் உரையில் விளக்கம்—

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தபோது அவர் தெரிவித்த கருத்தை ஆட்சேபித்து சில உறுப்பினர்கள் எழுந்ததையொட்டி தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

நீங்கள் உட்காருங்கள். எல்லோரும் எழுந்தால் நான் அவையை நடத்த முடியாது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

குறுக்கீடுகள்—தொடர்ச்சி

உறுப்பினர் உரையில் விளக்கம்—தொடர்ச்சி

ரிகையில் வந்த செய்தியை ஆதாரமாக வைத்து குற்றம் சாட்டி பேசத் .. அவர் பேசி முடிக்கட்டும். அவருக்கு கொஞ்சம் நேரம்தான் இருக்கிறது.

.. உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசுவது கூடாது. அவர் முடிக்கட்டும். முடித்த பிறகு பேசலாம்.

.. உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசியதற்கு முதலமைச்சர் பதில் சொல்லி இருக்கிறார். அதில் சம்பந்தப்பட்ட உறுப்பினர் பேசுவதாக இருந்தால் பேசலாம். இப்படி விவாதமாக ஆக்கக் கூடாது.

.. எதிர்க்கட்சி தலைவர் ஒரு தடவை விவாதத்தில் குறுக்கிட்டார். அது போல் எல்லா உறுப்பினர்களும் குறுக்கிட முடியாது. சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பேசட்டும்.'' 57-59, 60

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு கொண்டு ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் தெரிவித்த கருத்தையொட்டி இன்னொரு உறுப்பினர் குறுக்கிட முயன்றபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' அது அவருடைய கருத்து. அதை அவர் நியாயப்படுத்தலாம்.'' 50

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசிக் கொண்டிருந்த உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு பதில் சொல்ல அமைச்சர் குறுக்கிட்டதை இன்னொரு அவை உறுப்பினர் ஆட்சேபித்ததையொட்டி தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்புரைத்தார் ;

த—தொடர்ச்சி பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

குறுக்கீடுகள்— தொடர்ச்சி

உறுப்பினர் உரையில் விளக்கம்— தொடர்ச்சி

''அமைச்சர் குறுக்கிடுகிறபோது பேசிக் கொண்டிருந்த உறுப்பினர் 'ஈல்டு' ஆகியிருக்கிறார். நீங்கள் மூன்றாவது உறுப்பினர், அமைச்சரை பேச நான் விட மாட்டேன் என்று அவையில் சொல்வது என்ன நியாயம்? இந்த விவாதம் ஆரம்பித்ததிலிருந்து பார்க்கிறேன். ஏதாவது, எப்படியாவது ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டும் என்ற முயற்சியிலேதான் இருக்கிறீர்கள். அமைச்சரைப் பேச விடமாட்டேன் என்று சொல்லுகிற அதிகாரத்தை உறுப்பினருக்கு யார் கொடுத்தது? உறுப்பினரை நான் முழுமையாக பேச அனுமதிக்கும்போது மற்ற உறுப்பினர்கள் தேவையில்லாமல் எழுந்து இத்தகைய சச்சரவைச் செய்வது நியாயம் அல்ல. அமைச்சர் இப்போது பேசுவார். அவர் பேசி முடித்ததற்குப் பிறகு வேண்டுமானால் நீங்கள் விளக்கம் சொல்லலாம்.'' 62—63

மானியக் கோரிக்கையின் மீது ஓர் உறுப்பினர் பேசியபோது இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டதையொட்டி தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:

'' அவர் குற்றம் சொல்லவில்லை. அவர் மீது அந்த ஆட்சி போட்ட வழக்கைதான் சொல்கிறார். உங்களுக்கு சாதகமாகத்தான் சொல்கிறார். உங்களுக்கு பாதகமாக ஒன்றும் இல்லை.'' 85

குற்றச்சாட்டு— நடைமுறைகள்—

அனுமதி--

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசிய ஓர் உறுப்பினர் பத்தி

தலைவர் – தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

குற்றச்சாட்டு— நடைமுறைகள்— தொடர்ச்சி

அனுமதி— தொடர்ச்சி

தொடங்கியதையொட்டி எழுந்த அவாதத்திற்கு தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு ;

'' உறுப்பினர் தெரிவித்த தகவலுக்கு என்ன காரணம் என்பதை குற்றச்சாட்டாக சொல்கிறார்.

.. உறுப்பினர் தன்னுடைய கருத்தாக எதையும் சொல்லவில்லை. ஒருவர் சொன்னதாக பத்திரிகையில் வந்ததை அவர் படிக்கிறார். ஒருவர் என்னென்ன சொல்லியிருக்கிறார் என்பதை உறுப்பினர் படித்த காரணத்தினாலே தான் இந்தப் பிரச்சினை. இதிலே மேற்கொண்டு வேண்டாம்.'' 57—58

மானியக் கோரிக்கையின் மீது பேசும் ஓர் உறுப்பினர் குற்றம் சாட்டி பேசியதையொட்டி தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் ;

'' பொதுவான குற்றச் சாட்டுகளைச் சொல்ல வேண்டாம். குறிப்பாக இருந்தால், அதற்கு அனுமதி பெற்றிருந்தால் நீங்கள் பேசுவதில் தவறு இல்லை. அதைக் காட்டி அனுமதி பெற்றிருந்தால் தான் அதைப் பற்றிப் பேசலாம்.

அதைப் பற்றி இங்கே பேசுவது என்றால் அதைப் பற்றிய விவரத்தை என்னிடம் காண்பித்து இருக்க வேண்டும். நான் கொடுக்கிறேன் என்று இப்போது கொடுப்பதை அப்போதே என்னிடம் கொடுத்திருக்கலாம். என்னிடம் கொடுக்காமல் பேசுவது முறையல்ல. இங்கே பேச வேண்டும் என்பதற்காக பேசுகிறீர்களே தவிர அதற்குப் பரிகாரம் காணவேண்டும் என்ற நோக்கம்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

குற்றச்சாட்டு—நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி—தொடர்ச்சி

உங்களுக்கு இருப்பதாகத் தெரிய வில்லை. அதையெல்லாம் முன்கூட்டியே கொடுக்க வேண்டும் என்று விதி இருக் கிறது.'' 99,108

சிறப்புக் குறிப்புகள்—

21—4—1993 அன்று அவையிலிருந்து வெளியேற் றப்பட்ட உறுப்பினர்கள் வெளியில் சாலை மறியலில் ஈடுபட்டது குறித்து, வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தவறான செய்திகள் வெளியிடப்பட்டது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—

21—4—1993 அன்று அவையிலிருந்து வெளி யேற்றப்பட்ட உறுப்பினர்கள், வெளியில் சாலை மறியலில் ஈடுபட்டது குறித்து, வானொலியிலும், தொலைக் காட்சியிலும் தவறான செய்திகள் வெளியிடப்பட்ட தாகக் குறிப்பிட்டு ஓர் உறுப்பினர் சிறப்புக் குறிப்பு என்ற முறையில் எழுப் பியதையொட்டி நடந்த விவாதத்திற்குப் பிறகு தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித் தார் :

'' நான் தொடர்ந்து பல சந்தர்ப்பங் களில் தெரிவித்து வருகிற செய்திதான் இது. இங்கே ஒவ்வொரு மானியத்தின் மீதும், ஒவ்வொரு மசோதாவின் மீதும் பொறுப்பாக பல்வேறு செய்திகளைச் சொல்லி, அரசாங்கத்திற்கு சில நல்ல ஆலோசனைகளையும் தெரிவித்து அரசு செய்து வரக்கூடிய காரியங்களில் இருக்கிற குற்றங்குறைகள் என்னென்ன, இவை யெல்லாம் எவ்வாறு நிவர்த்தி செய்யப் பட வேண்டும் என்று தெரிவிக்கிற எந்த செய்திகளுக்கும் நம்முடைய பத்திரிகைகள் அந்த அளவிற்கு முக்கியத்துவம் தராமல்,

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

சிறப்புக் குறிப்புகள்—தொடர்ச்சி

21—4—1993 அன்று அவையிலிருந்து வெளியேற்றப் பட்ட உறுப்பினர்கள் வெளியில் சாலை மறியலில் ஈடுபட்டது குறித்து, வானொலியிலும், தொலைக் காட்சியிலும் தவறான செய்திகள் வெளியிடப் பட்டது குறித்து— பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

இங்கே நடக்கிற ஏதாவது குழப்பங்கள், விதிமுறைகளுக்கு மாறான செய்திகள் ஆகியவற்றிற்குத் தருகிற முக்கியத்துவம் வளர்ந்து கொண்டே இருக்கிற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட சம்பவங்கள்— (Zero Hour Heros) என்று அதை எல்லா இடத்திலேயும் சொன்னார்கள்.— அவர்கள் வளருவதற்கு வாய்ப்பாகப் போகிறது. சட்டமன்ற சபாநாயகர்களுடைய மாநாட்டிலே கூட இதைப்பற்றிப் பேசி, பத்திரிகையாளர் களையே கூட மக்களவை சபாநாயகர் அழைத்துப்பேசி, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றுகூட ஒரு கருத்தை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இந்த நிலை வளருவது ஒரு ஜனநாயக அமைப்புக்கே குந்தகமாகப் போய்விடும் என்றே கூட அஞ்ச வேண்டியிருக்கிறது.

விதிமுறைகளுக்கு மாறான செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற பத்திரிக்கைகள், விதிகளுக்கு உட்பட்டுத் தெரிவிக்கிற நல்ல கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தராமல் இருப்பதுதான் அனைவரும் வருந்தத்தக்க செய்தியாக இருந்து வருகிறது. இதிலே மிகப் பாரம்பரியம் மிக்க பத்திரிக்கைகள் கூட இன்றைக்கு பையப்பைய இந்த விதிமுறைகளுக்கு மாறான செயல்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். எனவே, இது தவிர்க்கப்பட வேண்டும். இதைத் தவிர்த்து விதிமுறைகளுக்கு உட்பட்டு இங்கே நடைபெறுகிற நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததாலே இந்த விதிமுறைகளுக்கு மாறாக வரம்பு மீறிச் செயல்படுகிற உறுப்பினர்களுடைய நடவடிக்கைகள் குறையும்,

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

சிறப்புக் குறிப்புகள்— தொடர்ச்சி

21—4—1993 அன்று அவையிலிருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் வெளியில் சாலை மறியலில் ஈடுபட்டது குறித்து. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தவறான செய்திகள் வெளியிடப்பட்டது குறித்து -பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

இது நல்ல ஜனநாயகத்திற்கும் ஆரோக்கியமாக அமையும் என்கிற கருத்தை எல்லா சபாநாயகர்களும் கூடிய அந்த மாநாட்டிலே கூட நாங்கள் தீர்மானமாக நிறைவேற்றி இருக்கிறோம். அதைப் பத்திரிக்கையாளர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய அறிவுரையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றம் என்பது நாட்டு மக்களுக்குச் சென்று சேர வேண்டிய பல்வேறு செய்திகளை பேசக் கூடிய இடம். அந்தப் பேச்சுக்கள் எதுவும் மக்களுக்குச் சென்று சேராமல், இந்த அவையை விட்டு வெளியேறுவதும், இந்த அவையிலே செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் மறந்துவிட்டு, மரபுக்கு மாறுபாடான பல்வேறு காரியங்களை இங்கேயும் செய்துவிட்டு, வெளியேயும் செய்கிறவர்களுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பது ஜனநாயகத்தின் ஆணி வேரில் எங்கோ விஷத்தை ஊற்றுகிறீர்கள் என்றுதான் அமையும். எனவே இதைப் பத்திரிக்கையாளர்கள் தவிர்ப்பது நல்லது என்று பேரவையின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்'' 633—634

முதலமைச்சர் பதிலளித்தார். 624—637

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

சிறப்புக் குறிப்பு— நடைமுறைகள்—

விளக்கம் கோருதல்—

சிறப்புக் குறிப்பு என்ற முறையில் எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினைக்கு முதலமைச்சர் பதிலளித்த பிறகு, விளக்கம் கோர விரும்பிய ஓர் உறுப்பினருக்கு பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது ;

'முதலமைச்சர் பதிலளித்த பிறகு விவாதம் வைத்துக் கொள்வதில்லை,' 6

தன்னிலை விளக்கம்

உறுப்பினர் பேசாததைப் பேசியதாக 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து—

ஓர் உறுப்பினர் பேசாததைப் பேசியதாக 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து 21—1—1993 ஆம் நாளன்று அவ்வுறுப்பினர் தன்னிலை விளக்கம் அளிக்க அனுமதிக்கப்பட்டார். 388— 38[illegible]

137. துரை ராமசாமி, திரு. .. வெள்ளக்கோவில்

138. தெய்வநாயகம் திரு. எ. .. மதுரை (மத்தி)

139. தென்னவன், திரு. மு. .. இராமநாதபுரம்

140. தேவராஜ், திரு. அ. .. செய்யாறு

141. தேனி பன்னீர்செல்வம், திரு. போடிநாயக்கனூர்

142. நடேசன், திரு. மு. .. சேலம்-2

143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. நாங்குநேரி

144. நாகூர் மீரான், திரு. எஸ். .. கடையநல்லூர்

145. நிர்மலா, திருமதி பி. .. திண்டுக்கல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. .. தேனி

147. பஞ்சவர்ணம், திருமதி கே. .. வலங்கைமான் (செ.வ.)

148. பட்டாபிராமன், திரு. கா.ப. .. காஞ்சிபுரம்

149. பரந்தாமன், டாக்டர் ஜெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

150. பரமசிவம், திரு. ஆர்.பி. .. சின்னசேலம்

151. பரமசிவன், திரு. ஏ.எம். .. சோழவந்தான்

152. பலராமன், திரு. உ. .. பூங்கா நகர்

153. பழனிசாமி, திரு. இரா. .. தாரமங்கலம்

154. பழனிசாமி, திரு. க. .. எடப்பாடி

155. பழனிசாமி, திரு. நா.சா. .. கிணத்துக்கடவு

156. பழனிசாமி, திரு. வெ. .. திருப்பூர்

157. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

158. பழனியம்மாள், திருமதி க. .. ராசிபுரம்

159. பன்னீர்செல்வம், திரு. என். .. திருவிடைமருதூர்

160. பன்னீர்செல்வம், திரு. சா. .. திண்டிவனம்

161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. .. திருநாவலூர்

162. பாண்டியம்மாள், திருமதி இரா. உசிலம்பட்டி

163. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

164. பாலகங்காதரன், திரு. ஜெ. .. சிவகாசி

165. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

166. பாலசுப்ரமணியன், திரு. கி. .. பட்டுக்கோட்டை

167. பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். .. பொங்கலூர்

168. பாலன், திரு. எம்.கே. .. சைதாப்பேட்டை

169.	பாலையா, திரு. ஆ.	குளச்சல்
170.	பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ்.	தென்காசி
171.	புதுநயினார் ஆதித்தன், திரு. இரா.	சேரன்மகாதேவி
172.	புரட்சிமணி, திரு. ச.	மங்களூர் (செ.வ.)
173.	புருஷோத்தமன், டாக்டர் வெ.	பெண்ணாகரம்
174.	பூராசாமி, திரு. எம்.	பூம்புகார்
175.	பெரியசாமி, திரு. வே.	அந்தியூர் (செ.வ.)
176.	பெரியவீரன், திரு. எம்.	பெரியகுளம்
177.	பெருமாள், திரு. செ.	ஏற்காடு (ம.ப.)
178.	பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ்.	நிலக்கோட்டை (செ.வ.)
179.	பொன்னுசாமி, பேராசிரியர் க.	மருங்காபுரி
180.	பொன்னுசாமி, திரு. பெ.	தருமபுரி
181.	பொன்னுவேலு, திரு. ஏ.தா.	வரகூர் (செ.வ.)
182.	போளூர் வரதன், திரு.	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
183.	மணிமேகலை, டாக்டர் சு.	அரியலூர்
184.	மணிமேகலை, திருமதி வி.ஜி.	அருப்புக்கோட்டை
185.	மணிவாசகம், திரு. கே.பி.	உடுமலைப்பேட்டை
186.	மதுசூதனன், திரு. இ.	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
187.	மரியம் உல் ஆசியா, திருமதி கே.	அரவக்குறிச்சி
188.	மல்லிகா, செல்வி கோ.	புவனகிரி
189.	மனோகரன், திரு. கே.ஏ.	ஒசூர்

190. மாணிக்கம், திரு. சி. .. ஈரோடு

191. மாவா, டாக்டர் ஜி.ஆர். .. திருச்சிராப்பள்ளி-2

192. முத்துசாமி, திரு. சு. .. பவானி

193. முத்தையா, திரு. இரா. .. சேடப்பட்டி

194. முருகானந்தம், திரு. கே.ஆர். சிவகங்கை

195. முருகையா பாண்டியன், திரு. ஆர். அம்பாசமுத்திரம்

196. முனிரத்தினம், திரு. ஏ.எம். .. சோளிங்கர்

197. முனிவெங்கடப்பன், திரு. கே. கிருஷ்ணகிரி

198. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டிணம்

199. முஹமது ஆசீப், திரு. .. திருவல்லிக்கேணி

200. மூர்த்தி, திரு. து. .. சீர்காழி (செ.வ.)

201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

202. ரகுபதி, திரு. சே. .. திருமயம்

203. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

204. ரங்கராஜன், திரு. டி.எம். .. மயிலாப்பூர்

205. ரத்தினவேல், திரு. த. .. திருவெறும்பூர்

206. ரமணி நல்லதம்பி, திருமதி .. ராதாபுரம்

207. ரமேஷ், திரு. வி.பி. ஆர். .. தூத்துக்குடி

208. ரவிக்குமார், திரு. ஏ. .. பொன்னேரி (தச.வ.)

209. ரவிச்சந்திரன், திரு. வி. .. உப்பிலியாபுரம் (ம.ப.)

210. ராமசுப்பு, திரு. எஸ்.எஸ். .. ஆலங்குளம்

211. ராஜூ, திரு. எச்.எம். .. உதகமண்டலம்

212. ராஜூ, திரு. கே.ஆர். .. கூடலூர்

213. ராஜூ, திரு. கே.பி. .. பேரூர்

214.	ராஜேந்திரன், திரு. என்.ஆர்.	காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
215.	லட்சுமணன், திரு. வி. கே. ..	கோயம்புத்தூர் கிழக்கு
216.	லாரன்ஸ், திரு. கு. ..	பத்மநாபபுரம்
217.	லோகாம்பாள், திருமதி ஜெ...	லால்குடி
218.	வரதராஜன், திரு. செ. து. ..	செங்கல்பட்டு
219.	விசுவநாதன், திரு. ஜி. ..	ஆற்காடு
220.	வீரபாண்டியன், டாக்டர் பெ. ..	செங்கம் (செ.வ.)
221.	வெங்கடராம ரெட்டி, திரு. மு.	தளி
222.	வெங்கடேசன், திரு. பி.ஆர்.எஸ். ..	கடலூர்
223.	வேடியப்பன், திரு. தா. ..	போளூர்
224.	வேலையா, திரு.டி. ..	திருநெல்வேலி
225.	ஜனார்தனன், திரு. தே. ..	விழுப்புரம்
226.	ஜானகிராமன், திரு. கோ. ..	மேல்மலையனூர்
227.	ஜீனத் சர்புதீன், திருமதி ..	சேப்பாக்கம்
228.	ஜெயக்குமார், திரு. எஸ். ..	தியாகராயநகர்
229.	ஜெயகுமார், திரு. டி. ..	ராயபுரம்
230.	ஜெயராமன், திரு. எஸ்.ஆர்.	சேலம்-1
231.	ஜெயலலிதா, டாக்டர் ஜெ...	பர்கூர்
232.	ஜெய்சன் ஜேக்கப், டாக்டர்..	ஆரணி
233.	ஸ்ரீதரன், டாக்டர் அ. ..	வால்பாறை (செ.வ.)
234.	(வெற்றிடம்) ..	ராணிப்பேட்டை
235.	பிட்ரிக்ஸ் டி' சோசா, டாக்டர்	நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

சுப்பிரமணியன், திரு. கே.	தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1993, ஏப்ரல் 20, செவ்வாய்க்கிழமை

சித்திரை 7, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு"

வீரம், மானம், புகழ்பெற்ற வீரர்கள் சென்ற வழியில் நடத்தல், அரசின் நம்பிக்கையைப் பெறுதல் ஆகிய நான்கும் ஒரு படையைப் பாதுகாக்கும் சிறந்த பண்புகள் ஆகும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். நாகர்கோயிலிலே காங்கிரஸ்காரர்கள் அடிக்கப் பட்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அனுமதி மறுத்ததைப் பற்றி இங்கே நீங்கள் பேசவேண்டாம்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. போளூர் வரதன் அவர்கள் (குறுக்கீடு) குமரி அனந்தன் வேண்டாம், இப்போது அந்த வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) அதை இப்போது எழுப்புவது முறையல்ல. திரு. போளூர் வரதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்

வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்சினை பற்றி.. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையல்ல. அதுபற்றி, முறையாக நீங்கள் என் கவனத்திற்கு எழுதிக்கொடுத்துவிட்டு, நீங்கள் செய்யலாம். இதில் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசுகிற எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. திரு. போளூர் வரதன் (குறுக்கீடு) நான் திரு. போளூர் வரதன் அவர்களை அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு) அதற்கு முறைப்படி எழுதிக் கொடுங்கள்.

திரு. குமரி அனந்தன் : என்னுடைய உரிமைப் பிரச்சினை என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் உரிமைப் பிரச்சினையா ? அதை நாளைக் காலையிலே எடுத்துக் கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன் : இன்றைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக் காலையிலே எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தேன். இன்றைக்குக் கேள்வி நேரம் இல்லை. காவல் துறை மானியக் கோரிக்கை எடுக்கிறகாரணத்தினால் நாளை எடுத்துக்கொள்ளலாம்.(குறுக்கீடு) அந்த வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலே இன்றைக்கு எடுக்க வில்லை. (குறுக்கீடு) நேற்றைய தினம் எடுப்பதாகச் சொல்லி யிருந்தேன். நேற்று அந்த வாய்ப்பு இல்லை. இன்றைக்கும் கேள்வி நேரம் இல்லை. நேரடியாக நாம் அலுவல்களுக்குச் செல்கின்ற காரணத்தினாலே நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

2. கவன ஈர்ப்பு.

(அ) செம்பரம்பாக்கம் ஏரியின் ஆயக்கட்டிலுள்ள விவசாய நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. போளூர் வரதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்சினை பற்றி.. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையல்ல. அதுபற்றி, முறையாக நீங்கள் என் கவனத்திற்கு எழுதிக்கொடுத்துவிட்டு, நீங்கள் செய்யலாம். இதில் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசுகிற எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. திரு. போளூர் வரதன் (குறுக்கீடு) நான் திரு. போளூர் வரதன் அவர்களை அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு) அதற்கு முறைப்படி எழுதிக் கொடுங்கள்.

திரு. குமரி அனந்தன் : என்னுடைய உரிமைப் பிரச்சினை என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் உரிமைப் பிரச்சினையா ? அதை நாளைக் காலையிலே எடுத்துக் கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன் : இன்றைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக் காலையிலே எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தேன். இன்றைக்குக் கேள்வி நேரம் இல்லை. காவல் துறை மானியக் கோரிக்கை எடுக்கிறகாரணத்தினால் நாளை எடுத்துக்கொள்ளலாம்.(குறுக்கீடு) அந்த வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலே இன்றைக்கு எடுக்க வில்லை. (குறுக்கீடு) நேற்றைய தினம் எடுப்பதாகச் சொல்லி யிருந்தேன். நேற்று அந்த வாய்ப்பு இல்லை. இன்றைக்கும் கேள்வி நேரம் இல்லை. நேரடியாக நாம் அலுவல்களுக்குச் செல்கின்ற காரணத்தினாலே நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

2. கவன ஈர்ப்பு.

(அ) செம்பரம்பாக்கம் ஏரியின் ஆயக்கட்டிலுள்ள விவசாய நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. போளூர் வரதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செம்பரம்பாக்கம் ஏரியின் ஆயக்கட்டிலுள்ள 3,000 ஏக்கர் விவசாய நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்காதது குறித்து'' மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை.

செங்கை எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள செம்பரம்பாக்கம் ஏரியில், 16—4—1993 அன்று உள்ள அளவின்படி, நீரின் இருப்பு 101.25 மி.கன அடி ஆகும். ஏரியின் நீர்மட்ட உயரம் 3.25 அடி ஆகும்.

2. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து பாசனத்திற்காக பயன் பெறும் நிலங்களில் நெல், கடலை, வாழை மற்றும் வெற்றிலை ஆகிய பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும் பான்மையான பரப்பில் நெற்பயிர்தான் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது சுமார் 2,500 ஏக்கர் பரப்பளவில் பயிர்கள் உள்ளன. இந்த 2,500 ஏக்கரில் இரண்டாம் போகம் பயிர் செய்ய தகுதி உள்ள பரப்பளவு 1,200 ஏக்கர் மட்டுமே. நெல் பயிர் பூக்கும் தருவாயில் இருந்து அறுவடை செய்யும் நிலை வரை உள்ளது. இதற்கு இன்னும் 20 முதல் 25 நாட்கள் வரை தண்ணீர் தேவைப் படும். இன்னும் 4 முறை நனைப்பிற்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தால் பயிர் முழுமையாக அறுவடைக்கு வந்துவிடும். இந்த நான்கு நனைப்பிற்கும் சுமார் 36 முதல் 40 மி.க. அடி மட்டுமே தண்ணீர் தேவைப்படும். செம்பரம்பாக்கம் ஏரியில் தற்போது இருப்பில் உள்ள 101.25 மி.க.அடி தண்ணீரைக் கொண்டு இதனை எளிதாக சமாளிக்கலாம். தற்போது ஏரியில் பாசனத்திற்கு வினாடிக்கு 20 கன அடியும், குடிநீர் தேவைக்கு வினாடிக்கு 15 கன அடியும் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது நாள் ஒன்றுக்கு சுமார் 3 மில்லியன் கன அடி நீர் எடுக்கப்பட்டு வருகிறது. இருப்பிலுள்ள 101.25 மி.க.அடி. தண்ணீர் மேலும் 30 நாட்களுக்கு பாசனத்திற்கும் மற்றும் குடிநீர் தேவைக் கும் போதுமானதாக உள்ளது.

3. ஆகவே, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள செம் பரம்பாக்கம் ஏரியின் கீழ் உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு பாசன வசதிக்காக போதிய தண்ணீர் உள்ளது.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, இங்கே அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் 16–4–1993 அன்று உள்ள நிலவரப்படி

[திரு. போளூர் வரதன்]

ஏரியில் 3.25 அடி தண்ணீர் மட்ட உயரம் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 10, 12 தினங்களுக்கு முன்பாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சென்னை நகருக்கு குடிநீர் தேவைப்படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, செம்பரம்பாக்கம் ஏரிக்குச் சென்று அந்த ஏரியினுடைய நிலவரத்தைப் பார்த்திருக்கிறார்கள். அரசு விவசாயிகளுக்கு எந்தவிதமான முன் அறிவிப்பும் செய்யாமல் திடீரென்று அந்த பகுதிக்குத் தண்ணீர் விடுவதை அதிகாரிகள் நிறுத்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு) கேள்விதான். அதனாலே அந்த பகுதியிலே இன்றைய தினம் விவசாயிகள் மத்தியிலே பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் முடியும் தருவாயிலே, இன்றைக்குப் பயிர்கள் கதிர்விடும் தருவாயிலே நிலங்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு முன்கூட்டியே 'தண்ணீர் தேவைப்படுகிறது' என்பதைப் பற்றி தெரிவித்திருந்தால், அவர்கள் தங்களுடைய தொழிலை நிறுத்தியிருப்பார்கள். முன் அறிவிப்பு இல்லாமல் அரசு இந்த நடவடிக்கை எடுத்ததன் விளைவாக இன்றைக்கு அந்த பகுதியிலே இருக்கின்ற மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறையிடுகின்றபோது நஷ்டஈடு தருகிறேன் என்று சொல்கிறாராம். இப்படி விவசாயிகள் மேலும் மேலும் துன்புறுத்தப்படுகின்ற நிலை ஏற்படாத வகையில் இன்னும் தேவைப்படுகின்ற தண்ணீரை அரசு அந்த விவசாயிகளுக்குக் கொடுத்து உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலவரப்படி 89 மில்லியன் கன அடி தண்ணீர் அந்த ஏரியிலே இருக்கிறது. சென்னை நகரத்தினுடைய குடிநீர் தேவையைக் கருதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும் நானும் அங்கே இருக்கின்ற தண்ணீர் விவசாயத்திற்குப் போதுமான அளவு, அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அதை திறந்து விடலாம் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடுதான் அதிகாரிகளை அழைத்து, பொதுப்பணித் துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளையெல்லாம் அழைத்து ஆய்வு செய்ததற்குப் பின்னாலே அங்கே சென்று தண்ணீரைத் திறந்து விட்டிருக்கிறோம். ஆனால் விவசாயத்திற்காக 20 கன அடி தண்ணீர் தினசரி விடப்படுகிறது. 15 கன அடி தண்ணீர் தான் இன்றைக்கு குடிநீருக்காக கொண்டு வருகிறோம், இரண்டு பாகங்களாகப் பிரித்து குடிநீருக்கும் கொடுக்கிறோம். விவசாயத்திற்கும் கொடுக்கிறோம். 2,500 ஏக்கர் நிலங்களிலே பாசனம் இருக்கிறது. Crops In riened condition என்று சொல்லக்கூடிய அளவிலே, நிலத்திலே முற்றிய

கதிர்கள் இருக்கின்ற காரணத்தினாலே இன்னும் 3 அல்லது 4 wettings கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்குத் தேவையான தண்ணீர் அங்கே இருக்கிறது. ஆகவே, கதிர்களுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை. அதே நேரம் 1,200 ஏக்கர் தான் இரண்டாம் போகம் சாகுபடி அதிலே செய்யப்பட வேண்டும். ஆனால் 2,500 ஏக்கர்களில் விவசாயிகள் சாகுபடி செய்தாலும் கூட சாகுபடி செய்த நிலங்களில் எல்லாம் ripened condition -ல் இருக்கின்ற காரணத்தாலே அவர்களுடைய பயிர்களுக்கு பாதுகாப்பு தரப்படும் என்கிற உத்தரவாதத்தோடு இன்றைக்கு தண்ணீர் விடப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாங்களும் விவசாயிகள்தான், நாங்களும் அந்தப் பிரச்சினையைப் பற்றி நன்றாக அறிவோம். ஆகவே, வயல்காடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்த பின்னாலே தான் நானும் உள்ளாட்சித் துறை அமைச்சரும் அன்றைக்கு அந்த முடிவை எடுத்து, இரண்டு பிரிவுகளாக பிரித்திருக்கிறோம், ஆகவே, விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் வழங்கப்படும். நஷ்டஈடு என்ற பேச்சுக்கே இடம் இல்லை. தண்ணீர் கொடுக்க முடியாத சூழ்நிலையில்தான் அந்த நஷ்டஈடு என்ற பேச்சுக்கே இடம் வரும். ஆகவே, அங்கே இருக்கின்ற பயிர்களுக்கு தண்ணீர் விடுவதற்கு போதுமான தண்ணீர் இருக்கிறது, அந்தப் பயிர்களை விளைச்சலுக்கு கொண்டு வரும் அளவிற்கு தண்ணீர் விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, எவ்வித பதட்டமும் அந்தப் பகுதியிலே இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயிருக்கு தண்ணீர் விடப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகளோ அப்படி திறந்துவிடுவதில்லை. அந்த ஏரியிலே 7 மதகுகள் இருக்கின்றன. இன்றைக்கு 3-வது மதகு என்று சொல்லப்படுகின்ற மதகின் வாயிலாக தண்ணீர் விவசாயத்திற்கு வந்துகொண்டிருக்க வேண்டும். விவசாயம் நடக்கின்ற அந்த 3-வது மதகு பகுதியிலே இன்றைக்கு அடைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'நானும் ஒரு விவசாயி தான். விவசாயிகளை நாங்கள் துயரத்திற்கு ஆளாக்க மாட்டோம்' என்று சொன்னார்கள். தமிழகத்திலே விவசாயிகள் நிலங்கள் நிறைய இருக்கின்றன. தமிழகம் விவசாய பூமி என்பது எல்லோரும் ஒப்புக்கொள்கின்ற உண்மை. ஆனால் என் தொகுதியைப் பொறுத்தமட்டில் செம்பரம்பாக்கம் ஏரியிலே இருக்கின்ற தண்ணீரை தான் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தொன்றுதொட்டு நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வேறு தொழிலும் இல்லை. அமைச்சர் அவர்கள் பேசும்போது நஷ்டஈடு இல்லை என்று

சொன்னார்கள். நஷ்டஈட்டை நானும் கோரவில்லை, அவர்களும் கோரவில்லை. ஆனால் அங்குள்ள மக்கள் பீதி அடைந்து இருக்கிறார்கள் என்று சொல்லும்போது அமைச்சர் அவர்கள் வருகின்ற வழியிலே விவசாயிகள் எல்லாம் அமைச்சர் அவர்களுடைய காரை நிறுத்தி தங்களுடைய கோரிக்கையை சொல்வதற்கு முனைந்தார்கள். ஆனால் அமைச்சர்கள் இருவரும் காரை நிறுத்தாமல் சென்னைக்கு வந்ததன் விளைவாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தண்ணீரை தடுத்துவிட்டார்கள் என்ற நோக்கோடு இன்றைக்கு செயல்படுகிறார்கள். அரசு அதிகாரிகள் தண்ணீரை திறப்பதற்கு மறுக்கிறார்கள். இன்றைக்கு அறுவடைக்கு தயாராக இருக்கின்ற நிலங்களைப் பற்றி நான் பேசவில்லை. அறுவடைக்குத் தேவையான தண்ணீரை விடுகின்ற நிலத்திற்கு மட்டும்தான் நான் பேசுகிறேன். அதேபோன்று போரூர் ஏரியில் இருந்து தண்ணீரை குடிநீருக்காக கொண்டு வருகிறார்கள். அதுவும் என் தொகுதியில்தான் இருக்கிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஏரியைப் பற்றி மட்டும் பேசுங்கள். அதற்குத் தனியாகக் கொடுக்க வேண்டும். நீங்கள் கொடுத்ததிலாவது செம்பரம்பாக்கம் மற்றும் போரூர் ஏரி என்று கொடுத்திருந்தால் அமைச்சரிடம் பதில் இருந்திருக்கும்.

திரு. போளூர் வரதன் : தண்ணீர் எடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. விவசாயத்திற்கு போக பாக்கியிருக்கின்ற தண்ணீரை நீங்கள் எடுத்துக் கொள்வதிலே அந்த மக்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. வருங்காலத்திலே, முன்கூட்டியே, அரசு திட்டங்களைத் தீட்டி, எந்த அளவுக்கு பயிர்கள் வைக்க வேண்டுமென்று விவசாயிகளுக்குத் தெரிவித்துவிட்டால் அதற்கு ஏற்றவாறு விவசாயிகள் எந்த விதமான ஆபத்தும் இல்லாமல் பயிர் செய்வார்கள். அதற்கு ஏற்ப அரசு செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். நான் அன்றைக்கு செல்கின்றபோது விவசாயிகள் மூன்றே மூன்று பேர் வந்து என்னிடத்தில் மனுக்களைக் கொடுத்தார்கள். ஏதோ காரிலே வந்து மனுக்களைக் கொடுத்தது போல, மக்களை நாங்கள் சந்திக்காதவர்கள்போல, இவர்கள் எல்லாம் மட்டுமே மக்களைச் சந்திப்பவர்கள்போல சொல்லிக் கொண்டிருப்பது எந்தவிதத்திலும் நியாயம் இல்லாத பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அடித்தளத்திலேயிருந்து வருகின்றவர்

1993 ஏப்ரல் 20] [திரு. எஸ். கண்ணப்பன்]

களை, தினசரி இரண்டாயிரம் பேர்களை நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். சாதாரண தொண்டர்கள் முதல் விவசாயிகள் வரை நாங்கள் பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே, இந்தமாதிரி தவறான தகவலை அவைக்குத் தரக்கூடாது, அன்றைக்கு நானும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் செல்கின்றபோது விவசாயிகள் மூன்றே மூன்று பேர்தான் என்னிடத்தில் வந்தார்கள். நாங்கள் தெளிவாக சொன்னோம். ‘இவ்வளவு தண்ணீர் இருக்கிறது. நாங்கள் வயல்களை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்திருக்கிறோம். கதிர்களை எல்லாம் பார்த்திருக்கிறோம். 1,200 ஏக்கர்களுக்கு மேல் விவசாயம் செய்தாலும் 2,500 ஏக்கர்களுக்கும் விளைகின்ற அளவுக்கு தண்ணீர் தரப்படும். ஆகவே, பூரா நீரையும் நாங்கள் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. உங்களுக்கு நிலத்திற்குத் தேவையான தண்ணீரை தருவோம். அதுபோல சென்னையில் குடிநீர் பற்றாக்குறை. உங்களைப் போன்றவர்கள்தான் அவர்களும். நம்முடைய மக்கள் அவர்கள், அவர்களுக்கு பிரச்சினை இருக்கிறது. மீதம் இருக்கிற தண்ணீரை எடுத்துக்கொள்வோம். வெயில் காலங்களில் வெயில் தண்ணீரை குடித்துவிடும். காற்று குடித்துவிடும். ஆகவே, விவசாயத்திற்கு போக மீதம் இருக்கிற தண்ணீரை நாம் பயன்படுத்தியாக வேண்டும். ஆகவே, எந்தவித பிரயோஜனமும் இல்லை அதிலே தேக்கி வைப்பதிலே. அந்த எண்ணத்திலேதான் மீதம் இருக்கிற தண்ணீரை கொண்டு வர வேண்டுமென்று சொன்னோமே தவிர கார்களை எடுத்துக்கொண்டு ஓடுகிற அளவுக்கு எங்களிடத்தில் மக்களுக்கு எந்தவித அதிருப்தியும் கிடையாது. இதுமாதிரி தவறான தகவலை போளூர் வரதன் அவர்கள் சொல்லக்கூடாது. யாரோ சொல்லுகின்ற செய்திகளை எல்லாம் கேட்டு இங்கே பேசக்கூடாது. அங்கே என்ன நடந்தது என்று அவர்கள் விசாரித்திருக்க வேண்டும். எங்களை நேரடியாக சந்தித்த விவசாயிகள் மூன்றே மூன்று பேர்தான் வந்து கொடுத்தார்கள். அவர்களும் சந்தோஷத்தோடு திரும்பிச் சென்றார்கள். 4 நாட்களுக்கு முன்னால் வந்து சொன்னார்கள். இன்னும் கொஞ்சம் தண்ணீர் வேண்டும், 3 ‘வெட்டிங்’ என்று சொல்லுகிறார்கள், எங்களுக்கு 4 -‘வெட்டிங்’ வேண்டுமென்று சொன்னார்கள். நானும் 4 ‘வெட்டிங்’ விடச் சொல்கிறேன் என்று சொல்லி, அதை அதிகாரிகளிடமும் சொல்லி இருக்கிறேன். ஆகவே என்னுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினை தினசரி வந்து கொண்டிருக்கிறது. நான் விவசாயிகளோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறேன். திரு. போளூர் வரதன் வேண்டுமானால் சட்டமன்றத்தில் கேட்கவேண்டுமென்பதற்காக, அவருடைய தொகுதிப் பிரச்சினையைப் பேசவில்லையே என்று மக்கள் ஆதங்கப்படுவார்களே என்ற உணர்வோடு சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவருக்கு அந்தக் கடமை இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அவருக்கு அந்தக் கடமை இருக்கிறது.

அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அதைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் தவறான தகவல்களைச் சொல்லக் கூடாது.

முற்பகல் 10-10.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் செல்கிறபோது காரை மறித்தார்கள், நிற்காமல் வந்துவிட்டார்கள் என்றீர்கள். அவர் அதற்குச் சொல்கிறார். இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு) இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது.

திரு. போளூர் வரதன் : தவறான தகவல் சொல்வதாக அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர், நான் சந்தித்தேன். என்கிறார். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டி வரும். (குறுக்கீடு) அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் ஸ்ரீதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் ஸ்ரீதரன். (குறுக்கீடு) போளூர் வரதன், நீங்கள் சொன்னீர்கள், சொன்னது தவறான தகவல் என்று அமைச்சரவர்கள் சொல்வதற்கு உரிமையில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் போது, கேள்வி நேரத்தின்போது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அனுமதிப்பது இல்லை. (குறுக்கீடு) அமைச்சர்கள் நிற்காமல் வந்துவிட்டார்கள் என்று சொல்வது தவறான தகவல். (குறுக்கீடு) முறைப்படி செய்வதாக இருந்தால், நான் அப்போதே நினைத்தேன், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், அமைச்சர் உள் நோக்கம் கற்பிக்கிறார். Is it not a point of order?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. டாக்டர் ஸ்ரீதரன்.

(ஆ) பொள்ளாச்சி-வால்பாறை நெடுஞ்சாலையிலுள்ள பாலங்கள் மற்றும் சாலைகள் பழுதடைந்துள்ளது குறித்து.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பொள்ளாச்சி-வால்பாறை நெடுஞ்சாலைகளிலுள்ள பாலங்கள் மற்றும் சாலைகள் பழுதடைந்துள்ளது குறித்து'' மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

பொள்ளாச்சி-வால்பாறை சாலையின் மொத்த நீளம் கி.மீ. 0/0-64/0 ஆகும். இச்சாலை நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிலுள்ள முக்கிய பெரிய மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-24/6 வரையான பகுதி சமதளத்திலும், கி.மீ. 24/6-64/0 வரையான பகுதி வால்பாறை மலைப்பகுதியிலும் செல்கிறது. பொள்ளாச்சியிலிருந்து, வால்பாறை செல்வதற்கு இந்தச் சாலை மட்டும் தான் உள்ளது. 1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த புயல் மழையின் போது மேற்படி சாலையில் கி. மீ. 31/2-ல் உள்ள வளைவில் மிகப் பெரிய மண் சரிவு ஏற்பட்டது. மேலும் இச்சாலையில் பல இடங்களில் மண் சரிவும், சாலையில் நொடிகளும் ஏற்பட்டன.

மேற்படி மண் சரிவுகள் போர்க்கால அடிப்படையில் உடனடியாக அகற்றப்பட்டு சாலை அரிப்பு ஏற்பட்ட இடங்களில் தற்காலிகமாக மணல் பைகள் போடப்பட்டு 24 மணி நேரத்திற்குள் சாலைப் போக்குவரத்திற்கு உகந்த வகையில் சீரமைக்கப்பட்டது. மேலும் சாலையில் ஏற்பட்ட நொடிகள் தற்காலிக வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் நொடிகள் போடப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இச்சாலையில் நிரந்தர வெள்ளச் சீரமைப்புப் பணியாக கி.மீ. 31/2-ல் உள்ள வளைவிற்கு ரூ. 3.00 லட்சம் செலவில் தடுப்புச் சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்பட்டு விடும்.

[திரு. எஸ். கண்ணப்பன்] [1993 ஏப்ரல் 20

மேலும் பொள்ளாச்சி-வால்பாறை சாலைகளில் கீழ்க்காணும் இடங்களில் சிறப்பு பராமரிப்பின்கீழ் தடுப்புச் சுவர்கள் மற்றும் பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்பட்டு வருகின்றன.

	தொகை. (ரூபாய்)
1. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி. மீ. 40/6-ல் உள்ள கொண்டை ஊசி வளைவு சீரமைத்தல்.	1,15,000
2. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி. மீ. 31/2-ல் பாதுகாப்புச் சுவர் கட்டுதல்.	2,00,000
3. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி.மீ. 32/8-ல் தடுப்புச் சுவர் கட்டுதல்.	85,000
4. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி.மீ. 33/2 ல் தடுப்புச் சுவர் கட்டுதல்.	2,00,000
5. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி.மீ. 34/2-ல் தடுப்புச் சுவர் கட்டுதல்.	2,00,000
6. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி. மீ. 34/6-ல் தடுப்புச் சுவர் கட்டுதல்.	2,00,000

மேற்கண்ட பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மேலும் இச்சாலையில் கி.மீ. 29/8-ல் உள்ள சிறு பாலம் திரும்பக் கட்டுதல் பணி ரூ. 1,65,000 செலவில் சிறப்பு பராமரிப்புப் பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சாலையில் தற்போது லாரி, பஸ் போக்குவரத்து எந்தத் தடையும் இன்றி நடைபெற்று வெள்ளக் காலத்தில் இருந்த பதட்ட நிலை சீர்பட்டு மாமூல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன்: மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிக்கு நான் சட்டமன்ற உறுப்பினராகச் சென்ற

வுடன், கடந்த 8 ஆண்டுக்காலமாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் பழுதடைந்து, சரி செய்யாமல் இருந்ததைக் கண்டறிந்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு தந்தி கொடுத்திருந்தேன். என்னுடைய தந்தியைப் பெற்று, தலைமைப் பொறியாளரை உடனே அங்கே அனுப்பி வைத்து, நானும் அந்தத் தலைமைப் பொறியாளரும் வால்பாறைப் பகுதியைச் சுற்றிப் பார்த்தோம். அதன் பிறகு சுமார் 53 இலட்சம் ரூபாயை அந்தச் சாலைகளைச் சரி செய்வதற்காக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் தந்தார்கள். அதற்காக இந்த மாமன்றத்திலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும், கடந்த வருடம் பெய்த மழையாலும், புயலாலும், அந்தச் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அங்கே இருக்கிற மலைப் பகுதிகளில் இருப்பவர்கள் காய்கறி, உப்பு வாங்க வேண்டுமென்றால் கூட..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்க வேண்டும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : பொள்ளாச்சி சந்தைக்குத்தான் செல்ல வேண்டுமென்பதால், மாற்றுப் பாதை இல்லாத காரணத்தால், உடனடியாக அங்கே இருக்கக்கூடிய பழுதடைந்த சாலைகளைச் சரி செய்வதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் தனிக் கவனம் எடுத்து, முழு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே விவரங்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். புயலால் ஏற்பட்ட சேதங்களையும் விவர அறிக்கையிலே தந்திருக்கிறேன். அது பற்றி விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். ஆகவே அந்தச் சாலைகளின் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தால், உடனடியாக அங்கே இருக்கின்ற பிரச்சினைகள் களையப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஒரு வார காலத்திற்குள் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய நல்ல பதிலுக்கு நன்றி இருந்தாலும் அரசினுடைய நிதி நிலைமை எனக்கு நன்றாகத் தெரியும். எனவே பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட

அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு வரவழைத்தால், நான் அவர்களைக் கூட்டிச்சென்று காண்பித்து, அங்கே இருக்கும் முக்கிய மான சாலைகளைச் சரி செய்வதற்கு எடுத்துரைக்க எனக்கு வாய்ப்பு இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்து, உடனடியாக அந்தப் பகுதி மக்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து, அவரும் அந்த அதிகாரியும் சென்று அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தப் பகுதிகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென்று அரசின் சார்பிலே அவர்களுக்கு ஆணையிடப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

3. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் வைத்தல். திரு. என். ஆர். சிவபதி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பில்.

முற்பகல் 10.15

திரு. என். ஆர் சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாடு சட்டப் பேரவையின் 1992—93 ஆம் ஆண்டுக் கான, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினாறாவது, பதினேழாவது, பதினெட்டாவது மற்றும் பத் தொன்பதாவது அறிக்கைகளை, குழுத் தலைவரின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் சட்ட முன் வடிவு (அறிமுகம் செய்தல்) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1993.

அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு வரவழைத்தால், நான் அவர்களைக் கூட்டிச்சென்று காண்பித்து, அங்கே இருக்கும் முக்கியமான சாலைகளைச் சரி செய்வதற்கு எடுத்துரைக்க எனக்கு வாய்ப்பு இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்து, உடனடியாக அந்தப் பகுதி மக்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து, அவரும் அந்த அதிகாரியும் சென்று அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தப் பகுதிகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென்று அரசின் சார்பிலே அவர்களுக்கு ஆணையிடப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

3. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் வைத்தல். திரு. என்.ஆர். சிவபதி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பில்.

முற்பகல் 10.15

திரு. என். ஆர் சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாடு சட்டப் பேரவையின் 1992—93 ஆம் ஆண்டுக்கான, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினாறாவது, பதினேழாவது, பதினெட்டாவது மற்றும் பத்தொன்பதாவது அறிக்கைகளை, குழுத் தலைவரின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் சட்ட முன் வடிவு (அறிமுகம் செய்தல்) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1993.

அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு வரவழைத்தால், நான் அவர்களைக் கூட்டிச்சென்று காண்பித்து, அங்கே இருக்கும் முக்கிய மான சாலைகளைச் சரி செய்வதற்கு எடுத்துரைக்க எனக்கு வாய்ப்பு இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்து, உடனடியாக அந்தப் பகுதி மக்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து, அவரும் அந்த அதிகாரியும் சென்று அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தப் பகுதிகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென்று அரசின் சார்பிலே அவர்களுக்கு ஆணையிடப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

3. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் வைத்தல். திரு. என்.ஆர். சிவபதி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பில்.

முற்பகல் 10.15

திரு. என். ஆர் சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாடு சட்டப் பேரவையின் 1992—93 ஆம் ஆண்டுக் கான, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினாறாவது, பதினேழாவது, பதினெட்டாவது மற்றும் பத் தொன்பதாவது அறிக்கைகளை, குழுத் தலைவரின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் சட்ட முன் வடிவு (அறிமுகம் செய்தல்) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவு. அறிமுகம் செய்தல்.

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 30—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண் டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக் கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவு. அறிமுகம் செய்தல்.

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 30—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண் டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக் கெடுப்பும்—தொடர்ச்சி.

19—4—1993 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்ட மானியக் கோரிக்கை எண். 30—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் மீது நடந்த விவாதத்திற்குப் பதிலுரை—தொடர்ச்சி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலர் புரட்சியைச் செய்து ஆட்சியைப் பிடிப்பார்கள். சிலர் சூழ்ச்சிகளைச் செய்து ஆட்சியைப் பிடிப்பார்கள். ஆனால் நமது இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல சோதனைகளையும் சூழ்ச்சிகளையும் தூள் தூளாக்கி தமிழக மக்களின் நல் வாழ்வுக்காக நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி புரட்சிகள் செய்வதற்காகவே ஆட்சிக்கு வந்துள்ளார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி).

சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவை கல்வி வளர்ச்சியே என்பதை நன்கு உணர்ந்துள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் கல்வி மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவ - மாணவிகளுக்கு இலவசக் கல்வி, உதவித் தொகை, ஊக்கப் பரிசுகள், இலவசப் பாடப் புத்தங்கள், இலவசச் சீருடை போன்ற பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவையன்றி, இத் துறையின் நேரடி நிர்வாகத்தில் இயங்கி வரும் 1,223 பள்ளிகள் மற்றும் 932 விடுதிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவ மாணவியர் கல்வித் தரம் உயர பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு எடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் உள்ள அடிப்படை வசதிகளுக்கு இணையாக, இத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கும் அடிப்படை வசதிகள் உருவாக்கித் தரப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கோட்பாட்டிற்கிணங்க ரூ. 75 கோடி செலவில் பல திட்டங்களை இந்த அரசு 8-வது ஐந்தாண்டுத் திட்டத் காலத்தில் அமுல்படுத்த உள்ளது. இவற்றில் பள்ளிகளுக்குப் புதிய

கட்டிடங்கள் கட்டுதல், விடுதிகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுதல், தண்ணீர் வசதி, கழிப்பிட வசதி போன்ற அடிப் படைத் தேவைகளை நிறைவு செய்தல், அறிவியல் ஆய்வுக் கூடங் கள் அமைத்தல், கூடுதல் ஆசிரியர்களை நியமித்தல், புதிய விடுதிகளை நிறுவுதல், ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல், கல்வி புகட்ட தேவையான உபகரணங் களை அனைத்துப் பள்ளிகளுக்கும் வழங்குதல் போன்ற வைகள் அடங்கும். இவ்வசதிகள் அனைத்தும் உருவாக்கப் பட்ட பிறகு தனியார் பள்ளிகளுக்கு இணையான கல்வி தரத்தை ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும் அடையும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அதற்குத் தேவையான தொடர் நடவடிக்கைகளை இவ்வரசு எடுத்து வருகிறது.

மேலும் இத்துறைப் பள்ளிகளின் கல்வித் தரம் உயரப் பல சிறப்பு முயற்சிகளை இவ்வரசு மேற்கொண்டது. தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்த, இத்துறைப் பள்ளி களுக்கு ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு, மாவட்ட அளவில் அது அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவரின் நேரடிக் கண்காணிப்பில் அது செயல்படு கிறது. மேல் நிலைப் பள்ளி இல்லாத மாவட்டங்களில் இப்பணியை அம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கவனித்துக் கொள்வார். மேலும், பொதுவான பாடத் திட்டம், பொதுவான கல்வி புகட்டும் முறை, அடிக்கடி மாணவர்களின் கல்வித் தரத்தைச் சோதித்துப் பார்த்தல், பள்ளிகளுக்கு இடையே கருத்துப் பரிமாற்றம் செய்தல், மாதிரி பொதுத் தேர்வு நடத்துதல், ஆசிரியர்களுக்குத் தக்க புத்தறிவுப் பயிற்சி முதலியன இச்செயல் திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்றன. நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்வித் தரத்தை உயர்த்தச் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முற்பகல் 10-20

பொதுத்தேர்வு எழுதும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவிகளுக்கு சென்ற ஆண்டிலிருந்து ஒவ்வொரு பாடத்திலும் சிறப்பு வழிகாட்டிகள் 'ஸ்பெஷல் கெய்ட்' தயாரிக்கப்பட்டு அரசு செலவில் அச்சிட்டு இலவசமாக வழங்கப் படுகின்றன. குறிப்பிட்ட பாடங்களில் போதிய முன்னேற்றம் காட்டாத மாணவ - மாணவியருக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பொதுத் தேர்வு எழுதும் ஒவ்வொரு ஆதிதிராவிட மாணவ—மாணவியரையும் விழிப்புடன் கவனித்து வெற்றி அடையச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் இவ்வரசு செயல்படுகிறது. இதன் பயனாக 1990-91ஆம் ஆண்டு பொதுத் தேர்வில் 10ஆம் வகுப்பில் 33.6 விழுக் காடாக இருந்த தேர்ச்சி புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்

பேற்ற பிறகு 1991-92-ல், 57 விழுக்காடாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் 1990-91ஆம் ஆண்டில் 12 ஆம் வகுப்பில் 37.6 விழுக்காடாக இருந்த தேர்ச்சி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அந்தத் தேர்ச்சி விகிதம் 59 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). இந்த கணிசமான தேர்ச்சி உயர்வின் பயனாக, ஆதிதிராவிட நலப் பள்ளிகளில் பயிலும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ - மாணவியருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இலவச வழிகாட்டி நூல்கள் சலுகையை சென்ற ஆண்டு 1992-93ஆம் ஆண்டிலிருந்து மற்ற பள்ளிகளில் பயின்று ஆதிதிராவிட நலத் துறை விடுதியில் தங்கி இருக்கும் எல்லா இன மாணவ - மாணவியருக்கும் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வி-அறிவை பெருக்க பாடங்களையொட்டிய புத்தகங்கள் மட்டும் அல்லாது பொது அறிவுவளர்ச்சிக்கு உகந்த நூல்கள் பலவும் கொண்ட நூலகங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டபடி அனைத்து ஆதி திராவிட மாணவ - மாணவியர் விடுதிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதே போல் அனைத்து பள்ளிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற முதலமைச்சர் உத்தரவுக்கு இணங்க இதைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறோம் என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக ஆதிதிராவிட நலப் பள்ளிகளில் கல்வித்தரம் உயர அரசு இந்த எடுத்துள்ள பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் காரணமாக பிற இனங்களைச் சேர்ந்த மாணவ - மாணவியர்களும் அதிக அளவில் இப்பள்ளியில் சேர முன்வந்து இருக்கிறார்கள் என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற உள்ள நோக்குடன் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, ஆசிரியர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அமல்படுத்த இருக்கிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 20] [திரு. எம். ஆனந்தன்]

மேலும் இத்துறையின்கீழ் இயங்கும் எல்லா மாணவ மாணவியர் விடுதிகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டிடங்கள் கட்டி முடிக்க வேண்டும் என்ற திட்டத்தின்கீழ் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 5.3 கோடி செலவில் 22 புதிய விடுதி கட்டிடங்கள் கட்ட உத்தரவிடப்பட்டு கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள். சமுதாயத்தில் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் பிற சமூகத்தினருக்கு இணையாக அனைத்து அடிப்படை வசதிகளையும் விரைவாகப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடனேயே 10 அம்சத் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் ஓர் அம்சமாக 5 ஆண்டுகளில் 3.5 இலட்சம் ஆதிதிராவிட குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டு உதவிகளை வழங்க வேண்டும் என்றும், இதில் 1992-93ஆம் ஆண்டில் 70 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெற வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள். அதன்படி 71,848 குடும்பங்களுக்கு மேலாகவே பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல், 1993-94 ஆம் ஆண்டில் மேலும் 70 ஆயிரம் ஆதிதிராவிட குடும்பங்களுக்கு இவ்வுதவிகள் வழங்க இவ்வரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்து, ஏழை ஆதிதிராவிட விவசாயிகள் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் பாசனக் கிணறுகள் வெட்டிக் கொடுக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 7,162 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன, என்பதையும், மீதம் உள்ள கிணறுகள் நடப்பு நிதி ஆண்டில் வெட்டி முடிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆதிதிராவிடர் தனியார் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் 5 ஆண்டுகளில் ஓராண்டுக்கு 1,000 பேர் வீதம் 5,000 ஆதிதிராவிடர்களுக்கு தொழில் தொடங்க நிதி உதவிகள் செய்யப்படும் என்று தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து இதுவரை 1,727 பேருக்கு பல்வேறு தொழில்கள் தொடங்குவதற்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பயனாக மேற்கண்ட 1,727 பேர்கள் டிராக்டர், லாரி, டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா போன்ற வாகனங்களுக்கு உரிமையாளர்களாகவும், ஆடைகள் தயாரித்தல், தோல் பதனிடுதல் போன்ற தொழில்களில் உரிமையாளர்களாகவும் இன்று உருவெடுத்து உள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 5 ஆண்டுகளில் 4 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ஆதிதிராவிட மக்கள் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு நிர்ணயம் செய்து 1991-92ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 56 ஆயிரம் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. அதே போல், 1992-93ஆம் ஆண்டில் 75 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. கடந்த 1992-93 ஆம் ஆண்டில் அந்த இலக்கை மிஞ்சி 1,60,238 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

இனி வரும் ஆண்டுகளிலும், இதே வேகத்தோடு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் 5 ஆண்டுக் காலத்தில் 3 லட்சம் கான்கிரீட் வீடுகள் ஏழை எளிய ஆதிதிராவிடர்களுக்கு கட்டித்தர வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக்கிணங்க இதுவரை. 49,409 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது 18,876 வீடுகள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1993-94 ஆம் ஆண்டிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மேலும் ஒரு வீட்டுக்கான கட்டுமான மதிப்பீட்டைச் சமவெளியில் ரூ. 14,000 என்று இருந்ததை ரூ. 19,200 ஆக உயர்த்தியும், அதையே மலைப்பகுதிகளைப் பொறுத்தவரையில் ரூ. 21,000 ஆக உயர்த்தியும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர் வசதியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஆதிதிராவிடர்குடியிருப்பிலும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது ஏற்படுத்த வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டதற்கு இணங்க தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டுள்ளேன்,

இணைப்புச் சாலைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 437 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1.5 லட்சம் குடிசைகளுக்கு மின்வசதிகள் செய்து தர வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 60,242 குடிசைகளுக்கு மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தாட்கோ—தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் துவக்கத்தில் ஆதிதிராவிடர்களுக்கான வீட்டு வசதியை உருவாக்கித் தரும் நோக்கத்திற்காக ஆரம்பிக்கப், பட்டாலும், தற்போழுது ஆதி திராவிட இன மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்களை, மத்திய மாநில அரசுகளின் நிதியாதாரங்களைப் பெற்று அமுல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு 'தாட்கோ' நிறுவனத்தின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி பல திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தி வருகிறது.

சுய வேலைவாய்ப்புத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் சிறிய அளவிலான மளிகை கடைகள் நடத்துதல், சைக்கிள் ரிக்ஷா வழங்குதல், துணிக் கடைகள் துவக்குதல், சிற்றுண்டி விடுதிகள் துவக்குதல், தச்சுத் தொழில் நடத்துதல், தோல் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்தல், பாய் பின்னுதல், கயிறு தயாரித்தல், கூடை முடைதல் போன்ற தொழில்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பமும் ரூ. 10,000 வரை நிதி உதவி பெறலாம். இதில் ரூ. 5,000 மானியமாகவும் மீதி ரூ. 5,000 வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது. இதன்படி சென்ற ஆண்டு 9,593 நபர்கள் பயன் பெற்றனர். 1993-94-ஆம் ஆண்டிலும் இத்திட்டம் 8,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம். இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள இளைஞர்களுக்கும், மகளிருக்கும் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளித்து அவர்கள் சொந்தமாகத் தொழில் துவங்க வகை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் கம்ப்யூட்டர் பயிற்சி, தையல் பயிற்சி, வாகனங்கள் பழுது பார்த்தல் பற்றிய பயிற்சி, தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி, கைத்தறி, நெசவு, தச்சு

வேலை, பாய் முடைதல், அச்சடித்தல் வேலை, நூல் நூற்பு, பனை ஓலை பின்னுதல் முதலிய தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதன்படி 1992-93 ஆம் ஆண்டில் 3,500 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது என்பதை மிக்கமகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இதே போன்று 1993-94 ஆம் ஆண்டில் 3,500 பேர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படும். இவ்வுதவிகளை வழங்க இவ்வரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்.— இத்திட்டத்தின் கீழ், லாபம் தரத்தக்க பல்வேறு தொழில்களைத் தொடங்குவதற்கு ஆதிதிராவிட மக்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வுதவிகளைப் பயன்படுத்தி இதுவரை தோல் பதனிடும் தொழிற்சாலைகள், இன்ஜினியரிங் தொழிற்சாலைகள், மரம் அறுக்கும் தொழிற்சாலைகள், அச்சகங்கள், ஜெராக்ஸ் நிறுவனங்கள், கம்ப்யூட்டர் பயிற்சி நிலையங்கள் போன்றவை உருவாக்கப்பட்டுள்ளன. மற்றும் லாரிகள், டிராக்டர்-டிரெயிலர்கள், கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், வேன்கள் போன்றவை வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் தொழிற் தொடங்குவோர்க்கு ரூ. 5 இலட்சம் வரை முதலீடு அனுமதிக்கப்படுகிறது. இதில் ரூ. 15,000 மான்யமாகவும் அதிக பட்சம் ரூ. 85,000 அல்லது குறிப்பிட்ட ஒரு தொழிலுக்கான மொத்த மதிப்பீட்டில் 20 விழுக்காடு, அதில் எது குறைவோ அத்தொகை, 4 சதவீதம் வட்டியில் விளிம்புத் தொகையாக— மார்ஜின் மணி — வழங்கப்படுகிறது. மொத்த முதலீட்டில் இவை போக மீதம் உள்ள தொகை வங்கி கடனாகப் பெற ஏற்பாடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான ஆதிதிராவிடர் குடும்பங்கள் நல்ல வருமானத்தை ஈட்டுவதற்கும், பிறருடைய தயவின்றி தம் சொந்தக் காலில் நிற்பதற்குமான வாய்ப்பும் ஏற்படுகிற தென்பதோடு, இன்னும் பல ஆதி திராவிட மக்கள் இந்நிறுவனங்களில் பணியாற்றுகின்ற வாய்ப்புகிடைக்கிறது என்பதையும் உணர்ந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு 1992-93-ஆம் ஆண்டுவரை 1,727 பேருக்குத் தொழில்கள் தொடங்குவதற்கான உதவிகளை வழங்கியுள்ளது.

1993 ஏப்ரல் 20] [திரு. எம். ஆனந்தன்]

முற்பகல் 10-30

மேலும் ரூ. 5 லட்சத்திற்கு மேற்பட்ட மதிப்பீட்டுடன் பெரிய அளவில் தொழில் துவங்கவும், பல ஆதி திராவிடர் தொழில் முனைவோர் முன்வருகின்ற சூழ்நிலை தற்பொழுது உருவாகி வருகிறது. அவர்களது தொழில் திட்டங்கள் தாட்கோ மூலமாக டெல்லியிலுள்ள தேசியத் தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குப் பரிந்துரை செய்யப்படுகின்றது. இது பெரிய அளவில் தொழில் தொடங்க முன்வரும் ஆதி திராவிடர்களுக்கு ஒரு அரிய வரப் பிரசாதமாகும்.

பழங்குடியினர் நலன். 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 5.75 லட்சம் பழங்குடியினர் வசிக்கின்றனர். இம்மக்களின் முன்னேற்றத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு தனி முயற்சிகள் எடுத்து பல சிறப்புத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் 13 மாவட்டங்களில் ஆங்காங்கே பரவலாக வசிக்கின்றனர். பழங்குடியினர் அதிகமாக வாழும் சேலம், தர்மபுரி, வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், தென் ஆற்காடு, திருச்சி ஆகிய ஆறு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

மேலும் பண்டைய பழங்குடி மக்களுக்காக நலத்திட்டம் ஒன்றும் சிதறுண்டு வாழும் பழங்குடியினருக்காக நலத்திட்டம் ஒன்றும் சீராக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பழங்குடியின மக்களின் ஒட்டு மொத்தமான முன்னேற்றத்திற்கு கல்வி அடிப்படையானது என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு இம்மக்களுக்கு 217 உண்டு உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகின்றது. இவைகளில் 14,100-க்கு மேற்பட்ட பழங்குடியின மாணவ மாணவியர் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர். இத்தகைய உறைவிடப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்தோடு திருச்சி மாவட்டம், பச்சைமலைப் பகுதியில் உள்ள பல்வேறு உண்டு உறைவிடப் பள்ளிகளை இணைத்துப் பெரிய அளவில் டாப் செங்காட்டுப்பட்டியில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு மாதிரிப் பள்ளியை அமைக்க வேண்டும் எனவும், அப்பகுதி மக்களின் விருப்பத்திற்கு இணங்க அப்பள்ளிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது பெயரைச் சூட்ட வேண்டுமெனவும் முடிவு எடுத்து அதற்கான பூர்வாங்க வேலைகள் துவக்கப் பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்

கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் முதற்கட்டப் பணியாக செங்காட்டுப்பட்டி நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி, புரட்சித் தலைவி அவர்களது அரசு ஆணையிட்டு, அப்பள்ளி தற்போது இயங்கி வருகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இம்மாதிரிப் பள்ளியை அமைக்கத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இதன்மூலம் பழங்குடியின மாணவ, மாணவியர் தங்கிக் கல்வி பயில்வதற்கு நல்ல வசதிகள் உருவாக்கித் தரப்படும் என்பதோடு அவர்களது கல்வியின் தரமும் மேன்மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்முன்னோடித் திட்டத்தின் செயல்பாட்டினைக் கருத்திற்கொண்டு, அத்தகைய மாதிரிப் பெரும் பள்ளிகள் பழங்குடியினர் வாழும் பிற பகுதிகளுக்கும் வரும் ஆண்டுகளில் விரிவுபடுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 49 லட்சம் செலவில் 7 புதிய உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட இந்த அரசு உத்தரவிட்டுள்ளது என்பதையும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயத் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் வட்டத்தில் நெடும்பரம், இலுப்பூர் மற்றும் புதூர் காந்தி கிராமம் ஆகிய இடங்களில் வாழும் இருளர் என்ற பண்டைய பழங்குடியின மக்களுக்கு 63 வீடுகள், ரூ. 9.30 லட்சத்தில் கட்டித் தர முடிவு எடுத்து, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பழங்குடியினர் துணைத் திட்டம். 1992-93 ஆம் ஆண்டில் மலைவாழ் மக்கள் முன்னேற்றத் துணைத் திட்டத்தின் கீழ் 19.33 கோடி ரூபாய் செலவில் பழங்குடியினர் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான ஆடு வளர்ப்பு, பால் மாடுகள் வழங்குதல் போன்ற மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

தமிழகத்திலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களிடையே நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதயத்தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு பெருகிவரும் நல்லாதரவினைக் கண்டு பொறுக்க முடியாத சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்குவந்தால் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட

மக்களின் நலம் பாதிக்கப்படும் என்ற கட்டுக்கதைகளை உலவ விட்டனர். ஆனால் என்ன நடந்தது? வாரி வழங்கிய வள்ளல் பாரத ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் வழிவந்த ஏழை எளிய மக்களின் காவல் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி ஒருவரே, எங்கள் வாழ்க்கையின் வழிகாட்டி என்று, தங்களின் ஏகோபித்த நிரந்தர தலைவியாக ஏற்றுக்கொண்டனர். (மேசையைத் தட்டும் ஒலி) இம்மக்களின்பால் தனக்கிருக்கும் பாசத்தையும், பரிவினையும் வெளிக்காட்டும் வகையில், பொருளாதாரத்திலும், சமூக அந்தஸ்திலும் மிகவும் அடிமட்டத்திலிருக்கின்ற இந்த ஆதி திராவிட மக்கள் ஏனைய சமூகத்தினரோடு அவர்களுக்கு இணையாகப் பொருளாதாரத்திலும் தலை நிமர்ந்து நிற்க வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயத் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதுவரை இந்திய நாடு கண்டிராத வரலாற்று சிறப்புமிக்க முப்பெரும் பொருளாதாரத் திட்டங்களான பனியன் தொழிற் பேட்டைகள் அமைத்தல், இறால் வளர்ப்புப் பண்ணைகளை ஏற்படுத்துதல், பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணைகளை உருவாக்குதல் ஆகிய மூன்று திட்டங்களை இம்மக்களுக்காக உருவாக்கித் தந்துள்ளார்கள். இத்திட்டங்களை அமல்படுத்த பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டங்கள் அகில இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டித் திட்டங்களாக அமையும் என்பது மட்டுமல்ல, ஆதி திராவிட இன மக்களின் சமூகக் பொருளாதார மறுமலர்ச்சிக்கு ஒரு நுழைவு வாயிலாகவும் அமையும் என்பதிலும் எள்ளளவும் சந்தேகமில்லை. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் கண் ணும் கருத்துமாக இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்த புரட்சிகரமான திட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களாலும் பாராட்டப்படுவதை நாம் கண்கூடாகக் காண முடிகிறது.

ஆதி திராவிடர்களையும் அர்ச்சகர்களாக்கி அழகுபார்க்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயத் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஆதி திராவிடர்களை தொழில் அதிபர்களாவும் ஆக்கிட உறுதி பூண்டு, கோவை, பெரியார் மாவட்டங்களில் இரண்டு பின்னலாடை தொழிற்பேட்டைகள் தொடங்க கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

(முற்பகல் 10-35)

அதன் தொடர் நடவடிக்கையாக கோவை மாவட்டத்தில் திருப்பூரை ஒட்டியுள்ள முதலிபாளையம் கிராமத்தில் ஏற்படுத்த முடிவு செய்து அதற்காக 109 ஏக்கர் நிலம் வாங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மற்றொன்றை பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம் நல்லகவுண்டன் பாளையத்தில் ஏற்படுத்த 116.04 ஏக்கர் நிலத்தை ஏற்கனவே தாட்கோவிற்கு வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தொழில் முனைவோரைத் தேர்வு செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரி விளம்பரப்படுத்தப் பட்டுள்ளன என்பதையும், இதுவரை சுமார் 1,400 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன என்பதையும், விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி தேதியை 30-4-1993 வரை நீட்டித்து உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும், டிசம்பர் 1994-ல் இத் தொழிற் கூடங்களில் உற்பத்தி தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும் மகிழ்ச்சியுடன் இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து கொள்கிறேன். மற்றொரு மகிழ்ச்சியான செய்தியை இங்கு நான் தெரிவிக்க பெரும் பாக்கியம் பெற்றிருக்கிறேன். ஆதித் திராவிட மக்களின் இதய தெய்வமாக விளங்குகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்தொழிற்பேட்டையை சிந்தித்து இம் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும்என்றஉன்னத நோக்கத்தோடு ஏற்படுத்தியிருக்கிறார்கள். இம்மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தொழிற்பேட்டை என்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பெயர் சூட்டப்படும் என்று நான் பெருமையோடு கூறிக் கொள்கிறேன்.

இறால் வளர்ப்புப் பண்ணைகள்: இறால் வளர்ப்பு இலாபகரமானது என்பதும் அந்நிய செலாவணியைப் பெருமளவு நாட்டிற்கு ஈட்டித் தர வல்லது என்பதும் நாம் அறிந்ததே. ஆனால் இத்தொழில் செய்வதற்கு மிகுந்த முதலீடு தேவை. எனவே, பொருளாதார வசதி படைத்தோரே இத் தொழிலில் ஈடுபட்டு இலாபம் ஈட்ட இயலும் என்ற நிலையை மாற்ற, ஏழை எளிய ஆதிதிராவிடர்களும் இதிலே துணிந்து ஈடுபட வேண்டும், அதற்கான அத்தனை வாய்ப்புகளையும் அரசே முன்னின்று ஏற்படுத்தித் தரவேண்டும் என்னும் தாய் உள்ளத்தோடு நம் இதய தெய்வம் அவர்கள் ஆதிதிராவிட மக்களுக்காக இத்திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இத்திட்டத்தின் கீழ் இறால் வளர்ப்பதற்குத் தகுதி வாய்ந்த 1,000 ஹெக்டேர் தனியார் நிலங்கள் தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் விலைக்கு வாங்கப்பட்டு,

[திரு. எம். ஆனந்தன்] [1993 ஏப்ரல் 20

இத்தொழிலுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிற ஆதிதிராவிடர் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஹெக்டேர் நிலம் வீதம் வழங்கப்படும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 100 கோடியாகும்.

வளர்க்கப்படும் இரால்களுக்குரிய நியாயமான விலை கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பில் இரால் வளர்க்க நடைமுறைச் செலவு ரூபாய் 7.50 இலட்சம் உட்பட மொத்தம் ரூபாய் 10 இலட்சம் தேவைப்படும். இதனால் 1,000 ஆதிதிராவிட தொழில் முனைவோர் உருவாக்கப்படுவார்கள். ஆண்டொன்றுக்கு இரண்டு சாகுபடிகள் செய்வதன் மூலம் குறைந்தது ஒரு ஹெக்டேர்க்கு ரூபாய் 2.00 இலட்சம் இலாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் இம்மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம்:

இத்தொழிலில் நீர்ப்பாசன வசதியுடன் கூடிய ஒரு ஏக்கர் நிலத்தில் 'மல்பெரி' செடிகளைச் சாகுபடி செய்து பட்டுப்புழு வளர்த்தால் ஆண்டொன்றுக்குக் குறைந்தது ரூபாய் 30,000 இலாபம் கிடைக்கும். இதை ஆதிதிராவிட மக்களிடையே பெருமளவு ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலும், நிலத்தடி நீர் வசதியுடன் கூடிய தகுதி வாய்ந்த 4,000 ஏக்கர் நிலம் விலைக்கு வாங்கப்படும். தகுதி வாய்ந்த ஆதி திராவிடர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஒரு ஏக்கர் நிலம் அரசே வாங்கி வழங்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தேவையான பாசன வசதி செய்து தரவும், பட்டுப்புழு வளர்ப்பதற்கும் தேவையான தனித்தனிக் கூடங்களும் அமைத்துத் தரவும் தேவையான இயந்திரங்களும் வாங்க வழி வகைகள் செய்யப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 4,000 குடும்பங்கள் வாழ்வில் ஒளியேற்றுவதோடு, அவர்களும் எதிர்காலத்தில் தொழில் முனைவோர்களாக உருவாவதற்கு இது அடித்தளமாக அமையும் என்பதை உணர்ந்து இத்திட்டத்தைக் கடந்த ஜனவரித் திங்களில் ஆதிதிராவிடர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய அண்ணல் அம்பேத்கார் பெயரை தன்னகத்திலே கொண்டுள்ள

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பணித்தவாறு துவக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல ஒரு ஏக்கருக்கு குறையாமல் நிலம் வைத்துள்ள 4 ஆயிரம் ஆதிதிராவிடர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர். மொத்தத்தில் நிலம் விற்ற 4 ஆயிரம் ஏழை ஆதித் திராவிடர்களும், நிலம் வைத்துள்ள 4 ஆயிரம் ஆதித்திராவிடர்களுமாக 8 ஆயிரம் ஆதி திராவிட குடும்பங்கள் இதன்பால் பயன் பெறுவர். இத் திட்டத்தின் கீழ் மொத்த செலவு ரூபாய் 46 கோடியாகும். அதற்காக 20 மாவட்டங்களில் 80 ஊராட்சி ஒன்றியங்களை தேர்வு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டங்களை தேசிய தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகமும், தாட்கோவும் இணைந்து வங்கிகளின் உதவியோடு செயல்படுத்தப்படும்.

குடியுரிமைப் பாதுகாப்பு மற்றும் தீண்டாமை ஒழிப்புச் சட்டம்:

குடியுரிமைப் பாதுகாப்பு மற்றும் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை பயன்படுத்த கோர்ட் ஏற்படுத்துவதில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. இத்திட்டங்களின் கீழ் பதியப்பட்ட வழக்குகளை விசாரிக்க கும்பகோணம், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது இந்த நீதிமன்றங்களில் முதல்நிலை குற்றவியல் நீதிபதிகள் தலைமையில் இயங்கி வருகின்றன. அந்த நீதிமன்றங்களை கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றங்களாக உயர்த்துவதற்கு ஆன முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10-40

மேலும் புதிதாக 4 சிறப்பு நீதிமன்றங்களை செங்கல்பட்டு, பெரியார் தென்னாற்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கான ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த வரவு-செலவுத் திட்ட தொடரின் போது சட்ட மாமேதை பாரத் ரத்னா அம்பேத்கார் அவர்களுக்கு 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நூற்றாண்டு நினைவு மண்டபம் நிறுவப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். சொல்வதைச் செய்வோம் செய்

வதையே தான் சொல்வோம் என்ற கொள்கைக்குச் சொந்தக்காரரான டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு நினைவு மண்டபத்திற்கு அவரது பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் நாள் அடிக்கல் நாட்டினார்கள். அதோடு இந்நினைவு மண்டபம் விரைவாகக் கட்டி முடிக்கப்பட்டு டாக்டர் அம்பேத்காரின் அடுத்த பிறந்த நாள் தினத்தன்றே திறந்து வைக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். இதை பொறுத்துக்கொள்ள மனமில்லாத தீய மனம் படைத்தோர்கள் நூற்றாண்டு விழா நடந்து கொண்டிருந்த போது ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் இதைச் செய்ய தவறி விட்டவர்கள் பொது மக்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் போற்றத்தக்க இம்மாபெரும் செயலுக்கும் ராணிப் பேட்டை இடைத்தேர்தலுக்கும் முடிச்சுப் போடுகிறார்கள். அதோடு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நூற்றாண்டு மணி மண்டபத்தை சென்னை மாநகரில் ஒரு மையப் பகுதியில் ஏற்படுத்த வேண்டும் என்று சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்த போது அப்போது அவையில் இருந்த இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மறைந்த திரு. வேணுகோபால் அவர்கள் கைதட்டி வரவேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அதோடு, புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் தேர்தலை எதிர் பார்த்தா அம்பேத்கார் நூற்றாண்டு நினைவு மண்டபம் நிறுவினார் என்பதை நீங்கள் சிந்துத்துப் பார்க்க வேண்டும். ஒருவேளை இராணிப்பேட்டை இடைத் தேர்தல் வராமல் இருந்திருந்தால் இன்னும் 3 ஆண்டுகளுக்குப் பிறகு வரும் பொதுத் தேர்தலுக்காகத்தான் இதை அறிவித்தார் என்று கூட சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தானும் சொல்வதில்லை. தானும் செய்வதில்லை. பிறர் செய்வதையும் குதர்க்கமாய் குறை கூறுவதையே வழக்கமாகக் கொண்டு இருக்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள் தமிழைக் காப்பேன், தமிழனைக் காப்பேன் என்று கூறிக்கொண்டு சந்தர்ப்ப வசத்தால் முதலமைச்சராக ஆகி வள்ளுவர் கோட்டத்தில் காலை 11 மணிக்கு பதவி ஏற்று அன்று மாலையே புரட்சித் தலைவர் அவர்களால் நிறுவப்பட்ட திருக்குறள் நெறி பரப்பும் மையத்தை மூடுவிழா கண்டு களித்தவர், இதன் மூலம் திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் மாபெரும் துரோகத்தைச் செய்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுல்ல. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் அதன் தலைவராக இருந்தவர் எங்கள் தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த திருக்குறளார் முனுசாமி அவர்கள் வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதே. வன்னியர் என்றால் திரு. கருணாநிதி அவர்களுக்குப் பிடிக்காது. அதனால் திருக்குறள் முனுசாமி அவர்களை அப்பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்பதற்காக அவர் மேல் இருந்த கோபத்தை திருக்குறள் மேல் காட்டினார்கள். (மேசையைத்

தட்டும் ஒலி) இந்தச் செயலுக்குச் சொந்தக்காரரான கருணாநிதி அவர்கள், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தென்னாற்காடு மாவட்ட மக்களின் ஒட்டுமொத்த வேண்டுகோளை ஏற்று தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் விடுதலைப் போராட்ட வீரர் பல அமைப்புகள் மூலம் சமுதாயத்திற்கு நல்ல பல தொண்டுகளைச் செய்த பெருமை உடைய பெரியவர் திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சியார் அவர்களுடைய பெயரைச் சூட்டியதை வழக்கம் போல் குற்றம் குறைகளைக் கூறுகிறார். இராணிப்பேட்டைத் தேர்தலை இணைத்துப் பேசுகிறார்.

ஆனால் யார் நன்மை செய்வார்கள், யார் தீமை செய்வார்கள் என்பதை மக்கள் நன்றாகப் புரிந்து வைத்துள்ளார்கள். இதையெல்லாம் நான் இங்கே கூறக் காரணம் என்னவென்றால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எதையும் எதிர்பார்த்து செய்வதில்லை. அவரது இதயம் தட்டாமலேயே திறக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) கேளாமலேயே திட்டங்களை உருவாக்கி நன்மை பயக்கும் என்பதை கருணாநிதி போன்றவர்கள் நன்கு உணர வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கே இதைச் சொல்கிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சில முக்கிய அறிவிப்புகளைச் செய்யச் சொல்லியிருக்கிறார்கள்.

(1) நடப்பு ஆண்டில் 1000 மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ. 40.2 இலட்சம் செலவில் 20 புதிய ஆதிதிராவிட நல விடுதிகள் திறக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

(2) ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தற்போது உணவுக்காக பள்ளி மாணவ மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் தொகை ரூ. 105-ஐ மாதம் ஒன்றுக்கு ரூ. 120 ஆக உயர்த்த வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் கல்லூரி மாணவ மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் தொகையை ரூ. 155-ஐ மாதம் ஒன்றுக்கு ரூ. 175 ஆக உயர்த்த வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி), இதையே சென்னையைப் பொறுத்தவரையில் ரூ. 180 ஆக உயர்த்த வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நடத்தும் விடுதிகளுக்கும் உணவுத் தொகையை மாதம் ஒன்றுக்கு ரூ. 70 லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 85 ஆக உயர்த்தி உத்தரவிட்டுள்ளார்கள்.

1993 ஏப்ரல் 20] [திரு. எம். ஆனந்தன்]

நடப்பு கல்வியாண்டில் கூடுதலாக 50 இடைநிலை ஆசிரியர்களை ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்கு நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பு ஆண்டில் மூன்று ஆதிதிராவிட நல நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், இரண்டு ஆதிதிராவிட நல உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுத் தேர்வு எழுதும் பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவ மாணவியருக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்திய சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டிலும் 20,000 வழிகாட்டி நூல்கள் அச்சிட்டு இலவசமாக வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.(மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-45

நடப்பு ஆண்டில் 20 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதியும் 15 பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதியும் ஏற்படுத்தித் தர இதய தெய்வம் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஏற்கெனவே இயங்கிவரும் விடுதிகளில் கூடுதலாக 1,000 மாணவ மாணவியர்கள் சேர்த்துக்கொள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்காக ரூ. 11.2 லட்சம் கூடுதலாக செலவிடப்படும்.

நடப்பு ஆண்டில் ரூ. 6 லட்சம் செலவில் மூன்று மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வகங்கள் ஏற்படுத்தவும், ரூ, 10.92 லட்சம் செலவில் 14 பள்ளிகளுக்கு மேசை நாற்காலிகள் போன்றவை வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

ரூபாய் 1.03 லட்சம் செலவில் வரைப்படங்கள் போன்ற சாதனங்கள் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

ரூபாய் 9 லட்சம் செலவில் 150 விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் (Wet Grinders) வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பழங்குடி மாணவ மாணவியர் 100 பேர் பயன்பெறும் விதத்தில் ரூ. 4.1 லட்சம் செலவில் இரண்டு உண்டு உறைவிடப் பள்ளிகள் புதிதாக ஏற்படுத்த இதய தெய்வம் டாக்டர் புரட்மத் தலைவி அவர்கள் ஆணயிட்டுள்ளார்கள்.

பச்சைமலைப் பகுதியிலுள்ள சில உண்டு உறைவிடப் பள்ளிகளை ஒருங்கிணைத்து ஒரு மாதிரிப் பள்ளியை ஏற்படுத்தும் நோக்கத்தோடு செங்காட்டுப்பட்டி நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக கடந்த ஆண்டு தரம் உயர்த்தப்பட்டு அப்பள்ளிக்கு அப்பகுதி பழங்குடியின மக்கள் விருப்பத்தற்கிணங்க டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெயர் சூட்ட முடிவு செய்யப்பட்டது. இவ்வாண்டு செங்காட்டுப்பட்டி உயர்நிலைப்பள்ளி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதியுடன் டாக்டர் புரட்சித் தலைவி மாதிரி மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிட நலத்துறை விடுதிகளுக்கு சொந்தமாகக் கட்டிடம் கட்டித்தர நடப்பு ஆண்டு ரூ. 3 கோடியும் அதேபோல் ஆதி திராவிட நலப்பள்ளிகளுக்கு சொந்தமாக கட்டிடம் கட்டித்தர ரூ. 1.5 கோடியும் செலவிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 45 லட்சம் செலவில் 35 ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. அதேபோல் நடப்பு ஆண்டிலும் இத்திட்டத்தின் கீழ் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

நடப்பு நிதியாண்டு முதல் 75 சதவீதத்திற்கு அதிகமாக தேர்ச்சி விகிதம் காட்டுகின்ற ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு ஊக்கப் பரிசாக தலா ரூ. 1,500-ம் 60 சதவீதத்திலிருந்து 74 சதவீதம் வரை தேர்ச்சி விகிதம் காட்டும் தலைமை ஆசிரியர்களுக்கு ஊக்கப் பரிசாக தலா ரூ. 1,000-ம் வழங்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதேபோல், தத்தம் பாடப் பிரிவுகளில் நூற்றுக்கு நூறு தேர்ச்சி விகிதம் காட்டும் வகுப்பு ஆசிரியர்களுக்கும் தலா ரூ. 750-ம் ஊக்கப் பரிசு வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இறால் குஞ்சு உற்பத்தியை ஆதி திராவிடர்களே மேற்கொள்ளும் வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற டாக்டர் புரட்சித் தலைவியின் விருப்பத்திற்கிணங்க தேவையான குஞ்சு பொறிப்பகங்கள் அமைத்துத்தர ஆணையிட்டுள்ளார்கள்.

பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருவண்ணாமலை, வாணியம்பாடி, தென்காசி, திண்டுக்கல் ஆகிய 7 மையங்களில் ஒரு மையத்திற்கு 15 பட்டு

இழை எடுக்கும் தொழிற் கூடங்கள் (Reeling units) வீதம் மொத்தம் 105 தொழிற் கூடங்கள் ரூ. 1.71கோடி செலவில் ஏற்படுத்தவும் ரூ. 1.33 கோடி செலவில் மேலும் 7 கூட்டுறவு முறுக்கேற்று மையங்கள் (Twisting centres) ஏற்படுத்தவும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் மொத்தம் மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிடர்கள் பயன் பெறுவார்கள்.

கடந்த ஆண்டு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் கால் நடை, பால்வளம், பட்டு வளர்ப்பு, எண்ணெய்வித்து போன்ற துறைகள் மூலம் சுமார் 2½ லட்சம் ஆதிதிராவிடர்கள் பயன் பெறும் விதத்தில் ரூ. 293 கோடி செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் மேலும் 2½ லட்சம் ஆதி திராவிடர்கள் பயன்பெறும் விதத்தில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 354 கோடி செலவிட டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு உத்தரவிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடப்பு ஆண்டில் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க ரூ. 5.8 கோடி செலவிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

சிதறுண்டு வாழும் பழங்குடியின மக்களுக்கு உழவு மாடுகள், கறவை மாடுகள், ஆடுகள் போன்றவை வழங்க கடந்த ஆண்டு 33.46 லட்சம் செலவிடப்பட்டது. இந்த ஆண்டு இதற்காக ரூ. 40 லட்சம் ஒதுக்கீடு செய்தும் அதேபோல் பண்டைய பழங்குடி மக்களுக்கும் நடப்பு ஆண்டில் ரூ. 33 லட்சம் ஒதுக்கீடு செய்தும், மேலும் பழங்குடியின மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் ரூ. 22.48 கோடி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு ஒரு லட்சத்து நாற்பத்து ஓராயிரம் ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 78.55 கோடிக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் மேலும் 75,000 ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் ரூ. 40 கோடி செலவிட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தனி நபர் தொழில் முனைவோரின் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 1,500 தொழில் முனைவோர் உருவாக்க இலக்கு நிர்ணயித்துள்ளார்கள்.

கடந்த ஆண்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மூலம் 10,315 பேர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்க ரூ.30.98 லட்சம் செலவு செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதித்தார்கள். இச்சலுகையை நடப்பு ஆண்டுக்கும் நீட்டித்து ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இங்கு நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்க பூர்வமான யோசனைகளையும் நல்லபல கருத்துக்களையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவற்றை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு தக்க கவனத்தில் கொள்ளும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் மனைப் பட்டா வழங்க நிலச் சொந்தக்காரர்களின் ஒப்புதல் இருந்தால் தான் பட்டா வழங்கப்படும் என அறிவிப்பு இருப்பதாகக் குறிப் பிட்டார்கள்.

முற்பகல் 10-50

அவ்வாறான ஒப்புதல் பெறுவது இயலாது என்பதால், பல ஆண்டுகள் அதே இடத்தில் குடியிருப்பவர்கள்கூட பட்டா பெற முடியாத நிலை உள்ளது என்றும் குறிப்பிட்டார்கள். இதை வருவாய்த் துறை ஏற்கெனவே பரிசீலித்து, சென்ற 15—4—1993-இல் அறிவுரைகள் வழங்கியுள்ளது. அதன்படி ஒருவர் குறிப்பிட்ட ஒரு இடத்தில் நீண்ட நாட்கள் குடியிருந்து வருகிறார் என்பதை உறுதி செய்ய, உணவுப் பங்கீட்டு அட்டை, வாக்காளர் பட்டியல், உள்ளாட்சி அமைப்புகளின் வரி ரசீதுகள் போன்றவற்றில் குறிப்பிட்டுள்ள முகவரியைக் கொண்டு விசாரணை மூலம் பெறப்படும் விவரங்களைக் கொண்டும் உறுதி செய்து மனைப்பட்டாக்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலச் சொந்தக்காரரும், ஒப்புதல் அல்லது ஒப்பந்தம் பத்திரம் எதுவும் வாங்கத் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மின் கட்டணம் அதிகமானதால் விடுதிகளில் விளக்குகள் விரைவில் அணைக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். அப்படிச் செய்யத் தேவையில்லை. மின் கட்டணம் போன்ற செலவுக்குத் தேவையான நிதி வருடம் முடிவில் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் ஆசிரியர்கள் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிற நிலை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் மாற்றப்பட்டு ஆண்டுக்கு ஒரு முறை விதிகள்படி பொது மாற்றங்கள் வழங்க உத்தரவிட்டு அவை பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆதி திராவிட நலத் துறையின் மூலம் மேற்கொள்ளும் வேலையில் ஆதிதிராவிட ஒப்பந்தக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். 7,500 ரூபாய் வரையிலான சாதாரணப் பணிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்க அரசு

உத்தரவிட்டுள்ளது. என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்த அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனைப் பேணிக் காக்கவும், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி இதன் மூலம் அவர்கள் சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளவும் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது; என்னென்ன சாதனைகளைச் செய்துள்ளது; என்றும் என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற உள்ளது என்பதைப் பற்றியெல்லாம் இங்கே விரிவாக விளக்கி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் பல கோரிக்கைகளுக்கு என் பதிலுரை திருப்தி அளிக்கும் என்று எண்ணுகிறேன். நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையின் கீழ் இந்த அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் அவ்வின மக்களின் நலனுக்காக தொடர்ந்து சிறப்புடன் செயல்பட உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்று இத்தருணத்தில் கேட்டுக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல திட்டங்களை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அதிலே 10 ஆயிரம் நபர்களுக்கு பாசனக் கிணறு வசதி அளிப்பதாகவும், உழவு மாடுகள் கொடுப்பதாகவும் அறிவித்தார்கள். அது ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியில் கொடுத்ததுதான். இருந்தாலும் அதை தேர்வு செய்யக் கூடிய முறை, அன்றைக்குத் தேர்வு செய்தது; அதாவது அந்த மனுக்களையெல்லாம் பெற்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகளை வைத்து குலுக்குச்சீட்டு போட்டுத்தான் தேர்வு செய்தார்கள். ஆனால் இன்றைக்கு இந்த உழவு மாடுகள் ஒரு ஜில்லாவுக்கு வ்வளவு கொடுக்கப்படுகின்றன? ஒரு தொகுதிக்கு எவ்வளவு எகாடுக்கப்படுகின்றன? கிணறுகள் ஜில்லா வாரியாக எவ்வளவு என்பதை அறிவிக்க முடியுமா? எப்படி தேர்வு செய்யப்படுகிறது என்பதையும் அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில், ஊருக்கு ஒன்று, ஒன்றியத்திற்கு 3 என்றுதான், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்

1993 ஏப்ரல் 20] [திரு. எம். ஆனந்தன்]

இருந்தது. (குறுக்கீடு) குலுக்குச் சீட்டு போட்டு ஒன்று, இரண்டுதான் கொடுப்பார்கள். ஆனால் இப்போது டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் 10 ஆயிரம் கிணறுகள் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு ஒன்றியத்திற்கு 40 கிணறுகள் 50 கிணறுகள் கொடுத்து ஜீவன்தாரா முறைப்படித்தான் பி.டி.ஓ. மூலம்தான் செலக்ட் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலத்தில், ஒன்று, இரண்டு என்று குலுக்குச் சீட்டு போட்டுத்தான் கொடுத்தார்கள். அதையும் அரசியல் இன்ஃப்ளுயன்ஸ் உள்ளவர்கள் தான் வாங்கியிருப்பதாக நான் அறிந்து இருக்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை ஒரு ஜில்லாவிலே ஒரு தொகுதியை எடுத்து, 250 ஜோடி மாடுகள் நானேயிருந்து குலுக்குச்சீட்டுபோட்டு எடுத்துக் கொடுத்திருக்கிறேன். ஆகையினாலே, உண்மைக்குப் புறம்பாகச் சொல்லவேண்டாம்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை என்றால், எந்த ஆட்சிக் காலத்தில் என்பதை அறிய விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நான் பிறந்து இருக்க மாட்டேன் என்று நினைக்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே ஒருசில கோரிக்கைகளை ஏற்று அதற்கு நல்ல முறையிலே பதிலுரை கொடுத்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரித்துக்கொள்வதோடு, இன்னொன்று, முன்பு கட்டிக்கொடுக்கப்பட்ட ஓட்டு வீடுகள் முழுமையும் இடிந்து, குடியிருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதை சீர்செய்வதற்கோ அல்லது திருப்பிக் கட்டிக் கொடுப்பதற்கோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, சென்ற ஆண்டு 35 ஆயிரம் வீடுகள்; ஆனால் இந்த ஆண்டு 20 ஆயிரம் வீடுகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த வீடுகளினுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டு இருக்கின்றது. இது கூட்டப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 20[

முற்பகல் 10.55

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்</u> : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நேற்று பேசிய தொகுப்பு வீடுகள் சம்பந்தமாக இந்த அரசு கவனத்தில் கொண்டிருக்கிறது. இதுபற்றி என்ன நடவடிக்கையை எடுக்கலாம் என்பதைப்பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களோடு ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. வே. தம்புசாமி</u> : இடிந்த வீடு, குடியிருக்க முடியாத இடிந்த வீட்டைப் பற்றி.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு திரு. தம்புசாமி அவர்கள் கேட்பது, இடிந்த வீடு கட்டப்பட வேண்டுமென்று, இப்பொழுது அரசு புதிய வீடுகள் கட்டுவதற்கே வழிவகைகள், அதாவது ஒரு ஊருக்கு 20 வீடுகள்தான் கொடுப்பதாகச் சட்ட மன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். நாம் இடிந்த வீடுகளைக் கட்ட ஆரம்பித்தால், புதிய வீடுகள் கட்டுவது நின்று விடும். அதற்கு அவர் சம்மதிக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. வே. தம்புசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இடிந்த வீடுகளைக் குறைந்த செலவில் பழுது பார்ப்பதற்கு மாறாக, புதிய வீடு கட்டுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. புதிய வீடு கண்டிப்பாகக் கட்டப்படவேண்டும். இதைவிடக் கூடுதலாகக் கட்டப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. ஆனால் ஒரு குறிப்பிட்ட தொகையை யாவது அதனுடைய ரிப்பேருக்கு.....

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீடுகளை ஒப்படைக்கிறபொழுதே அந்த மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். இந்த வீட்டை நீங்களே மெயின்டெயின் செய்து கொள்ளவேண்டும் என்று, அதை அவர்கள் கருத்திற்கொண்டு, அந்த வீட்டைத் தன் வீடு மாதிரி கருதி, சிறப்பாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் முறை என்று நான் கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : டாக்டர் மு. சீனியம்மாள்.

<u>டாக்டர் மு. சீனியம்மாள்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி தொழிலில் பிற்பட்ட தொகுதியாக மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள காரணத்ததினால் அங்கே தொழில் தொடங்குகின்ற ஆதிதிராவிட மக்களுக்கு 15 பர்சென்ட் மானியமும், 5 பர்சென்ட்

வரிச் சலுகையும், கடன் கட்டுவதிலே ஐந்து வருஷக் காலம் கால நீட்டிப்பும் உள்ள காரணத்தினாலே, திருப்பூரிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கிற கணியாம்பூண்டியைத் தேர்ந்தெடுத்து இன்றைக்கு அங்கே தொடங்கினால் இந்த வசதிகள் ஏற்படும்; அந்த ஆதிதிராவிட மக்களுக்குப் பயன்படும் என்ற காரணத்தினால், இந்தத் தொழிலைத் திருப்பூரில் செய்தால் அந்த மக்களுக்கு இந்தப் பயன் பெற முடியாது என்ற காரணத்தினால் அரசுக்கும் நஷ்டம் ஏற்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? ஏற்கெனவே, முதலிபாளையத்திலே தொழில் பேட்டை அமைந்திருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு தமிழக முதல்வரவர்களின் உத்தரவைப் பெற்று, கணியாம்பூண்டியை மறுபரிசிலனை செய்து இந்த மானியமெல்லாம் கிடைக்கும் படியாக ஆதரவு தருவார்களா என மாண்புமிகு அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பனியன் தொழிற்சாலை வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு தொழிற்சாலை, இது வெற்றி பெற வேண்டுமென்றுதான் தொழிலதிபர்களைக் கொண்டுதான் நாம் இடம் தேர்வு செய்தோம். தொழிலதிபர்கள் அங்கே முதலிபாளையத்தில்தான் போதுமான வசதிகள், வாய்ப்புகள் இருக்கின்றன. அங்கே இது தொடங்கப்பட்டால் வெற்றிகரமாக நடைபெறும் என்று சொன்னார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்லுகின்ற இடம் ஆய்வு செய்ததில் அதற்குப் போதுமான சாத்தியக் கூறுகள் இல்லை. வேறு ஏதாவது தொழில் தொடங்குவதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகள் அங்கே இருந்தால் அதுபோன்ற தொழில் தொடங்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒத்துழைப்பை இந்த அரசு தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. நடேசன் பால்ராஜ்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : தலைவரவர்களே.....

திருமதி ரமணி நல்லதம்பி : எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மாதிரி எழுந்திருக்கக் கூடாது, நான் அழைத்த பிறகுதான் எழுந்திருக்க வேண்டும்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்திலே இராதாபுரம், நான்குநேரி பகுதிகளிலே பழங்குடியைச் சேர்ந்த மக்கள் பெரும்பாலும் அந்த மலைப் பகுதியில் இல்லாமல் வள்ளியூர், இராதாபுரம் போன்ற பகுதிகளிலே இருக்கிறார்கள். அவர்கள் காட்டுநாயக்கன் என்கின்ற காரணத்தினால் நிறைய பேர் இருக்கிறார்கள் என்று அதிகாரிகள் சான்றிதழ் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அவர்களை லயன்ஸ் கிளப் மூலமாகவும், மற்ற பொது ஸ்தாபனங்கள் மூலமாகவும் படிக்க வைத்து இருக்கிறார்கள். வேலை வாய்ப்பிலே சரியான சான்றிதழ்கள் கொடுக்கப்படவில்லை. அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்விக்கு ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். இது வருவாய்த்துறை சம்பந்தமான கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் தனிக்கேள்வியை வருவாய்த் துறை அமைச்சருக்குக் கேட்டால் பதில் தருவார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமப் பகுதிகளில், ஊராட்சி ஒன்றியங்களில் அரிசனங்களுக்கு ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு பணம் கொடுத்ததை நிறுத்தியிருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைக்கிறது. ஏனென்றால், முன்பு கட்டிய வீடுகள் எல்லாம் மறைந்த அன்னை இந்திரா காந்தியினுடைய பெயரிலேதான் அந்தக் கட்டப்பட்ட இடங்களிலே கூட போர்டுகள் இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டப்படுகின்ற வீடுகள் மத்திய அரசாங்கத்தினுடைய நிதி குறைக்கப்பட்ட காரணத்தினால் தான் குறைக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புவதோடு, அரிசன மக்களுக்குக் கட்டப்பட்ட.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே கேள்வி தான் அதெல்லாம் இந்தத் துறையிலே வராது. மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வீடு கட்டுவது உள்ளாட்சித் துறை தான். ஆகவே, இதுபோன்ற விவரங்கள் குறிப்பாக உள்ளாட்சித்துறை அமைச்சர் வசம்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஷெட்யூல்ட் டிரைப்-க்கு ஒரு லிஸ்ட் இருக்கிறது அரசிடம். அதிலே, இரண்டாவது, அரநாடான் என்று ஒன்று இருக்கிறது. அதற்குப் பிறகு அடுத்த காலத்திலே கொண்டாரெட்டி என்று ஒன்று இருக்கிறது. இந்த இரண்டு வகுப்புகளுமே தமிழகத்தில் இருக்கிறதா? அவர்களுக்கு ஏதாவது சலுகைகள் இருக்கிறதா, அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்களா என்ற விவரத்தை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சருடைய பேச்சிலேயிருந்து சில விளக்கங்களைக் கேட்கலாம் அல்லது நீங்கள் பேசியிருந்தால், அதிலே விளக்கம் கேட்கலாம். இரண்டும் இல்லாமல் புதிதாக விளக்கம் இந்த நேரத்திலே கேட்டால் அமைச்சருக்குக்கூட பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்காது. திரு. பன்னீர்செல்வம். (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைரவர்களே, கொண்டாரெட்டி என்பது லிஸ்ட்டிலே இருக்கிறது. அமைச்சரிடத்திலே அதற்குத் தேவையான தகவல் இருக்கும். அந்தத் தகவலின்மேல், விளக்கம் கோருகிறார். அவர் தாராளமாகச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தகவல் அமைச்சரிடம் இருக்கும். ஆனால், அமைச்சர் இப்போது தெரிவித்த பதிலுரையிலிருந்தோ, அல்லது உறுப்பினர்கள் பேசிய பேச்சிலிருந்தோ விளக்கம் கேட்பதானால், நீங்கள் கேட்கலாம். அதற்கு அப்பாலே சென்றுவிடக்கூடாது. (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இல்லை, இல்லை. கிளாரிபிகேஷன் She is seeking clarification தாராளமாகக் கேட்கலாம். அதிலே என்ன இருக்கிறது ? கொண்டா ரெட்டி என்கிற இனம், பழங்குடி இனத்திலே சேர்க்கப்படுகிறதா, இல்லையா.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சருடைய பேச்சுக்குப் பிறகு, விளக்கம் கேட்கிறவர்கள் ஒன்று, உறுப்பினருடைய பேச்சைக் குறிப்பிட்டு அதற்கு பதில் இல்லையே என்று கேட்கவேண்டும். அல்லது, அமைச்சருடைய பதிலுரையைக் குறிப்பிட்டு இந்த பதிலுரைக்கு எங்களுக்கு மேற்கொண்டு விளக்கம் தேவைப்படுகிறது என்று கேட்கலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பதிலுரையிலே விளக்கம் இல்லாதக் காரணத்தினாலே, கொண்டாரெட்டியைப் பற்றி அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். அதிலே என்ன தவறு இருக்கிறது ? பதில் இல்லாவிட்டாலும், பதில் இல்லை என்று அமைச்சர் சொல்லலாம். அதிலே தவறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே அமைச்சர் சொல்கிறபோது, விளக்கமாகச் சொன்னார்கள். ஆதிதிராவிடர் யார்? கொண்டாரெட்டி யார் ? காட்டுநாயக்கர் யார் என்பதை நிர்ணயம் செய்துவிட்டால், அந்தத் துறையில் அவர்கள் விரைவில் செய்வார்கள். அது யார் என்று நிர்ணயம் செய்வது, வருவாய்த்துறைதான் என்று அவர் முதலிலேயே சொல்லிவிட்டார்கள். வருவாய்த்துறை தான் அவர்கள் காட்டு நாய்க்கரா ? அல்லது கொண்டாரெட்டியா என்பதைச் சொல்ல வேண்டும். ஆகையினால் அவர்களிடத்திலே அந்த விளக்கம் இருக்காது ; சம்பந்தமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்

*திரு வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரில் பாலசுந்தரம் ரோட்டில், டாக்டர் அம்பேத்கர் மாணவர் விடுதி, பெரிதும் பழுதடைந்து, அடிப்படை வசதிகள் இல்லாமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ; அதைச் சீர்ப்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து கொண்டிருக்கிறோம். வரும் ஆண்டில் அது சீர்செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் பள்ளிகளிலே ஆசிரியர்கள் இது வரையிலே நிரப்பப்படாத பள்ளிக்கூடங்கள் அதிகமாக இருக்கின்றன. என் தொகுதியிலே, கூகூர் என்ற ஊரிலுள்ள நல்லாடைப் பள்ளியிலே ஆண்டுகள் இரண்டாக, மேல்நிலைப் பள்ளியாக ஆக்கப்பட்டு, ஒரே ஒரு தலைமையாசிரியர் மட்டும் தான் இயங்கி வருகிறார். அங்கு புது பள்ளிக்கூடம் உண்டு; மாணவர்கள் உண்டு. ஆனால், ஆசிரியர்கள் இல்லை. அந்த நிலைமை உடனடியாக நீக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 50 ஆசிரியர்கள் பணிசெய்ய வேண்டுமென்று சொல்கிறார்களே, அதிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு.)

திரு. போளூர் வரதன் : நான் ஒரு எஸ்.சி., எம்.எல்.ஏ.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 48 உறுப்பினர்கள் இருக்கிறீர்கள். திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் வழங்குகிற கடன்கள் முறையாக வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். 15 ஆயிரம் ரூபாய் இனாமாகவும், 85 ஆயிரம் ரூபாய் மார்ஜினல் அமௌன்டாகவும் வழங்கப்படுகிறது. கடன் உரிய முறையிலே கோரிக்கை விடுவித்தவர்களுக்குக் கிடைப்பதாகச் சொன்னார்கள். டி.ஐ.சி.சி.— 'டிக்' நிறுவனத்திற்கு இப்படிப்பட்ட கடன்கள் பரிந்துரை செய்யப்பட்ட போது, ''டிக்''கிலே இருக்கிற அதிகாரிகள் நிலம் அல்லது வீடு ஜாமீனில் வேண்டுமென்று கேட்கிறார்கள். வங்கியிலே சென்றாலும் ஜாமீன் வேண்டுமென்று கேட்கிறார்கள். சாதாரண, ஏழையெளிய மக்களுக்கு இந்தத் திட்டம் போய்ச் சேரவேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே அரசு எடுக்கிற முடிவுகள் இடையிலே இருக்கிற அதிகாரிகளால், ஜாமீன், ஜாமீன் என்று சொல்லி '' தாட்கோ '' மூலம் அந்தக் கடன்கள் வழங்கப்படுகிறபோது அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, சாதாரண ஏழைகளுக்கு

[திரு. போளூர் வரதன்] [1993 ஏப்ரல் 20

அந்தப் பணம் போய்ச் சேரமுடியாத சூழ்நிலையிலே அந்த நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுசம்பந்தமாக ''டிக்'' எம்.டி.—யிடத்திலே நான் பேசியிருக்கிறேன். ஆதிதிராவிட நலத்துறை செயலாளரிடத்திலே நான் பேசியிருக்கின்றேன். இரண்டு அதிகாரிகளும் நாங்கள் என்ன செய்ய முடியும்? நிலைமை இப்படி இருக்கிறது, வங்கிகள் இப்படிச் செய்கின்றன என்று தட்டிக் கழிக்கிறார்கள். ஆகவே, அரசு இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதற்கு ஏதேனும் மாற்று ஏற்பாடுகளை, செய்து, தாழ்த்தப்பட்ட மக்கள் ''டிக்''கின் மூலம் கேட்கிற கடனை, ''தாட்கோ'' மூலம் கேட்கிற கடனை முழுமையாகப் பெறுவதற்கு அரசு, ஏதேனும் மாற்று வழிகள் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, கல்வியிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வி போதும். மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு). நீங்கள் கேளுங்கள்; ஒரு கேள்விதான் (குறுக்கீடு). எல்லாவற்றைப் பற்றியும் இங்கே விவாதம் நடத்த முடியாது. தாட்கோ லோனுக்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) போளூர் வரதன், உட்கார வேண்டும்.

முற்பகல் 11-05]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போளூர் வரதன், இது முறையல்ல. (குறுக்கீடு) இங்கே கேளுங்கள்,

''At the end of the minister's reply to deb te clarification sought should relate to policy matters already r ised and not trivial matters or details for which the minister c uld not give any off hand reply, என்று இருக்கிறது. (குறுக்கீடு). நீங்கள் பேசியதிலே, நான் பேசியதிலே என்ன பதில் என்று கேட்பது வரைக்கும் அமைச்சர் பதில் சொல்லலாம். கடைசி நேரத்திலே கிளாரிபிகேஷன் என்பது ஒரு பெரிய டிபேட் மாதிரியாகப் போகக்கூடாது. உடனடியாக அமைச்சர் பதில் சொல்வதற்கு முடியாத அளவுக்குக் கேள்விகளை இந்த நேரத்திலே கேட்கக் கூடாது. ''தாட்கோ'' லோன் பற்றி மட்டும் அமைச்சர் பதில் சொல்லலாம். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தாட்கோ'' லோனைப் பொறுத்தவரையில் ஆதி திராவிட நலத் துறையின் மூலமாகச் செய்ய வேண்டிய

பணிகள் செய்யப்பட்டு, மானியமும், மார்ஜின் தொகையும் பேங்குக்கு அனுப்பி விடுகிறோம். பேங்கிலே டிலே ஆகிறது என்று சொன்னார்கள். அது நன்றாக எங்களுடைய கவன திற்கு வந்திருக்கிறது. பேங்குகளைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் கன்ட்ரோலில் இருக்கிறது. ஆகவே தான் நமது செயலாளர் மூலமாக சீஃப் செக்கரட்டரியோடு தொடர்பு கொண்டு, சம்பந்தப்பட்ட பிராஞ்ச் மேனேஜர்களுக்கு கடிதம் எழுதச் சொல்லிக் கூட நான் கேட்டிருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். பேங்குகள் அந்த அளவிற்கு ஒத்துழைப்புத் தரவில்லை. அதையும் நீங்கள் நன்றாக அறிவீர்கள். அவர்கள் ஒத்துழைப்புத் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசின் மூலமாக நீங்கள் எடுத்தால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 30—பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 30—பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 135,17,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஆ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 7,06,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 2633, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' வெளிநாட்டு பானங்களையும் ஒழித்து முழு மது விலக்கு கொண்டு வருவதன் அவசியம் குறித்து ' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,06,91,00 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண். 15—காவல் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 15, காவல் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' காவல் துறை பற்றிய 15ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 320,40,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண். 2684, திரு. கோ. ஜானகிராமன்.

1993 ஏப்ரல் 20] [திரு. கோ. ஜானகிராமன்]

திரு. கோ. ஜானகிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம் முகையூரில் புதிதாகக் காவல் நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" காவல் றை பற்றிய 15ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக் பெறுகின்ற ரூ. 320,40,76,000-இல் ரூ. 100 குறைக்க வேண் ம் ".

(ஈ) கே ரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" தீயணைப்புப் பணிகள் பற்றிய 16ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 24,79,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண். 2798, திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திசையன்விளைக்கு அனுமதியளிக்கப்பட்ட தீயணைப்பு நிலையம் உடனடியாக அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,79,14,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 2836, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் நகரத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

1993 ஏப்ரல் 20] [திரு. வே. தம்புசாமி]

''தீயணைப்புப் பணிகள் பற்றிய 16ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,79,14,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளான மாநில ஆயத் தீர்வை, காவல் மற்றும் தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்புகளின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கைக் குறிப்புகளை @நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகளுக்கு எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியில் என்னுடைய பதில் உரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புகின்ற பிரச்சினைகளுக்கு பதிலையும், அரசு எடுக்க உள்ள முடிவுகளைப் பற்றியும் தெரிவிக்கிறேன் என்பதைக் கூறி அமைகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைலவர்: விவாதம் தொடங்குகிறது. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பேச வாய்ப்பு வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். எனவே, ஒவ்வொரு உறுப்பினரும் குறிப்பிட்ட நேரத்திற்குள் பேசி முடிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். 15 நிமிடம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான காவல் துறை, ஆயத் தீர்வை, தீயணைப்பு ஆகிய கோரிக்கைகளின் மீது நடக்கின்ற இந்த விவாதத்திலே பங்குகொண்டு, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக கருத்துக்களைத் தர வாய்ப்பு அளித்த தங்களுக்கும் காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 136 முதல் 274 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. எஸ் பீட்டர் அல்போன்ஸ்] [1993 ஏப்ரல் 20

கடந்த ஆண்டு இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது, பல்வேறு கருத்துக்களை சொல்லி அமர்ந்த நான், அதை முடிக்கின்றபோது, நீங்கள் செய்கின்ற பணிகள் தரத்தைப் பார்த்து சில இடங்களிலே உங்களை நாங்கள் இங்கே பாராட்டி இருப்பது போல், அடுத்த ஆண்டும் இந்த மானியக் கோரிக்கையிலே நாங்கள் பங்கேற்று பேசுகின்றபோது, மீண்டும் பாராட்டுகின்ற வாய்ப்பினை தரவேண்டுமென்ற கோரிக்கையோடு அமர்ந்தேன். எனக்கு பதில் அளித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு சில நல்ல கருத்துக்களை அவர் சொல்லியிருக்கிறார். குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார், நிறைகளைப் பாராட்டியிருக்கிறார் என்று என்னுடைய உரையைப் பற்றியும் என்னைப் பற்றியும் ஒரு பாராட்டைத் தந்து அமர்ந்தார்கள். ஓராண்டு ஓடி மறைந்திருக்கிறது. இந்தக் காவல் துறை எப்படியெல்லாம் செயல்பட்டிருக்கிறது என்பதை நீங்களும், இங்கே சாதனைகள், வருங்காலத் திட்டங்கள் பற்றி குறிப்புகளில் விளக்கமாக சொல்லியிருக்கிறீர்கள். பொதுவாக பண்டையக் காலத்தில் பெரிய நகரங்களைக் காவல் காக்கின்றவர்களை காவல் பூதம் என்று சொல்வார்கள். காவல் பூதத்தார் என்று ஒரு தெய்வமாகவே அழைத்து, தென் திசை பூதம், வட திசை பூதம், கிழக்கு திசை பூதம், மேற்கு திசை பூதம் என்று சொல்லி, அவர்களுக்கு ஆண்டாண்டு வழிபாடு எல்லாம் நடத்துவார்கள். இதையெல்லாம் எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், காவல் துறை என்பது ஒரு பெரிய பூதத்தினைப் போன்றது. நம்முடைய காவல் துறை, அதிலும் இந்தியாவிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க வகையிலே செயல்படுகின்ற அல்லது குறிப்பிடத்தக்க வகையிலே செயல்படுகின்ற வகையிலே தங்களை உண்டாக்கி கொண்டிருக்கின்ற மிகப் பெரிய அமைப்பு நம்முடைய தமிழகக் காவல் துறை. இன்றையதினம் ஏறத்தாழ 75 ஆயிரம் பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு திறமையான உள்துறைச் செயலாளர், அவருக்குக்கீழே பணியாற்றுகின்ற ஒரு இயக்குநர், அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற ஒரு கூடுதல் இயக்குநர், 11 காவல் துறை தலைவர்கள், இன்னும் எண்ணிக்கையிலே சொல்லமுடியாத துணைத் தலைவர்கள் இன்னும் ஐ.பி.எஸ். கண்காணிப்பாளர்கள் அளவிலே என்று சொல்லி, இது ஒரு பெரிய ராட்சச பூதமாக இருக்கிறது. ஒரு கதை உண்டு. இந்தப் பூதத்திற்கு வேலை கொடுக்கின்றவர்கள் மிகக் கெட்டிக்காரத்தனமாக வேலை கொடுக்க வேண்டும். அந்தப் பூதத்திற்கு வேலை கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், அந்தப் பூதத்திற்கு வேறு வேலை இல்லை யென்று சொன்னால், அந்தப் பூதம், எஜமானனையே அடித்துச் சாப்பிட்டு விடும் என்று சொல்வார்கள். எனவே, இது ஒரு நல்ல பூதம். இந்தப் பூதத்தை நீங்கள் எப்படி அடக்கி ஆண்டு கொண்டிருக்கிறீர்கள், அல்லது இந்தப் பூதத்தை வைத்து நீங்கள் எப்படி வேலை வாங்கிக்கொண்டு இருக்கிறீர்கள் என்பதை ஓராண்டு காலம் நாங்கள் பார்த்து, எங்களுடைய பார்வையிலே

உங்களுக்குச் சொல்ல வேண்டிய கடமையிருக்கிறது. நான் தயவுசெய்து இதை குறுகிய அரசியல் வட்டத்திற்குள் இருந்து பேசவில்லை. ஏனென்று சொன்னால், இந்தத் தேசத்திலே பாதுகாப்பும், குடிமக்களுடைய உயிர்களுக்கு அறனும் செய்வது ஆளும் கட்சியினுடைய கடமையென்று மட்டும் நான் நினைக்க வில்லை. இதில் ஆளும் கட்சிக்கு என்ன கடமை இருக்கிறதோ, அதைவிட அதிகமான கடமை எங்களுக்கு இருக்கிறது. சில இடங்களிலே சில தவறுகள் நடக்கின்றன என்று சொன்னால், அந்தத் தவறுகளுக்கு வெறும் ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்களை மட்டும் குறைச் சொல்லிப் பிழைக்கின்ற குறுகிய எண்ணம் உள்ள அரசியல்வாதி அல்ல நான். அங்கே அதிகாரிகள் தவறு செய் திருக்கலாம். அதிகாரிகளை மீறி தவறுகள் நடந்திருக்கலாம். ஆனால், அந்தத் தவறுகளுக்கு எல்லாம் ஆளும் கட்சியினரோ அல்லது அரசோ அல்லது முதல் அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற முதல் அமைச்சர் பொறுப்பு என்று சொல்லு கின்ற அளவுக்கு நான் விவரம் தெரியாதவனும் அல்ல. அப்படிச் சொல்லக்கூடிய ஒரு குறுகிய அரசியல் பாரம்பரியத்திலே நான் வளர்ந்தவனும் அல்ல. ஆகவே நான் சொல்கிற கருத்துக்களை உங்களுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அதே பொறுப் புணர்வோடு நானும் சொல்கிறேன் என்று நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

முற்பகல் 11-15

இந்த வருடம் நீங்கள் தந்திருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்த்தால், கொலை எவ்வளவு, கொள்ளை எவ்வளவு, ஆதாயத் திற்காகச் செய்யப்பட்ட கொலை எவ்வளவு, கூட்டுக்கொள்ளை எவ்வளவு, அதில் எவ்வளவு கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற விவரத்தைப் பார்த்தால் உங்களுடைய பெர்ஃபார் மன்ஸ் நல்ல பெர்ஃபார்மன்ஸ் என்று பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதிலும் கடந்த ஆண்டைவிட இந்த புள்ளி விவரங்களை தருவதைப் பார்த்தால் குற்றங்கள் கண்டுபிடிக்கப் பட்ட சதவீதம் அதாவது பெர்சன்டேஜ் கூடுதலாக இருக்கிறது. எனவே, அதற்காக முதலில், மற்ற விஷயங்களுக்குப் போவதற்கு முன் அந்தத் துறைக்கு பொறுப்பேற்று இருக்கிற முதலமைச்சர், உள்துறைச் செயலாளர், நம்முடைய போலீஸ் துறையின் இயக்குநர், கூடுதல் இயக்குநர் மற்றும் போலீஸ் அதிகாரிகள் மற்றும் ** 70,000 காவல்காரர்கள் அதாவது போலீஸ் துறை யைச் சார்ந்த காவல்காரர்கள் அவ்வளவு பேரையும் நான் மனமாரப் பாரட்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் பணியாற்றுகிற ஒவ் வொருவருக்கும் அதாவது கடைசி, கிரேட் 2 கான்ஸ்டபிள் வரை பெயரும் விலாசமும் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நன்றாக இருக்காது** என்பது நன்றாக இருக்காது. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது. அதாவது சாதாரணமாக நமது வழக்கில் ** என்று சொல்வதைத் தவறாக எடுத்துக்கொள்கிற முறை இருக்கின்ற காரணத்தால் (குறுக்கீடு) அது வேண்டாம். அதாவது கொள்கைக் குறிப்பிலே பெயர் வராதவர் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவதாக இந்த வகையிலே நீங்கள் பார்க்கிற போது அதாவது குற்றங்களைக் கண்டுபிடித்திருக்கிற ஒரு இன்வெஸ்டிகேஷன் டீம் என்று சொன்னால் அந்த டீம்-இலே தலைமை வகிக்கிற அதிகாரியினுடைய பெயர் எல்லோருக்கும் தெரியும். அந்த இன்வெஸ்டிகேஷன் டீம்-இலே ஒரு டீ.எஸ்.பி., இரண்டு இன்ஸ்பெக்டர்ஸ், ஒரு சப்-இன்ஸ்பெக்டர், 4 ஹெட் கான்ஸ்டபிள்ஸ் மற்றும் 25 கான்ஸ்டபிள்ஸ் இருந்தார்கள் என்று சொன்னால் அந்த 25 கான்ஸ்டபிள்ஸ் பெயர் யாருக்கும் தெரியாது. அதைத்தான் நான் சொன்னேன். எனவே ** என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்னது ** என்று சொன்னீர்கள். ஆகவேதான் இந்தப் பிரச்சினை. அது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கடுத்து இந்த ஆண்டு உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரவேண்டிய பணி என்னவென்று சொன்னால் எங்கே ஒரு ஆரோக்கியமான காவல்துறை இருக்கிறதோ, எங்கே ஒரு முறையான காவல்துறை நிர்வாகம் செய்யப் படுகிறதோ, அதாவது அதற்கு என்ன அர்த்தம் என்று சொன்னால், அங்கே குற்றங்கள் குறைவாக இருப்பது மட்டுமல்ல; அங்கே குற்றவாளிகளை நடத்துகிற முறையும் பண்பாட்டோடு இருக்கவேண்டும்; குற்றத்தை விசாரணை செய்கிற முறையும் பண்பாட்டோடு இருக்கவேண்டும்; சட்டம் ஒழுங்கு ஒரு ஜனநாயக நாட்டிலே கட்டுப்படுத்தப்படுகிற பாங்கு, சட்ட விதி முறைகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். ஒரு சர்வாதிகாரத்திற்கும், ஜனநாயகத்திற்கும் என்ன வித்தியாசம்? ஒரு சர்வாதிகார நாட்டிலே காவல் துறையைக் கேட்பார் இல்லை. அவர்களைக் கட்டுப்படுத்துவோர் இருக்க முடியாது. அவர்களைக் கேட்டார்கள் என்று சொன்னால் சாதாரணக் குடிமகன் உயிரோடு இருக்க முடியாது. ஆனால் ஜனநாயக நாட்டிலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 20] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

இவ்வளவு அதிகாரம் வைத்திருக்கக் கூடியவர்கள், அவர் எவ்வளவு பெரிய காவல்துறை அதிகாரியாக இருந்தாலும் சரி, இந்த நாட்டு மக்களுக்கு அவர்கள் கடமைப்பட்டவர்கள். இதுதான் ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் வித்தியாசம்.

சர்வாதிகார நாட்டிலேயும் ஒரு போலீஸ்காரன் கையிலே துப்பாக்கி இருக்கிறது. ஜனநாயக நாட்டிலேயும் ஒரு போலீஸ்காரன் கையிலே துப்பாக்கி இருக்கிறது. சர்வாதிகார நாட்டிலேயும் ஒரு போலீஸ்காரன் கையிலே லத்தி இருக்கிறது. ஜனநாயக நாட்டிலேயும் ஒரு போலீஸ்காரன் கையிலே லத்தி இருக்கிறது. ஆனால் ஜனநாயக நாட்டிலே செயல்படுகிற துப்பாக்கி பொது மக்களுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும். அதிலேயிருந்து புறப்படுகிற ஒவ்வொரு குண்டுக்கும், ஒவ்வொரு துப்பாக்கி ரவைக்கும் அவர்கள் கணக்கு கொடுக்கவேண்டும். அந்தத் துப்பாக்கி ரவை முறையாகச் சுடப்பட்டதா, அந்த லத்தி முறையாகச் சுழன்றதா, ஒரு சாதாரண குடிமகன் சின்ன காரணங்களால் கூட போலீஸ் அதிகாரியால் தாக்கப்பட்டால் அதிலே நீதி உண்டா, நியாயம் உண்டா என்று பார்ப்பதுதான் ஒரு ஆரோக்கியமான ஜனநாயகத்தினுடைய வெளிப்பாடு. நான் வருத்தத்தோடு சொல்கிறேன். இந்த ஓர் ஆண்டில் 40 இடங்களில் துப்பாக்கிச்சூடு நடந்திருக்கிறது. போன ஆண்டு, மூன்றாவது ஆண்டு பாருங்கள் இரண்டு மூன்று ஆண்டுகளில் அதாவது போன மூன்றாவது ஆண்டு 10 முறை; போன ஆண்டு 5 முறை இந்த ஓராண்டில் 40 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. இந்த 40 இடங்களில் துப்பாக்கிச்சூடு நடந்திருக்கின்றது என்று சொன்னால் இதில் எங்கோ சரியில்லை என்று அர்த்தம். ஒரு ஜனநாயக நாட்டிலே, அதிலும் பண்பாடு படைத்தவர்கள், நாகரீகமான தமிழர்கள், அமைதியை விரும்புகிற தமிழர்கள், தீவிரவாத இயக்கமே இல்லாத தமிழ்நாடு, அமைதிப்பூங்காவாக இருக்கிற தமிழ்நாடு என்றல்லாம் மார்தட்டிக்கொள்கிறோமே, ஆனால் இங்கே 40 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்று நான் கேட்கிறேன். எனவே ஒவ்வொரு முறை துப்பாக்கிச் சூடு நடக்கிற போதும் ஒரு நீதிவிசாரணை நடத்தவேண்டும். கோவில்பட்டியில் கூட நீங்கள் விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறீர்கள். நான் மரியாதைக்குரிய இந்த அரசையும் இந்த அரசுக்குத் தலைமை தாங்குகிற மாண்புமிகு முதலமைச்சரையும் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11.20

நீங்கள் பொறுப்பேற்ற பிறகு, ஆட்சிக்கு வந்தபிறகு தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எங்காவது முடிவான அறிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா என்று நீங்கள் சொல்ல வேண்டும். அந்த அறிக்கை யாரைக் குற்றம் சொல்லியிருக்கிறது? அந்த அறிக்கை அந்த துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தி

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1993 ஏப்ரல் 20

யிருக்கிறதா என்று அரசுக்கு இதுவரை நடந்த துப்பாக்கிச், சூட்டிலே, எப்போதாவது நடந்த ஒரு துப்பாக்கிச் சூட்டிலே யாவது அறிக்கை வந்து இருக்கிறதா ? அந்த அறிக்கை பேரவைக்கு வந்திருக்கிறதா என்று நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னவென்று சொன்னால் துப்பாக்கிச்சூடு நடந்த உடனேயே மறுநாள் நாம் சொல்லிவிடுவோம், நீதி விசாரணை என்று சொல்லிவிடுவோம். மனித ஞாபக சக்தி, அதிலும் தமிழனுக்கு ஞாபகச் சக்தி என்பது சற்றுக் குறைவு. நாம் உடனே என்ன செய்வோம் ? இதை மறந்து விடுவோம். (குறுக்கீடுகள்) பிறகு ஒரு காலத்திலே துப்பாக்கிச்சூட்டை நியாயப்படுத்திக் கொள்வோம் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவருடைய கருத்து. தமிழனுக்கு ஞாபக சக்தி குறைவு என்று சொல்கிறார், (குறுக்கீடுகள்) இதிலே ஒன்றும் வேண்டாம். அதை அவர் நியாயப்படுத்தலாம். திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்வது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக தமிழக மக்களை, அவர் அவமானப்படுத்துவதைப் பார்த்து நான் வேதனைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே public memory is short என்று சொல்வார்கள். அதைத்தான் அவர் சொல்லி இருக்கிறார். இருக்கின்ற மக்களுடைய. . . .(குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பொதுவாக public memory is short என்று சொல்லவில்லை. தமிழக மக்களுக்கு ஞாபக சக்தி குறைவு என்று தமிழக மக்களை மட்டும்தான் சுட்டிக்காட்டி அவர் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழக மக்களுக்கு ஞாபக சக்தி குறைவு என்று சொன்னார். அவர் விரும்பினா அதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

1993 ஏப்ரல் 20]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கு நீதி விசாரணை அவசியம் என்பதை சொல்வதற்காகத்தான் நான் வந்தேன். நான் கேட்ட கேள்வி. இதுவரை இத்தனை துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறதே, இத்தனை துப்பாக்கிச் சூட்டிலே ஒவ்வொரு முறையும் மேஜிஸ்ட்ரியல் என்குயரி, ஜுடிசியல் என்குயரி என்றெல்லாம் உத்தரவிட்டிருக்கிறீர்களே அந்த உத்தரவிலே எத்தனை இடங்களில் அறிக்கைகள் வந்துள்ளன? அந்த அறிக்கைகளிலே எத்தனை அறிக்கைகள் இந்த துப்பாக்கிச் சூடுகளை நியாயப்படுத்தியிருக்கின்றன? இதை உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே தந்தால் நன்றாக இருக்குமே என்பதுதான் என்னுடைய கருத்து.

அதே போல தீவிரவாத இயக்கத்தினுடைய நடமாட்டங்கள்- தீவிரவாத இயக்கத்தினுடைய நடமாட்டங்களைப் பற்றி ஒரு தனியான, மூன்று பக்கங்கள் இந்த சாதனைகள் அல்லது வருங்கால திட்டங்களைப் பற்றி குறிப்பிலே எழுதியிருக்கிறார்கள். தமிழர் விடுதலைப்படை மற்றும் இந்த போராளிகள் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், வன்முறையின்மேல் நம்பிக்கை கொண்டவர்கள் ஒரு ஆர்கனைஸ்ட் வையலன்ஸ் இவைகளைப் பற்றிய தகவல்களை இந்த சாதனைக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன். எந்த ஒரு வழக்கிலாவது விசாரணை முடிந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா? எந்த ஒரு வழக்கிலாவது இருக்கிறதா? நான் வந்து வரிசைப்படுத்திக் காண்பிக்க முடியும், 14, 15 சம்பவங்கள் இங்கே நடந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லா சம்பவங்களுமே புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்று சொல்கிறார்கள். புலன் விசாரணை மட்டும் ஒரு போலீஸ் துறைக்கு பெருமையைத் தந்துவிடாது. புலன் விசாரணை, புலன் விசாரணை என்று ஒரு சில வழக்குகள் காலம் முழுவதும் புலன் விசாரணையிலே தான் இருந்துகொண்டிருக்கும். அது என்ன செய்யும் என்று சொன்னால் குற்றவாளிகளை ஊக்கப்படுத்தும். குற்றவாளிகள் குற்றங்கள் செய்து விட்டு அதுவும் பெரிய குற்றங்களை செய்துவிட்டு தைரியமாக நடமாட முடியும் என்கின்ற நிலை-ஒரு குற்றவாளிக்கு இந்த தைரியத்தை அளிக்கும் இந்த நீண்ட நெடிய நாள் புலன் விசாரணை என்றுதான் நான் சொல்கிறேன். எத்தனை வழக்குகளில் தீவிரவாத அமைப்புகளை, தமிழகத்திலே நடந்த பெரிய வன்முறை சம்பவங்களிலே எத்தனை சம்பவங்களிலே வழக்கு விசாரணை முடித்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருக்கிறார்கள் நீதிமன்றங்களிலே என்ற கருத்தும் எனக்குத் தெரியவேண்டும். அதற்கு அடுத்து எத்தனை வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து குற்றவாளிகளுக்கு உங்களால் தண்டனை வாங்கி கொடுக்க முடிந்தது என்ற விவரம் வேண்டும். ஏனென்று சொன்னால் குற்றம் செய்தவன் ஒரு விசாரணைக்கு உட்படுத்திக் கொண்டு நீதிமன்றத்திலே தப்பித்து விடமுடியும் என்ற அளவுக்கு அந்த புலன் விசாரணை

மோசமாக இருக்கும் என்று சொன்னால் இவ்வளவு பெரிய துறை இவ்வளவு திறமையான போலீஸ் அதிகாரிகள் 70 ஆயிரம் பேர், 320 கோடி ரூபாய், அது மக்கள் கொடுக்கின்ற வரிப்பணம், அந்தப் பணம் வரிப்பணமாக இருக்காது, நம்மை தேர்ந்து எடுத்ததற்காக அவர்கள் கொடுத்துக்கொண்டிருக்கும் அபராதத் தொகையாக மாறிவிடும்.

எனவே ஒரு குற்றவாளி இருக்கிறான். அந்த குற்றவாளி ஒரு பெரிய சமுதாயத்திற்கு விரோதமான கொலை, கொள்ளை யிலே ஈடுபட்டிருக்கிறான். அந்த கொலை கொள்ளையிலே ஒரு சாதாரண குற்றவாளி ஈடுபட்டால் பரவாயில்லை. ஒரு பெரிய வன்முறைக் கும்பல் ஈடுபட்டு அது தமிழ்நாட்டின் முழுமை யான பாதுகாப்பைப் பாதிக்கின்றபோது, அந்த வழக்கு விசா ரணைகளை முடித்து குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப் பட்டு இருக்கின்ற வழக்குகளிலே எத்தனை வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் எனக்கு வேண்டும்.

முற்பகல் 11.25

அதற்குப் பிறகு ஒரு ஆரோக்கியமான ஜனநாயக நாட்டிலே முறையான போலீஸ் கைது வேண்டும். இது ஒரு ஜன நாயக நாட்டில் ஒரு தனி மனிதனுக்கு இருக்கின்ற அடிப்படை உரிமை. இன்றைக்கு இருக்கின்ற ஒரே உரிமை, நமது அரசியல் சாசன சட்டம் கொடுத்திருப்பது, நாம் நினைத்த இடத்திற்குப் போகலாம், நாம் நினைத்த இடத்திலே இருக்கலாம். அது யாருக்கு பாதிக்கப்படும், கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னால் ஒரு குற்றவாளிக்கு it should be restricted only to a criminal. ஆனால், இன்றைய தினம் இருக்கின்ற புள்ளி விவரங்களைப் பாருங்கள். வரலாற்றிலேயே ஹேபியஸ் கார்பஸ் பெட்டிசன்ஸ், அதாவது முகாந்திரம் இல்லாமல் கைது செய்த அன்-ஆதரைஸ்ட் டிடென்ஷன் அதாவது எந்தவிதமான தகவ லும் இல்லாமல் கைது செய்த அந்த ஹேபியஸ் கார்பஸ் ரிட் பெட்டிசன்ஸ். . . .

திரு. டி. எம். ரங்கராஜன் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் கிளாரிபி கேஷனுக்கு அவர் ஈல்ட் பண்ணவில்லை.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : I don't yield, sir Interruption) I don't yield.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் கிளாரிபி கேஷனுக்கு he is not at all yielding.

Thiru T. M. Rangarajan : There is a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? சொல்லுங்கள்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே ஹேபியஸ் கார்பஸ் பெட்டிஷன்ஸ் எல்லாம் இன்றைக்கு ஹைகோர்ட்டிலே போடப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் இல்லீகல் டிட்டென்சன் என்று சொல்கிறார்கள். அவைகள் இல்லீகல் டிட்டென்சன்கள் அல்ல. ஏன் என்றால் ஆர்ட்டிகிள் 22 இலே, 'preventive detention is an exempted clause for personal liberty' என்று சொல்லப்பட்டிருப்பதனால் பிரிவென்டிவ் டிட்டென்சனுக்கு எந்தவித முன் உதாரணமும் கொடுக்காமல் கைது செய்யப்படலாம் என்று இருக்கும்போது அவர்கள் தங்களுடைய பெர்சனல் லிபர்ட்டி அபக்ட் ஆகிறது என்கிற அடிப்படையிலே தான் அவர்கள் ரிட் பெட்டிசன்சை பைல் பண்ணுகிறார்கள். அவ்வாறு இருக்கின்றபோது, அந்த பெட்டிசன்களில் எந்தவித முடிவும் தெரியாமல் இவ்விதம் அவதூறாக சொல்வது தவறு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பீட்டர் அல்போன்ஸ், ஹேபியஸ் கார்பஸ் பெட்டிசன்ஸ் போட்டிருப்பதாலேயே அந்த டிட்டென்சன் பூராவுமே இல்லீகல் என்பது சரியாக வராது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் அப்படிச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பதில் சொல்லட்டும்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், (குறுக்கீடு). He yields. (Interruption) He yields.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. ப. பட்டாபிராமன்.

* திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆள் கொணர்வு மனுக்கள் அதாவது ஹேபியஸ் கார்பஸ் ரிட் பெட்டிசன்ஸ் இந்த தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே எண்ணிக்கையற்ற அளவிலே நீதிமன்றங்களிலே போடப்பட்டிருக்கின்றன என்று திரு. அல்போன்ஸ் சொன்னார். ஹேபியஸ் கார்பஸ் பெட்டிசன்ஸ்-லே பலவிதங்கள் உண்டு. தனிப்பட்ட முறையில் ஒரு தந்தை தன்னுடைய மகனை அபகரித்துக்கொண்டு அதனால் பாதிக்கப்பட்ட மனைவி அந்தக்

[திரு. கா. ப.பட்டாபிராமன்] [1993 ஏப்ரல் 20

குழந்தையை கோர்ட்டுக்கு முன்னாலே கொண்டு வந்து அந்தக் குழந்தையை என்னிடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று, இப்படிப்பட்ட ஹேபியஸ் கார்பஸ் பெட்டிசன்கள் உண்டு. மத்திய அரசு சட்டங்களுக்கு உட்பட்டு, மத்திய அரசு சட்டங்களுக்காக அப்படி வந்து குற்றம் இழைத்ததாகக் கருதப்பட்ட ஹேபியஸ் கார்பஸ் பெட்டிசன்ஸ் Habeas Corpus petitions filed against the Central Government and its officials. அது ஒன்று. அதற்கு மூன்றாவதாக, தமிழகத்தைப் பொறுத்த மட்டில் சில சட்ட விதிகளை மீறியிருக்கிறார்கள் அல்லது அவர்களை பிரிவென்டிவ்-ஆக அரஸ்ட் பண்ணவேண்டுமென்று சொன்னால் அந்த முறையிலே ஹேபியஸ்கார்பஸ் பெட்டிசன்ஸ் உண்டு. ஆகவே, ஹேபியஸ் கார்பஸ் பெட்டிசன்ஸ் அளவுக்கு மீறிய அளவிலே இங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே எத்தனை ஹேபியஸ் கார்பஸ் பெட்டிசன்ஸ் என்பதை தான் நாம் கணக்கிலே கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அரசு கொறடா அவர்களுக்கு நன்றி.

A staggering 637 Habeas Corpus petitions have been admitted by the Madras High Court since January 1. (Interruptions)

THIRU T. M. RANGARAJAN : It is only admittd. It is sub-judice. It is only pending in the Court.

THIRU S. PETER ALPHONSE : Let me finish interruption அவர்தானே கேட்டார். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ் சொல்லட்டும். (குறுக்கீடு). உட்காருங்கள்.

THIRU S. PETER ALPHONSE : Lawyers claim that these figures which are the highest by far in all the southern states is evidence that the Tamil Nadu Police are relying indiscriminately on preventive detention acts as an easy and iuncomplicated means of.....

THIRU T. M. RANGARAJAN : He cannot say that. A lawyer may say so many things....(Interruption)

1993 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கநாதன் உட்காருங்கள். (குறுக்கீடு). அவர் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. பதில் சொல்வதற்கு பீட்டர் அல்போன்சுக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள் ? (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் குழப்பம் செய்ய வேண்டும் என்பதற்காக எழுந்து நிற்கிறீர்களா ? அவர் கேட்டார், பதில் சொல்ல பீட்டர் அல்போன்சை அனுமதிக்கிறேன். அனுமதிக்காவிட்டால் நீங்கள் எழுந்திருக்கலாம். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் எல்லாம் எழுந்து நிற்பதை பார்த்தால், குழப்பம் செய்ய வேண்டும் என்கிற நோக்கமா ? (குறுக்கீடுகள்) திரு. ரங்கராஜன் கேட்பதற்கு திரு. பீட்டர் அல்போன்ஸ் பதில் சொல்ல நான் அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். திரு. ரங்கராஜன் பேசியதற்கு, திரு. பீட்டர் அல்போன்ஸ் பதில் சொல்லுங்கள் என்று நான் சொல்லிக் கொண்டிருக்கிறபோதே, 7, 8, 10 உறுப்பினர்கள் எழுந்தால் என்ன அர்த்தம் ? (குறுக்கீடுகள்) நான் திரு. பீட்டர் அல்போன்சைப் பதில் சொல்ல விடாவிட்டால், நீங்கள் எழுந்திருக்கலாம். திரு. பீட்டர் அல்போன்ஸ் பதில் சொல்லட்டும் என்று நான் சொல்லி, அவர் நின்றுகொண்டிருக்கும்போது, ஏன் இப்படி மற்ற உறுப்பினர்கள் எல்லாம் எழுந்திருக்க வேண்டும் ? திரு. பீட்டர் அல்போன்ஸ்.

முற்பகல் 11-30

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னிடம் இருக்கும் தகவல்களைக் கொடுக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திரு. ரங்கராஜன், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அல்போன்ஸ் அவர்கள் எந்த அடிப்படையில் இந்தத் தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார் ? What is the source of his information He should reveal that.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I quote Mr. Gandhi, President of the Madras High Court Advocates Association.

1993 ஏப்ரல் 20]

Thiru T. M. RANGARAJAN : Hon. Speaker, Sir, it is only a news paper report. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்லிவிடுகிறேன் பி. வி. இராஜேந்திரன், திரும்பிப் பேசுவது என்பது திட்டமிட்டு குழப்பம் செய்ய முயற்சிக்கிறீர்கள் என்று பொருள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கையிலே இருந்து அந்தப் பக்கம் திரும்பிப் பேசுவது என்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்கார வேண்டும். இது முறையே இல்லை. (குறுக்கீடுகள்) அந்தப் பக்கம் திரும்பிப் பேசுவது என்பது முறையே இல்லை. மற்றவர்கள் உட்கார வேண்டும். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு பிரச்சினையில் வந்த ஒருவருடைய ஸ்டேட்மென்டை ரிலை செய்வதாக இருந்தால், அதை என்னிடம் கொடுத்திருக்க வேண்டும். இந்த ஆதாரத்தை வைத்துப் பேசுகிறேன் என்பதை அல்லது வேறுவிதமான ஆதாரம் என்னிடம் இருக்கிறது என்பதை என்னிடம் சொல்லிவிட்டுப் பேசுவது நன்றாக இருக்கும். பேசுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I think the President of the Tamil Nadu Advocates Association is a very important man. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர், எங்கே கொடுத்தது ? அவர் ஸ்டேட்மென்டை இங்கே சொல்ல முடியாது. அதை என்னிடம் கொடுத்திருக்கலாம். என்னிடம் கொடுத்திருந்தால்...... (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, What the Hon. Member is quoting from is a newspaper report which, I think was published in ' Indian Express ' and which all of us have seen. The Hon. Member has made this a practice.

கடந்த முறை இதே மானியக் கோரிக்கையின் மீது '' இண்டியா டுடே '' பத்திரிகையை வைத்துக்கொண்டு, அந்தப் பத்திரிகையில் வந்த சில புள்ளி விவரங்களை இங்கே ஆதார பூர்வமான தகவல்களாகத் தெரிவித்தார். அதைப்போலவே, இப்போது he is quoting what has appeared in a newspaper report which purportedly reports what the president of the Advocates Association has said. எனவே, விதிமுறைகளின்படி, f the hon. Member wants to use a newspaper report, he should first show it to the Chair and get the permission of the speaker. (மேசையைத் தட்டும் ஒலி).

1993 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். எல்லோரும் எழுந்தால், நான் அவையை நடத்த முடியாது. திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுகிறார். நான் அவருக்குப் பதில் சொல்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகள் சொல்லுகின்ற நேரத்தில் உங்களிடத்திலே முன் அனுமதி பெற வேண்டும். இங்கே பொதுவாக number of heabeas corpus writ petitions அதிகமாக தமிழ்நாட்டினுடைய உயர்நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொல்லுகிறார். அது குற்றச்சாட்டு அல்ல. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு, அவர் சொன்னது, இவ்வளவு எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்குக் காரணம் சொல்லுகிறார். அப்படிச் சொல்லுகிறபோது, இவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் தமிழ்நாட்டில் மட்டும் இருக்கக் காரணம், தென் மாநிலங்களில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு அங்கே இருப்பதற்குக் காரணம், இங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் அத்துமீறி, சட்டத்தைத் தங்கள் கையிலே எடுத்துக்கொண்டு, நடக்கிற காரணத்தினாலேதான் என்று அவர் சொல்லியிருக்கிறார். அது குற்றச்சாட்டு. அவர் எண்ணிக்கையோடு மட்டும் நிற்கவில்லை. தயவுசெய்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்காரலாம். நீங்கள் கேட்டதால் சொல்கிறேன். அவர் எண்ணிக்கையோடு மட்டும் நின்றிருந்தால் இந்தப் பிரச்சினையே இல்லை. அந்த எண்ணிக்கைக்கு என்ன காரணம் என்பதைக் குற்றச்சாட்டாகச் சொல்கிறார். எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோர்ஸ், நீங்கள் கேட்டது எண்ணிக்கைக்குத்தான். அதைப் பொறுத்தவரையில் குற்றச்சாட்டு அல்ல. அதிலே தவறான தகவல்கள் இருக்குமானால் தாராளமாகச் சொல்லலாம். அவர் அதை வைத்துக்கொண்டு தன்னுடைய வாதத்தைத் தொடருகிறார்.

முற்பகல் *11—35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் எண்ணிக்கை என்று சொல்லிவிட்டு, தன்னுடைய கருத்தாக எதையும் சொல்லவில்லை. காந்தி என்பவர் சொன்னதாக ஒரு பத்திரிகையிலே வந்ததை இவர் படிக்கிறார். (குறுக்கீடு) அதற்கு மேலேயும் அவர் படித்

தார். அதற்கு மேலே அவர் போனதால்தான் பிரச்சினை. (குறுக்கீடு) எதிர்க் கட்சித் தலைவர் உட்காருங்கள். அவர் அப்படிச் சென்றதனாலேதான் அந்தப் பத்திரிகையிலே வந்த எண்ணிக்கையைச் சொல்லிவிட்டு, அதைச் சொன்ன காந்தி என்பவர் அதற்கு மேலேயும் என்னென்ன சொல்லியிருக்கிறார் என்பதையும் படித்த காரணத்தாலேதான் இந்தப் பிரச்சினை. அந்த எண்ணிக்கையோடு மட்டும் நிறுத்தியிருந்தால் அதை முதலமைச்சர் அவர்களின் பதிலுரையின்போது மறுக்கலாம். அதனால், அதிலே மேற்கொண்டு வேண்டாம். வேகமாக முடித்து விடுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரோக்கியமான ஜனநாயக நாட்டினுடைய அடிப்படை பற்றி நான் சொல்லிவிடுகிறேன். எங்கே துப்பாக்கிச் சூடு குறைவோ, எங்கே விசாரணையின்றி கைதுகள் குறைவோ, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரங்கராஜன் உட்காருங்கள், வேண்டாம். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவருக்குக் கொஞ்ச நேரம்தான் இருக்கிறது. அவர் பேசி முடித்துவிடட்டும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதேபோல எந்த நாட்டிலே பெண்களின் உரிமைகள் பெண்களின் கற்பு இவற்றுக்கு எவ்வளவு பாதுகாப்பு இருக்கிறது என்ன பாதுகாப்பு இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அந்த நாட்டிலே இருக்கிற ஆட்சி தர்ம ஆட்சியா என்று சொல்வார்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது ராஜு உட்கார்ந்து கொண்டு பேசுவது கூடாது (குறுக்கீடு.)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நாட்டிலே நடக்கிற பல சம்பவங்களை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன் அந்தச் சம்பவங்கள் நடக்கிறபோது நடக்கின்ற சம்பவங்களுக்கெல்லாம் இந்த அரசு பொறுப்பு ஏற்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை ஆனால், ஒரு சம்பவம் எங்கேயாவது நடக்கிறபோது அந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கு இந்த அரசு எவ்வளவு வேகமாக விரைகிறது என்பதைப் பொறுத்துத்தான் இந்தப் போலீஸ் நிர்வாகம் நல்ல நிர்வாகமா என்பதைச் சொல்ல முடியும். நாட்டிலே ஓராயிரம் கற்பழிப்புகள் நடக்கின்றன. அதற்கெல்லாம் இந்த அரசு காரணம் அல்ல அதற்கெல்லாம் இந்த அரசைக் குற்றம் சாட்டக்கூடிய அளவுக்கு நான் குறுமதியாளனும் அல்ல. (குறுக்கீடு).

1993 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள். அவர் முடித்த பிறகு வாருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் என்ன சொல்ல வருகிறேன் ? அதாவது இந்த நாட்டிலே கற்பழிக்கப்பட்ட பெண் ஒருவள் தன்னுடைய கற்பை, அதுவும் காவல்துறையைச் சார்ந்தவர்களிடம் பறிகொடுத்த பெண், இதில் என்ன கொடுமை என்று சொன்னால், ஒரு நீதிமன்றத்திற்குப் போய்த்தான் அதைக் கற்பழிப்பு என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு). கற்பழிப்பு என்பது, பெண்கள் சமுதாயத்திற்கு இழைக்கப்படுகின்ற மிகப் பெரிய கொடுமை. அந்தக் கொடுமையினை நியாயமாக வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து, அந்தக் குற்றவாளியைத் தண்டிக்கக்கூடிய மனதைரியம் நம்முடைய பெண்களில் அநேகம் பேருக்கு இன்னமும் வரவில்லை. என் கற்பு அழிக்கப்பட்டது என்று சொல்வதையே பெரிய கொடுமை என்று நினைக்கக்கூடியவர்கள் தமிழ்ப் பெண்கள். அந்த மாதிரி ஒரு கோரச் சூழ்நிலையில் ஒரு பெண் முன்வந்து என்னை இவர்கள் கற்பழித்தார்கள் என்று சொல்வது, என்னுடைய கற்பை அதுவும் யார் பாதுகாக்க வேண்டுமோ அந்தக் காவல் துறையைச் சார்ந்தவர்களே அந்தக் கற்பை அழித்தார்கள் என்று சொல்கிறபோது, ஒரு ஆண்டு கழித்துத்தான் ஒரு நீதிமன்றத்தில் ஒரு உத்திரவைப் பெற்றுத்தான் அது கற்பழிப்பு என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்த நிர்வாகம் இருக்குமென்று சொன்னால்..... (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஆணித்தரமாக மறுக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அல்போன்ஸ் அவர்கள் தெரிந்தே, தவறான தகவல்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்தச் சம்பவத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டவுடனேயே, அதாவது, 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் தேதி, இந்தச் செய்தி பத்திரிகைகளில் வந்தது. அப்போது இதை ஒரு பிரச்சினையாக இன்னும் எந்த எதிர்க்கட்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. இதை நான் கேள்விப்பட்டவுடனேயே, பத்திரிகைகளில் பார்த்தவுடனேயே, நானாகவே ஒரு ''கமிஷன் ஆப் என்கொயரியை'' ஆர்டர் செய்தேன். இந்த அவைக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன், அதனைத் தொடர்ந்து ஒரு Retiısd Distict Judge ஆல் Judicial inquiry மேற்கொள்ளப்பட்டது. அந்த என்குயரி நடந்துகொண்டு இருக்கின்றபோதே, 6 பேர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள். அதோடு 2 சப்-இன்ஸ்பெக்டர்கள், 3 கான்ஸ்டேபிள்கள் கைது செய்யப்பட்டது They weie also remanded to Judicial custody

அதன்பிறகு, இது நீதிமன்றத்துக்குச் சென்ற பிறகு, திருமதி லதிகா சரண், ஐ.பி.எஸ்., எஸ்.பி. கிரைம் பிரான்ஞ்ச் (சிஐடி) அவர்கள் இந்தப் பெண் கற்பழிக்கப்பட்டு இருக்கிறார் என்பதை ஊர்ஜிதம் செய்த பிறகு, '' இன்டரிம்-ரிலீஃப்'' ஆக ஒரு இலட்சம் ரூபாய் இந்தப் பெண்ணுக்கு வழங்கப்பட்டது. அரசுத் துறையில் ஒரு வேலையும் அந்தப் பெண்ணுக்கு அளிக்க வேண்டும் என்றும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. எனவே, நீதிமன்றத்திற்குச் சென்றுதான் இந்தப் பெண் நீதியைப் பெற வேண்டி இருந்தது என்று சொல்வதை நான் ஆணித்தரமாக, திட்டவட்டமாக மறுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11—40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ், (குறுக்கீடுகள்) அவர் பேசிக்கொண்டு இருக்கிறார்; அவர் பேசியதற்கு முதலமைச்சர் பதில் சொல்லி இருக்கிறார். இதிலே சம்பந்தப்பட்ட உறுப்பினர் பேசுவதாக இருந்தால் பேசலாம். திரு. பீட்டர் அல்போன்ஸ், (குறுக்கீடுகள்) இப்படி விவாதமாகவே ஆக்கக் கூடாது. திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும், பிறகு நீங்கள் தனியாகப் பேசலாம். (குறுக்கீடுகள்) விவாதத்தை அப்படிக் கொண்டு போக முடியாது. எதிர்க் கட்சித் தலைவர் ஒரு தடவை விவாதத்தில் குறுக்கிட்டார். அதுபோல் எல்லா உறுப்பினர்களும் குறுக்கிட முடியாது. சம்பந்தப்பட்ட உறுப்பினர் பேசட்டும்,

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லதிகா சரண் என்கிற போலீஸ் அதிகாரி நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்டார். That was the Court which orderee the investigation. Then only the poor victim was able to get justice. ஒரு கற்பழிப்பு வழக்கிற்கு ஒரு நீதிவிசாரணை கமிஷன் தான்வந்து நீதி வழங்க முடியும் என்ற நிலை இருந்தால், உங்களுக்கு காவல் துறை எதற்கு? Why you have not registered the case Why criminal

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, A case was registered. charge sheet was also laid. மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து தவறான தகவல்களையே கொடுத்துக் கொண்டு இருப்பதால், தங்கள் அனுமதியோடு இந்த விஷயத்தைப் பற்றி மட்டும் சற்று விரிவாக என்னுடைய விளக் கத்தை நான் கூற விரும்புகிறேன்.

3—6—1992 அன்று அண்ணாமலை நகர், மாரியம்மன் கோயில் தெரு, இராமசாமியின் மகன் நந்தகோபால் என்பவர் அண்ணாமலை நகர் காவல் நிலையக் கழிவறையில் இறந்து கிடந்தார். நிலைய பாதுகாப்பு காவலர் எண். 982 கருணாநிதி

1993 ஏப்ரல் 20] [டாக்டர். ஜெ. ஜெயலலிதா]

என்பவர் கொடுத்த புகாரின் பேரில் அண்ணாமலை நகர் காவல் நிலைய குற்ற எண். 160/92 பிரிவு 174 கு.ந.ச.-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, சிதம்பரம் வருவாய்த்துறை அதிகாரியால் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின்போது இறந்தவரின் இரண்டாவது மனைவியாகிய பத்மினி, தன்னை காவல் நிலையத்தில் கற்பழித்ததாகவும், தனது கணவனை காவலர்கள் கொடுமைப்படுத்தியதன் விளைவாக இறந்ததாகவும் தெரிவித்தார். எனவே, அண்ணாமலை நகர் கா.நி. குற்ற எண். 162/92, பிரிவு 343, 376-பி-ன் கீழ் மற்றொரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட பத்மினி ஜூலை 1992இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுக் கொடுத்து, இந்த இரண்டு வழக்குகளையும் விசாரணைக்காக மத்தியப் புலனாய்வு துறைக்கு மாற்ற வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்.

சென்னை உயர்நீதிமன்றம் இவ்வழக்கை சென்னை குற்றப் பிரிவு புலனாய்வுத் துறை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் விசாரிக்க வேண்டும் என்று ஆணையிட்டது. இவ்வழக்கு குற்றப் பிரிவு புலனாய்வுத் துறை கண்காணிப்பாளரால் விசாரிக்கப்பட்டது. விசாரணைக்குப் பின் 18—11—1992 அன்று சிதம்பரம் ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட்-1 நீதிமன்றத்தால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதன்படி 2 துணை ஆய்வாளர்களும், 9 காவலர்களும் இந்த முழு சம்பவத்தில் சம்பந்தப்பட்டு உள்ளனர் என்றும் கற்பழிப்பு சட்ட விரோதமாக அடைத்து வைத்தல், கொடுமைப்படுத்துதல் போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்டு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் 11 பேர். பத்மினி தொடர்ந்து இருந்த ரிட் அப்பீல் மீது 18—3—1993 அன்று நீதிபதிகள் மிஸ்ரா, எஸ்.எம். அலி முகமது ஆகியோர் தீர்ப்பளிக்கையில், பத்மினியின் பேரில் ரூபாய் ஒரு இலட்சத்தை போக்குவரத்து வளர்ச்சி நிறுவனத்தில் பாதுகாப்பு நிதியாக அரசு வைக்க வேண்டும் என்றும், அரசாங்கம் அந்தப் பெண்ணுக்கு உரிய வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி ரூபாய் ஒரு இலட்சம் போக்குவரத்து வளர்ச்சிக் கழகத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. திருமதி பத்மினி தன்னுடைய கணவனின் மரணத்தைப் பற்றியும், தான் கற்பழிக்கப்பட்டது குறித்தும், அரசாங்கம் அமைத்த விசாரணைக் கமிஷன் செயல்படக் கூடாது என்று வாங்கிய ஸ்டே தற்சமயம் விலக்கிக் கொள்ளப்பட்டுவிட்டது.

ஆனால், நான் மீண்டும் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், அந்தத் தகவலை நான் கேள்விப்பட்ட உடனேயே நான் ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்தேன். அந்த விசாரணைக் கமிஷன் செயல்பட்டுக் கொண்டு இருந்தது. அந்த விசாரணைக் கமிஷன் செயல்பட்டுக் கொண்டிருந்தபோதே, சில

பேர்களை, சம்பந்தப்பட்டவர்களை, எஸ்.ஐ.-க்களை, கான்ஸ்டபிள்களைக் கைது செய்தோம். அவர்கள் மீது குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது என்பதை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய க்ளெயிம் என்பது அதுவல்ல. இந்த 1 லட்சம் ரூபாயை யார் கொடுக்கச் சொன்னது? நீதிமன்றம் உத்தரவிட்ட பின்தானே கொடுத்தீர்கள்? வேலை வாய்ப்புத் தரச் சொல்லி யார் உத்தரவிட்டது? நீதிமன்றம் தரச் சொல்லித்தானே (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெளிவாகச் சொன்னார்கள். நீதிமன்றத்திற்குப் போன பின்பு தான் கொடுக்கப்பட்டு இருந்தது. (குறுக்கீடுகள்) இருங்கள் சார். (குறுக்கீடு). இருங்கள், சொல்கிறேன். அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, அந்தத் தவறு நடந்த உடனேயே, கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதிகாரிகளாக இருந்தாலும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்).

Thiru S. Alagir . Sir. I object....

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நான் முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசிக் கொண்டிருக்கிறபோதே எழுந்திருப்பது சரியல்ல. (குறுக்கீடு). அவர் முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடித்ததற்குப் பிறகு எழுந்திருங்கள். (குறுக்கீடு) பீட்டர் அல்போன்ஸ் பேசிக் கொண்டிருக்கிறார். அமைச்சர் அவர்கள் குறுக்கிடுகிறபோது, அவர்கள் ஈல்டு-ஆகி இருக்கிறார்கள். நீங்கள் மூன்றாவது உறுப்பினர், நான் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்வது, அமைச்சரைப் பேச விடமாட்டேன் என்று அவையில் சொல்வது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) இந்த விவாதம் ஆரம்பித்ததிலிருந்து பார்க்கிறேன். ஏதாவது, எப்படியா

1993 ஏப்ரல் 20] [பேரவைத் தலைவர்]

வது ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டும் என்கிற முயற்சியிலே தான் இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்). அவரைப் பேச அனுமதிக்க மாட்டேன் என்று சொல்வதற்கு அழகிரிக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? (குறுக்கீடுகள்) அமைச்சரைப் பேசவிட மாட்டேன் என்று சொல்கிற அதிகாரத்தை அழகிரிக்கு யார் கொடுத்தது? (குறுக்கீடுகள்) யார் அந்த அதிகாரத்தை அழகிரிக்குக் கொடுத்தார்கள்? (குறுக்கீடுகள்) எதிர்க் கட்சித் தலைவர் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்று பேச முடியாது. (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசிக்கொண்டு இருக்கிறார், அவரைப் பேச விடமாட்டேன் என்று சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) இந்த வேலையை எல்லாம் வைக்காதீர்கள். (குறுக்கீடுகள். உட்காருங்கள். கையை நீட்டுவது** வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) காலையிலிருந்தே, இந்த விவாதம் ஆரம்பித்ததிலிருந்தே, நான் பீட்டர் அல்போன்சை முழுமையாகப் பேச விடுகிறேன். மற்ற உறுப்பினர்கள் தேவையில்லாமல் எழுந்து, இத்தகைய சச்சரவைச் செய்வது நியாயம் அல்ல. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுவார். அவர் பேசி முடித்ததற்குப் பிறகு வேண்டுமானால், அழகிரி, அதற்கு விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோதே, அவர்கள் அந்தக் குறிப்பைச் சொன்னார்கள். அந்த வழக்கு எப்படி பதிவு செய்யப்பட்டது, பத்திரிகையிலே பார்த்த உடனே, என்ன செய்யப்பட்டிருக்கிறது என்ற உடனே, நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறை அதிகாரிகளாக இருந்தாலும் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று கைது செய்திருக்கிறார்கள். அதேபோல், சஸ்பென்ட் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். இதெல்லாம் நீதிமன்றத்திலே வந்தது அல்ல. இது அரசாங்கமே, முதலமைச்சரே எடுத்த நடவடிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடுகள்) முடிக்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே................

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரங்கநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகு தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதை நான் திட்டவட்டமாக மறுக்க விரும்புகிறேன். இந்தச் சம்பவம் நடைபெற்றது 3—6—1992. பத்திரிகையிலே செய்தி வந்தது ஜூன் 6, 1992. அந்தத் தேதியில் தான் நான் இதைப்பற்றி அறிந்து கொண்டேன். 18—7—92 அன்றே இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்களையும், 3 கான்ஸ்டபிள்களையும் கைது செய்து இருக்கிறோம். அதன் பிறகு 22—7—92-ல் தான், the High Court has ordered that the case should be transferred to the Crime Branch of C.I.D. என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அழகிரி. (குறுக்கீடுகள்). ராஜேந்திரன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

திரு. ச. அழகிரி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிற போதும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிற போதும் காவல்துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அந்தக் கற்பழிப்புச் சம்பவம் நிகழ்ந்த பிறகு, மிகப் பெரிய மக்கள் போராட்டங்கள் எல்லாம் நடந்த பிறகு, அவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்களே ஒழிய, அவர்கள் கைது செய்யப்படவில்லை. அதன் பிறகு ஒரு நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகு தான் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். (குறுக்கீடுகள்).

முற்பகல் 11-50

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவல்களையே தந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தகவல்களை நான் அறிந்து கொண்டது ஜூன் 6, 1992. 18—7—92 அன்று, இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்களும், 3 கான்ஸ்டபிள்களும் கைது செய்யப்பட்டு they were remanded to Judicial custody அதன் பிறகு, only on 22nd July 1992—22-ஆம் தேதி தான் the High Court ordered that the case should be transferred to the Crime Branch C.I.D. எனவே

நீதிமன்றம் இத்தகைய ஆணையைப் பிறப்பித்த பிறகு தான் கைதுசெய்யப்பட்டார்கள் என்பது தவறு. (குறுக்கிடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ் (குறுக்கீடு). எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றம் நிகழ்வு ஜூன் மாதம் 3 ஆம் தேதி. முதலமைச்சருடைய கூற்றுப்படியே ஜூலை மாதம் 18-ஆம் தேதி தான்—45 நாட்கள் கழித்த பிறகு தான் நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதுவும் பொது மக்கள் போராட்டம் நடத்தியதற்கு பிறகு தான் நீங்கள் நடவடிக்கை எடுத் திருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்கள் எத்தகைய போராட்டமும் நடத்துவதற்கு முன்னதாகவே நான் ஒரு ஜுடிஷ்யல் என்குயரி அமைக்க, அதற்கான ஆணையை இட்டு விட்டேன் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் மேற்கொண்டு விவாதமே வேண்டாம். நீங்கள் பேசும்போது பேசலாம். பீட்ட அல்போன்ஸ் பேசி முடித்து விடட்டும். நீங்கள் பேசப் போகிறீர் கள். (குறுக்கீடு) இருவரும் பேசுகிறபோது பேசலாம். உட் காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் இந்தச் சம்பவம் நடந்தது ஜூன் மாதம் 3-ஆம் தேதி 1992. அன்று தென்னாற் காடு மாவட்டக் கலெக்டர் under பி.எஸ்.ஓ. 145—ஆர்.டி.ஓ. என்குயரிக்கு உத்திரவு போட்டிருக்கிறார்கள். எனவே இது விசாரணையில்தான் இருந்து உள்ளது. அதன் பிறகு, எனக்கு இந்தத் தகவல்கள் கிடைத்த பிறகு நான் மேலும் In addition to that ஒரு ஜுடிஷ்யல் என்குயரியை ஆர்டர் செய்திருக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடித்து விடட்டும். நீங்கள் பேசும்போது பேசலாம். திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் பேசப் போகிறீர்கள் இல்லையா? அப்போது பேசுங்கள். நீங்கள் பேசுகிற போது பேசலாம். திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

1993 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் பேசும்போது பேசுங்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் நீதிமன்றம் ஆணையிட்ட பிறகு தான் இந்த 1 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். நீதிமன்றம் அப்படி ஆணையிடவில்லை.

The High Court observed on 8–3–93 to quantity the interim compensation if any payable to the petitioner. அதாவது நீதிமன்றத்தில் அரசாங்கம் ஏதாவது கொடுப்பதாக இருந்தால் கொடுக்கலாம் என்று தான் சொல்லியிருக்கிறதே தவிர, ஒரு குறிப்பிட்ட தொகையைக் குறிப்பிட்டு இதைக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடவில்லை. எனவே இந்த அரசாங்கம் தானாகவேதான் கருணை உள்ளத்தோடு ஒரு லட்சம் ரூபாயைக் கொடுத்திருக்கிறது, என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) திரு. பி. வி. ராஜேந்திரன் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தை முதலமைச்சர் சொன்னதற்கு என்னுடைய ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கற்பழிக்கப்பட்ட பெண்ணுக்கு கருணை உள்ளத்தோடு ஒரு லட்சம் கொடுத்தோம் என்று சொல்வது தவறு. அந்தப் பெண்ணுடைய கற்புக்கு 1 லட்சம் விலை அல்ல. அதற்கு என்ன கருணை வேண்டியிருக்கிறது? (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தேவையே இல்லாமல் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பெண்ணுடைய கற்பும் விலை மதிப்பிட முடியாதது என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. இந்தப் பெண்ணுடைய கற்புக்கு ஒரு லட்சம் ரூபாய் என்று நாங்கள் ஒரு மதிப்பை அளிக்கவில்லை. ஆனால் விசாரணையில் இருந்த ஒரு வழக்கில் விசாரணை முடியும் முன்னால் அரசு தானாகவே முன் வந்து ஒரு காம்பன்சேஷன் அமௌண்டைக் கொடுக்க இயலாது. விசாரணை முடிந்த பின்னர் எப்படியும் அரசு கொடுக்கும். அதற்கு இடையில் the High Court observed that the Tamilnadu Government should quantify the interim compensation if any payable என்று

சொன்னபோது அந்தப் பெண்ணுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த நான் அதையே ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி உடனடியாக அந்தப் பெண்ணுக்கு 1 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடிக்கட்டும் (குறுக்கீடு) அவர் இப்போது 45 நிமிடங்களாக பேசிக் கொண்டிருக்கிறார். அவர் இப்போது பேசி முடிக்க வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதற்கு அடுத்து காவல் துறையை நவீனப்படுத்த வேண்டும் என்று ஒரு பெரிய முயற்சியினை நீங்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். காவல்துறை என்று ஆரம்பித்ததோ அன்றிலிருந்து புழங்கப்படுகின்ற துப்பாக்கிகளை மாற்றி அவர்களுக்கு நவீன துப்பாக்கிகள் வழங்க வேண்டும் என்கிற கோரிக்கை எல்லாம் வைத்திருக்கிறீர்கள். ஏ.கே. 47.-இந்த புதிய துப்பாக்கி வேண்டும் என்று நீங்கள் ஒரு ஆண்டுக்கு முன்னாலே எழுதி மத்திய அரசும் அந்தத் துப்பாக்கிகளை வாங்கி வைத்திருப்பதாகவும் நமக்குப் பக்கத்தில் இருக்கின்ற மாநிலங்களுக்கும் வாங்கி வைத்து இருப்பதாகவும் பக்கத்தில் இருக்கின்ற மாநிலங்கள் எல்லாம் அந்தத் துப்பாக்கிகளை எடுத்துச் சென்று விட்டதாகவும் மத்திய அரசு மீண்டும் மீண்டும் நினைவுறுத்தல் கடிதம் எழுதியும் அந்த ஏ.கே. 47 என்கிற துப்பாக்கிகளை நம்முடைய தமிழக அரசு எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள்.

முற்பகல் 11-55

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் உடனடியாகப் பதில் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படியும் இந்த பிரச்சினையை எழுப்புவார் என்று நான் எதிர்பார்த்தேன். ஏனென்றால் தினமணி போன்ற சில பத்திரிகைகளில் இந்தச் செய்தி வந்தது. நான் எண்ணியபடியே உறுப்பினர் அவர்கள் எழுப்பி விட்டார். ஒரு சில செய்தித் தாள்கள் மத்திய அரசு தனது தொகுப்பிலிருந்து ஒதுக்கிய ஏ.கே. 47 ரக நவீனத் துப்பாக்கிகளை தமிழக அரசு இதுவரை கொண்டு வருவதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை என்பது போன்ற உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை வெளியிட்டுள்ளன. காவல்துறையை நவீனமயமாக்கி மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வரும் நாங்கள் 800

ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளையும், ஒரு லட்சத்து இருபதாயிரம் தோட்டாக்களையும் வாங்குவதற்கு முன்மொழிவு அனுப்பி வைத்தோம். இத்தளவாடங்களின் மதிப்பு 33.93 இலட்சம் ரூபாய் ஆகும். இத்தளவாடங்கள் தயார் நிலையில் உள்ளனவா என்பதை அறிய 11—2—1993 அன்று ஒரு வயர்லெஸ் செய்தி அனுப்பப்பட்டது. அதாவது இங்கிருந்து வயர்லெஸ் செய்தி டெல்லிக்கு அனுப்பப்பட்டது, தளவாடங்கள் தயாராக உள்ளனவா என்று கேட்க. 18—2—1993 அன்று நாம் கோரியுள்ள தளவாடங்கள் மார்ச் மாதம் முதல் வாரத்தில்தான் தயாராகும் என்றும், தயாரானபின் தகவல் தெரிவிக்கப்படும் என்றும் டெல்லியிலிருந்து பதில் கிடைத்தது. 19—3—1993 மற்றும் 31—3—1993 ஆகிய நாட்களில் மீண்டும் நினைவூட்டப் பட்டபின்-அதாவது தயாராக உள்ளனவா, வந்துவிட்டனவா என்று இங்கிருந்து மீண்டும் நினைவூட்டப்பட்டபின் டெல்லியிலிருந்து 8—4—1993 அன்று தான் நாம் கோரிய பொருட்கள் தயாராக உள்ளன என்ற விவரம் கிடைத்தது. இந்த மாதம் எட்டாம் தேதிதான் அந்தத் தகவல் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து 3 நாட்கள் 9, 10, 11 விடுமுறை நாட்களாக இருந்ததால் 12—4—1993 அன்று இந்தத் துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் பெற்று வர காசோலையும், எஸ்கார்ட் பார்ட்டியும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே தமிழக அரசு எந்த ஒரு கால கட்டத்திலும் காலதாமதமாகச் செயல்பட்டதும் இல்லை. மெத்தனமாக இருந்ததும் இல்லை, மாறாக, சுறுசுறுப்புடனும், விரைவுடனும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்த விளக்கத்திற்கு நன்றி. மாநில ஆயத்தீர்வை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதிலே இன்றையதினம் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற பட்ஜெட் மெமோரண்டத்திற்கும் நீங்கள் தாக்கல் செய்திருக்கின்ற மாநில ஆயத்தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புக்கும் முரண்பாடுகள் இருக்கின்றன. எனக்கு அந்த முரண்பாடுகளுக்கு காரணங்கள் விளங்கவில்லை. 1993-94 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை குறிப்பு பகுதி 2-ல் பக்கம் 5-ல் இந்த ஆண்டு ஆயத்தீர்வை மூலம் வருகின்ற வருமானத்தைப் பற்றிய பிரேக்கப் டீடெயில்ஸ் கொடுத்திருக்கிறீர்கள். அந்த பிரேக்கப் டீடெயில்ஸ் என்ன சொல்கிறது என்று சொன்னால் 1992-93க்கு 450 கோடி ரூபாய். 1993-94க்கு 350

1993 ஏப்ரல் 20] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

கோடி ரூபாய் என்று நீங்கள் தாக்கல் செய்திருக்கின்ற அந்த நிதிநிலை குறிப்பு பகுதி 2—பட்ஜெட் மெமோராண்டம் பார்ட் 2 சொல்கிறது. ஆனால் நீங்கள் தந்திருக்கின்ற கொள்கை விளக்கத்திலே என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னால் ஆயத்தீர்வை மூலம் கிடைக்கின்ற வருவாய் 1993 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரையில் மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பில் கிடைத்த வருவாய் 522.41 கோடி ஆகும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இங்கே வந்து 350 கோடி ரூபாய் என்று சொல்கிறீர்கள். அரசினுடைய நிதிநிலை குறிப்பிலே நிதியமைச்சர் தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை குறிப்பில் நீங்கள் சொல்லியிருக்கின்ற பணம் 350 கோடி ரூபாய். ஆனால் அதே சமயத்தில் அரசு தந்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் இது 522 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த 100 கோடிக்கு என்ன விளக்கம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நீங்கள் தாக்கல் செய்திருக்கின்ற இந்த நிதி ஆதாரம் திரட்டுகின்ற நிதிநிலை குறிப்பு பகுதி (1)—லே பக்கம் 17—லே இந்த அரசு எப்படி எல்லாம் நிதி ஆதாரத்தை திரட்டுகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலே ஒரு கவனமான கருத்தை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எல்லாத் துறைகளின் மூலமும் வரி அதிகரித்திருக்கிறது. விற்பனை வரியின் மூலம் 1990 ஆம் ஆண்டில் 1,254 கோடி ரூபாயாக இருந்தது 1993-94 ஆம் ஆண்டிலே 3 ஆயிரம் கோடியாக ஆகியிருக்கிறது. மோட்டார் வண்டிகள் மூலம் வர வேண்டிய வரி 1991-92 ஆம் ஆண்டு 248 கோடியாக இருந்தது 1993-94 ஆம் ஆண்டிலே 305 கோடியாக மாறியிருக்கிறது. முத்திரைத் தாள் பதிவுக் கட்டணங்கள் மூலம் வரவேண்டிய வருமானம் 1990-91 ஆம் ஆண்டிலே 226 கோடியாக இருந்தது. பிறகு 296 கோடியாக ஆகி இந்த ஆண்டு 335 கோடியாக உயர்ந்து இருக்கிறது. ஆனால் ஆயத் தீர்வை மூலம் வர வேண்டிய வருமானம் மட்டும் போன ஆண்டை விட இந்த ஆண்டு குறைந்து இருக்கிறது. அதற்கு என்ன காரணம்? (மணி யடிக்கப்பெற்றது).

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்) 50 நிமிடங்கள் ஆகியிருக்கின் றன. குறுக்கீடுகள் எல்லாம் போனாலும் கூட 40, 45 நிமிடங் கள் பேசியிருக்கிறீர்கள். முடித்து விடலாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்லியிருக்கின்ற அந்த காரணங்கள் இன்றைக்கு ஏன் வருமானம் குறைவு என்பதற்கு

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1993 ஏப்ரல் 20

நிதித்துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். 1992-93 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடும், 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடும் நாட்டுச் சாராயக் கடைகளை மூடியதன் விளைவாகவும், மது விலக்குக் கொள்கையை கண்டிப்பாக செயல்படுத்தியதன் விளைவாகவும் மாநில ஆயத் தீர்வையின் கீழ் ஒட்டு மொத்தமாக வருவாய் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த கருத்து தவறு. எப்படி சொல்கிறேன் என்று சொன்னால் 1991-92 லும் நாட்டுச் சாராயக் கடைகள் இல்லை. அதை தனியான பகுதியாக தந்து இருக்கிறார்கள். அந்த ஆண்டு 462 கோடி ரூபாயாக எஸ்டிமேட்டட் ரெவின்யூ இருந்தது. ஆனால் ரிவைஸ்டு எஸ்ட்டிமேட்டில் 406 கோடியாக வந்திருக்கிறது. அதுவே இந்த ஆண்டு மட்டும் 100 கோடி ரூபாய் குறைய வேண்டிய அவசியம் என்ன? அந்த 100 கோடி ரூபாய் அரசின் கஜானாவிலிருந்து (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். திரு. வி.பி. சந்திரசேகர். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் கொடுங்கள். ஒரு நிமிடத்தில் முடித்து விடுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே மணி 11.58-க்கே ஒரு நிமிடம் கொடுத்தேன். அவர் மேலும் 4 நிமிடங்கள் பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) ஆகவே போதும், அடுத்த உறுப்பினர் பேசட்டும். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் கொடுத்தேன், அதை 4 நிமிடங்களாக நீட்டித்துக் கொடுத்தாகி விட்டது. போதும், திரு. வி.பி. சந்திரசேகர்? பேசுங்கள். (குறுக்கீடுகள்).

(திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவையிலிருந்து வெளியேறினார்)

*திரு. வி.பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஆயத்தீர்வை, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கையிலே கலந்து கொண்டு பேசுகின்ற நல்ல வாய்ப்பைக் கொடுத்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். தொலைக்காட்சி நிலையம். . . . — (கூச்சல்-குழப்பம்)

1993 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராஜு, இது முறையல்ல. (குறுக்கீடுகள்) அவர் முறையில்லாமல் நடக்கிறார் என்பதற்காக நீங்களும் உட்கார்ந்து கொண்டே பேச வேண்டாம். அவர் போகிற போக்கில் பேசுகிறார் என்பதற்காக நீங்களும் பேச வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) அவர் வெளியேறிப் போகிறபோது ஏதாவது சொல்கிறார் என்பதற்காக, நீங்கள் அவையிலே இருக்கிற உறுப்பினர் அப்படிப் பேசாமல் இருங்கள். அவர் வெளியே போகிறவர் எதையும் பேசிவிட்டு போகட்டும். நீங்கள் உள்ளே உட்கார்ந்து இருப்பவர் இப்படிப் பேசக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், இதுவெல்லாம் வேண்டாம். வெளியே போகிறவர்கள் எதையும் பேசிவிட்டுப் போகட்டும். உட்காருங்கள். திரு. வி.பி. சந்திரசேகர், பேசுங்கள்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தொலைக்காட்சி நிலையம் மாலை 8.45 மணிக்கு நிகழ்ச்சிகளை முடித்து 8.45 மணியிலிருந்து 9.00 மணி வரை தமிழக மக்கள் ரசித்துப் பார்க்கின்ற கேட்கின்ற நேரத்தைக் குறைத்து பார்க்க முடியாத கேட்க முடியாத நேரத்திலே நிகழ்ச்சிகளை நடத்துவது போல எல்லோரும் விரும்பிக் கேட்கின்ற நேரத்திலே எதிர்க்கட்சிக்கு வாய்ப்பைக் கொடுத்து பசி நேரத்திலே என்னைப் பேச விட்டு இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 2 மணி நேரம் இருக்கிறது. எல்லோருக்கும் அப்போதுதான் பசி வரவேண்டும்.

பிற்பகல் 12–05

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை சம்பந்தப்பட்ட பொள்ளாச்சி தொகுதிக்கு உட்பட்டக், கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பாகவைத்து, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகிறேன் என்கிற நிலையை இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொள்ளாச்சி நகரத்திலே 10 ஆண்டுகளுக்கு முன்பாக பேருந்து நிலையம் திறக்கப்பட்டது. வளர்ந்து வருகின்ற அந்தப் பொள்ளாச்சி நகரத்தினுடைய பேருந்து நிலையம், பேருந்துகள் நிறுத்துவதற்குப் போதுமான இடமில்லாத காரணத்தினாலே அந்தப் பேருந்து நிலையத்தை விஸ்தரிக்க வேண்டிய நிலை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று சொன்னால் அதனுடைய மூன்று பகுதிகள் அரசினுடைய கட்டிடங்களாகவும், நகராட்சிக்குச் சொந்தமான சுகாதார நிலையம் இருக்கின்ற காரணத்தாலே,

அந்தப் பேருந்து நிலையத்திற்கு முன்பாக இருக்கின்ற பகுதி காவல்துறையினர் முன்பு குடியிருந்த பகுதி. அந்தப் பேருந்து நிலையம் விஸ்தரிக்கப்படவேண்டுமென்று சொன்னால், அந்தக் காவல் துறையினர் முன்பு கட்டியிருந்த பகுதியைத்தான் விஸ்தரிப்பு செய்ய முடியும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, பொள்ளாச்சி நகராட்சியிலே ஒரு தீர்மானத்தைப் போட்டு, காவல்துறைக்குச் சொந்தமான அந்த இடத்தை, 1-3/4 ஏக்கர் நிலத்தை காவல் துறையிடமிருந்து நகராட்சி பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், நகராட்சிக்குச் சொந்தமான பல்வேறு நல்ல இடங்கள் நகரத்தின் மைய இடத்திலே இருக்கின்ற காரணத்தாலே அந்த இடத்தைக் காவல் துறைக்குக் கொடுத்து விடலாம் என்று ஒரு தீர்மானத்தைப் போட்டு அரசுக்கு அனுப்பியிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு வரை அதன்மீது முடிவு எடுக்கப்படவில்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்தை நகராட்சிக்குக் கொடுத்து, பேருந்து நிலைய விஸ்தரிப்புக்கு உதவவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, பொள்ளாச்சி தாலுகா காவல் நிலையம், சிறைத்துறைக்குச் சொந்தமான இடத்திலே இருந்துகொண்டு இருக்கிறது. அந்த இடத்தை காலி செய்யவேண்டுமென்று சிறைத் துறையினர் பல ஆண்டுகாலமாக சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த தாலுகா காவல் நிலையத்தை புதிதாக அமைக்க வேண்டுமென்று சொன்னால், காவல்துறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இடத்திலே அந்தப் புதிய காவல் நிலையம் அமைக்கப்படவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, புதிதாக காவலர்களுக்கென்று பொதுப் பணித் துறை மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட 8 ஆண்டுகளுக்கு முன்பாக அந்த வீடுகளெல்லாம் கட்டிக்கொடுக்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு வரை பொதுப்பணித் துறை அந்த வீடுகளைக் காவல் துறைக்கு ஒப்படைக்கவில்லை. அங்கே கிட்டத்தட்ட 250 குடும்பங்களைச் சேர்ந்த காவல்துறையினர் குடியிருந்து கொண்டு வருகிறார்கள். கடந்த முறை நான் தேர்தலிலே போட்டியிட்டபோது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் வரவேண்டுமென்று அங்கே குடியிருக்கின்ற காவல்துறையைச் சேர்ந்தவர்களுடைய குடும்பங்கள் எனக்கு வாக்களித்து இருந்தார்கள். நான் வெற்றியடைந்ததற்குப் பின்னால் அந்தப் பகுதிக்குச் செல்கின்ற நேரத்திலே அவர்களெல்லாம் எங்களுடைய வீடுகள் இன்னும் பொதுப்பணித்துறையிடமிருந்து காவல்துறைக்குக் கொடுக்கப் படவில்லை என்ற காரணத்தைக் கூறி, இங்கே எங்களுக்கு

1993 ஏப்ரல் 20] [திரு. வி. பி. சந்திரசேகர்]

விளக்குகள் அமைக்கப்படுவதும், குடிநீர் வசதி செய்து கொடுப்பதும் நடக்க முடியாத காரியமாக இருந்து கொண்டிருக்கிறது என்று என்னிடம் சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு நான் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த காரணத்தினாலே அந்த அரசாங்கத்திடம் சொல்லி அதை நிறைவேற்ற முடியாத நிலையிலே இருந்து கொண்டிருந்தேன். ஆகவே, என்னால் முடிந்த அளவிற்கு அங்கே புரட்சித் தலைவியை ஆதரித்துக் கொண்டிருக்கின்ற காவல் துறையைச் சேர்ந்த குடும்பங்கள் இருக்கின்ற காரணத்தாலே என் சொந்த செலவிலே அந்த பகுதிக்கு மின் விளக்குகளை வாங்கிக் கொடுத்து, எரிய வைத்தேன் என்பதும் அதை தொடர்ச்சியாக செய்து கொடுக்க முடியாத காரணத்தாலே, பொதுப்பணித்துறை உடனடியாக அந்தக் கட்டிடங்களை காவல் துறைக்கு ஒப்படைக்க நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார்கள். கட்டிடங்களை பராமரிக்கின்றபொழுது பல்வேறு இனங்கள் வாரியாக, மருத்துவத் துறை, கல்வித் துறை, காவல் துறை போன்றவற்றிற்கு இருக்கின்ற கட்டிடங்கள் எல்லாம் நம்முடைய பொதுப் பணித் துறை மூலம் பராமரிக்கப் படுகின்றன. சில கட்டிடங்களைப் பராமரிக்கின்ற பொழுது சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதைத் தெளிவு படுத்த வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். ஆகவே, சில கட்டிடங்களை பொதுப்பணித் துறை பராமரிக்க முடியாபலும், காவல் துறையினுடைய அடிப்படையிலே அவைகளை பராமரிக்க முடியாமல் சில பிரச்சினைகள் இருக்கின்றன.

பிற்பகல் 12.10

அதை விரிவாக இங்கே சொல்ல முடியாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கின்றபோது சிலகருத்துக்களை தெரிவித்தார்கள். பொதுப் பணித் துறையைப் பொறுத்தமட்டிலே, இந்தக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு என்று அலாட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு என்று ஒரு லெட்டர் ஆப் கிரடிட் கொடுத்திருக்கிறார்கள்; ஹெட் ஆப் அக்கவுண்ட் இருக்கிறது. அதிலே சில வரை முறைகளை வைத்து அதன்படிதான் நாங்கள் பணங்களைச் செலவு செய்ய முடியும். ஆகவேதான் சில கட்டிடங்களை எடுத்துக் கொள்

வதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலேயே என்னிடத்திலே தெரிவித்திருக்கலாம். சிலயிடங்களிலே— சென்னையிலே கூட அந்த மாதிரி பிரச்சினைகள் வந்து உடனடியாக உள் துறை செயலாளரிடத்திலே தொடர்பு கொண்டு விரைவில் பிரச்சினைகள் தீர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே, இதுபோன்ற பிரச்சினைகள் இன்றைக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் அல்ல. நெடுங்காலமாக இருக்கும் பிரச்சினை. ஆகவே, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதைத் தனியாக எழுதித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி.பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்றைக்கு வந்த நிகழ்ச்சியாக அதைச் சொல்லவில்லை. எட்டு ஆண்டுகளுக்கு முன்பாகக் கொடுக்கப்பட்டது என்றுதான் இங்கே குறிப்பிட்டேன். அமைச்சரவர்களுடைய பதிலுரைக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பல்வேறு மானியக் கோரிக்கைகளிலே நான் பேசி இருக்கிறேன். அப்பொழுதெல்லாம் என்னுடைய பொள்ளாச்சித் தொகுதிக்குச் சிறப்புத் திட்டமாகப் பல் வேறு திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று நான் பேசியிருக்கிறேன்.

கிராமத்திலே சொல்லுவார்கள், வயலுக்குப் பாய்கின்ற நீர் அந்த வயலிலே இருக்கின்ற நெல்லுக்கு மட்டும் அல்லாது அதனோடு சேர்ந்து வளர்கின்ற புல்லுக்கு பாய்கிறது என்று சொல்லுவார்கள். இந்த அரசினுடைய பொதுவான திட்டங்கள் தான், எப்படி நெல்லுக்கு கிடைக்கின்றது புல்லுக்கும் கிடைக்கிறதோ அதுபோல மற்றத் தொகுதிகளுக்குக் கிடைக்கின்ற பொதுவான திட்டங்கள் நன்மைகள்தான் என்னுடைய தொகுதிக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதை நான் ஏன் இவ்வளவு குறிப்பாக சொல்கிறேன் என்று சொன்னால், கொங்கு மண்டலத்திலே பொள்ளாச்சி தொகுதியானது கள்ளங் கபடம் அற்ற மக்கள் வாழ்கின்ற பகுதி. என்றைக்குமே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே இருந்து இன்றைக்கு வரை அன்றும், இன்றும், என்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அதை வழி நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களையும்

1993 ஏப்ரல் 20] [திரு. வி. பி. சந்திரசேகர்]

ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

சிவபெருமானிடம் யாருக்குமே கிடைக்க முடியாத ஒரு ஞானப் பழம் கிடைத்தது. அதைப் பெறுவதற்கு முருகனும் விநாயகரும் போட்டி போட்டார்கள். சிவபெருமான் சொன்னார் இந்த உலகத்தை யார் முதலிலே சுற்றி வருகிறீர்களோ அவருக்கு அந்த ஞானப் பழம் என்று சொன்னார். முருகப் பெருமான் உடனடியாகப் புறப்பட்டு இந்த உலகத்தையெல்லாம் சுற்றி வருவதற்கு முன்பாக, விநாயகப் பெருமான் தன்னுடைய தாய் தந்தையைச் சுற்றி வந்து, தாய் தந்தையர் என்று சொன்னாலே இந்த உலகத்தைச் சுற்றி வந்ததற்குச் சமம் என்று கருதி அவர்களைச் சுற்றி அந்து விந்த ஞானப் பழத்தைக் பெற்றுக் கொண்டார்.

நான் இங்கே பல்வேறு மானியக் கோரிக்கைகளிலேயெல்லாம் பேசி, அதற்கு அமைச்சர்கள் பதில் தந்து, பொள்ளாச்சித் தொகுதிக்குச் சிறப்புத் திட்டத்தைக் கேட்பதைவிட, எங்களது மாண்புமிகு முதலமைச்சரவர்களின் மானியக் கோரிக்கையிலே பேசி, விநாயகப் பெருமான் சுற்றி வந்தது போல, எனக்குத் தாயாக தந்தையாக, என்னை இயக்குகின்ற சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கிற தமிழக முதல்வரவர்களுடைய மானியக் கோரிக்கையிலே பேசி, என்னுடைய தொகுதிக்கு என்று சில சிறப்புத் திட்டங்களைப் பெற வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த முறை இந்த மாமன்றத்திலே நான் பேசுகின்றபொழுது என்னுடைய தொகுதியிலே செத்தவர்களுக்கு சாங்கியத்திற்குக் கூட சாராயம் இல்லையென்று சொன்னேன், கள்ளச் சாராயம் அப்பொழுது கூட இதை மிகைப் படுத்திச் சொல்கிறீர்கள் என்று கூட அதற்குப் பின்னால் பேசிய உறுப்பினர்கள்ளெல்லாம் சொன்னார்கள். நான் இன்றைக்கும் சொல்கிறேன், என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டிலே, கள்ளச் சாராயம் என்பதே இல்லை இல்லை இல்லை என்பதை ஆணித் தரமாக இங்கே குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தத் தமிழகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே, ஆயுதக் கலாச்சாரம் நடந்து கொண்டிருந்தது, அதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன் என்று சொன்னார்கள்; முற்றுப் புள்ளி வைத்துக் காட்டினார்.

[திரு. வீ. பி. சந்திரசேகர்] [1993 ஏப்ரல் 20

ஒரு விழாவுக்குச் செல்கின்ற பொழுது அங்கே பட்டாசு வெடிப்பார்கள். பட்டாசு வெடிக்கின்ற நேரத்திலே படபட என்று பட்டாசு வெடித்ததற்குப் பின்னால் தலைவர்களெல்லாம் போய் மேடையிலே பேசுகின்ற நேரத்தில் ஏதேனும் ஒரு சில பட்டாசுகள் வெடிக்காமல் அப்பொழுது பட்பட் என்று வெடிக்கும். அதேபோல, விடுதலைப்புலிகள் ஒழிக்கப் பட்டதற்குப் பின்னால் விடுதலைப் புலிகளினுடைய தொடர்புடைய சிலர் ஏதேனும் ஒரு குற்றங்களைச் செய்கின்ற நேரத்திலே, இன்றைக்கு அரசாங்கம் காவல் துறைக்கு உத்தரவிட்டு அதை அடக்கி ஒடுக்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒடுக்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

பிற்பகல் 12-15

அதே போல், இன்றைக்கு சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பேன் என்று சபதம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே, நிச்சயமாக செய்து முடிப்பார்கள். அப்படி ஒரு காரியத்திலே ஈடுபட்டிருக்கிற காவல் துறையினர் உயிர் நீக்குகிற நேரத்திலே, அவர்களுடைய குடும்பத்திற்கு 3 லட்சம் ரூபாய் என்கிற அறிவிப்பை இங்கே அறிவித்தார்கள். வேறு எந்த அரசாங்கமும் கொடுக்க முடியாத அந்தப் பெரிய தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருப்பதன் மூலம், காவல் துறையை இப்படிப்பட்ட சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு ஊக்குவிக்கிற நிலையை நாம் பார்க்க முடிகிறது.

அதேபோல், இன்றைக்கு கொலைகள், கொள்ளைகள் என்று சொல்கிறார்கள். ஏதோ, கொலம்பஸ் இன்றைக்கு காலையில் தான் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது போல, கொலைகாரன் திருடன் என்பது இன்றைக்குதான் அறிவிக்கிற ஒரு அறிவிப்பாக இருந்து கொண்டிருக்கிறது. கொலைகள், கொள்ளைகள் என்பது, இந்த நாடு தோன்றிய காலத்திலிருந்தே நடந்து கொண்டிருப்பவை. ஆகவே, அதை அடக்குகிற காவல் துறையாகத்தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துகிற காவல் துறையாகத்தான் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் கூட ஒரு பாடலில் சொல்வார்கள் 'திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது' என்று சொன்னார்கள். திருடுகிற திருட்டினை காவல் துறை கட்டுப்படுத்த முடியும். ஆனால், அவர்களை உடனே சுட்டுக் கொன்றுவிடுவதற்கு நமக்கு அதிகாரம் கிடையாது. சட்டத்திலேயும் அப்படி இடமில்லை. இன்றைக்கு திருடன் என்று

1993 ஏப்ரல் 20] [திரு. வி. பி- சந்திரசேகர்]

சொன்னால், அந்தத் திருடனைக் காப்பாற்றுவதற்காக வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஆகவே தனிப்பட்ட முறையிலே வழக்கறிஞர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் வழக்குத் தொடர்ந்து, அந்தத் திருடர்களை ஜாமினில் எடுத்தும், உடனே மறுபடியும் அந்தத் திருடர்கள் திருடிக் கொண்டே இருக்கிறார்கள்; குலத் தொழிலையே திருட்டுத் தொழிலாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களை கடுமையாக தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு, காவல் துறைக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு, காவல் நிலையத்திலே, காவல் துறை வாகனங்களில் எல்லாம் ஒயர்லெஸ் கருவிகளைப் பொருத்தியிருக்கிறார்கள். அவர்கள் அதைப் பொறுத்துவதற்குக் காரணமே செய்திகளை உடனடியாக காவல்துறையினர் அறிந்து கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், எங்கள் கோவை புறநகர்ப் பகுதியிலே இப்படி அமைக்கப்பட்டிருக்கிற ஒயர்லெஸ் சரிவர இயங்குவதே கிடையாது. அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அந்தச் செய்திகளைக் கொடுக்கிற 'ரிபீட்டர்' என்கிற இயந்திரம், பெரியார் மாவட்டத்தில் இருக்கிற சென்னிமலையிலே பொருத்தப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அந்தச் செய்திகள், அந்த ஒலியலைகள், கோவை புறநகர்ப் பகுதிக்குக் கிடைக்காத காரணத்தினால், பல்வேறு பகுதிகளில் அந்த ஒயர்லெஸ் சரியாக இயங்கவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவந்து, அப்படிப்பட்ட 'ரிபீட்டர்' கருவிகளை வால்பாறை, மருதமலை, மேட்டுப்பாளையம் பகுதிகளிலே அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையினரின் சீருடையைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், காக்கிச் சட்டையினர் வருகிறார்கள் என்று சொன்னால், ஒரு காலத்திலே அது போலீஸைத்தான் குறிக்கும்; காவல் துறையைத்தான் குறிக்கும். ஆனால், இன்றைக்கு சினிமாக் கொட்டகையிலே காவல் இருக்கிற காவலாளி, அதேபோல உணவகத்திலே இருக்கிற காவலாளி இப்படிப் பல்வேறு பகுதியிலே இருக்கிற காவல் காத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் இன்றைக்கு காக்கிச் சட்டையை மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற காவல் துறையிலே இருக்கிற பெரிய அதிகாரிகளைப் போன்று; போலீசார் போல ஆடை அணிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு

10 அடி, 15அடி தூரத்திலே இருந்து பார்ப்போமேயானால் அவர்கள் எல்லாம் ஒரு பெரிய காவல் துறை அதிகாரியாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு பெண் காவலர்களுக்கு என்று ஒரு தனியாக சீருடையை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதைப் பெண் காவலர்கள் அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கிற மக்கள் அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நீலகிரியிலே இருக்கிற காவல்துறைக்கு என்று தனியாக ஒரு கலர் இருக்கிறது. அது கருநீலக் கலரிலே இருந்து கொண்டிருக்கிறது. அந்த உடுப்பைப் போட்டுக்கொண்டு அவர்கள் வருகிற நேரத்திலே, உண்மையிலேயே கம்பீரமாகவும், சிறப்பாகவும் இருந்துகொண்டிருக்கிறது. வெளிநாட்டிலே இருக்கிற காவல்துறைக்கு என்று தனிப்பட்ட ஒரு நிறத்திலே ஒரு சீருடை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதேபோல் தமிழகக் காவல் துறைக்கு உங்களுடைய காலத்திலே தனியாக ஒரு சீருடையைத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, காவல் நிலையத்தில் எல்லாம் 9 மணி, 10 மணிவரை ஃபோன் மேலே ஃபோன் பண்ணினோம் என்றாலும், அங்கே நாங்கள் 'சென்ட்ரி' மட்டும்தான் இருக்கிறோம் என்ற தகவலைக் கொடுப்பார்கள். ஏதாவது ஒரு முக்கியமானப் பிரச்சினையாக இருந்தாலும்கூட, 'சப்-இன்ஸ்பெக்டருக்குத் தகவல் கொடுக்கிறோம்; அடுத்து, இன்ஸ்பெக்டருக்குத் தகவல் கொடுக்கிறோம் என்றுதான் சொல்வார்கள். 'சென்ட்ரி' மட்டும்தான் அங்கே இருந்து கொண்டிருப்பார். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 ஆயிரம் புதிய காவலர்களை நியமிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்திலே நகரிலே என்னபண்ணுவார்கள் என்றால் இந்தமாதிரி காவல் நிலையங்களில் 'செக்ஷன் ட்யூட்டி' போட்டிருப்பார்கள். காலையிலே பணியாற்றி இருந்தவர்கள், இரவு நேரத்திலே பணியாற்ற மாட்டார்கள், இப்படி 'செக்ஷன் ட்யூட்டி' போட்டிருப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையை அனைத்துக் காவல் நிலையங்களிலேயும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதே போல, இன்றைக்குக் காவல் நிலையத்திலே இருக்கின்ற காவலர்கள் 8 கி. மீட்டருக்கு அப்பால் செல்ல வேண்டும் கிட்டத்தட்ட 12 மணி நேரம் கழித்து வருகின்றார்கள். அப்படிச் செல்கின்றவர்களுக்குக் கொடுக்

1993 ஏப்ரல் 20] [திரு. வி. பி. சந்திரசேகர்]

கின்ற தொகை ரூபாய் 20. ஆனால் வெளியூர்களுக்குப் பாதுகாப்புக்குச் செல்கின்ற காவலர்களுக்கு நாம் கொடுக்கின்ற தொகை 16 ரூபாய். அது மிகவும் குறைவாக இருக்கிறது. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், காவல் நிலையத்திலே பணியாற்றுகின்ற காவலர்கள் தொடர்ந்து (மணியடிக்கப்பெற்றது) 6 நாட்கள் பணியாற்றுகின்றார்கள், என்று சொன்னால், ஏழாவது நாளும் அவர் பணியாற்ற வேண்டிய சூழ்நிலைமை ஏற்பட்டால், அவர்களுக்கு என்று ஒரு சிறப்பு ஊதியம் தரவேண்டும், அல்லது அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய சம்பளத்தையாவது நாம் கொடுக்க வேண்டும். ஆறு நாட்கள் தொடர்ந்து பணியாற்றுகின்றார். ஏழாவது நாளான சிறப்பு விடுப்பையும் தள்ளிவிட்டுப் பணியாற்றுகின்றார் என்று சொன்னால் அவருக்கு நாம் கொடுக்கின்ற தொகை 10 ரூபாய். ஆகவே, அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, 1987-லே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே கிட்டத் தட்ட 1000-க்கும் மேற்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒரே மாதிரியான கல்வித் தகுதிகள் இருந்தாலும் கூட, அவர்களையெல்லாம் மூன்று பிரிவுகளாகப் பிரித்து சட்டம்-ஒழுங்குக்கு என்றும், போக்குவரத்துத் துறைக்கு என்றும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்கு என்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். எல்லோருக்கும் ஒரே தகுதி, எல்லோருக்கும் ஒரே கல்வி என்று இருக்கின்ற நேரத்திலே இப்படிப் பிரிவுகளைக் கொடுத்திருக்கிறீர்கள் என்று கடந்த முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்த நேரத்திலே, அவர்கள் அதைக் கனிவோடு பரிசீலிக்கிறேன் என்று சொன்னார்கள். அதை இப்பொழுது பரிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு முக்கியமான தலைவர் எல்லாம் வருகின்றபோது அவர்களுடைய பாதுகாப்புக்காக பாதுகாவலர்களை அனுப்பி, அவர்களுக்கென்று Escort வாகனங்களும் கொடுப்பது வழக்கம். இன்றைக்குக் காவல் துறை, தலைவர்கள் வருகின்றபோது, அவர்களுக்கு வாடகைக் கார்களைத்தான் அமர்த்திக் கொடுக்கின்றார்கள். அந்தக் கார்கள் எல்லாம் நல்ல நிலையிலே இல்லாமல் இருக்கிறது. நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், திருச்சியில் இருந்து திண்டுக்கல்லுக்கு, திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்

[திரு. வி. பி. சந்திரசேகர்] [1993 ஏப்ரல் 20

பினர் வீட்டில் நடந்த ஒரு வருந்தத்தக்க நிகழ்ச்சியைக் கேட்பதற்காக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வருகின்ற நேரத்திலே நான் திருச்சிக்கு சென்று கொண்டு இருந்தேன். அப்போது அவர்களுடன் சேர்ந்து நானும் பாராளுமன்ற உறுப்பினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு, திருச்சிக்கு வருகின்ற நேரத்திலே அவர்களுக்குப் பாதுகாப்பாக வரக்கூடிய பாதுகாவலர்கள் திருச்சிக்கும், திண்டுக்கல்லுக்கும் இடையே வந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வேகமான அமைச்சர்களைக் கொடுத்திருக்கிறீர்கள். வேகமாகச் செயல்படுகின்ற அமைச்சர்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, அவர்களுடைய பாதுகாப்பாளர் வருகின்ற வாகனங்கள், சிறப்பு வாகனங்களாக, அதிக வேகமாக உள்ள வாகனங்களாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

அதேபோல, காவல் துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வாகனங்களுடைய வர்ணங்கள், காவல் துறைக்கு என்று சொன்னாலே வெள்ளை வாகனங்கள்தான் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தி, வெள்ளை நிறத்தைக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்க் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், இரவு நேரத்திலே காவல் நிலையத்திலே இருந்து பக்கத்திலே இருக்கின்ற கிராமங்களுக்கு காவல் துறையைச் சேர்ந்த காவலர்கள் 'நைட் ரவுண்ட்ஸ்' போவது வழக்கம். அதற்காக முன்பெல்லாம் 2 சைக்கிள்கள் கொடுத்திருப்பார்கள். ஆனால், இன்றைக்கு நாகரீக உலகத்திலே வாகனங்களுடைய வசதியைப் பார்க்கின்றபோது, ஒரு காவல் நிலையத்திற்கு 2 'மொபெட்'களைக் கொடுப்பீர்களேயானால் அந்தக் காவலர்கள் அதை எடுத்துக் கொண்டு கிட்டத்தட்ட 10 கி. மீட்டருக்கு உட்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்து இரவு நேரங்களில் காவல் பணி பார்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குக் கொடுத்த இந்த நல்ல வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

*திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமகளின் மாடமாக மட்டுமல்ல, கலைமகளின் கூடமாக, வீரமகளின் இருப்பிடமாகக் காட்சி தருகிற இந்த அவையிலே, புறநானூற்று வீரமும், புறங்காணும் விதத்தில் புதிய நானூற்றை தன்னுடைய திருவிழிப்பார்வையால் படைத்துக் கொண்டிருக்கிற ஆற்றல் மிக்க தலைவி, இதயதெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) சாதனைப் பூக்களின் சரித்தர வசந்தமாக விளங்குகின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற காவல் துறை, ஆயத்தீர்வை, தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளிலே சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய உள்ளம் மென்மையானது, மேன்மையானது, உன்னதமானது, உண்மையானது, புனிதமானது. (மேசையத் தட்டும் ஒலி) கனிவுமிக்க, துணிவுமிக்க, தெளிவுமிக்க பேரவைத் தலைவராக நீங்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உங்களை நீக்குவதற்காக நேற்றையதினம், தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி வேண்டாம்.

திரு. மு. தென்னவன்: ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது எல்லாம் வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. மு. தென்னவன்: ஒரு அரசாங்கத்தின் வலிமை மிக்க துறையாக காவல் துறை விளங்குகிறது. ஒரு ஆட்சியின் திறமையான, வேகமான நிர்வாகத்திற்கு அளவுகோலாக இருப்பது காவல் துறை. மக்களின் உயிரைப் பாதுகாத்தல், அவர்களுடைய உடைமையை பாதுகாத்தல், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுதல், குற்றங்கள் நிகழாமல் தடுத்தல், திருட்டைத் தடுத்தல், துப்பு துலக்குதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளை செம்மையாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிற பெருமைக்குரிய துறை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தான் காவல் துறை. அத்தகைய பெருமைக்குரிய காவல் துறை வலிமைமிக்க, வல்லமைமிக்க புரட்சித் தலைவி கரங்களில் இன்றைக்கு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). அறுக்க முடியாதவன் கையில் 1008 அரிவாள் இருந்து என்ன பயன்? வலிமையற்றவன் கையிலே அதிகாரம் இருந்து என்ன பயன்? காலிப்படை, கூலிப்படை, காவிப்படை, பாபர் மசூதியைத் தகர்த்ததே. முப்படையை வைத்திருந்தவர்கள், அந்த முப்படையை இயக்குகின்ற அதிகாரத்தை வைத்திருந்தவர்கள், வேடிக்கைத்தான் பார்த்துக்கொண்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). பாபர் மசூதி தகர்க்கப்பட்டது. இந்தியத் துணைக்கண்டத்திலே தமிழகம் நீங்கலாக அத்தனை மாநிலங்களிலும் கலவரங்கள் மூண்டன. பலபேர் கொல்லப்பட்டார்கள். ஆனால், இந்தியத் துணைக்கண்டத்திலே தமிழகம்தான் ஒரு அமைதியான மாநிலமாக, வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்கின்ற மாநிலமாக திகழ்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி). அது மட்டுமல்லாமல், அன்றைக்கு கர்நாடகத்திலே கலவரம் ஏற்பட்டபோது, தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல் துறைதான், அங்கே அடக்குவதற்குச் சென்றது. (மேசையைத் தட்டும் ஒலி). அத்தகைய பெருமைக்குரிய காவல் துறையாக நம்முடைய காவல் துறை விளங்குகின்றது. நான் எண்ணிப் பார்க்கின்றேன். இங்கே குற்றங்களைச் சொன்னார்கள். ஏதோ ஒரு காந்தி சிலையை தகர்த்துவிட்டார்கள் என்பதற்காக, ஏதோ ஒரு இடத்திலே கற்பழிப்பு சம்பவம் நடந்து விட்டது என்பதற்காக, ஏதோ சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது, காவல் துறை செயல்படவில்லை, செயல் இழந்து இருக்கிறது என்ற குற்றச்சாட்டை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இப்படிப் புகார் சொன்னவர்கள் பற்றி நான் வருத்தப்படவில்லை. குற்றச்சாட்டைச் சுமத்த வேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அங்காடிக் காரியைக் கூப்பிட்டு, சங்கீதம் பாடச் சொன்னால், அவள் வெங்காயம், கருவேப்பலை என்று பாடுவாளே தவிர, சங்கீதத்தை எதிர்பார்க்க முடியாது. ஆகவே, குறைகளைச் சொல்ல வேண்டும் என்பவர்கள் இடத்திலே நிறைகளை எப்படி எதிர்பார்க்க முடியும். நான் எண்ணிப்பார்க்கிறேன். அசாம் மாநிலத்திலே இன்றைக்கு ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க முடியவில்லை. காஷ்மீரத்திலே தேர்தலை நடத்த முடியாமல் அங்கே கலவரங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பஞ்சாப்பில் மூன்று வருட காலத்தில் 15 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலே இன்றைக்கு வழிப்பறி அதிகரித்திருக்கிறது. மேற்குவங்காளம், ஆந்திராவிலே, ஒரிசாவிலே இன்றைக்கு நக்சலைட்டுகள் தொல்லைகள்

அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. விண்ணை முட்டும் இமயத்தை பார்க்க முடியவில்லை. அதில் முட்டி மோதும் முகிலைக் காண முடியவில்லை. அழகுமிக்க தாஜ்மகாலைப் பார்த்து ரசிக்க முடியவில்லை. அப்படி கொடூரங்கள், கொடுமைகள், வன்முறைச் செயல்கள் அங்கே நடந்து கொண்டிருகின்றன.

பிற்பகல் 12.30

மராட்டியத்திலே ஒரேநாளிலே 15 இடத்திலே சங்கிலித் தொடர்போல வெடிகுண்டு வெடித்து. பலபேர் கொல்லப் பட்டிருக்கிறார்கள். வெடித்துச் சிதறிய வெப்பத்தைக் கக்குகிற எரிமலையாக பம்பாய் மாறி இருக்கிறது. அந்த நிலை தமிழகத்திலே இல்லை. மராட்டியத்திலே தமிழன் தாக்கப்பட்டான். கர்நாடகத்திலே தமிழன் தாக்கப்பட்டான். இப்படி சொந்த நாட்டிலேயே தமிழன் தாக்கப்படக்கூடிய நிலை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது.

கங்கையை வென்று கங்கைகொண்டான் காவிரி சோழன். ஈழத்தை வென்று வெற்றிக்கொடி நாட்டினான் கரிகால் சோழன். இமயத்தை வென்று வெற்றிக்கொடி நாட்டினான் விற்கொடி சேரன். வாதாபியை வென்று வெற்றிக் கொடி நாட்டினான் பல்லவர் பேரரசன். அந்த வரலாற்றுப் பெருமைக்குச் சொந்தம் கொண்டாடும் தமிழன் இன்றைக்கு அல்லல் படுகிறான். மராட்டியத்தில் கொல்லப்படுகிறான். ஆகவே மத்திய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தது? கண்ணீரைத் துடைத்ததா? நீங்கள் டெல்லிக்குக் கட்டுப்பட்டவர்கள், ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் தமிழ்நாட்டு மக்கள்..... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? சொல்லுங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னவன் அவர்கள் மராட்டியத்தில் தமிழன் தாக்கப்படுகிறான் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழன் என்பதற்காக அவர்கள் தாக்கப்படவில்லை என்று தன்னுடைய அறிக்கையிலே அவர்கள் அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். அதாவது தமிழன் என்பதற்காகத் தாக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் இப்போது ஏதோ இரண்டு மாநிலங்களுக்கிடையே இன ரீதியான ஒரு பிரச்சினையை எழுப்புவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழன் தாக்கப்படுகிறான் என்பது உண்மை. அதைத்தான் அவர் குறிப்பிடுகிறார். அவனுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகப் பேசுகிறார். (குறுக்கீடு). தமிழன் தாக்கப்படுகிறான், அவனுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகக் குரல் கொடுக்கிறார். அதற்குக் குறுக்கே வராதீர்கள்.

திரு. மு. தென்னவன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய அரசில் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்கள் இவர்கள். இவர்கள் டெல்லிக்கு வக்காலத்து வாங்குகிறவர்கள் என்பது தெரியும். டெல்லிக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆனால் உங்களை தமிழ்நாட்டு மக்கள் ஓட்டளித்துத்தான் இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தமிழன் பாதிக்கப்படுகிற போது அதற்காக உரிமைக் குரல் எழுப்பியாகவேண்டும். அந்த உணர்வு உங்களுக்கும் வந்தாகவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித்தலைவி அவர்கள் (குறுக்கீடு) அதுபற்றி பின்னால் வருகிறேன். புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றபோது, நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்த நாடு எப்படி இருந்தது? விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தி வீதியிலே உலா வந்தார்கள். தமிழ்நாட்டிலே பல கொடுமையான சம்பவங்கள், வன்முறைச் சம்பவங்களை உருவாக்கினார்கள். பலபேர் கொல்லப்பட்டார்கள். அந்தச் சூழ்நிலையிலே நாடே அஞ்சிக்கிடந்த நிலையில் இந்த நாட்டிலே அமைதி தவழாதா என்று நாட்டுமக்கள் ஏங்கிக் கிடந்த நேரத்தில்தான் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத தன்மையும் வேண்டும் என்று புரட்சிக் கவிஞன் பாரதி அன்று பாடினான். ஆகவே, பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக, (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, பாதகம் செய்வோரைக் கண்டுவிட்டால் நீ பயம் கொள்ளல் ஆகாது பாப்பா என்று பாரதி பாடினானே அந்தப் பாட்டு வரிகளை நெஞ்சிலே தாங்கி, இந்த நாட்டிலே உலாவிய தீய சக்தியை, பயங்கரவாதத்தை, ராஜீவ்காந்தியைக் கொன்ற அந்த வன்முறைச் சக்தியை அடக்கியே தீருவேன், ஒடுக்கியே தீருவேன் என்று விடுதலைப்புலிகளை அடக்கி, ஒடுக்கி, முடக்கிக் காட்டுவேன் என்று சபதம் செய்துவிட்டுத்தான் புரட்சித்தலைவி முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நடத்திக் காட்டினார்கள் என்பதையும் நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே காவல்துறை என்பது நெருப்பைப் போன்றது. நெருப்பை ஆக்கத்திற்கும் பயன்படுத்தலாம், அழிவுக்கும் பயன்படுத்தலாம்.

1993 ஏப்ரல் 20] [திரு. மு. தென்னவன்]

கோபுரத்திலே இருந்தால் அது தீபம் ஆகிறது. அதே நெருப்பு வீட்டிலே இருந்தால் விளக்காகிறது. அதே நெருப்பு மணிமண்டபத்திலே இருந்தால் அகல் விளக்காகிறது. அதே நெருப்பு சுடுகாட்டிலே இருந்தால் கொள்ளிக்கட்டையாக மாறுகிறது.

புரட்சித் தலைவி ஆட்சிக்காலத்தில் காவல்துறை இன்றைக்கு கோபுரத்தில் இருக்கிற தீபமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சிகாலத்தில் நீதியை, நேர்மையை, நியாயத்தை, தர்மத்தை, சுட்டுப்பொசுக்குகிற கொள்ளிக்கட்டையாகத்தான் அது இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு காவல்துறை தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ஏவல் துறையாக பயன்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ்காரன் பயன்படுத்திய துருப்பிடித்துப்போன சட்டங்களை எல்லாம் பயன்படுத்தி அன்றைக்கு மாற்று முகாமிலே இருப்பவர்களை, எதிர்க் கட்சிகளை அடக்கி, ஒடுக்கினார்களா இல்லையா என்பதை காங்கிரஸ்காரர்கள் சொல்லவேண்டும். வாழப்பாடி ராமமூர்த்தி மீது கூட ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அது தவறான வழக்கு.

திரு மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் குற்றம் சொல்லவில்லை. அவர்மீது ஒரு வழக்கு (குறுக்கீடு) சென்ற ஆட்சி எந்த அளவுக்கு துருப்பிடித்த (குறுக்கீடுகள்) அவரை ஒன்றும் குறை சொல்லவில்லை; அவர்மீது அந்த ஆட்சி போட்ட வழக்கைத்தான் சொல்கிறார்கள். உங்களுக்கு சாதகமாகத்தான் சொல்கிறார். உங்களுக்கு ஒன்றும் பாதகம் இல்லை.

பிற்பகல் 12—35

திரு. மு. தென்னவன்: உங்களுக்குச் சாதகமாகத்தான் சொல்கிறேன். முதலமைச்சரை எதிர்த்தார் என்பதற்காக, அதாவது அன்றைய முதலமைச்சரை எதிர்த்து அறிக்கை கொடுத்தார் என்பதற்காக பல்லவன் ட்ரஸ்ட் என்ற ஒன்றை உருவாக்கி, அதிலே கொள்ளை அடித்தார் வாழப்பாடி ராமமூர்த்தி என்று அன்றைக்கு உண்மைக்குப் புறம்பான வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கை புரட்சித் தலைவி அவர்கள் திரும்பப் பெற்றிருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அளவுக்குப் பயன்படுத்தினார்கள். நாங்கள் இந்த ஆட்சியை, காவல் துறையை, கட்சியை உடைப்பதற்கு பயன்படுத்தவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கட்சியை உடைப்பதற்கு, கட்டபொம்மனும், எட்டப்பனும்

ஒரே மண்ணில் என்று சொல்வார்களே, அதைப்போல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்த சில எட்டப்பர்களை வைத்துக்கொண்டு கட்சியை உடைப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) கட்சி அலுவலகங்களைப் பூட்டுவதற்கு, வெற்றிச் சின்னமான இரண்டை இலைச் சின்னத்தை முடக்குவதற்கு புரட்சித் தலைவி எழுதிய கடிதத்தைத் திருடுவதற்கு, லாரியை வைத்து கொல்வதற்காக காவல் துறையை ஏவல் துறையாகப் பயன் படுத்தினார்கள். இன்றைக்கு அந்த நிலை இருக்கிறதா?(மேசையைத் தட்டும் ஒலி) இதே சட்டமன்றத்திலே புரட்சித் தலைவியைத் தாக்கினார்களே, இன்றைக்கு இந்த நாட்டிலேயே அவர்கள் இருக்கிறார்கள், அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காக ஏதாவது நடவடிக்கை அடக்குமுறைகள் ஏவி விடப் பட்டிருக்கிறதா? அராஜகங்கள் தூண்டிவிடப்பட்டிருக்கிறதா? அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்களா? இங்கே காங்கிரஸ் கட்சியைச்சார்ந்த, அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு கருப்பையா மூப்பனார் மீது *செருப்பு வீசப் பட்டது* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, (குறுக்கீடுகள்) இங்கே கேளுங்கள், உட்காருங்கள், (குறுக்கீடுகள்) திருமதி பொன்னம்மாள் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்கிறார்கள். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'செருப்பால்' **என்று சொன்னதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் என்ன நடந்தது அன்றையதினம்? மாண்புமிகு இன்றைய முதல்வர், அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும்போது, ஆயிரக்கணக்கான செருப்புகளை விட்டு மேலேயிருந்து எறிந்தார்கள். அந்த எறி எல்லாம் மாண்புமிகு முதல்வர் மீது வந்து விழுந்தாலுங்கூட அதைத் தாங்கிக் கொண்டார்கள் மூப்பனார் அவர்கள். தாங்கிக் கொண்ட காரணத்தினாலேதான் அவர்களுக்கு இந்தக் கன்னத்திலே எல்லாம் அடியே தவிர **என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தென்னவன் 'அவர் மீது வீசப்பட்டது' என்று அதை மாற்றிக் கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. நானே அதைத் திருத்தியிருப்பேன். நீங்கள் இத்தனை பேர் சொல்லத் தேவையில்லை. (குறுக்கீடுகள்) இந்த அவையில் வீசப்பட்டது. அந்தச் சம்பவத்தைத்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 20] [பேரவைத் தலைவர்]

தான் அவர் சொல்கிறார். திரு. துரை ராமசாமி. (குறுக்கீடுகள்) இல்லை. அந்த நேரத்திலே அவர் உறுப்பினராக இருந்தவர். அவரும் சொல்வார். (குறுக்கீடுகள்) அதைத் தான் அவர் சொல்கிறார். அவர் வேறு எதுவுமே சொல்லவில்லை.

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய அந்த நிகழ்ச்சி நடந்த நேரத்தில் நான் அருகிலேயே இருந்தேன். அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பின்னாலே நான் நின்று, அங்கே இருந்து, இந்தப் பகுதியிலேயிருந்து வந்தவைகளைத் தடுக்கின்ற முயற்சியிலே இறங்கிய போது இந்தப் பகுதியிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் செருப்பை எடுத்து மூப்பனார் அவர்கள் மீது வீசியதும், அது அவர் தலையிலே வந்து விழுந்ததும் அவரும் அதை ஏற்றுக்கொண்டு அறிக்கை விட்டதும் உண்மை என்பதை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தென்னவன் சொன்னதில்** என்பதற்குப் பதிலாக வீசினார்கள் என்று இருக்கலாம். (குறுக்கீடுகள்) இல்லை, நானே சொல்லலாம் என்றுதான் இருந்தேன். நீங்கள் இத்தனை பேர் தேவையில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. இங்கிருந்து வீசினார்கள் என்று இருக்கலாம். (குறுக்கீடுகள்) நானே அதைத் திருத்தி இருப்பேன். தென்னவன் பேசுங்கள்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீசப்பட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். செருப்பு வீசப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) ** என்பது நீக்கப்படுகிறது. வீசினார்கள் என்பது இருக்கும்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அது மாத்திரமல்ல. இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தனுடைய கை முறிந்தது. அவருடைய உறவினருடைய கடை நொறுக்கப்பட்டது. அன்றைக்கு ஆட்சியாளர்கள் அந்த அளவுக்கு மாற்று முகாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

களில் இருப்பவர்களை, எதிர்க் கருத்துச் சொல்பவர்களை அடிக்கவேண்டும் என்பதற்காக காவல் துறையைப் பயன் படுத்தினார்கள்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

யூத இனத்தை அழிக்காமல் விட மாட்டேன் என்று ஆட்சி சக்கரத்தைச் சுழற்றிய ஹிட்லரை போல் செயல்பட்டார்கள். இன்றைக்கு அந்த நிலை இருக்கிறதா? யாராவது பழி வாங்கப்பட்டு இருக்கிறாரா? காவல் துறையை, பழிவாங்க வேண்டும் என்பதற்காக, ஏவல் துறையாகப் பயன்படுத்தி யிருக்கின்றதா இந்த அரசு? இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டதற்குப் பிறகு அவர் கைது செய்யப்பட்டு அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் அன்றைக்கு அப்படிச் செய்தார்களா? கொடூரமான சம்பவங்கள் இங்கே நடைபெற்றதே அதற்கு நடவடிக்கை அன்றைய ஆட்சி யாளர்கள் எடுத்தார்களா? இந்த நடவடிக்கையிலே ஈடு பட்டவர்களைப் பாராட்டினார்கள். ** (குறுக்கீடுகள்)

கனிவான மொழியைப் பேசி, அன்றைக்கு பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த துரைமுருகனுக்கு நெடுஞ் சாலையைக் கூட்டிக் கொடுத்தார், இலாகாவை கூட்டிக் கொடுத்தார். இது தவறா? (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்று மறுக்க முடியுமா? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் கூடுதலாகக் கொடுத்தார் என்ற பொருளிலே சொல்கிறார். நீங்கள் தவறாக பொருள் கொள்ள வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) திரு. தென்னவன் அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. மு. தென்னவன்: இன்றைக்கு போராளிகள். தீவிர வாதிகள் நடமாட்டம் அதிகரித்து இருக்கிறது என்று சொல் கிறார்கள். அவர்கள் இன்றைக்கு நவீன சக்திவாய்ந்த, நுட்ப மான ஆயுதங்களை கையிலே வைத்திருக்கிறார்கள். அதற்கு இணையான நவீன ஆயுதங்கள் நமக்கும் வேண்டும். அப் பொழுதுதான் அவர்களை நாம் அடக்க முடியும், ஒடுக்க

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 20] [திரு. மு. தென்னவன்]

முடியும். ஆகவே, காவல் துறையை நவீனப்படுத்த 80.45 கோடி ரூபாயை நாம் மத்திய அரசிடம் கேட்டோம். அவர்கள் நமக்கு கொடுத்ததோ 10 கோடி ரூபாய்தான். அள்ளித் தாருங்கள் என்று கேட்டால் கிள்ளிக்கூட தரவில்லை. ஏன் இந்த ஓரவஞ்சகம். பஞ்சாபுக்கு மட்டும் 600 கோடி ரூபாய். அதுவும் ஒரு எல்லை ஓர மாநிலம்தான். தமிழ்நாடும் எல்லை ஓர மாநிலம்தான். ஏன் மாநிலங்களுக்கு உள்ளே வேறுபாடு காட்ட வேண்டும்? தேசிய கொடியில் வேண்டுமானால் வர்ண பேதம் இருந்துவிட்டு போகட்டும். தேசத்தில் எதற்கு? தேசியக் கொடியில் 3 நிறங்கள் இருக்கின்றன. தேசத்தில் இந்த வேறுபாடு ஏன் என்று கேட்க விரும்புகிறேன். மத்திய அரசிடம் நாம். . (குறுக்கீடுகள்)

திரு. எஸ்.எம். கிருஷ்ணன்: தேசியக் கொடியைப் பற்றி— (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசியக் கொடியில் 3 வர்ணங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார். பேதங்கள் இருக்கின்றன என்று சொல்லவில்லை. வர்ணங்கள் இருக்கின்றன. 3 வர்ணங்கள் இருக்கின்றன. அதைப்போல, அதை யொட்டி அவர் கருத்து சொல்லிக்கொண்டிருக்கிறார். தேசியக் கொடியை அவர் அவமதிக்கவில்லை. தேசியக் கொடியில் இருக்கிற வர்ணங்களைப் பற்றி அவர் சொல்கிறார். அதை வைத்து கேளுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். இதிலே என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தென்னவன் அவர்கள்.

திரு. மு. தென்னவன்: வர்ணபேதம் தேசியக் கொடியில் இருந்துவிட்டு போகட்டும். தேசத்தில் எதற்கு? இது தவறா? ஏன் இந்த ஓரவஞ்சனை? இன்றைக்கு மத்திய அரசிடம் எதற்கு எடுத்தாலும் கையேந்துகிறீர்களே என்று கேட்கிறார்கள்? மத்திய அரசு என்ன ஆப்பிரிக்க கண்டத்தில் இருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது அமெரிக்க கண்டத்தில் இருக்கிறதா? இந்தியத் துணைக் கண்டத்தில்தானே இருக்கிறது. இங்கே ஒருவர் பீடி பிடித்தால் அந்த பீடிக்கு வருகிற வரி மத்திய சர்க்காருக்குச் சொந்தம். இங்கே ஒருவர் சிகரெட் குடித்தால் அந்த சிகரெட் மீதான வரி மத்திய சர்க்காருக்குச்

சொந்தம். ரெயில்வே ஸ்டேசனில் பிளாட்பாரத்தில் நின்றால் அந்த இடம் தமிழ்நாட்டுக்குச் சொந்தமாக இருந்தால் அந்தக் கட்டணம் மத்திய சர்க்காருக்குச் சொந்தம். இப்படி மாநில சர்க்காரிலிருந்து ஒரு வருடத்திற்கு வரி கொடுக்கிறோம், கூட்டாட்சி நாடு. அந்த அடிப்படையில் நாங்கள் தானமாக, சீதனமாகக் கேட்கவில்லை, உரிமையைக் கேட்கிறோம், கேட்பது தவறா என்று கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சருக்குக் கோபம் வரலாமா என்று கேட்கிறார்கள். தமிழன் பாதிக்கப்படுகிறபோது, தமிழ்மொழி பாதிக்கப் படுகிறபோது, தமிழகத்தின் உரிமை மறுக்கப்படுகிறபோது, மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கிற போது, ஆதிக்கம் செலுத்துகிறபோது, (மேசையைத் தட்டும் ஒலி), யதேச்சதிகார பார்வை பார்க்கிறபோது **நடந்து கொள்கிறபோது, நம்மை நம்பி வாக்களித்த மக்களை வாழ வைக்கவேண்டும் என்பதற்காக உரிமைக் குரல் எழுப்பினால், அதைக் கோபம் என்பதா? உரத்த குரல் எழுப்பினால் அதை கோபம் என்பதா? (குறுக்கீடுகள்)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : எதிர்க் கட்சித் தலைவர் பேசுங்கள்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்</u> : **என்கிற சொல் வருகிறது. ஓரவஞ்சகம் என்ற சொல்லையும் பயன்படுத்தி யிருக்கிறார். இவைகள் எல்லாம் அன்-பார்லிமெண்டரி.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : **என்பதை எடுத்துவிடலாம். ஓரவஞ்சகம் என்பது அன்-பார்லிமெண்ட்டரி அல்ல. நீங்கள் பார்சியாலிட்டி என்று சொல்வது இல்லையா? (குறுக்கீடு) அதை எடுத்துவிடலாம் என்று சொல்லிவிட்டேன். அதுதானே உங்கள் கோரிக்கை. அது எடுக்கப்பட்டுவிட்டது.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : **என்ற சொல் இருக்கக் கூடாது. ஆனால் **செய்கிற, அப்படி இருக்கலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. தென்னவன் அவர்கள்,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 20]

திரு. மு. தென்னவன் : ஆகவே, தமிழ்நாட்டு மக்களுக்காக, வாக்களித்த மக்களை வாழவைக்க வேண்டும் என்பதற்காக, தன்னை நேசிக்கிற மக்கள் எல்லா வளங்களையும் பெறவேண்டும் என்பதற்காக மத்திய அரசை நோக்கி உரிமைக் குரல் எழுப்பினால் அதைக் கோபம் என்று எப்படிச் சொல்வது? சிங்கத்தைச் சீண்டினால் அது சிலிர்த்து எழத்தான் செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி) எருமையைச் சீண்டினால் அது சேற்றிலே புரளத்தான் செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக நாட்டு மக்களைப் பற்றிக் கவலைப்படுகின்ற தமிழ்நாட்டு மக்களைப் பற்றி கவலைப்படுகிற, தன்னை வாழ வைத்த மக்களை வாக்களித்து இந்த உயர்ந்த இடத்தில் உட்கார வைத்த மக்களை, வாழவைப்பதற்கு அவர் உரிமைக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார். அதைக் கோபம் என்று தயவுசெய்து எடுத்துக்கொள்ளாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

இன்றைக்கு தமிழன் மராட்டியத்திலே, கர்நாடகத்திலே, கண்ணீர் வடித்தபோது அந்தக் கண்ணீரைத் துடைக்காத கையோடு நாங்கள் எப்படி தமிகத்திலே உறவு வைத்துக்கொள்ள முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டுகிறேன். திரு. தென்னவன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. மு. தென்னவன் : கைக்கு ஓட்டு போட்டுவிட்ட காரணத்தால் நாங்கள் கை ஏந்தி நிற்க வேண்டுமா?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : நீங்கள் கேட்ட பணம் அவ்வளவும் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய கருத்தைச் சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் இப்படித் தன்னிச்சையாக எழுந்து பேசுவது சரியாக இருக்காது. அவர் மிக மூத்த உறுப்பினர். இந்த அவையின் பாரம்பரியத்தைக் காப்பாற்றி வருபவர். தொடர்ந்து காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் மத்திய அரசோடு கை குலுக்குகிறோம், 20 மாதக் காலமாக. ஆனால், எங்கள் கைகளிலே

உள்ள ஆயுள் ரேகையை அழிக்க நினைத்தால் நாங்கள் என்ன ஏமாளிகளா ? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே புரிந்து கொண்டோம். தெளிவு பெற்றோம், துணிந்து உங்களை எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எதை வேண்டுமானாலும் தானம் செய்யலாம். தன்மானத்தைத் தானம் செய்ய முடியாது. அப்படிப்பட்ட தன்மானத் தலைவியாக புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களை சிலர் அசைத்துப் பார்க்க நினைக்கிறார்கள். (குறுக்கீடு) முதலமைச்சர்தான் போலீஸ் அமைச்சர். போலீசுக்குத் துணிவு வேண்டும், வீரம் வேண்டும். அத்தனையும் காவல் துறையைத் தன் பொறுப்பிலே வைத்திருக்கிற புரட்சித் தலைவி அவர்களிடத்தில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியை அசைத்துப் பார்க்க நினைக்கிறார்கள். புரட்சித் தலைவி என்ன தந்திரத்தால் முதலமைச்சர் ஆனவரா ? மந்திரத்தால் முதலமைச்சர் ஆனவரா ? மாயாஜாலத்தால் முதலமைச்சர் ஆனவரா ? இல்லை, திருமால் அவதாரம் எடுத்து, தானே வாக்காளர்கள் மாதிரி ஓட்டுக்களைப் போட்டு ஆட்சிக்கு வந்தவரா? இல்லை. மக்களைச் சந்தித்தார், மக்களின் உணர்வுகளை எதிரொலித்தார், மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதாக உறுதி கொடுத்தார். மக்கள் நம்பினார்கள், வாக்களித்தார்கள், மகுடத்தைச் சூட்டினார்கள். கோட்டையிலே உட்கார வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை சாமி வந்தாலும் அந்த சாமிக்கு எத்தனை ஆசாமிகள் ஆதரவு காட்டினாலும், நரசிம்ம அவதாரம் எடுத்தாலும், புரட்சித் தலைவி அவர்களை அசைத்துவிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சிலபேர் கனவு காண்கிறார்கள். கற்பனையோடு வாழ்கிறார்கள். மண்ணிற்கு அப்பால், விண்ணிற்கு அப்பால், காற்றையும் வெல்லும் கீர்த்தி மிக்கது கற்பனை என்று சொல்லுவார்கள். அந்தக் கற்பனை உலகிலே சிலபேர் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கற்பனைவாதிகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கருவாட்டிலே ரத்தம் கிடைத்தாலும் கிடைக்குமே தவிர உங்களுடைய கற்பனை நிறைவேறப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

தேனின்றி வண்டு இருக்க முடியாது, வான் இன்றி பயிர் வளர முடியாது, மழையின்றி மலர் வளர முடியாது, புரட்சித் தலைவி இன்றி நாங்கள் இல்லை. அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பறப்பதெல்லாம் ராஜாளிப் பறவையல்ல. கர்ஜிப்பது எல்லாம் சிங்கமல்ல. பாய்வதெல்லாம் புலியல்ல. கட்சி வைத்தவர் எல்லாம் தலைவர் ஆக முடியாது. தவிடு நெல் ஆகாது, தாழ்வாரம் வீடாகாது, தனி மரம் தோப்பாகாது, அறிக்கை விடுபவர் எல்லாம் அரசியல் தலைவன் ஆகிவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

1993 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர் பேசியதில் என்ன தவறு இருக்கிறது? பொதுவான கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடு) அவர் யாரையும் சம்பந்தப்படுத்தவில்லை. பொதுவாக அவரது கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடு) உங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது, உரிமை இருக்கிறது. அப்போது பேசலாம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பேசினாலும் காங்கிரஸ்காரர்கள் கோபப் படுகிறார்கள். ஏனென்று எங்களுக்குத் தெரியவில்லை. சாதாரண கருத்துக்களை, யார் மீதும் குற்றச்சாட்டாகச் சொல்லாமல் தனிப்பட்டவர்கள் மீது சொல்லாமல், உறுப்பினர் அவர்கள், கருத்துக்களைச் சொல்லும்போதும் கோபப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்குச் சாதகமாகப் பேசினால்தான் சரியாக இருக்குமென்று நினைப்பார்கள் போலிருக்கிறது.

பிற்பகல் 12.50

திரு. மு. தென்னவன் : தமிழக வரலாற்றில் இடம் பெறக்கூடிய ஒரே தகுதி நம்முடைய முதலமைச்சருக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறு பஞ்சகல்யாணிக் குதிரை. அதிலே இராஜா தேசிங்கு தான் சவாரி செய்ய முடியும். வரலாறு ப்யூவி பேலஸ் குதிரை. அதிலே மாவீரன் அலெக்சாண்டர்தான் சவாரி செய்ய முடியும். வரலாறு, புகழ் பெற்ற ஹைரான் குதிரை. அதிலே மாவீரன் அக்பர்தான் சவாரி செய்ய முடியும். தமிழகத்தின் வரலாற்றில் இடம்பெறக் கூடிய தகுதி இன்றைக்கு புரட்சித்தலைவிக்குத்தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இங்கே, குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே அந்தக் குற்றச்சாட்டு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரங்கநாதன், ஜானகிராமன் போன்றவர்கள் இப்படி சத்தமாகப் பேசுவதையும் குறுக்கீடு செய்வதையும் தவிர்க்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவையின் அமைதியைத் தயவுசெய்து காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. தென்னவன் : குற்றச்சாட்டுக்களுக்கு, அந்த அவதூறு புகார்களுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்ல வேண்டாம். உருளைக் கிழங்கை வெட்டுவதற்கு உடைவாள் தேவையில்லை.

சீடை உருண்டையை நசுக்குவதற்கு போர்வாள் தேவையில்லை. அந்த எதிரிகளை வீழ்த்துவதற்கு எங்களுக்கு அனுமதி தாருங்கள். களத்திலே புகுந்து பந்தாடிவிட்டு வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காவல்துறை மானியத்திலே, திருட்டு, களவு, கற்பழிப்பு என்றெல்லாம் பேசினார்கள். இந்த திருட்டு களவு, கற்பழிப்பு எல்லாம் இன்றைக்கு ஏற்பட்டதா ? உலகம் என்றைக்குத் தோன்றியதோ அன்றிலிருந்து இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலே துப்பாக்கிச் சூடு நடக்கவில்லையா ? பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்படவில்லையா ? ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் அது நடந்து இருக்கிறது. ஆனால், அந்தத் திருட்டு இன்றைக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கொலை இன்றைக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. 72 சதவீதம் திருட்டு போன்ற குற்றங்களை இன்றைக்கு நாம் கண்டுபிடித்து இருக்கிறோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்குக் காவல்துறைக்கு இரண்டு பக்கமும் இடி. உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பதைப் போல, அவர்கள் தீவிரமான நடவடிக்கை எடுத்தால் அத்துமீறல், அடக்குமுறை, காவல்துறை அராஜகம் என்று சொல்கிறார்கள். கொஞ்சம் மெத்தனமாக நடவடிக்கை எடுத்தால் மெத்தனம் என்கிறார்கள். ஆகவே, இரண்டு பக்கமும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகிற ஒரு துறையாக அந்தத் துறை இருக்கிறது. ஆகவே, யார் ஏசினாலும் யார் பேசினாலும் தமிழகத்தினுடைய நல்வாழ்விற்கான தமிழகத்தின் அமைதிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தங்களது சமுதாயக் கடமையை காவல் துறையினர் ஆற்றி வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த மானியத்திற்கு ரூ. 320 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் போலீஸ்காரர்கள் நியமனம் செய்யப்பட இருக்கிறார்கள். இருபது மாத காலத்தில் பத்தாயிரம் பேர் ஒரே நேரத்தில் நியமனம் செய்யப்படுவது புரட்சித்தலைவி ஆட்சியிலேதான். இதற்கு முன்னால் பத்தாயிரம் பேர் ஒரே நேரத்திலே ஒரே வருடத்திலே நியமனம் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்குக் காவலர் பதவி நிலை 2-லிருந்து 1-க்கு ஏறத்தாழ 21,000 பேர், அதைப்போல காவலர்கள் நிலை-1லிருந்து தலைமைக் காவலர்கள் 2,100 பேர் என்று ஒரே நேரத்தில் 24,000-க்கு மேற்பட்டவர்கள் இன்றைக்குப் பதவி உயர்வு பெறுகிறார்கள். ஆகவே, காவல் துறையை வலிமையான துறையாக மாற்றவேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் சிந்தித்து, அதிலே தனி அக்கறை எடுத்துக் கொண்டு இன்றைக்கு அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதலமைச்சரை நாம் தமிழகத்திலே பெற்றிருக்கிறோம். ஆகவே, காவல் துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கு

1993 ஏப்ரல் 20] [திரு. மு. தென்னவன்]

என்னென்ன செய்யவேண்டுமென்ற ஆலோசனைகளைச் சொல்லத் தேவையில்லை. சொல்ல விரும்பவில்லை. அழகிய ரோஜாவுக்கு வண்ணம் தீட்ட வேண்டுமா ? தோகை மயிலுக்குப் பட்டாடைப் போர்த்த வேண்டுமா ? இரும்புக்கு உறுதி சேர்க்க வேண்டுமா ? கரும்புக்கு இனிப்பைச் சேர்க்க வேண்டுமா ? மல்லிகை மலருக்கு மணம் கூட்ட வேண்டுமா ? நான் சொல்லித்தான் புரட்சித் தலைவி தெரிந்துகொள்ள வேண்டுமா ? அவர் யாருக்கு எதைச் செய்ய வேண்டும், எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று தெரிந்து வைத்திருக்கிறார்கள். கேட்காமலேயே அவருக்குக் கொடுக்கும் மனம் அவரிடத்திலே இருக்கிறது. அப்படிப்பட்ட முதலமைச்சரைத்தான் நாம் பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட முதலமைச்சர்தான் இந்தக் காவல் துறை மானியத்தை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள்.

ஆகவே, குணத்தால் தங்கம், இதயத்தால் இமயம், அறிவில் வானம், ஆற்றலில் முதல்வர், அவர்தான் புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, பதவிக் கனியைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்தாலன்றி, தான் பதவியைத் தக்கவைத்துக் கொள்ள எவரிடத்திலும் கையேந்தி நிற்காத கருணைத் தெய்வம். தமிழகத்தின் மேன்மையை, தமிழின் சிறப்பைக் காத்து நிற்பதில், நிலைநாட்டி நிற்பதில் சேரன் செங்குட்டுவனையும் வென்றுவிட்ட தீர காவியம்தான் புரட்சித் தலைவி.

பிற்பகல் 12-55

விரல் அசைவில் சாதனைகளை, விழி அசைவில் சரித்திரங்களைப் படைத்துக் கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் சமர்ப்பித்து இருக்கிற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று,

'' வேண்டுவன அறிவோய் நீ !

வேண்டுவன தருவோய் நீ !''

எனச் சொல்லி வாழ்த்தி அமர்கிறேன் ; நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. ஜி. பழனிசாமி, 10 நிமிடங்கள். மாண்புமிகு உறுப்பினர் தென்னவன் அவர்களுடைய பேச்சிலே நானும் சற்று * மெய்மறந்து நின்று

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

விட்டதால், நேரம் ஓடிவிட்டது. ஆகவே, அடுத்து வருகின்ற உறுப்பினர்கள் சற்று காலம் கருதி, 10 நிமிடங்களிலே பேசி முடிக்கக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே தாங்கள் * என்று கூறியது வேண்டாம் ; அதை ''மெய்மறந்து'' என்று இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை மாற்றி மெய்மறந்து என்று திருத்திக்கொள்ள விரும்புகிறேன். மெய் மறந்து என்று சொல்வதற்குத்தான் அப்படிச் சொல்லிவிட்டேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத்தீர்வை, காவல் துறை, தீயணைப்புத் துறைமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இங்கே நான் முன்வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழ்நாட்டில் நம்முடைய காவல் துறை சிறந்த காவல் துறை என்பதிலே நான் மறுப்பதற்கு இல்லை. ஆனால் நம்முடைய காவல் துறையை இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நவீனப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டு இருப்பதை நான் வரவேற்கிறேன். அதேபோன்று காவல்துறையினருடைய வாழ்க்கையை நவீனப் படுத்துவதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று அவர்களுடைய பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில், அவர்களுடைய வாழ்க்கை நிலைகளில் ஒரு மாற்றம் ஏற்படுகின்ற வகையில் அவர்களுக்கு குடியிருப்பு வீடுகளையும் கட்டிக் கொடுக்கின்ற திட்டங்கள் எல்லாம் கொண்டுவந்து இன்றையதினம் செயல்படுத்துவதற்கு முயற்சி எடுத்து இருப்பதை நான் வரவேற்கிறேன். அதே போன்று இன்றைக்கு சிறை காவலர்களுக்குக்கூட சமீபத்திலே காவல்துறையினருக்கு வழங்கி வந்து இருக்கிறதைப்போல வழங்கவில்லை என்ற குறைபாடுகள் இருக்கிறது. எனவே, சிறை காவலர்களுக்கும் அதை வழங்க வேண்டும் என்று நான் முதலிலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய காவல் படை போராளிகள் என்ற அடிப்படையில் ஊர்க்காவல் படை என்கிற பேரில் இன்றைக்கு காவல் துறையில் பலர் பயன்படுத்தப்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 20] [திரு. ஜி. பழனிசாமி]

படுகிறார்கள். அவர்கள் வாழ்க்கை நிலைகளை கவனத்தில் கொண்டு— அவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்கள், எனவே, நீங்கள் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நமது காவல்துறை சிறந்த காவல்துறையாக இருந்தாலும், காவல் துறையினருக்கும், அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கும் சமூகப் பொறுப்புகளை நீங்கள் உணர்த்தவேண்டும், இன்றைக்கு மக்கள் மத்தியில் காவல் துறையினருக்கு இருக்கிற பொறுப்பை அவர்கள் மதிக்கிற அளவுக்கு காவல்துறையினருக்கு பயிற்சிகள் அளிக்க வேண்டும்.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் காவல் துறையை கையில் வைத்து இருப்பதால், இன்றையதினம் காவல் துறையினர் என்று சொன்னால், மக்கள் மத்தியில் ஒரு மரியாதைக் குறைவு ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு சில காவல் துறை அதிகாரிகள் நடந்துகொள்கின்ற தன்மையை கவனத்தில்கொண்டு அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். பெரும்பாலான காவல்துறை அதிகாரிகள் இன்றையதினம் தமிழ்நாட்டில் வரக் கூடிய கலவரங்களை உணர்ந்து காலத்தோடு நடவடிக்கை எடுப்பதிலே கவனக் குறைவாக இருப்பதன் மூலமாக பல்வேறு இடங்களில் இன்றைக்கு பல்வேறு கலவரங்களைத் தூண்டுவதற்கு காவல்துறையிலுள்ள பல பேர் காரணமாக அமைந்துவிடுகிறார்கள். சமீபத்தில் தமிழ்நாட்டில் நடந்து இருக்கிற சம்பவம், கோரச் சம்பவங்களை அறிந்து எந்த ஒரு மனிதனும் வருத்தப் படமுடியாமல் இருக்க முடியாது. பல ஆண்டுக் காலமாக சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்காகச் சென்ற காவல் துறை ஊழியர்கள், அதிகாரிகள் கடந்த 22 ஆம் தேதி மிகக் கோரமான முறையிலே கன்னி வெடிக்கு பலியாகி இருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் உணர்வோம்.

பிற்பகல் 1–00

அதேபோல தமிழ்நாட்டில் சாராய வியாபாரிகளை, சாராய உற்பத்தியாளர்களை, மொத்த வியாபாரிகளை கண்டிபிடிப் பதற்கு முயற்சி எடுத்துக்கொண்ட காவல் துறை ஊழியர்கள் இன்றைக்கு படுகொலைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். கோரமான கொலைகளுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். இதெல்லாம் என்ன காரணத்தால் நடக்கிறது, இதற்கு அடிப்படையான காரணம் என்னவென்பதை தாங்கள் உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சந்தன மரக்கடத்தல் வீரப்பனை, சாராய மொத்த வியாபாரிகளை இன்றைக்கு கண்டு பிடிக்கிறபோது, இந்த காவல்துறை மூலமாக முன்கூட்டியே

தகவல் கொடுப்பதன் மூலமாக அவர்கள் உஷார் ஆகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் காவல் துறையை எதிர்த்து அவர்கள் போராடுவதற்கு, காவல் துறைக்கே சவாலாக தயாராகி இன்றையதினத்தில் கடத்தல்காரர்களும், சாராய வியாபாரிகளும் அமைந்து இருக்கிறார்கள் என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எனவே, ஆசிரியர்களுக்கு எல்லாம் பயிற்சி அளிப்பதைப்போல காவல் துறையில் அடிமட்டத்தில் இருக்கிற காவலர்களுக்கு நீங்கள் சமூக உணர்வை ஏற்படுத்த பயிற்சி அளிக்கவேண்டும். குறிப்பாக ஏழை எளிய மக்கள், கிராமப்புற மக்கள் இன்றைக்கு காவல் துறைக்கு சென்று ஏதாவது ஒரு புகார் கொடுத்தால் அதற்குரிய நடவடிக்கை எடுப்பதில் காவல்துறை இன்றைய தினம் காலதாமதமாகச் செயல்படுவதால் இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதன் காரணத்தால் மக்கள் காவல் துறை மீது நம்பிக்கை இழந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலிருந்து இந்தத் துறையை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு காவல் துறையில் அரசியல் கட்சிகளுடைய தலையீடு, ஆளுங்கட்சியின் தலையீடு அதிகரித்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியினுடைய தலையீடுகள் அதிகரித்து இருக்கின்றன என்று குறிப்பிலே இருக்கின்றது. யார் அங்கே தலையிட்டு இருக்கிறார்கள் என்ற விவரத்தை சொல்லி பேசவேண்டும். மொத்தமாக நீங்கள் பேசுவது சரியானதல்ல. புரட்சித்தலைவி அவர்கள் ஆளுங் கட்சியில் இருக்கிறவர்களுக்கு யாரும் காவல் துறைக்கு எந்தப் பிரச்சினைக்கும் செல்லக்கூடாது என்று உத்தரவு வழங்கி இருக்கிறார்கள். யாரும் தலையிடாத நேரத்தில் இப்படி தவறான தகவல்களைச் சொல்வது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது பொதுப்படையாக பல குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். சில காவல்துறை அதிகாரிகள் மக்களுடைய மரியாதையைப்

பெற முடியாத அளவில், மரியாதைக் குறைவாக வெளியில் நடந்து கொள்கிறார்கள் என்றும், கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு காவல்துறையினரே தகவல் கொடுக்கிறார்கள் என்றும், இப்போது காவல் துறைப் பிரச்சினைகளில் ஆளுங்கட்சியினர் தலையீடுகள் இருக்கிறது என்றும் பொதுப்படையாக அவர் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். குறிப்பிட்ட சில நிகழ்வுகளை அவர் சொன்னால்தான் அதற்கான விளக்கங்களை நாங்கள் தர முடியும். அப்படி குறிப்பிட்ட சம்பவங்களை அவரால் சுட்டிக்காட்டிச் சொல்ல முடியவில்லை என்றால் இப்படிப் பொதுப்படையாக ஜெனரலைஸ் செய்து குற்றச்சாட்டுகளைச் சொல்லக்கூடாது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி அவர்கள் பொதுவான குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டாம். குறிப்பாக இருந்தால், அனுமதி பெற்றிருந்தால் அதை நீங்கள் பேசுவதில் தவறு இல்லை. (குறுக்கீடு) கொடுப்பது என்பது வேறு. அதைக் காட்டி அனுமதி பெற்றிருந்தால்தான் அதைப் பற்றிப் பேசலாம்.

திரு. ஜி. பழனிசாமி: உங்களிடத்தில் கொடுத்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இனிமேல் கொடுப்பது என்றால் அமைச்சர் அவர்களிடம் கொடுத்து விடலாம்.

திரு. ஜி. பழனிசாமி: பெயர், ஊர், நடந்த தேதி வரை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கு முன்பே அனுமதி பெற்றிருக்கவேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இனிமேல் அதையெல்லாம் சொல்கிறேன். நான் இன்றைய தினம் ஆளுங்கட்சியினுடைய தலையீடு என்கிறபோது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களும் சொன்வார்கள். இன்றைக்கு அரசியல் கட்சிகள் உண்ணாவிரதம் இருக்க வேண்டும், ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டும் என்று சொன்னார்கள், அதே இடத்தில் ஆளுங்கட்சியினர் உண்ணும் விரதம் என்று சொல்லி, எதிரே உட்கார்ந்து இருக்கிறார்களே, அது ஆளுங்கட்சியின் தலையீடு இல்லையா? அதற்கு என்ன பெயர் சொல்வது (குறுக்கீடுகள்) அதற்கு காவல் துறை அனுமதி கொடுத்து, அவர்கள் எதிரில் உட்கார்ந்து உண்ணாவிரதம் இருக்கிற இடத்தில்,

உண்ணும் விரதம் நடத்துகிறார்களே, அது அரசியல் தலையீடு இல்லையா? இப்படி ஆளுங்கட்சி நடக்கவில்லையா? எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சி ஏதாவது ஒரு ஆர்ப்பாட்டமோ உண்ணாவிரதமோ நடத்துகிறபோது, அதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று நாங்கள் தடுத்தால்தான் அது தலையீடு. ஆனால் இவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது என்று அவர்களே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் தலையிடவில்லை. நாங்கள் ஏதாவது போராட்டத்தை நடத்துவதற்கு அனுமதிபெற்று செய்கிறபோது அதை எப்படி தலையீடு என்று நீங்கள் சொல்ல முடியும்? எனவே, அது தனிப்பட்ட ஒரு போராட்டம், உங்களுடைய போராட்டம் எப்படியோ அதைப்போல இது ஒரு தனிப்பட்ட போராட்டம். உங்களுக்குக் கொடுக்கிற அனுமதியிலே ஆளும் கட்சி என்றைக்கும் தலையிட்டு கொடுக்காதீர்கள் என்று நாங்கள் சொல்லவில்லை.

பிற்பகல் 1-05

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் கூட, திருப்பத்தூரிலே ஒரு போராட்டம் நடத்தினார்கள். சு. சிதம்பரம் அவர்கள் எதிர்த்து ஒரு போராட்டம் நடத்தினார்கள். அப்போது, தி.மு.க. வினுடைய சட்டமன்ற உறுப்பினர் தலையீட்டிலே அங்கே உண்ணும் விரதம், தி.மு.க. வினுடைய சார்பிலே நடத்தினார்கள். ஆகவே, போலீஸ் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆக, அன்றைக்கும் அனுமதி கொடுத்துத்தான் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே, இதிலே தலையீடு என்று எப்படிச் சொல்ல முடியும் ஒரு சிலர் உண்ணும் விரதம் இருக்கிறார்கள். இது சென்ற ஆட்சி காலத்திலே நடந்திருக்கிறது. இது மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்குத் தெரியாதா? இதைப்பற்றி அவர் பேசியிருக்கிறாரா? (குறுக்கீடுகள்) இருவருக்கு அனுமதி கொடுப்பது என்பதுவேறு. போலீஸ் தலையீடு என்பது வேறு. இதை ஒன்றுபடுத்திப் பேசக்கூடாது.

1993 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, நீங்கள் 12-55-க்குத் துவங்கியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) குறுக்கீடு இருந்தால், அது உங்கள் கணக்கிலே தான் வரும். (குறுக்கீடு) குறுக்கீடுகள் வருவது மாதிரிப் பேசுகிறீர்கள் என்று அர்த்தம்.

திரு. ஜி. பழனிசாமி : நான் வேண்டுமானால் உட்கார்ந்து விடுகிறேன். நான் ஒன்றுமே பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : நான் என்னென்ன பேசவேண்டும் என்று சொல்லுங்கள் அதைப் பேசுகிறேன். அதைத் தவிர வேறு ஒன்றும் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசுங்கள்.

திரு, ஜி. பழனிசாமி : என்னை எழுந்து பேச விடுங்கள் (குறுக்கீடு) தமிழ்நாட்டிலே காவல்துறையைப் பற்றிப் பேச விடவில்லை என்றால் என்ன அர்த்தம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு 10 நிமிடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது 10 நிமிடம் பேசி இருக்கிறீர்கள் குறுக்கீடுகள் இருந்தது என்று நீங்கள் கவலைப்பட்டால், இரண்டு நிமிடத்திலே முடியுங்கள்.

திரு, ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பிலே இதைப்போலத்தான் எங்கள் கட்சியின் சார்பிலே உண்ணாவிரதம் இருந்தார்கள். முதலிலே காவல்துறையினர் அனுமதி பெற்றிருந்தது. அதேபோல், காவல் துறையினர் ஆளும்கட்சிக்கு உண்ணும்விரதம் இருக்க அனுமதி கொடுத்து, அதே இடத்திலே, அதற்கு எதிர்ப்புறமாக பந்தல் போட்டு உண்ணும் விரதம் இருக்கிறார்கள். இது என்ன முறை? எந்தவிதத்திலே நியாயம்? ஏன் இந்தக் காவல்துறை இப்படி நடந்துகொள்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

அதே போல் நேற்றைக்குத் தூத்துக்குடியிலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதன்மூலமாக ஒரு கலவரத்தைத் தூண்டுவதற்கு காவல்துறை காரணமாக இருந்திருக்கிறது. ஏன் ஒருவருக்கு அனுமதி கொடுக்கும்போது, இன்னொருவருக்கும், இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் அனுமதி கொடுக்க வேண்டும். அதன் மூலமாக அந்த இடத்திலே கலவரத்தைத்

தூண்டுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கவேண்டும் என்பது தான். இதைதத்தான் நான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் பல பேர்கள் பேசுகின்றபோது சொல்கிறார்கள். தமிழகம் துப்பாக்கிக் கலாச்சாரமாக இருந்தது என்று சொல்கிறார்கள். ஆகையினாலே, இதன்மூலமாக தமிழகம் துப்பாக்கிக் கலாச்சாரமாக இருந்தது என்று சொல்லக் கூடிய நீங்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. பா. பட்டாபி ராமன்.

* திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களில் எந்த உறுப்பினரும் தமிழகம் துப்பாக்கிக் களமாக இருக்கிறது என்று பேசவில்லை என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கும் உறுப்பினருடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். இப்படித் தவறான செய்திகளை, வேண்டுமென்றே, ஏதோ பேசுகின்ற வேகத்தில் பேசுவது போல ஒரு பாவனையைக் காட்டி தவறான செய்திகளை இந்த அவைக்கு அவர்கள் அளிக்கக்கூடாது என்பதையும் நான் அவையினுடைய நினைவிற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இரண்டு ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே இருந்ததைச் சொல்கிறார். அப்படி இருந்தது என்று இவர்கள் பேசினார்கள் என்பதைத்தான் அவர் குறிப்பிடு கிறார் என்று கருதுகிறேன். அதுதான் சரியாகக்கூட இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே, உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். சுமார் 40 துப்பாக்கிச் சூடுகள் தமிழ் நாட்டிலே நடந்திருப்பதாகக்குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 8 பேர்கள் பொதுமக்கள் இறந்ததாகச்சொல்லப்பட்டு இருக்கிறது. 72 பேர்கள், 73 பேர்கள் காவல் துறையினாரால் காயம் அடைந்தார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. வரலாற்றிலே இல்லாத வகையிலே துப்பாக்கிச்சூடு நடக்க வில்லையா? ஏதோ விடுதலைப் புலிகள் வந்து தமிழ் நாட்டிலே துப்பாக்கிச் சூடு நடத்தினால்தான் துப்பாக்கிச் சூடா?

1993 ஏப்ரல் 20] [திரு. ஜி. பழனிசாமி]

தமிழ்நாட்டினுடைய காவல்துறை, விவசாயிகள், பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்துப் போராடுகிறபோது, இயக்கம் நடத்துகிறபோது, துப்பாக்கிச் சூடு நடத்துவது என்பது துப்பாக்கிச் சூடு அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில சம்பவங்கள் நடைபெறுகின்றபோது, பொது அமைதியைக் காப்பதற்கும், வன்முறையை ஒடுக்குவதற்கும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்துகிறார்கள். இது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு கட்டுப்பாட்டுடன் நடைபெறுகிற நிகழ்ச்சியாகும். கட்டுப்பாடே இல்லாமல், எந்தவிதமான விதிமுறைகளுக்கும் அடங்காமல் யார் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தால், அதைத் துப்பாக்கி கலாச்சாரம் என்று சொல்லலாம். ஒரு தீவிரவாத கும்பல் யாருக்கும் கட்டுப்படாமல், அவர்கள் தனனிச்சையாக எங்கே வேண்டுமானாலும் செல்வது, எத்தகைய சட்ட விரோதமான காரியங்களிலும் ஈடுபடுவது, தங்களை யாரும் எதிர்க்க வந்தால், துப்பாக்கியால் சுடுவது என்பது வேண்டுமானால் துப்பாக்கிக் கலாச்சாரம் என்று சொல்லலாம். அப்படிப்பட்டவர்களுக்கு சுதந்திரமாக தமிழகத்தில் திரிவதற்கும், அவர்கள் எங்கே வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் சுதந்திரமாகச் செயல்படலாம் என்று அனுமதித்ததும் வேறு ஒரு அரசு. அந்தச் சமயத்தில்தான் தமிழகத்தில் துப்பாக்கிக் கலாச்சாரம் நிலவியது என்று வேண்டுமானால் நாம் சொல்லலாம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் வேண்டுமென்றே சில அரசியல் இயக்கங்கள் வன்முறைச் சம்பவங்களைத் தூண்டி விடவேண்டும் என்பதற்காகவே அப்பாவி விவசாயிகளையும், அப்பாவித் தொழிலாளர்களையும் தூண்டிவிட்டு அவர்களை சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபடச் செய்து, வேண்டுமென்றே வன்முறைச் சம்பவங்களைத் தூண்டி விடுகிறபோது, அப்போது அந்த நேரத்தில் தக்க எச்சரிக்கைகளைச் செய்து தடியடிப் பிரயோகம் நடத்தி, அதன் பின்னர் கண்ணீர்ப்புகையையும் பயன்படுத்தி இவையெல்லாம் பலன் அளிக்கவில்லை என்று சொன்னால் கடைசி நடவடிக்கையாக, இறுதி நடவடிக்கையாக தகுந்த எச்சரிக்கைகளைக் கொடுத்த பின்னர் காவல் துறையினர் சில சமயங்களில் வேறு வழி இன்றி துப்பாக்கிப் பிரயோகம் நடத்த வேண்டியிருக்கிறது. எனவே, இத்தகைய குறிப்பிட்ட நேரங்களில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவேண்டும் என்பதற்காக காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்துவதனாலே தமிழகத்திலே துப்பாக்கிக் கலாச்சாரம் நிலவுகிறது என்று சொல்வது சரியல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறன்.

பிற்பகல் 1-10

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு காவல் துறையினர் முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போன்றுதான் காரைக்குடி, காளையார் கோவிலிலே மார்த்தாள் என்கிற 13 வயது பெண் தனிப் பயிற்சிக்காக சென்றவள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டும் கூட, காவல் துறையினருக்கு தகவல்கள் கொடுத்து இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நடவடிக்கை.... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக காவல் துறை மூலம் மற்றும் பல்வேறு விவரங்கள் தெரிவிக்கலாம். இருந்தாலும் ஒன்றிரண்டு விவரங்களை நான் சொல்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் மீது எப்படி கொலை நடந்தது எப்படி சம்பவம் நடைபெற்றது என்றெல்லாம் விசாரணையின்போது தெரியவரும். கொடுத்த புகார்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இன்றைக்கு அவர்களெல்லாம் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குரிய இந்தியன் பீனல் கோடு ஆக்ட் படி, அந்தச் சட்டப்படி அந்த செக்ஷன்கள் எல்லாம் போடப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்குகளில் எல்லாம் இன்றைக்கு விசாரணை நடைபெற்று கொண்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தவறு என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீதி கேட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு. அதைத்தான் நான் குறிப்பிட வந்தேன். நான் நடவடிக்கை எடுப்பது பற்றி குறிப்பிடவில்லை. நீதி கேட்டதற்காக துப்பாக்கிச் சூடு (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடித்து விடட்டும்.

திரு. ஜி. பழனிசாமி : அதேபோன்றுதான் இன்றையதினம், கடந்த 6—1—1993 ஆம நாள் அன்று.... (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி கேட்க வந்தவர்கள் மீது காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்று

1993 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார். நீதி கேட்க வந்தவர்கள் காவல் துறையினர் மீது கல் எறிந்தும், தடிகளால் அடித்தும், அரிவாளால் வெட்டவும் வந்தால் காவல் துறையினர் வேறு என்ன செய்ய முடியும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் வேறு ஏதோ சொல்ல வேண்டும் என்கிறார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே துணை கண்காணிப்பாளர் அவர்களுடைய மண்டை உடைக்கப் பட்டிருக்கிறது. அந்தச்சம்பவங்களை எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக தெரிவித்தார்கள். ஆகவே முறைப்படி வழக்கு பதிவு செய்யப் பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சட்டப்படி அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. புலன் ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதிலே நான் மேலே சொல்ல விரும்பவில்லை. ஆகவே ஒரு சம்பவம் நடைபெறுகிறபோது இந்த அரசு உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாத்திரம் யாரும் மறுக்க முடியாது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் செல்வாக்கு படைத்த நபர்கள், குற்றம் செய்யக் கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறபோது காவல் துறையிலே தலையிடுவதன் காரணமாக மக்கள் கோபம் அடைகிறார்கள். காவல் துறையினரை எதிர்க்கிறார்கள். அங்கே ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் பெரிய அந்தஸ்து உடையவர்கள் என்றோ அல்லது பெரிய மனிதர்கள் என்றோ—எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் இந்த அரசு அத்தகையவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வந்தால், எந்தச் சமயத்திலும் தயங்கியது இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சமுதாயத்தில் பெரியவர்கள், பெரிய மனிதர்கள் என்று கருதப்படுபவர்கள் பலர் மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. சமீபத்தில் கூட எடுத்திருக்கிறது. அந்த விவரங்களையெல்லாம் நாளை என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கின்றேன் என்பதை மட்டும் சொல்லி இன்னும் ஒன்றை

மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் ஆளும் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தால் கூட இந்த அரசு, அவர்கள் தவறு செய்தால் அவர்களைத் தண்டிக்காமல் விட்டு விடவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே நினைவூட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-15

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதே போன்றுதான் சிறுபான்மை முஸ்லீம் மக்கள், அவர்களுடைய பாபர் மசூதியை இடித்தபோது தமிழ்நாட்டில் தங்களுடைய ஆத்திர உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக தமிழ்நாட்டு மக்களிடத்திலே அவர்கள் இதுபோன்ற ஆர்ப்பாட்டம் நடத்திய போது கூட காவல்துறையினர் துப்பாக்கிச் சூடுகளை நடத்துகிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய குடியரசுத் தலைவர் அவர்கள் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர் அவர்களைச் சந்திக்கின்றபோது எந்த மாநிலத்தில் என்று என்னால் குறிப்பிட முடியாது. தமிழகத்திலே ஆண்டுகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே தான் அமைதி நிலவுகிறது என்று அவரே குறிப்பிட்டிருக்கிறார். நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 20—3—1993 அன்று தென்னார்காடு மாவட்டம் முகையூர் ஒன்றியத்தில் எங்கள் கட்சியைச் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் செயலாளர் காசிலிங்கம் என்கிற சாராய வியாபாரியைக் கண்டித்து அங்கே இருக்கின்ற பொது மக்களை அழைத்துக் கொண்டு அந்தச் சாராயங்களை எல்லாம் ஒழிப்பதற்கு முயற்சி எடுத்திருக்கிறார். அதற்குப் பின்னாலும் கூட அதே இடத்தில் சாராய வியாபாரி காசிலிங்கம் வியாபாரம் செய்கிறார். காவல்துறையிலே கேட்கின்றபோது, காவல்துறையினரும் சேர்ந்து, அவருடைய கைகள் முறிக்கப்பட்டு கை முறிவோடு மருத்துவமனையில் இருக்கிறார். காவல்துறையிலே புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேண்டும் என்று சொன்னால் நான் முதலமைச்சரிடத்திலே கொடுக்கிறேன். எந்தவித நடவடிக்கையும் இல்லை. ஆக இதுபோன்ற சம்பவங்களை காவல்துறை

1993 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டு, வேண்டுமானால் நான் முதலமைச்சரிடம் கொடுக்கிறேன், முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்கிறாரே, இதை ஏன் அவர் ஏற்கனவே என்னிடத்தில் கொடுக்கவில்லை ? அப்போதே கொடுத்திருந்தால் உரிய நடவடிக்கை எடுத்திருப்பேன். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் இந்நேரம் நான் சொல்லியிருப்பேன். ஆனால் நடவடிக்கை இல்லை என்று சொல்கிறார். அது குறித்து விவரங்கள் தற்சமயம் என்னிடத்தில் இல்லை. அந்த விவரங்களைப் பெற்ற பின்பு நான் தெரிவிக்கிறேன் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் ஆனால், பேரவையில் ஒரு மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெறுகிறது என்று சொன்னால் அந்த மானியக்கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது சில கருத்துக்களை, குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டும். அவற்றைப் பத்திரிகைகளில் பதிவு செய்ய வேண்டும், என்பதற்காகவே சில உறுப்பினர்கள் வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது உண்மையிலேயே வருந்தத்தக்கது, கண்டனத்திற்குரியது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, தாங்கள் சொல்கின்ற பிரச்சினைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற ஆவல், அக்கறை உண்மையிலேயே இருக்குமானால் அவர்கள் முன்கூட்டியே இந்த அரசிடம் தெரிவித்திருக்க வேண்டும். முன்கூட்டியே என்னிடத்தில் இந்தப் புகாரைத்தந்திருக்க வேண்டும். அதன்பிறகு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் பின்னர் இந்த அவையிலே அதைப்பற்றிப் பேசியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நீங்கள் கருதியிருந்தால் முதலமைச்சரிடத்திலே முன்கூட்டியே கொடுத்திருக்கலாம், அல்லது அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீங்கள் கருதினீர்களா,வேண்டாம் என்று கருதினீர்களா என்று நான் கவலைப்படப் போவதில்லை. இங்கே இதைப்பற்றி பேச வேண்டும் என்று நீங்கள் கருதி இருந்தால், என்னிடம் என்னுடைய அறையிலே காலையிலே வந்து நெடுநேரம் இருந்தீர்கள். அப்போதாவது கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடு)

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன் என்றால் எல்லா மந்திரிகளையும் பார்த்து சொல்லிக்கொண்டிருந்தால், சபை எதற்கு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி இங்கே பேசுவது என்றால் அதைப் பற்றிய விவரத்தை என்னிடம் காண் பித்து இருக்க வேண்டும். அவர் இப்போது எடுக்கிறார், நான் கொடுக்கிறேன் என்று. இப்போது கொடுப்பதை அப்போதே வந்து கொடுத்திருக்கலாம். என்னிடம் கொடுக்காமல் பேசுவது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) ஆகவே நீங்கள் இங்கே பேச வேண்டும் என்பதற்காகப் பேசுகிறீர்களே தவிர, இதற்கு ஒரு பரிகாரம் காணவேண்டும் என்கிற நோக்கம் உங்க ளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். அதையெல்லாம் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) விதி இருக்கிறது. அதற்கு என்ன செய்வது ? (குறுக் கீடு) முகையூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி சாவித்திரி அம்மாள அதுபற்றி ஏதோ விளக்கம் சொல்கிறார். பழனிசாமி அவர்கள் உட்காருங்கள். ரொம்ப நாள் அவர்கள் பேசவே இல்லை. இப்போதாவது வாய்ப்புக் கொடுங்கள்.

திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் முகையூர் ஒன்றியத்தில் அப்படிப்பட்ட சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்று சொல்லக்கடமைப்பட் டுள்ளேன்.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அடுத்தபடியாக நம்முடைய முகையூர் சட்டமன்ற உறுப் பினரை என்னுடைய நண்பர் குமாரை சந்திக்கச் சொல்கிறேன். அதேபோன்று தான் நேற்று இரவு நான் டி.வி.யிலே பார்க்கின்ற போது ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக களவு போன பொருட் களைத் திருப்பிக் கொடுக்கின்ற ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரே வழங்கியிருக்கிறார். அப்படி என்று சொன்னால் அவை கண்டுபிடிக்கப் பட்ட பொருட்கள், ஆனால் கண்டுபிடிக்க முடியாத, பல பேர்களுடைய இது போன்ற பல கோடிக்கணக்கான ரூபாய்கள் கொள்ளை போயிருக்கிறது என்று சொன்னால் அந்தக் கொள்ளையர்களும் நம்முடைய நாட்டில் தான் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் நன்றியைத் தான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்).

பிற்பகல் 1-20

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலேயே களவு போன பொருட்கள் இவ்வளவு விரைவில் மீட்கப்பட்டு ஒரே நாளில் ஒரே நிகழ்ச்சியின்போது ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பொருட்கள் உரிமையாளர்களுக்கு மீண்டும்

1993 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

வழங்கப்பட்ட நிகழ்ச்சி இதுவரை நடைபெற்றது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) யாராக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நிகழ்ச்சியைப் பாராட்டியிருக்க வேண்டும். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களிடம் நான் எதிர்பார்த்தேன். பாராட்டைத் தெரிவித்துவிட்டு இன்னும் சில பொருட்கள் களவு போய் இருக்கின்றனவே, அவற்றை எல்லாவற்றையும் கண்டுபிடித்து நீங்கள் திருப்பித் தரவேண்டுமென்று கேட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். இந்த நேரத்தில் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒரு ஆண்டில் சில குற்றங்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்படுகிறது. பிறகு, percentage of detection என்று சொல்கிறோம். கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கையையும் நாம் வெளியிடுகிறோம். அதனால் மீதம் உள்ள வழக்குகள் கைவிடப்பட்டு விட்டன என்று பொருள் அல்ல. அவற்றின் மீதும் விசாரணை நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. Investigation என்பது Investigation by itself is a continuing process. எனவே சில விஷயங்களில், சில கேஸ்களில், சில வழக்குகளில் கண்டுபிடித்துவிட்டு நாம் ரிசல்ட் காண்பித்தோம் என்பதற்காக மற்ற கேஸ்கள் அப்படியே நிலுவையில் இருக்கின்றன, கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்றன என்று பொருள் அல்ல. அவற்றின் மீதும் investigation நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, முடித்து விடலாம்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நன்றி சொல்ல வேண்டும் என்று தான் இருந்தேன், அதற்குள் மாண்புமிகு உறுப்பினர்கள் குறுக்கிட்டதால் நான் சொல்ல முடியவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கண்டுபிடிக்க காவல் துறையை துரிதப்படுத்தியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இது போன்று (குறுக்கீடு) உண்மையாகவே சொல்கிறேன்.** சொல்லவில்லை** வராது (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி ; நான்** என்று சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தை அலவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பல கோடிக்கணக்கான ரூபாய்க்கான பொருட்கள் தன்னந்தனியாக செல்லக்கூடிய பெண்களிடத்திலிருந்து கொள்ளையடிக்கப்படுகின்றன. பஸ்களில் கொள்ளையடிக்கப்படுகின்றன. வீடுகளில் கொள்ளையடிக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) ஆகவே, இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு காவல் துறை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விடலாம். 23 நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. க. அர்ச்சுனன்.

திரு ஜி. பழனிசாமி : தொகுதியைப் பற்றி பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொகுதிப் பிரச்சினை என்றால் ஒரே நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை காவல் நிலையத்தில் நடந்து இருக்கின்ற ஒரு துப்பாக்கிச் சூடு. கோவிந்தராஜன் என்பவர். தஞ்சை அரண்மனைக் காவல் நிலையத்தில் ஒரு துப்பாக்கிச் சூடு. ஆயுத பூசை அன்று துடைப்பதாக துப்பாக்கிச் சூடு நடந்து இருக்கிறது. அதில் மர்மம் இருக்கிறது. பாதிக்கப்பட்டு இருக்கின்ற அந்தக் குடும்பம் இன்றையதினம் நீதி கேட்டு நின்று கொண்டு இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு காவல் துறை அதிகாரிகள் காவலர்கள் மீது தொடர்ந்து இப்படிப்பட்ட தவறுகளை அந்தத் துறையிலே நடத்தக்கூடாது என்று சொன்னதற்காக அவர்கள் அன்றைய தினம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்தக்கொலை நடந்து இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1993 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைச் சொல்லி அதனைச் சுட்டிக்காட்டி அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார். இப்படிச் சொன்னால் பரவாயில்லை. ஆனால் சற்று முன் அவர் பஸ்களில் போனால் பெண்களிடம் நகைகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. பெண்களுக்குப்பாதுகாப்பு இல்லை. பகலிலேயே கொள்ளை, கொலை நடக்கின்றன என்று இப்படிப் பொதுவான குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். குறிப்பிட்டு இன்ன இடத்தில், இன்ன சம்பவம் நடந்தது என்று சொன்னால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டால் எங்களால் சொல்ல முடியும். எதிர்க் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் வேண்டுமானால் இப்படிப் பொதுவான குற்றச் சாட்டுக்களை அள்ளி வீசலாமே தவிர பொறுப்புள்ள ஒரு அரசு நிர்வாகத்தில் இருக்கின்ற நாங்கள் இப்படிப் பொதுவாகப் பேச முடியாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சம்பவங்களைச்சுட்டிக் காட்டி அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டால் எங்களுக்கும் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூரில் களியன் மகள்.... (மணியடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தொகுதியைப் பற்றிப் பேசுவதற்கு ஒரு நிமிடம் கேட்டீர்கள். (குறுக்கீடு) நீங்கள் உங்கள் தொகுதியைப் பற்றி ஒரு நிமிடம் பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு, நீங்கள் சேலம் பற்றிப் பேசுகிறீர்கள். தஞ்சாவூர் பற்றிச் சொன்னவுடன் பேச அனுமதித்தேன். நீங்கள் உங்கள் தொகுதி என்று சொல்லிவிட்டுப் பக்கத்திலே இருக்கிற தஞ்சாவூருக்குச் சென்றீர்கள். அந்த அளவுக்குப் பரவாயில்லை. ஆனால் இப்போது நீங்கள் சேலத்திற்குப் போய்விட்டீர்கள். உட்காருங்கள், அடுத்து க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்திலே பேசக் கூடிய வாய்ப்பினை அளித்தமைக்கு முதலில் உங்களுக்கு நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் தமிழகக் காவல் துறை வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப்

பிடித்துள்ளது என்பதனை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதுகாறும் பேசியவர்களெல்லாம் தமிழகக் காவல்துறையை ஸ்காட்லாண்டுயார்டு போலீசுக்கு அடுத்த இடம் என்று சொல்லி வந்தார்கள். ஆனால் தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் தமிழகப் போலீசினுடைய திற மைக்குநிகர், தமிழகப் போலீஸோடு வேறு எந்த போலீ சையும் ஒப்பிட முடியாத அளவிற்கு இன்றைக்கு அது திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதனை நான் பெருமையாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைக்கு percentage of detection percentage of recovery என்று சொல்லுகிறபோது, இன்றைக்கு ஒவ்வொரு ஆண்டி னுடைய சராசரியை எடுத்துக் கொண்டு வருகிறபொழுது இந்த ஆண்டு மிக உயர்ந்த நிலையில் இன்றைக்கு காவல்துறையை மிகச் சிறப்பான முறையிலே கொண்டு வந்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒரு Undisputed leader ஆக விளங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஏதோ, சந்தர்ப்ப சூழ்நிலையிலே உருவாக்கப்பட்ட லீடராக இல்லாமல் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற, மற்ற மாநிலங்களிலே இருக்கிற தலைவர்களுக்கும் மேலே இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஒரு தனித் திறமை வாய்ந்த, செல்வாக்கு மிக்க லீடராக அமைந்திருக் கின்றார் என்பதனை நான் தெரிவிக்க விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அமளிக்காடாக தமிழகத்தின் நிலை இருந்ததை மாற்றி இன்றைக்கு அமைதிப் பூங்காவாக மாற்றியிருக்கிறார்கள். ஆந்திராவை எடுத்துக் கொள்வோமேயானால், இன்றைக்கு 'People's War Group' ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. மகாராஷ்டிராவை எடுத்துக் கொள்வோ மேயானால் ஒரே நாளில் 13 இடங்களில் வெடிகுண்டுச் சம்பவங்கள், அதனைத் தொடர்ந்து, அதற்குப் பிறகுங்கூட பல இடங்களில் வெடிகுண்டுச் சம்பவங்கள். விசாரித்துப் பார்க்கிறபோது, அங்கே மஹாராஷ்டிரத்தை யார் ஆளு கிறார்கள் என்று சொன்னால், பல தாதாக்கள் ஆண்டு கொண்டு இருக்கிறார்கள். ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அயோத்திப் பிரச்சினையில் இந்தியத் துணைக் கண்டமே அல்லோலகல்லோலப்பட்டது; பாதிக் கப்பட்டது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்ததை நாம் கண்கூடாகப் பார்த்தோம். இது புரட்சித் தலைவியினுடைய நிர்வாகத்துக்கும் தமிழகக் காவல்துறையினுடைய முன்யோசனைக்கும் கிடைத்த பரிசு என்பதே என்னுடைய அபிப்ராயம். நியாயத்தை நிலைநிறுத்து வதற்காக காவல் துறைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் கட்டுப்பாடற்ற நிலையை அளித்துள்ளார்கள். தன்னுடைய

1993 ஏப்ரல் 20] [திரு. க. அர்ச்சுனன்]

கட்சிக்காரார்கள் என்று சலுகை காட்டுவதை நிறுத்தி சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கும், நியாயத்தை நிலை நிறுத்துவதற்கும், தப்பு யார் செய்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடு என்று காவல்துறைக்குக் கொடுத்திருக்கிற உத்தரவின் காரணமாகத்தான் இன்றைக்கு தமிழகத்தில் இப்படிப்பட்ட ஒரு நல்ல நிலைமையை உருவாக்கி, காவல் துறை நல்ல பெயர் எடுத்து வருகிறது என்பதனை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

ஈழப்போராளிகளால் தமிழகத்தில் அமைதி கெட்டது. அதை முந்தைய அரசு கண்டுகொள்ளவில்லை. அதன் விளைவு, தேசியத் தலைவர் ராஜீவ்காந்தியை நாம் இழந்தோம். நாட்டில் அமைதி குலைந்தது. கொலை, கொள்ளைச்சம்பவங்கள் நடந்தன. இதே தலைநகரத்தில் பத்மநாபாவோடு 13 பேர் கொலை செய்யப்பட்டார்கள். ஆயுதக் கடத்தல், வெடி மருந்துக் கடத்தல், போதைப் பொருள் கடத்தல், பெட்ரோல், டீசல் கடத்தல் இப்படிப்பட்ட சம்பவங்கள் நிறைய நடை பெற்றன. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு சட்டம் ஒழுங்கைக் கட்டுப் பாட்டில் கொண்டு வந்திருக்கிற நிலைமையை உருவாக்கித் தந்தார்கள் என்பதனை நான் இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன். இன்றைக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சம்பவங்கள் நடப்பதை, இன்றைக்கு ஒட்டுமொத்தமாக சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது என்கிறார்கள். இலங்கை யிலேயிருந்து வந்த சமூக விரோதிகள் இந்தச் சம்பவங்களில் ஈடுபடுவதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். அதே நேரத் திலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இரண்டு ஆண்டு காலத்திற்குள் எவ்வளவோ வழக்குகள் டிடெக்ஷன் ஆகியிருக்கின்றன. எவ்வளவோ பொருட்கள் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. அந்த நகை நட்டுக்களையெல்லாம் இன்றைக்கு மாநிலத்தினுடைய முதலமைச்சரே சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு விழாவைப்போல, அவர்களிடத்திலே ஒப்படைக்கக் கூடிய நிகழ்ச்சியை நான் எப் போதுமே கேள்விப்பட்டதில்லை. அந்த அளவிற்குப் புகழ் மிக்க காவல்துறையாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக் கிறது. சமூக விரோத கலாச்சாரத்தை தமிழகத்தில் ஊடுருவ, பரவவிடாமல் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக் காது. அங்கிங்கெனாதபடி நீக்கமற எங்கும் நிறைந்திருந்த நிலை யை மாற்றி, கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார் என்று புரட் சித் தலைவியை எதிரணியிலுள்ள காங்கிரஸ் கட்சியினர் பாராட்டினார்கள். ஆனால் இப்போது அவர்களுக்கு நிலைமை வேறாகிவிட்டது. இப்போது இரண்டொரு சம்பவங்கள் அங்கொன்றும் இங்கொன்றும் நடப்பதைப் பெரிதுபடுத்தி, இன்றைக்கு எங்கு பார்த்தாலும் எல்.டி.டி.ஈ. யினுடைய ஆதிக் கத்திலே தமிழகம் இருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள்.

[திரு. க. அர்ச்சுனன்] [1993 ஏப்ரல் 20

பிற்பகல் 1.30

இப்பொழுது அப்படிச் சொன்னால், நாங்கள் யூகிக்கிறோம், கடற்படை உங்களுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்த அதைக் கடந்துதான் தமிழகத்திற்கு வர முடியும். ஆக, சட்டம் ஒழுங்கைச் சீர் குலைக்க இன்றைக்கு நீங்களே, உங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் உள்ள இராணுவமே இதை இங்கே தமிழகத்தில் ஊடுருவுவதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்களா? அனுமதிப்பதாக யூகித்துக் கொள்ளலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன். அவர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுத்தவுடன், பார்த்தீர்களா, எல்.டி.டி.ஈ.-யினுடைய ஆதிக்கம் தமிழகத்தில் என்பது எந்தவகையிலே நியாயம் என்பதை நான் இந்த அவையின் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். பத்மநாபாவும், 13 பேர்களும் இந்தத் தலைநகரத்திலே கொலையுண்டு அவர்கள் இராஜாஜி மண்டபத்திலே கிடத்தப்படுகிறார்கள். அன்றையதினம் அப்பொழுது ஆட்சியில் இருந்த முதலமைச்சரோ, ஆட்சியாளர்களே வந்து மலர் வளையம் வைக்கக் கூட முன் வரவில்லை. அப்பொழுது எதிர்க்கட்சியிலே இருந்தவர்கள்தான் சென்றார்கள். ஆனால், இன்றையதினம் புரட்சித் தலைவி அவர்கள் காவல் துறைக்கு எந்த அளவிற்கு ஊக்கம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், திருநெல்வேலியிலே ஒரு சமூக விரோதக் கும்பலைத் துரத்திக் கொண்டு போகிறார் ஒரு டி.எஸ்.பி. அவர் அங்கே ஒரு விபத்திலே இறந்து விடுகிறார். இறந்த அந்தக் குடும்பத்திற்குப் புரட்சித் தலைவியினுடைய தாராள மனப்பான்மையால், அந்தக் குடும்பத்திற்கு உதவிக் கரம் நீள்கிறது. காவல் துறை இந்த ஆட்சியை நம்பி, உயிரைப் பணயம் வைத்துக் களத்தில் இறங்குகிறார்கள் என்பதற்குச் சான்று இது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வீரப்பனைப் பிடிக்க இந்த ஆட்சியில் காவல் துறை அடர்ந்த காட்டுக்குள் நுழைகிறது. இதற்கு முன்பு அடர்ந்த காட்டுக்குள் பல ஆட்சியிலே நுழைந்ததா? அடர்ந்த காட்டுக்குள் நுழைந்தது மட்டுமல்லாமல், வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்களை போன மாதம் எஸ்.பி. கோபாலகிருஷ்ணனுடைய திறமையினால் அடர்ந்த காட்டுக்குள் பலபேரைச் சுட்டுக் கொல்கிறார்கள். நம்முடைய முதலமைச்சரவர்கள் காட்டிலாகா அமைச்சரை அனுப்பி, அங்கே வீரப்பன் கும்பலைச் சுட்ட கோபால கிருஷ்ணனையும் மற்றவர்களை

1993 ஏப்ரல் 20] [திரு. க. அர்ச்சுனன்]

யும் பாராட்ட அனுப்பியிருக்கிறார்கள். தற்போது நம்முடைய எல்லையிலேகூட நடக்கவில்லை. கர்நாடகா எல்லையிலே நடக்கிறது அந்தச் சம்பவம். இங்கே பூமிக்கு அடியிலே வெடி குண்டுகளை வைத்து, எதிர்பாராத ஒரு விபத்தை ஏற்படுத்துகிறார்கள். ஒரு சம்பவத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக ஐந்தாறு அதிகாரிகளும், சில சிவிலியன்களும் இறக்கிறார்கள். சடடட னறக் கூட்டம் நடந்து மகாண்டிருக்கிறது. எவ்வளவோ வேலைப் பளுக்கள். இதற்கு பத்தியிலேயும்கூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஹெலிகாப்டர் மூலமாக - காரிலே வந்தால் கூட நேரம் ஆகிவிடும் என்று சொல்லி ஹெலிகாப்டர் மூலமாக அந்த இடத்திற்கு வந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார்கள். ஆகவே காவல் துறை எங்களுக்கு, ஒரு கஷ்டம் வருகிறபோழுது இந்த ஆட்சியில் முதலமைச்சர் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறார்கள் என்பது தான் அதனுடைய பொருள் என்பதை நான் இங்கே திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இறந்தவர் குடும்பத்திற்கு, சாதாரண நிவாரணம் அல்ல, 3 இலட்சத்து அறுபதாயிரம் ரூபாய் அளவிற்கு அந்தக் குடும்பத்திற்கு இன்றைக்கு அளித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அரசாங்கத்தினுடைய நியதியில் இருக்கிற அந்தக் குடும்பத்திற்கு வேலைக்குத் தகுதியுடையவர்களுக்கு வேலைகூட அளிக்கப்படும் என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், சம்பவம் நடந்த அடுத்த சில நாழிகையிலேயே காவல் துறையினுடைய தலைவர் அங்கே சென்று, மாவட்டக் காவல் துறையோடு சேர்ந்து அங்கே ரெஸ்க்யூ ஆப்பரேஷனில் கலந்து கொண்டதாக நான் கேள்விப்படுகிறேன். அங்கே அந்த அளவிற்கு புரட்சித் தலைவினுடைய காவல் துறை அவ்வளவு வேகமாக முடுக்கி விடப்படுகிறது என்பதற்குண்டான ஆதாரம் அது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் துறையை ஆட்சியிலே இருப்பவர்கள் பயன்படுத்தும் விதத்திலேதான் அந்தக் காவல் துறை இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. ஒரு சர்க்கஸ் நடக்கிறது என்று சொன்னால், பயில்வான் வருகிறான், அவன் முன்னால் ஒரு உலக்கையைப் போன்ற உருக்கை ஒரு 10, 20 பேர் சேர்ந்து தூக்கிக் கொண்டு வந்து வைக்கிறார்கள். அந்த உலக்கையை எடுத்து, அந்தப் பயில்வான் வளைக்க

வேண்டும். அதைப் பார்த்தவுடன் அங்கேயிருக்கிற ஆயிரக்கணக்கான பேர் கைதட்டி ஆரவாரம் செய்கிறார்கள். அப்பொழுது அந்தப் பயில்வானுக்கு ஒரு தெம்பு ஏற்படுகிறது. உடம்பில் வலு ஏற்படுகிறது. உருக்கை எடுத்து வளைக்கிறான். வீசி எறிகிறான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கூட்டத்திலே கைதட்டிய கூட்டத்திலே, ஆயிரக்கணக்கான பேர் இருந்த கூட்டத்திலே இருந்த ஒரு திருடன் ஒருவன், ஆஹா, இவனுக்கு இவ்வளவு பெரிய வலிமை எப்படியிருக்கிறது என்று சொல்லி, அவனைத் தனியாக அந்த நிகழ்ச்சி முடிந்தபிறகு போய் சந்திக்கிறான். சந்தித்து, உனக்கு மாதம் எவ்வளவு சம்பளம் என்று கேட்கிறான். மாதம் 5,000 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று சொன்னான். உனக்கு 50,000 ரூபாய் தருகிறேன், என்னுடன் வா என்று அழைத்துக் கொண்டு போகிறான். அன்றிரவு நட்ட நடுநிசியிலே எல்லோரும் தூங்கிய பிறகு ஒரு பங்களாவினுடைய சிறிய ஜன்னல் கம்பியை வளைக்கச் சொல்கிறான். அவன் வளைத்துப் பார்க்கிறான். முடியவில்லை. ஏன் என்று கேட்கிறான். ஒரு பத்துப் பேராவது கை தட்டினால்தான் என்னால் வளைக்க முடியும் என்கிறான். ஆக, சர்க்கஸிலே எப்படிப் பயில்வானைப் பயன்படுத்தினார்களோ அதைப்போல புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குக் காவல் துறையைப் பயன்படுத்துகிறார்கள். அன்றைக்கு நட்ட நடுநிசியிலே எப்படி அந்தப் பயில்வனைத் திருடன் பயன்படுத்தினானோ அதைப்போன்று முந்தைய ஆட்சியிலே நடைபெற்ற காரணத்தினாலேதான் அன்றையதினம் காவல் துறை செயல் இழந்தது; கைகள் கட்டப்பட்டிருந்தன. இன்றையதினம் இந்தக் காவல் துறை எவ்வளவு பெருமை மிக்கதாக இருக்கிறது என்பதனை நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1.35

ஒரு ஆட்சி முடிந்த பிறகு எங்கேயாவது நிறைவேற்றியிருப்பார்களா? ஹோம் செகரட்டரி கிரிமினல் கொலை வழக்கிலே சம்பந்தப்பட்டதும், காவல்துறையினுடைய தலைமையிலே இருப்பவர் எப்படி செத்தார் என்றும், திடீர் சாவு என்ற செய்தியெல்லாம் வருகிற அளவுக்கு ஒரு ஆட்சி நடைபெற்று சட்டம் ஒழுங்கெல்லாம் சீர்குலைக்கிற காரியங்களையெல்லாம் செய்துவிட்ட நிலையில், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அமைதிப்பூங்காவாக, எவ்வளவு வீரத்தோடு, தன்னுடைய உயிரைப் பற்றிக்கூட கவலை இல்லை; தன்னுடைய உயிருக்கு இன்றைக்கு உலை வைத்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலேகூட, அந்தைப்பற்றி எள் முனையளவுகூடக் கவலைப்படாமல், தமிழ்ச் சமுதாயத்தைக் காக்கிற

சத்யமேவ வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அந்த நல்ல காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். மணியடிக்கப்பெற்றது.)

நான் இந்த நேரத்திலே, இன்னொன்றையும் கூற விரும்புவது, எதிரிலே உட்கார்ந்து இருக்கிற எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுகிற கட்சியாக வருவதற்கு நினைப்பதிலே தவறு ஒன்றும் இல்லை. நாங்கள் தவறு செய்தால் தானே, அதனைச் சுட்டிக்காண்பித்து எங்களை மக்களே ஒதுக்குவார்கள்? அதற்குப் பதிலாக, ஏதோ வெளிநடப்புச் செய்கிற காரணத்தாலே மக்கள் பிரச்சினையை நீங்கள் மன்றத்திலே வைப்பதைச் செய்யாமல் புறக்கணித்துவிட்டுப் போவதாகத்தான் கருதுவார்களேயொழிய, உள்ளபடியே மக்கள் பிரச்சினையை நீங்கள் மன்றத்திலே வைத்து, அது பத்திரிகையிலே வந்து, அதைப் படித்துவிட்டு, மக்கள் மனமாற்றம் கொண்டு, நீங்கள் ஆளுகிற பொறுப்பை ஏற்கலாம். எங்கள் மீது குற்றம் இருந்தால், நீங்கள் இந்தப் பக்கம் வருவதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால், உங்களைப் பார்த்து நான் கேட்க விரும்புவது, சந்தோஷமாக இருக்கிறபோது சிரித்தால் உடம்புக்கு நல்லது என்ற ஒரு பழமொழி உண்டு. ஆனால், எதிர்க்கட்சியினர் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், தன்னந்தனியாக உட்கார்ந்து கொண்டு சிரித்துப் பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிரித்தால் ஆயுள் பெருகும் என்றால், தனியாக சிரித்தால் சந்தேகம்தான் பெருகும். எனவே, நான் இந்த நேரத்திலே உங்களைப் பார்த்துக் கேட்க விரும்புவது, காவல் துறையை நவீனமயமாக்க புரட்சித் தலைவி அவர்கள் 80 கோடி ரூபாய் கேட்டார்கள். நீங்கள் 80 கோடிக்கு மேலே, அதை 100 கோடியாகக் கொடுத்தோம்; இருந்தபோதும் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று சொல்லி ஆட்சியைப் பிடிப்பீர்களா? புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 500 கோடி கேட்டார்; நாங்கள் ஆயிரம் கோடி கொடுத்துவிட்டோம் என்று சொல்லி ஆட்சியைப் பிடிப்பீர்களா? இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று சொல்லி, அரசியல் சட்டத்தைத் திருத்தி விட்டோம் என்று சொல்வீர்களா? நீதிமன்ற ஆணையை ஏற்று, காவிரியில் தண்ணீரை விட்டோம் என்று சொல்வீர்களா? நியாய விலைக் கடையிலே கொடுக்கிற அரிசியின் விலையை மத்திய அரசு குறைத்தும், தமிழக அரசு, புரட்சித் தலைவியின் ஆட்சியிலே விலையை ஏற்றி விட்டது என்று சொல்வீர்களா? இல்லை; தொழில் அமைதி இங்கே கெட்டுப்போய் விட்டது; அதனால் யாரும் தொழில் தொடங்க வரமாட்டேன் என்கிறார்கள் என்று சொல்வீர்களா? மற்ற மாநிலங்களைவிட இங்கே விலைவாசி ஏறிப்போனதாக உங்களால் புள்ளிவிவரத்தைச் சொல்ல முடியுமா? அல்லது,

வேலையில்லாத் திண்டாட்டம் என்பீர்களா? இன்றைக்கு சட்டம் ஒழுங்கைப் பற்றிப் பேசுவதற்கு நீங்கள் எதைச் சொல்வீர்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

வேண்டுமானால் ஒன்று சொல்லலாம்; 1967-லிருந்து நாங்கள் ஆட்சியிலே இல்லை; அகோரப் பசியோடு இருக்கிறோம் என்று சொல்லி வேண்டுமானால் (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்ல முடியுமே தவிர, வேறு எதையும் உங்களால் சொல்ல முடியாது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரைக்கும் நான் சொன்னதைத் தவிர, நான் காவல்துறையில் இருந்தவனாக இருப்பதால், அவர்களுடைய வெல்ஃபேரைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் மட்டும் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் அதை முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். வேகமாகப் பேசுங்கள்; இன்னும் 2 நிமிடங்கள்தான் பேசவேண்டும்.

<u>திரு. க. அர்ச்சுனன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கீழ்மட்டத்திலே இருக்கிற, அடிமட்டத்திலேஇருக்கிற கிரேட்-2 போலீஸார்கள் எல்லாம், புரமோஷனிலேகான்ஸ்டபிள்ஸாக ரெக்ரூட் ஆனவர்கள் எல்லாம் கான்ஸ்டபிள்ஸாகவே ரிடையர்ஆகிக் கொண்டிருந்தார்கள். இப்போது, புரட்சித்தலை-வியினுடைய ஆட்சியிலே, கிரேட்-2 போலீஸ் எல்லாம் கிரேட் 1 போலீஸாக இருப்பதை, கீழ்மட்டத்திலே இருக்கிற போலீஸ் எல்லாம் மிகவும் பாராட்டுகிறார்கள்; சந்தோஷம் அடைகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர் அவர்கள் சொன்னார். காவலர்களுக்குக் கொடுக்கக்கூடிய வாகனங்கள் போக்குவரத்து அமைச்சர் மற்றவர்கள் போய்த் திரும்பி வரும்போது, அவை எந்த நிலையில் இருந்தன என்பதைத் தெரிவித்தார்கள். இப்போது, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே, புதிய 'ட்ராக்ஸ்' வண்டிகள் இன்ஸ்பெக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது, அவை நவீனமயமாக்கப்பட்டதினுடைய அறிகுறி. இது மிகவும் சிறப்பான முறையிலே குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு உதவியாக இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்போது தேர்வு செய்த காவலர்கள், தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ், டிஸ்டரிக்ட் ஆர்ம்டு போலீஸ், லோகல் போலீஸ் இப்படி என்றிருப்பதை, தேர்வு செய்துள்ள அனைவரையும் தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸுக்கு அனுப்பி, அதன்பிறகு ஸ்பெஷல் டிஸ்ட்ரிக்ட் ஆர்ம்டு போலீஸுக்கு அனுப்பி, அதன்மூலமாக மாவட்ட லா அண்டு ஆர்டருக்கு அனுப்பினால், எல்லோருக்கும் வாய்ப்புக்

1993 ஏப்ரல் 20] [திரு. க. அர்ச்சுனன்]

கிடைக்கும். தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸிலே போனவர்களை, மிலிடெரியிலே போனவர்களைப் போல நாம், வாய்ப்பு எங்கே தேவைப்படுகிறதோ அங்கேயெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் குடும்பத்தோடு இருந்து வாழ்க்கை நடத்த முடியவில்லை. அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் தயவுசெய்து கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த லா அண்டு ஆர்டர் கிரைம் என்று சொல்லி, பல இடங்களிலே ஒன்றுபடுத்திக் கொண்டு வருகிறார்கள்.

பிற்பகல் 1–40

இந்தப் பாகுபாடு கூடாது. ஏன் என்று சொன்னால் கிரைமில் இருப்பவர்கள் காவல் துறையில் இரண்டாம் தரக் குடிமக்களாகப் பார்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு என்று தனியாக 'போன்' கிடையாது. அவர்களுக்கு என்று தனியாக கான்ஸ்டபிள்கள் கிடையாது. 'லா அண்டு ஆர்டர்' ஸ்டாபிலிருந்து தான் எடுத்துக்கொள்ளப்படும். எனவே, அவர்களுக்கு 'லாக்கப்' வேண்டுமென்றால்கூட, குற்றவாளிகளைக் கொண்டு போய் அடைத்துவைக்க வேண்டுமென்று சொன்னால்கூட, லா அண்டு ஆர்டர்-அவர்களினுடைய தயவில்தான் அங்கே அடைத்து வைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே ஒரு நிர்வாகத்திலே, ஒரு ஸ்டேஷனுக்கு வேண்டுமானால் 3, 4, சப்-இன்ஸ்பெக்டர்களைப் போட்டுக் கொள்ளலாம். எஸ்.ஐ. 1, எஸ்.ஐ. 2, எஸ்.ஐ. 3 என்று. முதலிலே வரக்கூடிய குற்றத்தை ஒருவர் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கட்டும். இரண்டாவதாக வரக்கூடிய குற்றத்தை அடுத்தவர் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கட்டும். மூன்றாவதாக வருவதை இன்னொருவர் பதிவு செய்து, இன்வெஸ்டிகேட் செய்யட்டும். இப்படிப்பட்ட முறையை வகுத்து, அதை ஒரு ஆய்வாளரின் கீழ் கொண்டு வந்து, 'லா-அண்டு ஆர்டர்' என்ற பாகுபாடு இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

Native District Problem என்பது இப்போது புதிதாக முன்பு ஒருமுறை இருந்தது. மீண்டும், அது வலியுறுத்தப்படுகிறது. நான் தயவு செய்து கேட்டுக்கொள்ள விரும்புவது சொந்த ஜில்லாவிலே சப்-இன்ஸ்பெக்டரோ, இன்ஸ்பெக்டரோ பணியாற்றினால் நன்றாக இருக்கும். ஏன் என்று சொன்னால் அங்கே இருக்கின்ற Public relationship மூலம் Law and Order problem ஐ 'சால்வ்' பண்ணக்கூடிய திறமை சொந்த ஜில்லாவிலே பணியாற்றுகிறபோது இன்னும் அதிகமாகக் கூடும். ஒருக்கால் சொந்த ஜில்லாவிலே இருக்கிறபோது தவறு செய்வார்களேயானால் அவர் மீது disciplinary action எடுப்பதற்கு வழிவகையிருக்கிறது. அவரை வேண்டுமானால்

கூட வேறு மாவட்டத்திற்கு மாற்றலாம். ஆனால் வயதான நேரத்தில் அவருடைய வயதுக்கு வந்த பெண்ணுக்குத் திருமணம் செய்து கொடுக்க முடியாத அளவுக்குக் கூட, திருநெல்வேலிக் காரரை தருமபுரிக்கும், தருமபுரிக்காரரை வேலூருக்கும் மாற்று கிறபோது சப்-இன்ஸ்பெக்டர் செய்கிற தவறுக்கு, இன்ஸ்பெக்டர் செய்கிற தவறுக்கு, வயது வந்த பெண் தண்டனை அனுபவிக்க வேண்டுமா என்பதைத் தயவு செய்து பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாடு சிறப்புப் போலீஸுக்கு ஜீப் தான் வழங்கப்படுகிறது. ஜீப்பினுடைய விலையும், காரினு டைய விலையும் ஏறத்தாழ ஒன்றுதான், மற்ற எஸ்.பி.க் களுக்கு கார் வழங்கப்படுகிறது. அவர் அதில் வருகிற போது இவர் ஜீப்பில் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் அதை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது Promotion scope. 25 சதவிகித ஐ.பி.எஸ் ஆபீசர்கள் deputation-Government of India undertaking-இலே C.R.P.F., C.I.S.F., C.B.I., I.B., Indian Airlines, Civil Aviation, Port Trust, Coal India, BHEL இப்படிப்பட்ட நிறுவனங் களுக்கு டெபுடேசனில் போனால், இங்கே இருக்கின்ற ஐ.பி.எஸ்., ஆபீஸர்கள் கிரேடு-1 சர்வீஸில் வருகின்றவர்களுக்கு புரமோசன் கிடைக்கும். ஆனால், யாரும் இங்கே வந்தவர்கள் வெளிமாநிலத்திற்குச் செல்வதற்கு விரும்பு வது இல்லை. தமிழகத்தில் அமைதி நிலவுகிற கார ணத்தினால்தான் அப்படிப்பட்ட நிலை. மற்ற மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு கெட்டிருக்கிறது. இங்கே இருந்தால் நிம்மதியாக இருக் கலாம் என்று உணர்ந்து அவர்கள் செல்வதில்லை. எனவே, அவர்களை டெபுடேசனிலே அனுப்பி, கொஞ்சம் பதவி உயர்வு கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம். மிகச் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

*திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே என்னைப் பேசு வதற்கும், எனக்குத் தாய் இல்லாத நிலையில், எனக்குத் தாயாக இருந்து, என்னை நாடாளுமன்றத்திலும், இன்றைக்குச் சட்ட மன்றத்திலும் அமர வைத்து அழகுபார்த்துக் கொண்டிருக்கிற என்னுடைய இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல் வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்

1993 ஏப்ரல் 20] [திரு. காஞ்சி பன்னீர்செல்வம்]

களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்து, அவர்களுடைய துறையான இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த மைக்கு நான் இந்த நேரத்திலே நன்றியைச் சொல்லி என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

வளர்ந்துவரும் பிரச்சினைகளைச் சமாளிக்கப் போதிய அளவு காவலர்கள் இல்லை. பல ஆண்டுக் காலமாக இருந்த அந்த நிலையை இன்றைக்கு மாற்றுகின்ற தன்மையிலே இரண்டாம் நிலைக் காவலர்கள் இந்த நேரத்திலே 10,000 காவலர்கள் புதி தாக நியமிக்கப்படுவதை இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை யெளிய மக்கள் பாராட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். குறிப் பாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே இருக்கின்ற அந்த மக்கள் காவல் துறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற நிலையினால் நாட்டு மக்கள் புரட்சித் தலைவி அவர்களை நெஞ்சாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நமது மாநில மக்களிடையே ஒற்றுமை, பண்பாடு பாரம்பரியம் முதலியவற் றைக் கட்டிக்காக்கும் வகையில், திருக்கோயில்களின் சொத்துக் களை முழுமையாகப் பாதுகாக்க வேண்டுமென்ற உன்னத நோக் கில், கோயில் பாதுகாப்புப் படையினை இதய தெய்வம், மாண்பு மிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற் படுத்தியதன் மூலமாக, கோயில் திருட்டுக்கள் பெருமளவு இன் றைக்குக் குறைந்துள்ளது. குறிப்பாக, 1991இல் 404 ஆக இருந்த குற்றங்கள், இன்றைக்கு 204 ஆகக் குறைந்துள்ளது என்றால் அதற்கு, இதய தெய்வம் அவர்களை இந்த நேரத்திலே நாட்டு மக்கள் நெஞ்சாரப் பாராட்டி, நன்றி சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். நாங்களும் இந்த நேரத்திலே பாராட்டுகின் றோம்.

பல மாதங்களாக இங்கே கூட பல பத்திரிகைகளிலே அறிக்கை விடுகிறார்கள். பல அரசியல் கட்சித் தலைவர்கள், வீரப்பனைப் பிடிப்பதற்கு இன்னும் காலதாமதமா? வீரப்பனைப் பிடிப்பதற்கு இவ்வளவு நேரமா என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லிக்கொள்வேன். வீரப்பன் நடமாட்டத்தைத் தடுக்கின்ற ஒரு சக்தி படைத்த தலைவராக இதயதெய்வம் அவர்கள் இன்றைக்கு இருந்து கொண்டிருக் கிறார்கள். வீரப்பனை எந்த வகையிலே, எந்த அடிப்படை யிலே ஒடுக்க வேண்டும், அடக்கவேண்டும் என்ற அளவிலே தான், அதற்கு ஒரு காவல் துறைப் பிரிவை இன்றைக்கு உருவாக்கிக் கொடுப்பதற்கு உண்டான வழிவகையைச் செய்து கொண்டிருக் கிறார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் தெரிவித்துக் கொள் வேன். கூடிய விரைவிலே அந்த வீரப்பனை யார் என்ற அள விலே அடையாளம் காட்டுகின்ற வகையிலே இன்றைக்குக் காவல் துறையினுடைய தலைவராக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர் கள் அதை நிறைவேற்றித் தருவார்கள் என்பதை நான் அவர் களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. காஞ்சி பன்னீர்செல்வம்] [1993 ஏப்ரல் 20

பிற்பகல் 1-45

வெளியே சிலர் அறிக்கை விடுவதையே—வேடிக்கையாக அறிக்கை விடுவதையே வாடிக்கையாக இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை விடுபவர்களை நான் எண்ணிப்பார்க்கும்போது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி ஒரு கருத்தினைச் சொன்னார்கள். அந்தக் கருத்துத்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது. கழுத்துக்குமேல் தலை இருப்பவர்கள் எல்லாம், தலைவர்கள் ஆக முடியாது என்ற கருத்தைச் சொன்னார்களே, அந்தக் கருத்துத் தான் இன்றைக்கு நினைவுக்கு வருகிறது. ஏன் என்று சொன்னால் அப்படிப்பட்டவர்கள் எல்லாம் கடந்த 6 மாதத்திற்கு முன்னாலே அல்லது 7 மாத காலத்திற்கு முன்னாலே சொன்னார்கள். தமிழ்நாட்டிலே விடுதலைப் புலிகள் இல்லை. இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கு மிகச் சிறப்பாக இருக்கிறது என்று சொன்னவர்கள் இன்றைக்குச் சொல்கிறார்கள்,-விடுதலைப் புலிகள் இன்றைக்கு வெளியே நடமாடிக்கொண்டிருக்கிறார்கள்.என்று எங்கே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்? எண்ணிப்பார்க்க வேண்டும். அயோத்திப் பிரச்சினை நடந்ததற்குப் பின்னாலே பல மாநிலங்களிலும் பல்வேறு நிலைகளிலே சட்டம் ஒழுங்கு சீரழிக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக பம்பாய் நகரத்திலே தீ கொழுந்துவிட்டு எரிந்தது. ஆனால், இந்தத் தமிழகத்திலே தான் அமைதிப் பூங்காவாக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியின், இந்த நல்ல ஆட்சியில் இருந்தது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக காங்கிரஸ் ஆண்டு கொண்டிருக்கிற, பக்கத்திலே இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே கூட அவர்களால் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியவில்லை. புரட்சித் தலைவி அவர்களிடத்திலே சொன்னார்கள். நமது காவல் துறையை தங்களுக்கு, உதவியாக அனுப்பி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அவர்கள் அனுப்பி வைத்தார்கள். அங்கே அமைதி ஏற்படுத்தப்பட்டது. அப்படி அமைதிப் பூங்காவாக, இந்தத் தமிழகத்திலே ஆட்சியை புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நெஞ்சாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் நாட்டு மக்கள். மேலும், பெண்கள் ஒரு காலகட்டத்திலே காவல் நிலையத்திற்கு அவர்கள் செல்ல வேண்டுமென்று சொன்னாலும் கூட, அல்லது அந்தக் காவல் நிலையத்தில் புகார்கள் சொல்ல வேண்டுமென்ற நிலையிலே இருந்தாலும்கூட, போவதற்கு அச்சப்பட்ட காலங்கள் ஒரு கால கட்டத்திலே இருந்தது. அதை இன்றைக்கு போக்குகின்ற அளவிலே இப்பொழுது பெண்கள் புகார் சொல்வதற்கு என்று ஒரு காவல் நிலையத்தை, இந்தத் தலைநகரத்திலே உருவாக்கி மாவட்டங்களிலே பல்வேறு நகரங்களிலே அப்பேற்பட்ட காவல் நிலையங்களை உருவாக்கியதற்குப் பின்னாலே பெண்கள் இப்பொழுது தமிழகத்திலே மிகச் சிறப்பாக தங்களுடைய கருத்

1993 ஏப்ரல் 20] [திரு. காஞ்சி பன்னீர்செல்வம்]

தினை, தங்களுடைய குடும்பத்திலுள்ள கொடுமைகளை, தன் கணவனால் ஏற்படுகின்ற அந்தக் கொடுமைகளை எடுத்துச் சொல்லுகின்ற அளவுக்கு, புகார்கள் கொடுப்பதற்கு ஒரு தனிப் பிரிவை, பெண்கள் காவல் நிலையத்தை உருவாக்கி இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களை இந்த நேரத்திலே நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் போன்றவர்கள் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே போல இன்றைக்கு மதுவிலக்குப் பிரச்சினையிலே இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். சாராயம் ஏதோ ஆறாக ஓடுகின்றது என்று நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லிக் கொள்வேன். கடந்த ஒரு மாதத்திற்கு முன்னாலே அல்லது ஒரு வாரத்திற்கு முன்னாலே பத்திரிகை பார்த்தவர்களுக்கு தெரியும், எங்கே யார் யார், எந்த வகையிலே கள்ளச் சாராயத்தில் ஈடுபட்டிருந்தாலும், அவர்களைப் அழிப்பதற்கு, அவர்களை ஒழிப்பதற்கு, ஒடுக்குவதற்கு உண்டான வழி வகைகளைச் செய்து, பல்வேறு பகுதிகளிலே அந்தத் தீய காரியத்தில் யார் ஈடுபட்டிருந்தாலும் அவர்களைத் தடுக்கின்ற தன்மையிலே புரட்சித் தலைவி தலைமையிலே இயங்குகின்ற காவல் துறை நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த வகையிலே தான் மதுவின் தீமையை மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையிலே, கிராமங்கள்தோறும் சமுதாயத் தொண்டு ஆற்றுவதற்கு ஆர்வம் உள்ள, குறிப்பாக பெண்களைக் கொண்டு பெருவாரியாக குழுக்களை அமைத்து கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரம் செய்ய வேண்டும், அவர்களுக்கு அரசு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று என்னுடைய இதயதெய்வம் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் பொது மக்களுக்கும் நட்புறவு ஏற்படுத்துகின்ற வகையில் ஒரு மாதத்திற்கு ஒரு முறை கிராமங்கள்தோறும் பொது மக்களும், காவல் துறையினரும் சேர்ந்து கூட்டத்தைக் கூட்டி எந்த வகைத் தவறுகள் நடக்கக் கூடாது என்கின்ற அறிவுரைகளையும், கருத்துப் பரிமாற்றத்தையும், பொது மக்களும், காவல் துறையினரும் சேர்ந்து உருவாக்கினால்தான் குற்றங்கள் குறையும். மேலும் இதனால் காவல் துறையினருக்கும் பொது மக்களுக்கும் ஒரு நல்ல உறவு ஏற்படும் என்பதை நான் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).

பிற்பகல் 1–50

இந்த நாட்டிலே ஜனநாயகம் செத்துவிட்டது, ஜனநாயகம் இல்லை, கூட்டத்திற்கு அனுமதிக்கக்கூடாது, இந்த நாட்டிலே ஜனநாயகம் செத்துவிடும் என்றெல்லாம்.............. அதாவது ஒரு மாத காலத்திற்கு முன்னாலே கடற்கரையில் நடைபெற்ற பி.ஜே.பி. கூட்டத்திற்கு புரட்சித் தலைவி அனுமதித்த நேரத்தில் இங்கே இருந்தவர்கள் எல்லாம் சொன்னார்கள்.

[திரு. காஞ்சி பன்னீர் செல்வம்] [1993 ஏப்ரல் 20

அப்போது எதிர்க்கட்சியும் சேர்ந்து சொன்னது இந்த நாட்டிலே அந்தக் கூட்டத்திற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி மிகத் தெளிவாக இந்த மாமன்றத்தில் சொன்னார்கள். அந்தக் கூட்டம் நடைபெறும். அதில் எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காமல் காவல்துறை பார்த்துக்கொள்ளும், அதற்கு நான் பொறுப்பேற்கிறேன் என்று புரட்சித் தலைவி சொன்னார்கள். அமைதிப் பூங்காவான தமிழகத்தில் அந்தக் கூட்டம் நடைபெற்று, அந்த அரசியல் கட்சி அன்று வெளியேறியது, நான் அதைச் சொல்வதற்குக் காரணம் மற்ற மாநிலங்களில் அப்படி நடக்கிறதா என்று சொன்னால் இல்லை. ஆகவேதான் ஒரு அமைதிப் பூங்காவாக இந்த நாட்டிலே ஒரு ஆட்சியை புரட்சித்தலைவி அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இதயதெய்வம் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே வாலாஜாபாத் நகரம் இருக்கிறது. அந்த நகரத்திலே ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையம் தொன்றுதொட்ட காலத்திலே கட்டப்பட்ட காவல்நிலையம் போல் காட்சியளித்துக்கொண்டு இருக்கிறது. எனவே உங்களுடைய காலத்திலே ஒரு புதிய கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியிலே சாலவாக்கம் பகுதியிலோ, அல்லது வாலாஜாபாத் பகுதியிலோ இந்தக் காலகட்டத்தில் ஒரு தீ விபத்து ஏற்படுகிறது என்று சொன்னால் அதற்காக தீயணைப்பு வசதி வேண்டுமென்றால் காஞ்சிபுரத்திலிருந்து வரவேண்டும் அல்லது உத்தரமேரூரிலே இருந்து தான் வரவேண்டும். அவ்வாறு வருவதற்கு கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே சாலவாக்கம், வாலாஜாபாத் இந்த இரண்டு பகுதிகளுக்கும் இதயதெய்வம் அவர்கள் ஒரு தீயணைப்பு நிலையம் உருவாக்கித் தரவேண்டும் என்று பாதம் தொட்டு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. என்னுடைய தொகுதியில் பரந்தூர் என்ற பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஏதாவது குற்றங்கள் நடந்தால் அங்கேயிருந்து நேராக காஞ்சிபுரத்திற்கு வரவேண்டியிருக்கிறது. இரவிலே ஏதாவது தவறு நடந்து, வரவேண்டும் என்று சொன்னால் 15 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டி இருக்கிறது. அந்தப் பகுதியில் குறிப்பாக கம்மவார் பாளையம் என்ற ஊர் இருக்கிறது. அந்தப் பகுதியிலே எங்களின் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு புறக்காவல் நிலையம் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 20] [திரு. காஞ்சி பன்னீர் செல்வம்]

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். காஞ்சிபுரத்திலே, கடந்த தொழில் துறை மானியத்தின்போது புரட்சித்தலைவி அவர்கள் சர்க்கரை ஆலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதால் அந்தப் பகுதிக்கு அடுத்த ஆண்டிலே ஏதாவது ஒரு தொழிற்சாலை உருவாக்கித் தரவேண்டும் என்று பாதம் தொட்டு பணிவோடு கேட்டு இந்த நல்ல மானியத்தில் இதய தெய்வம் இருக்கின்ற இந்த அவையிலே பேசுகிற வாய்ப்பை உருவாக்கித் தந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறையின் பணிகள் – பாதுகாப்பு அளித்தல் தடுப்புப் பணிகள், துப்புத் துலக்கும் பணிகள் இப்படி பல்வேறு வகைப்படுகின்றன. பொதுமக்களுக்கு காவல்துறை பாதுகாப்புத் தருவதற்கு முன்பு காவல் துறையிலே இருக்கிற காவலர்களுக்கு முதலிலே பாதுகாப்புத் தர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மதுரை புறநகர் காவல் துறையில் மேலூரைச் சேர்ந்த ஒரு இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த போலீஸ்காரர் பந்தோபஸ்துக்குப் போனவர் சுமார் ஓராண்டு ஆகிறது. அவரைக் காணவில்லை. எஃப்.ஐ.ஆர்.-இல் அவர் மிஸ்ஸிங் என்று போடப்பட்டு, அந்தக் காவலரை இன்னமும் காவல்துறை தேடிக்கொண்டிருக்கிறது. அந்த போலீஸ்காரருக்கு என்ன ஆயிற்று என்று விரைவில் கண்டுபிடித்து அந்தக் காவல்துறையிலே இருக்கின்ற காவலர்களுக்கு முதலிலே பாதுகாப்பு பூரணமாக அளிக்க காவல்துறை முயற்சிக்க வேண்டுமென்று முதலிலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் காவல்துறையில் இருக்கிற உயர் அதிகாரிகள் நடு நிலையோடு பணியாற்ற வேண்டுமென்றால், பொறுப்பில் இருக்கிற உயர் அதிகாரிகள் ஆட்சி மாற்றங்கள் ஏற்படுகிறபோது அரசியல் காரணங்களுக்காக தண்டிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் திரு. அர்ச்சுனன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, உயர் அதிகாரியாகிய துரை ஏன் மறைந்தார் என்பது மர்மாக இருக்கிறது என்று சொன்னார்.

பிற்பகல் 1.55

அதே போல அப்போது ஐ.பி.-யிலே டி.ஐ.ஜி.யாக இருந்த ஜாபர் அலி தற்காலிகப்பணி நீக்கம் செய்யப்பட்டார். பொதுவாக ஒரு அரசாங்கம் எதை நடைமுறைப்படுத்த வேண்டும்,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1993 ஏப்ரல் 20

என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றதோ அதற்கு ஏற்பத் தான் அதிகாரிகள் மேலேயிருந்து பெரும்பாலும் செயல்படுகிறார்கள். அப்படி ஆட்சி மாறுகிறபோது, ஆட்சி மாற்றத்திற்கு ஏற்ப இருக்கிற உள்துறை செயலாளரோ அல்லது போலீஸ் டி.ஜி.பி. யோ, ஐ.ஜி.யோ, டி.ஐ.ஜி.யோ, அங்கு இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் அதற்கு ஏற்ப அவர்கள் தண்டிக்கப்படுவார்களேயானால் அங்கே இருக்கின்ற Moral கெட்டுப் போகும். துணிச்சலாகப் பணியாற்றுகின்ற தன்மைகள் கெட்டுப் போகும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. ஜாபர் அலி எல்லாம் அனேகமாக ஓய்வு பெறுகிற வயதை எட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். எனவே அப்படி இருக்கின்ற அதிகாரிகள் மீண்டும் பாதிக்கப்படாமல் பணி தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது மதுரை போன்ற மாநகர அளவிலே பணியாற்றுகின்ற காவல்துறை காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை அவர்களுக்கு இருந்த டி ஏ. பயணப்படி ரத்து செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இதனால் காவல்துறையில் காவலர்கள் வரை சுமார் 500 ரூபாய்க்கு அவர்களுடைய சம்பளத்திலே வெட்டு ஏற்பட்டு காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் பலபேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குறையை நிவர்த்தி செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இருந்தபோது, காவல்துறை ஆய்வாளர்கள் வரை அவர்களுக்கு வழங்கப்படுகிற ரேஷன் பொருள்கள் பாதி அலையிலே அனைத்தும் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அவர்கள் நேர்மையாக, நாணயமாகப் பணியாற்ற வேண்டும், ஏறிவருகிற விலைவாசியிலே இருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, அது இப்போதுகூட அறிவிக்கப்பட்டும் கூட, கடந்த 4 மாதங்களாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. அமலுக்கு வரவில்லை என்கின்ற ஆதங்கம், குறைபாடு காவல் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு இருக்கிறது. அவற்றை அமலுக்குக் கொண்டுவர, உடனடியாகக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக ஆட்சி மாறுகிறபோது அதே காவல்துறையைச் சார்ந்த அதிகாரிகள்தான் இங்கே இருக்கிறார்கள். காவலர்களாக இருந்தாலும் சரி அல்லது உயர் அதிகாரியாக இருந்தாலும் சரி ஆட்சி மாறுகிறபோது வேறு மாநிலத்தில் இருந்தோ, வேறு பகுதியில் இருந்தோ யாரும் வருவதில்லை. இங்கே இருக்கிற அதிகாரிகள்தான், அதே காவலர்கள்தான் பணியாற்றுகிறார்கள், ஆனால் அவருடைய போக்கிலே மாறுதல், நிலையிலே மாறுதல்

1993 ஏப்ரல் 20] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

எதைப் பொறுத்து ஏற்படுகிறது என்று சொன்னால், ஆட்சியை யார் நடத்துகிறார்களோ அவர்கள் எப்படி காவல்துறையை இயக்குகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் அவர்களுடைய செயல்பாட்டிலே மாறுதல் ஏற்படுகிறது. அதிலேயும் போலீஸ் அமைச்சராக, முதலமைச்சராக இருப்பவர்கள் எந்தக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறார்களோ அதற்கு ஏற்பத்தான் காவல்துறையினுடைய செயல்பாடுகள் இருக்கும்.

இங்கே காவல்துறை பணியாற்றுகிற விதத்தைப் பொறுத்த வரையிலே ஆட்சி வந்ததற்குப் பின்னாலே, சராசரியாக ஒரு மாதத்திற்கு இரண்டு முறைகள் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. இரண்டு துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருக்கின்றன என்கின்ற போது, காவலர்கள் தாக்கப்பட்டால் துப்பாக்கிச் சூடு நடத்தாமல் என்ன செய்யமுடியும் என்று கேட்பது ஒரு பாசிசக் கேள்வியாகும் (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில சம்பவங்களின்போது, சில போராட்டங்களின் போது, சம்பந்தப்பட்டவர்கள், கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபடுகின்றபோது, காவல் துறையினர் அந்த வன்முறையைக் கட்டுப்படுத்தவும், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும் தடியடிப்பிரயோகம், கண்ணீர்ப் புகை வீச்சு, எச்சரிக்கைகள் இவற்றினையெல்லாம் செய்த பின்னர் தான் இறுதி நடவடிக்கையாக துப்பாக்கிச் சூடு நடத்துகிறார்கள்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : இதுவரை இத்தகைய போராட்டங்களின்போது நடைபெற்ற ஏறக்குறைய 40 போலீஸ் துப்பாக்கிச்சூடு நடைபெற்ற சம்பவங்களில் 8 பேர் இறந்திருக்கிறார்கள். நாம் ஒரு relative ரீதியில் பார்க்கின்றபோது எண்ணிக்கை. சாவுகளின் எண்ணிக்கை குறைவு என்றுதான் சொல்லவேண்டும்.

இன்னொரு கேள்வியும் இந்த நேரத்தில் hypothetical questions-ஐ நான் எழுப்ப விரும்புகிறேன். இத்தகைய சம்பவங்களின்போது காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தாமல் இருந்திருந்தால் என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கும்? இன்னும் எத்தனை பேர் இறந்திருப்பார்கள்? இன்னும் எத்தனை பேர் காயமுற்றிருப்பார்கள்? அத்தகைய நேரங்களில் இது போன்ற துப்பாக்கிச் சூடு நடத்தாமல் இருந்திருந்தால் இன்னும் அதிக எண்ணிக்கையில் சாவும் ஏற்பட்டிருந்தால் இதே எதிர்க்

கட்சி உறுப்பினர்கள் காவல் துறையினர் ஏன் ஒரு கண்டிப்பான நடவடிக்கை எடுக்கவில்லை, ஏன் மெத்தனமாக இருந்துவிட்டார்கள் என்ற கேள்வியை இவர்களே கேட்டிருப்பார்கள். (மேசையைத்தட்டும் ஒலி).

எனவே, காவல் துறையினர் மீது குற்றம் சுமத்துவது என்பது மிகவும் எளிதான காரியம். அவர்கள் எப்படி நடந்து சொண்டாலும் தவறு என்று சொல்வது மிகவும் எளிது. கண்டிப்புடன் tough நடவடிக்கை எடுத்தால் மிகவும் அராஜகமான முறையில் நடந்து கொள்கிறார்கள், கொடுமையான முறையில் நடந்துகொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிச் செய்யாவிட்டால் மெத்தனமாக இருக்கிறார்கள், The Police is inactive and soft என்கிறார்கள். எனவே, இதற்கு எல்லாம் நாம் ஒரு அளவுகோல் வைக்க முடியாது. ஆனால் ஒரு அளவுகோல் என்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். குறிப்பிட்ட நேரங்களில், குறிப்பிட்ட நிகழ்ச்சிகளின்போது, கூட்டத்தினர் காவல் துறையினர்மீது கற்களை எறிகின்றார்கள். தடிகளால் அவர்களைத் தாக்குகின்றார்கள். அரிவாள்களால் அவர்களை வெட்ட வருகின்றார்கள். அக்கம் பக்கத்தில் இருக்கின்ற பொதுமக்களும் இந்தத் தாக்குதலில் Cross-Fire-ல் அகப்பட்டுக் கொள்கிறார்கள். அத்தகைய நேரங்களில் மீண்டும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக காவல்துறையினர் பொதுவாக வானை நோக்கித் தான் அவர்கள் சுடுகிறார்கள். ஆனால் அதற்கும் சில சமயம் கூட்டத்தினர் அடங்குவதில்லை. அப்படி இருக்கின்ற நேரத்தில் வேறு வழியில்லாமல் இறுதி நடவடிக்கையாகத் தான் காவல்துறையினர் சுடுகிறார்கள். நாம் எண்ணிப் பார்க்கவேண்டியது இதுதான். அந்த நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்திருந்தால் இன்னும் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கும்? எனவே, காவல்துறையினர்மீது இப்படிக் குற்றம் கூற வேண்டும் என்பதற்காகக் குற்றம் கூறக்கூடாது என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> பொதுவாக துப்பாக்கிச் சூடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் குறிப்பிட்டேன். சமீபத்தில் புகளூர் சர்க்கரை ஆலையிலே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. அந்தத் தனியார் சர்க்கரை ஆலையிலே சுமார் 200 தொழிலாளர்கள் வேலை கேட்டு, பல்வேறு கோரிக்கைகளுக்காகப் போராடினார்கள். காவல்துறையினர் அங்கு இருந்தவர்களே 200 பேர்களுக்கு மேல் இருக்கும்.

அவர்களை கண்ணீர்ப்புகை கொண்டோ, தடியடி கொண்டோ அங்கிருந்து எளிதாக அப்புறப்படுத்தியிருக்கலாம். அதற்குப் பதிலாக துப்பாக்கிச் சூடு. .

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலை சம்பவம் ஏற்கெனவே இந்த அவையில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வரப்பட்டு இதற்கு நான் விரிவான பதிலையும் அளித்திருக்கிறேன். அந்த நேரத்தில் இந்தமாண்புமிகு உறுப்பினர் அவைக்கு வரவில்லை, வர முடியவில்லை. எனவே, அவர் வேண்டுமென்றே தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார். அன்று நான் சொன்ன பதிலிலே தெளிவாகக் குறிப்பிட்டேன். அப்போது ஏற்பட்ட பிரச்சினை குறித்து தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 8-ஆம் தேதி பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இம்மாதம் 8-ஆம் தேதி. ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையின்போது உடன்பாடு நடைபெறவில்லை. அமைதியாக இருங்கள், ஒரு சுமுகமான முடிவை நான் ஏற்படுத்தித் தருகிறேன் என்று உறுதியளித்த பின்னரும், திட்டமிட்டே, சம்பந்தப்பட்டவர்கள் இரண்டு நாட்கள் கழித்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். சட்ட விரோதமாக அந்த ஆலைக்குள் நுழைய வேண்டுமென்று முற்பட்டிருக்கிறார்கள். அப்போது காவலர்கள் தடுத்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டது. ஆனால் கூட்டத்தினர் அதற்கு அடங்கவில்லை. அதன் பின்னர்தான் மீண்டும், மீண்டும் According to the rules விதிமுறைகளின்படி இத்தனை முறை எச்சரிக்கை விடுக்கவேண்டுமென்று இருக்கிறது. அந்த விதிமுறைகள் எல்லாம் கடைபிடிக்கப்பட்டு, இறுதியில் கூட்டத்தினர் காவல் துறையினரை மீண்டும், மீண்டும் தாக்கியதால் தான்— அதுமட்டுமல்லாமல், அன்று ஒரு முக்கியமான விவரத்தை நான் இந்த அவையில் சொல்ல முடியாமல் போய் விட்டது. சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்தக் கூட்டத்தினர் காவலர்களைத் தாக்கியது மட்டுமல்ல, அங்கே டியூட்டியில் இருந்த பெண் காவலர்களை மான பங்கப்படுத்த அவர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். 4 பெண் கான்ஸ்டபிள்கள் இத்தகைய ஒரு கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவும் நடைபெற்ற பிறகு தான், கூட்டத்தினரை எவ்விதத்திலும் அடக்க முடியவில்லை என்ற பிறகுதான், காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினார்கள். மீண்டும் சொல்கிறேன், இந்தச் சம்பவத்தில் இறந்தவர்கள் தவிர, பொது மக்களில் காயமுற்றவர்கள் 7 பேர் மட்டும்தான், ஆனால் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் 34 பேர் காயமுற்றிருக்கிறார்கள். இந்த

கம்பேரிடிவ் ஃபிகர்சைப் பார்க்கிறபோது, காவல் துறையினர் எவ்வளவு கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணரலாம். எனவே மாண்புமிகு உறுப்பினர், ஒன்று, தினமும் சரியாக இந்த அவையின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, ஆரம்பத்திலிருந்து கடைசிவரை இருந்து, என்னென்ன நடக்கிறது என்பதைப் பார்த்துப் பேச வேண்டுமென்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2-05

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 10 நிமிடமாகிறது. அதில் 8 நிமிடங்கள் முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார். 2 நிமிடங்கள் தான் இதுவரையில் நான் பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் தவறான தகவல்களைத் தெரிந்தே இந்த அவைக்குத் தருகின்றபோது, உண்மையைத் தெரிவிப்பது என்னுடைய கடமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 14 நிமிடங்கள் ஆகிறது நீங்கள் பேச ஆரம்பித்து, 4 நிமிடங்கள் முதலமைச்சர் பேசினார் என்று நீங்களே சொன்னாலும்கூட, 10 நிமிடங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். உங்களுடைய நேரம் முடிகிறது. ஒரு நிமிடம், இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்ளலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : 10 நிமிடங்களில் முதலமைச்சர் அவர்கள் 8 நிமிடங்கள், நான் 2 நிமிடங்கள் பேசியதாகத்தான் சொன்னேன். பேசக்கூடாது என்றால் சொல்லுங்கள், பேசாமல் விட்டுவிடுகிறேன். இதே வேலைதான் உங்களுக்கு. எனக்குத் தெரியும், ஏன் பண்ணுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பேரவைத் தலைவரைப் பார்த்து, ''ஒருமையில் இதுதான் வேலையா'' என்று அந்த அளவுக்குப் பேசுகிற ஒரு உறுப்பினரை அதற்கு மேற்கொண்டு இந்த அவையில் பேசவிட வேண்டுமா என்பது தான் நான் வைக்கிற கேள்வி. எனவே அது முறையில்லை நான் குறுக்கிட்டது, அவருக்கு நேரத்தைப் பற்றி நினைவு படுத்துவதற்கே. இருந்தும், பேரவைத் தலைவருக்கு அடங்காமல் என்ன வேண்டுமானாலும் பேசுவது என்றால் அதற்கு

1993 ஏப்ரல் 20] [பேரவைத் தலைவர்]

மேற்கொண்டு அவர் பேச வேண்டியதில்லை என்று தான் கருதுகிறேன். இப்போதே நேரமாகிவிட்டது. அடுத்து திரு. எஸ். எம். கிருஷ்ணன் (குறுக்கீடு) திரு. பி.வி. ராஜேந்திரன், அவரைப் பேச வேண்டாம் என்று சொல்லாதீர்கள், அவர் பேசப் போகிறார் (குறுக்கீடு) திரு. எஸ்.எம். கிருஷ்ணன், பேசலாம். இல்லை என்றால் அடுத்த உறுப்பினரை நான் அழைக்க வேண்டி இருக்கும். (குறுக்கீடு) திரு. எஸ்.எம். கிருஷ்ணன், பேசலாம்.(குறுக்கீடுகள்)அமைச்சர்கள்உட்காரலாம். திருநாவுக்கரசு வரம்பு மீறிப் போகிறார் என்றால், நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். அமைச்சர்கள் உட்காரலாம். அவருக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அவர் பேச்சை, முடித்து, திரு. எஸ்.எம். கிருஷ்ணனை அழைத்ததற்குப் பிறகு திரு. திருநாவுக்கரசு பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடு) அவர் அமரலாம். (குறுக்கீடு). Either you resume your seat or withdraw from the House. (குறுக்கீடு) அவைத் தலைவரைப் பார்த்து, மரபு மீறி நீங்கள் பேசியது அவை உரிமை மீறிய பிரச்சினை. எனவே, either you resume your seat are withdraw from the House

(குறுக்கீடு) திருநாவுக்கரசை வெளியேற்ற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) காவலர்கள் அவரை வெளியேற்றலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்).

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆரோக்கியசாமி உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்).

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : இது நியாயமல்ல.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : இது முற்றிலும் நியாயமல்ல. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு என்ன பேசியிருந்தாலும் அது கண்டிக்கத்தக்கது. (குறுக்கீடு) கண்டிக்கத்தக்கது. எஸ்.எம். கிருஷ்ணன் பேசலாம். அதை நான் கண்டிக்கிறேன். எந்த உறுப்பினர் என்பது யாருக்கும் தெரியாது. (குறிக்கீடு) ஏதோ ஒரு குரல் வந்தது. அந்தக் குரலுக்கு நான் கண்டித்திருக்கிறேன். (கூச்சல்-குழப்பம்).

**இது முறையல்ல. நான் அவரைக் கண்டிக்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகு, எஸ். எம். கிருஷ்ணனைப் பேச அழைத்ததற்குப் பிறகு (குறுக்கிடு) பி. வி. இராஜேந்திரன், உங்கள் இருக்கையை விட்டு இங்கே வருவது நல்லதல்ல. எப்போது எழுந்தாலும் பி.வி. இராஜேந்திரன் உங்கள் இருக்கையை விட்டு வெளியிலே ஓடிவருவது என்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) எந்த உறுப்பினர் அப்படிப் பேசியிருந்தாலும் கண்டிக்கத்தக்கது என்று நான் சொல்லியிருக்கிறேன். (கூச்சல் - குழப்பம்) நான் அதைக் கண்டிக்கிறேன். உங்கள் உறுப்பினர்களைக் கண்டிக்க நீங்கள் விடுவதேயில்லை. யார் குரல் எழுப்பினார்கள் என்பது யாருக்கும் தெரியாது. பேசியது கண்டிக்கத்தக்கது. கண்டிக்கிறேன். எஸ்.எம். கிருஷ்ணன் பேசலாம். (குறுக்கீடுகள்) எஸ்.எம். கிருஷ்ணன் பேசலாம். (குறுக்கிடுகள்) நீங்கள் உட்காருங்கள். எஸ்.எம். கிருஷ்ணன் பேசலாம். (குறுக்கீடுகள்) காலையிலிருந்து இது முறையல்ல. எஸ்.எம். கிருஷ்ணனைப் பேச அழைத்திருக்கிறேன். (கூச்சல்-குழப்பம்) உங்கள் கட்சி உறுப்பினர் எஸ்.எம். கிருஷ்ணனைப் பேச அழைத்திருக்கிறேன். எஸ்.எம். கிருஷ்ணன் பேசாத காரணத்தால் பேரவையின் இன்றைய அலுவல்களை அவர் பேசி முடித்தவுடன் (குறுக்கீடுகள்) அப்படியானால் பேசுங்கள். அவர் பேசுகிறேன் என்கிறார். பேசுங்கள்.

திரு. எஸ்.எம். கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேச ஆரம்பிக்கிறபோது (குறுக்கீடுகள்) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உறுப்பினர் பேசும்போதே குறுக்கிட்டுப் பேசுவது முறையற்ற செயல். உங்கள் உறுப்பினரையே பேசவிடாமல் தடுப்பது சரியல்ல. நான் நிற்கிறேன். உட்காரவேண்டும். நான் அவரைப் பேச அழைத்துள்ளேன். அவர் பேச ஆரம்பிக்கிறார். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் முதற்கொண்டு தங்கள் கட்சி உறுப்பினர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 20]]மாண்புமிகு பேரவைத் தலைவர்]

பேச ஆரம்பிக்கிறபோது எல்லா உறுப்பினர்களும் நின்று கொண்டிருப்பது, தங்கள் கட்சி உறுப்பினரையே பேசவிடாமல் தடுக்கிற முயற்சி. இன்று காலையிலிருந்தே காவல்துறை மானியத்தில் ஏதாவது குழப்பம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு (கூச்சல்-குழப்பம்) வந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த முயற்சியில் (குறுக்கீடுகள்) காலையிலிருந்து முயற்சி செய்கிறார்கள். அந்த முயற்சி நிறைவேறாத காரணத்தால் கடைசி நேரத்தில் முறையற்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்திய உறுப்பினரை நான் கண்டித்ததற்குப் பிறகும், அதன் பின்னரும், இப்படி எழுந்து நின்று (குறுக்கீடுகள்) இடையூறு செய்வது முறையல்ல. எதிர்க் கட்சித் தலைவரே தன் கட்சி உறுப்பினர் ஒருவர் பேசுவதைப் பேச வேண்டாம் என்று தடுப்பது முறையல்ல. அந்த அளவுக்கு அந்த முயற்சியில் எதிர்க் கட்சித் தலைவர் ஈடுபட்டிருப்பதிலிருந்தே காலையிலிருந்து இன்றைக்குக் காவல் துறை மானியக் கோரிக்கையில் ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களுடைய எண்ணம் என்பது தெளிவாகிறது. அந்த முயற்சி நடக்காத காரணத்தால் கடைசி நேரத்தில இந்த முயற்சியில் எதிர்க் கட்சித் தலைவரும் அவரைச் சேர்ந்தவர்களும் ஈடுபடுகிறார்கள். அது கண்டிக்கத் தக்கது என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. எஸ்.எம். கிருஷ்ணன் பேசலாம்.

திரு. எஸ்.எம். கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ** அது கண்டிக்கத்தக்கதென்றால் அதை வாபஸ் வாங்கச் செய்வதில் என்ன தவறு? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும் என்ற இந்த சாதாரண விதி கூட தெரியாமல் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பது அல்ல. (கூச்சல்- குழப்பம்) ஆனால் வேண்டுமென்றே காவல் துறை மானியத்தின்போது ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்று, இன்னொரு உறுப்பினர் பேசுகிறபோது, தங்கள் கட்சியைச் சார்ந்த இன்னொரு உறுப்பினர் பேசுகிறபோது மற்றவர்கள் உட்கார வேண்டும் என்ற சாதாரண விதியைக் கூட தெரியாதவர்கள் அல்ல, இருந்தாலும் எதிர்க் கட்சித் தலைவரும், மற்றவர்களும் நின்று கொண்டே இந்த அளவுக்கு தங்கள் கட்சியின் உறுப்பினர் பேசுகிறபோதே குழப்பம் விளைவிப்பது, காவல் துறை மானியக் கோரிக்கையில் ஏதேனும் குழப்பம் விளைவிக்க வேண்டும், இந்தப் பேரவையிலே குழப்பம் நடக்கிறது என்பது வெளியிலே செல்ல வேண்டும், இது டெல்லி வரையிலேயும

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பத்திரிக்கைக்குச் செல்ல வேண்டும் என்கிற உங்கள் முயற்சி என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை. இது முறையல்ல. தயவுசெய்து உட்கார வேண்டும். திரு. கிருஷ்ணன் அவர்கள் பேச வேண்டும். அவர் பேசுவதை மற்ற உறுப்பினர்கள் அனுமதிக்கவில்லை என்று சொன்னால், நான் பேரவையை இத்தோடு ஒத்தி வைத்துவிட்டு, நாளைய தினம் எஞ்சிய உறுப்பினர்களுக்குத்தான் பேச வாய்ப்புக் கிடைக்கும். அவரைப் பேச அனுமதிப்பது என்றால், பேரவை விதிமுறைகளின்படி அனைவரும் உட்கார்ந்தால்தான் அவர் பேச முடியும். எனவே, அனைவரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்).

பிற்பகல் 2-15.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : ** என்று சொல்வது இந்த அவைக்குப் பொருத்தமானதா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பொருத்தம் இல்லாதது; கண்டிக்கத்தக்கது என்று நானே சொல்லி இருக்கிறேன்; தெரிவித்தவரைக் கண்டித்து இருக்கிறேன். அவ்வாறு கூறிய உறுப்பினரைக் கண்டித்து இருக்கிறேன். நீங்கள் மேற்கொண்டு மானியத்திலே பேசலாம். (குறுக்கீடுகள்) மானியத்தில் உறுப்பினர் பேசலாம். (குறுக்கீடுகள்) மானியத்தில் நீங்கள் பேசவில்லை என்று சொன்னால் (குறுக்கீடுகள்).

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாகப் பேசிய உறுப்பினர் அதை வாபஸ் பெறுவதில் என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைக் கண்டித்து இருக்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகும், நீங்கள் இப்படிப் பேசுவது சரியல்ல. தங்கள் கட்சி உறுப்பினரைப் பேசவிடாமல் எதிர்க் கட்சித் தலைவரும், மற்றவர்களும் இந்த அளவுக்குக் குறுக்கிட்டு விதிமுறைகளுக்குப் புறம்பாக, இதுவரையிலே இருக்கிற மரபுகளுக்கு மாறாக நின்று கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது, கண்டிக்கத்தக்கது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் பேரவை நாளை (21—4—1992) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-16 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

177. 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தமொன்று செய்தமை குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 27-10-1992-ஆம் நாளிட்ட 494-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை (1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங் கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

178. 1989-90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

177. கோரிக்கை எண் 30—ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94 (ஆங்கிலம்).

178. கோரிக்கை எண் 30—ஆதி திராவிடர்— பழங்குடி யினர் நலத் துறைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94 (தமிழ்).

179. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறையின் சாதனைத் திட்டம், 1993-94 (ஆங்கிலம்).

180. கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94 (தமிழ், ஆங்கிலம்).

181. தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள், வருங்கால திட்டங்கள் பற்றிய குறிப்பு, 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

182. கோரிக்கை எண் 16— தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கைக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

183. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதி னாறாவது அறிக்கை, 1992-93.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

177. 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தமொன்று செய்தமை குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 27-10-1992-ஆம் நாளிட்ட 494-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை (1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங் கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

178. 1989-90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

177. கோரிக்கை எண் 30—ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94 (ஆங்கிலம்).

178. கோரிக்கை எண் 30—ஆதி திராவிடர்— பழங்குடியினர் நலத் துறைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94 (தமிழ்).

179. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறையின் சாதனைத் திட்டம், 1993-94 (ஆங்கிலம்).

180. கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94 (தமிழ், ஆங்கிலம்).

181. தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள், வருங்கால திட்டங்கள் பற்றிய குறிப்பு, 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

182. கோரிக்கை எண் 16— தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கைக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

183. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினாறாவது அறிக்கை, 1992-93.

184. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினேழாவது அறிக்கை, 1992–93.

185. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. 1992–93.

186. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை, 1992–93.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

இணைப்பு-1

(45-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பினைக் காண்க)

கோரிக்கை எண் 2.

மாநில ஆயத்தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

1993-94

I. மதுவிலக்குக் கொள்கையின் வளர்ச்சி:

தமிழ்நாட்டின் பழம்பெருமையும், பல துறைகளில் அதன் சிறப்பும் தனித் தன்மை வாய்ந்தனவாகும். தமிழ் நாடு சமூகப் பொருளாதாரக் கொள்கையின், மதுவிலக்கு–மதுவிலக்கு தொடர்பான பணிகளில் அடைந்த சாதனை அத்தகைய பழம்பெரும் சாதனைகளில் ஒன்றாகும். குறிப்பாகச் சொல்வதென்றால், மது விலக்குக் கொள்கைளை, இந்தியாவில் செயல்படுத்திய முதல் மாநிலம் என்கிற தனிப்பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது. மதுவிலக்குக் கொள்கை நிலையானதாக இருந்ததில்லை என்பது உண்மைதான். பல ஆண்டுகளாக அதில் பல மாற்றங்களும், திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

முதன் முதலாக, அக்டோபர் 1937-ல் சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டது. பின்னர் தமிழ் நாட்டிலுள்ள பிற மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இறுதியாக 1948– ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாளில் பூரண மதுவிலக்கு தமிழ்நாடு முழுவதும் செயல் படுத்தப்பட்டது.

184. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினேழாவது அறிக்கை, 1992–93.

185. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. 1992–93.

186. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை, 1992–93.

இணைப்பு-1

(45-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பினைக் காண்க)

கோரிக்கை எண் 2.

மாநில ஆயத்தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

1993-94

I. மதுவிக்குக் கொள்கையின் வளர்ச்சி:

தமிழ்நாட்டின் பழம்பெருமையும், பல துறைகளில் அதன் சிறப்பும் தனித் தன்மை வாய்ந்தவைவாகும். தமிழ் நாடு சமூகப் பொருளாதாரக் கொள்கையின், மதுவிலக்கு– மதுவிலக்கு தொடர்பான பணிகளில் அடைந்த சாதனை அத்தகைய பழம்பெரும் சாதனைகளில் ஒன்றாகும். குறிப்பாகச் சொல்வதென்றால், மது விலக்குக் கொள்கைளை, இந்தியாவில் செயல்படுத்திய முதல் மாநிலம் என்கிற தனிப்பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது. மதுவிலக்குக் கொள்கை நிலையானதாக இருந்ததில்லை என்பது உண்மைதான். பல ஆண்டுகளாக அதில் பல மாற்றங்களும், திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

முதன் முதலாக, அக்டோபர் 1937-ல் சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டது. பின்னர் தமிழ் நாட்டிலுள்ள பிற மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இறுதியாக 1948– ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ஆம் நாளில் பூரண மதுவிலக்கு தமிழ்நாடு முழுவதும் செயல் படுத்தப்பட்டது.

1993 ஏப்ரல் 20]

2. 1937-இல் இயற்றப்பட்ட தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் செயல்பாடு முதன்முறையாக 1971 ஆகஸ்டில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இது நீண்ட காலம் நீடிக்கவில்லை. 1973 ஆகஸ்டில் கள்ளுக்கடைகளையும், 1974 செப்டம்பர் 1 ஆம் நாள் முதல் சாராயக்கடைகளையும் ஒழித்து மீண்டும் மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டது. இருப்பினும், பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட அயல்நாட்டு மது வகைகளின் விற்பனை உரிமம் பெற்ற கடைகளில் தொடர்ந்து நடந்து வந்தது. தன் அனுமதி (பர்மிட்) பெற்றவர்களுக்கு விற்கப்பட்டன. அப்போது இம் மாநிலத்தில் மது உற்பத்தி செய்வதற்கான உரிமம் யாருக்கும் வழங்கப் படவில்லை.

3. மீண்டும் 1981 மே மாதத்தில், முந்தைய நிலையில் மாற்றம் செய்யப்பட்டு, மதுவிலக்கு சட்டத்தின் விதிகள் தளர்த்தப்பட்டு கள் மற்றும் சாராய விற்பனை அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் முதல்முறையாக மது உற்பத்தி செய்வதற்கான உரிமம் தனியார் துறையில் நால்வருக்கும், கூட்டுத்துறையில் ஒருவருக்கும் வழங்கப் பட்டது. இது தவிர தனியார் துறையின் ஒரு பீர் தொழிற் சாலைக்கும் அனுமதி வழங்கப்பட்டது. கள், சாராயம் மற்றும் அயல்நாட்டு மது பானங்களை குடிப்பதற்கு அனுமதி (பர்மிட்) முறை கொண்டு வரப்பட்டது. கள்ளுக் கடைகள் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையில் அனுமதிக் கப்பட்டன. முதலில் சாரய உற்பத்தி, 10 தனிப்பட்ட நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த கலவை ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட சாரயத்தை மொத்தமாக வியாபாரம் செய்வதற்கு 15 தனி நபர்கள் நியமிக் கப்பட்டார்கள். இந்த மொத்த வியாபாரிகள் சாராயத்தைச் சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகித்து வந்தார்கள். இந்தச் சில்லறைக் கடைகள் முதலில் ஏலம் மற்றும் ஒப்பந்த முறையில் விடப்பட்டன. இந்த முறை 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் வரை நடைமுறைப் படுத்தப்பட்டது.

4. இதற்கிடையில், 1983 ஜூலை மாதத்தில் தமிழ் நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) தோற்றுவிக்கப்பட்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த வியாபாரத்தை அந்நிறுவனம் எடுத்துக் கொண்டது. மேலும், இதுவரை 15 தனிப்பட்ட நபர்கள் நடத்தி வந்த சாராய மொத்த வியாபாரத்தை இக்கழகம் 1983 ஜூலை 25 ஆம் நாளிலிருந்து எடுத்துக் கொண்டது. இருந்த போதிலும், சாராய உற்பத்தி தொடர்ந்து தனிப்பட்டவர்களிடமே இருந்து வந்தது. சாரயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு

1993 ஏப்ரல் 20

மது வகைளின் மொத்த வியாபாரத்தை நடத்தும் டாஸ்மாக் நிறுவனமே, சாரய சில்லறை வியாபாரத்தையும் நடத்த வேண்டுமென்று 1985-இல் அரசு முடிவு செய்தது. இருப்பினும் சாரயச் சில்லறை வியாபாரத்தை டாஸ்மாக் நிறுவனம் நேரடியாக நடத்தாமல் அப்பணியினை தனிப் பட்ட நபர்களுக்கு ஏஜென்சி முறையில் கொடுத்தது. இதில் பல சட்டச் சிக்கல்கள் ஏற்படவே, மறுபடியும், சில்லறை வியாபாரத்திற்கான அனுமதியை 1986 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16 ஆம் நாள் முதல் ஒப்பந்த மற்றும் ஏலமுறையில் வழங்குவதென அரசு முடிவு செய்தது.

5. பின்னர் மதுவிலக்கு கொள்கை மறு ஆய்வு செய்யப்பட்டு, மாற்றம் பெற்றது. 1987 சனவரி 1 ஆம் நாள் முதல், கள், சாராய உற்பத்தி, விற்பனை, பயன்பாடு ஆகியவை தமிழ்நாட்டில் முற்றிலுமாகத் தடை செய்யப் பட்டது. எனினும் 2,037 இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் தொடர்ந்து இயங்கின. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபான தொழிற்சாலைகள் ஐந்தும், பீர் தொழிற் சாலை ஒன்றும் தொடர்ந்து இயங்கின. 1989 ஜூன் முதல் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை களைச் சில்லறை கடைகளின் வாயிலாக விற்பனை செய் வதற்கான உரிமை ஒப்பந்த-ஏலமுறை மூலமாக அனுமதிக் கப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபான வகையைச் சில்லறை விற்பனை செய்யும் உரிமம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய வற்றிடம் நியமன அடிப்படையில் வழங்கப்பட்டது.

6. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள், பீர் ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக, 1989-ல் தமிழ்நாடு சாராவிக் கழகம் அமைக்கப்பட்டது. இக்கழகம் ''திருவாளர்கள் எம்.பி. வடிசாலை நிறுவனத்திடமிருந்து '' பீர் வடிசாலைப் பிரிவு ஒன்றை வாங்கி, 1989 டிசம் பரிலிருந்து வணிக முறையில் பீர் தயாரிப்பைத் தொடங்கியது. 1990-ல் மதுவிலக்குக் கொள்கையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. அதன்படி நாட்டு மதுவைத் தயாரித்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்தும் முறை இம் மா நிலத்தில் கொண்டு வரப்பட்டது. இம் மாநிலத்தில், நாட்டு மதுவைத் தயாரிக்கின்ற சிறப்புரிமை, தமிழ்நாடு சாராவிக் கழகத்திற்கு வழங்கப்பட்டது. நாட்டு மதுவின் மொத்த விற்பனை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் ஒப் படைக்கப்பட்டது. இம் மாநிலத்திலுள்ள 3,626 சில்லறை மதுவிற்பனைக் கடைகள் மூலமாக நாட்டு மது விற்பனை செய்யப்பட்டது,

1993 ஏப்ரல் 20]

7. இந்த அரசு 1991 ஜூனில் பதவியேற்றவுடன் 1991 ஜூலை 16 ஆம் தேதி முதல் நாட்டு மது விற்பனையை நிறுத்த துணிச்சலான பாராட்டத்தக்க முடிவை மேற்கொண்டது. இந்தக் கொள்கை முடிவு சமுதாய மாற்றம் பொருளாதார நடவடிக்கையாக பொதுவாக சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களை குடியின் தீமையிலிருந்து மீட்கவும், குறிப்பாக, ஏழை மக்களின் பொருளாதார முன்னேற்றத்தையும் மறுவாழ்வையும் கருத்தில் கொண்டும், இதனால், ஆண்டுக்கு 391 கோடி ரூபாய் ஆயத்தீர்வை வருவாய் இழப்பு ஏற்பட்டதையும் பொருட்படுத்தாமல் எடுக்கப்பட்டதாகும்.

8 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை விற்பனை செய்யும் 5,000 சில்லறை விற்பனைக் கடைகள் 1992–93 ஆம் ஆயத் தீர்வை ஆண்டில், ஒப்பந்த ஏல முறையில் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. 4,216 கடைகள் விற்கப்பட்டன; அவற்றில் 4,213 கடைகளுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டில் முதல் முறையாக இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்களின் சில்லறை விற்பனை உரிமைதாரர்கள், 1992 ஜூனிலிருந்து, அவர்களின் உரிமம் பெற்ற வளாகத்திற்குள் அல்லது அதற்கு அருகில் பார் வசதிகளைத் தொடங்க அனுமதிக்கப்பட்டனர். 1992–93 ஆம் ஆண்டில் 3,332 பார் உரிமங்கள் வழங்கப்பட்டன. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்களின் சில்லறை விற்பனைக் கடைகளுக்குள் அல்லது அதற்கருகே பார்கள் அமைக்க 1–6–1993 முதல் புதிய உரிமங்களை வழங்குவதில்லை அல்லது தற்போதுள்ள உரிமங்களை புதுப்பிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆயத்தீர்வை வருவாய் வகையில் மாநிலக் கருவூலத்திற்கு ஏற்படும் கணிசமான அளவு இழப்பையும் பொருட்படுத்தாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

II தற்போதைய அரசின் மதுவிலக்குக் கொள்கையின் சுருக்கம்.

1. பூரணமதுவிலக்கே இந்த அரசின் கொள்கையாகும் இந்த இலட்சியத்தின் முதல்படியாக, 1991 ஜூலை 16 ஆம் நாளிலிருந்து நாட்டு மது விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது உற்பத்தியும் அவற்றின் சில்லறை விற்பனையும் தொடர்ந்து நடைபெற அனுமதிக்கப்பட்டுள்ளன.

[1993 ஏப்ரல் 20

2. கால் நடைத் தீவனம், நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் போன்று, சிறிய அளவில் கருப்பஞ்சாற்றுக் கசண்டைப் பயன்படுத்துவோருக்கு அதனை ஒதுக்கீடு செய்வதில் தற்போதைய கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படும். மேலும் கூட்டுறவுத் துறை, பொதுத் துறை ஆகியவற்றோடு, தனியார் துறையிலும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை பயன்படுத்தி வடிசாலைகள் அமைக்க அனுமதித்தல், இவ்வாறு அனுமதிக்கையில், சர்க்கரை ஆலைகளுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகிய அரசின் தற்போதைய கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படும். இவ்வாறு செய்கையில், கூட்டுறவுத் துறைக்கும் பொதுத்துறைக்கும் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படும்.

3. மாநிலத்தில் பொதுத் துறையில் மது தயாரிக்கக் கூடாது என்ற அரசின் முடிவு தொடர்ந்து நீடிக்கும்.

4. கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளின் போலி மதுபானங்கள் தயாரிப்பதற்கும் தெளிந்த சாராவி பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, இயன்றவிடங்களில் இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு தெளிந்த சாராவிக்கு பதிலாக இயல்பு மாற்றப்பட்ட சாராவி வழங்கும் அரசின் கொள்கை தொடர்ந்து நீடிக்கும்.

5. மதுபான தயாரிப்பாளர்களிடமிருந்து வாங்கப்படும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளின் கொள்முதல் விலையை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) உற்பத்தியாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி நிர்ணயிப்பது தொடர்ந்து பின்பற்றப்படும். மொத்த விற்பனையாளர், சில்லறை விற்பனையாளர் ஆகிய ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் ஆதாயத்தைப் பொறுத்த வரையில் (அதாவது) குறைந்தளவு 10 சதவீதம், அதிக அளவு 20 சதவீதம் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.

6. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளின் விலையைச் சீரமைக்கும் பொருட்டு, இந்த மது வகைகளை உயர்தர வகை, நடுத்தர வகை, சாதாரண வகை, என்று வகைப்படுத்துவதன் மூலம் 1-6-1992 முதல் ஃப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 70 என்ற ஆயத்தீர்வை வீதம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. உயர்தர வகை மதுவுக்கான ஆயத்தீர்வை ஃப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 85 என்று உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரண வகை மதுவுக்கான ஆயத்தீர்வை ஃப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 40 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. நடுத்தர வகை மதுவுக்கான ஆயத்

1993 ஏப்ரல் 20]

தீர்வை ஃப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 70 என்ற அளவிலேயே தொடர்ந்து நீடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தகுந்த காரணங்களுக்காக ஒரு மாற்றம் அவசியம் என்கின்ற வரையில் இந்த வீதங்கள் தொடர்ந்து நீடிக்கும்.

7. கள்ளச் சாராயம் வடித்தல், எடுத்துச் செல்லுதல், வைத்திருத்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றை அறவே ஒழிப்பது, மற்ற மாநிலங்களிலிருந்து மதுவகைகளைக் கடத்தி வருவதைத் தடுப்பது என்ற அரசின் கொள்கையை முனைப்பாகச் செயல்படுத்தும் வகையில் காவல் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையில் 65 பிரிவுகளைக் கொண்ட மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு ஒன்று தனியே தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இக்கொள்கையை மேலும் செம்மையாகவும் கண்டிப்புடனும் செயல்படுத்துவதற்காகவும், மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவை பலப்படுத்தவும் இவ்வாண்டில் ரூ. 7 கோடி செலவில் 52 கூடுதல் பிரிவுகளை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 3.86 கோடி தொடரினச் செலவு ஏற்படும்.

8. வருவாய்த் துறையின் நிருவாக அலுவலர்கள், மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு மற்றும் காவல் துறையின் அலுவலர்கள் ஆகியோருக்கு நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளையும், மதுவிலக்குக் குற்ற வழக்குகளையும் இணக்க முறையில் (Compounding) முடிவுக்குக் கொண்டு வர அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

9. சமூக விரோத சக்திகள் சிலவற்றின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டும் வழக்கமாகக் குற்றம் செய்வோரின் அட்டூழியங்களைத் தடுக்கவும் தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள் மற்றும் நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) சட்டக்கூறுகள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக 1992-ஆம் ஆண்டில், சமூக விரோத சக்திகள் பலர் அதிக அளவில் காவலில் வைக்கப்பட்டனர். இந்த சமூக விரோத சக்திகளை கட்டுப்படுத்தித் தடுப்பதற்கான முயற்சிகள் எவ்விதத் தொய்வும் ஏற்படாத வகையில் மிக வேகத்துடனும், விறுவிறுப்புடனும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

10. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளின் சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த ''பார்'' வசதிக்கு 1-6-1993 முதல் புதிய

[1993 ஏப்ரல் 20

உரிமங்களை வழங்க அல்லது தற்போதைய உரிமங்களைப் புதுப்பித்துக் கொள்ள அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

11. மதுப் பழக்கத்திலிருந்து பொதுமக்களை விடுவிக்கும் வகையில் நாடகம், திரைப்படம் மூலமாகவும் மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலமாக ஏனைய நடவடிக்கைகளின் மூலமும் இம் மாநிலத்தில் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இது ஒரு தொடர் நடவடிக்கையாகும்.

III. ஆதாரங்கள் : கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் சாராவி.

(i) கருப்பஞ்சாற்றுக் கசண்டு :

தமிழ்நாட்டில், 32 சர்க்கரை ஆலைகள் உள்ளன. சர்க்கரை தயாரிப்பில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒரு துணைப் பொருள் ஆகும். சாராவி தயாரிப்பதற்கான அடிப்படை மூலப்பொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். சாராவி மதுபானங்கள், சில மருந்துப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருள் தயாரித்தல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருளாகும். கருப்பஞ்சாற்றுக் கசண்டு கால்நடைத் தீவனங்கள், நல்லெண்ணெய் ஆகியவற்றின் உற்பத்தியிலும் பயன்படுத்தப்படுகிறது.

கருப்பஞ்சாற்றுக் கசண்டினைச் சேமித்துவைத்தல், விற்பனை செய்தல் மற்றும் எடுத்துச் செல்லுதல் ஆகியவை 1961 - ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு ஆணை, தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு முறைப்படுத்தல் விதிகள் ஆகியவற்றால் முறைப்படுத்தப்படுகிறது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர், மாநிலத்தின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

சர்க்கரை ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு தேக்க நிலை குறித்த பிரச்சினைக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நீண்டகால மற்றும் குறுகியகால நடவடிக்கைகளின் மூலம் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறுகிய கால நடவடிக்கையின் ஒரு பகுதியாக 1990 அக்டோபர்—1991 செப்டம்பர் முடிய உள்ள கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில், ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசின் இசைவுடன் ஏற்றுமதி செய்யப்பட்டது. சர்க்கரை

1993 ஏப்ரல் 20]

ஆலைகளில் நிலவிய கீருப்பஞ்சாற்றுக் கசண்டின் தேக்க நிலையை மேலும் குறைக்கும் பொருட்டு, 1991 அக்டோபர் முதல் 1992 செப்டம்பர் வரையிலான கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில் மேலும் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டது. அதில் ஏற்கனவே 39,606 மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி செய்யப்பட்டுவிட்டது. மேலும் 20,000 மெட்ரிக்டன் கசண்டு ஏற்றுமதிக்கான பணி நடைபெற்று வருகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டின் தேக்க நிலை தற்பொழுது வெகுவாக குறைக்கப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது. வெளிநாட்டிற்கு கருப்பஞ் சாற்றுக் கசண்டினை ஏற்றுமதி செய்வோரிடையே போட்டியை ஏற்படுத்தி ஊக்குவித்ததன் மூலம், ஏற்றுமதி செய்யப்பட்ட 39,606 மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ. 485 என்ற இலாபகரமான விலை சர்க்கரை ஆலைகளுக்கு கிடைத்தது. முன்னர் மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 120 தான் கிடைத்து வந்தது.

மேலும் 1991–92, 1992–93-ஆம் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டுகளில், தமிழ்நாட்டிலிருந்து கேரளம், மேற்கு வங்காளம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு, மாநிலங்களுக்கிடையிலான ஒதுக்கீட்டின்கீழ் ஏற்றுமதி செய்வதற்காக, 2,13,400 மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை மத்திய அரசு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்தது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவுகள் பற்றிய ஆண்டு வாரியான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. 1991–92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கருப்பஞ் சாற்றுக் கசண்டினை கொண்டு செல்வது தற்பொழுது நடைபெற்று வருகிறது:—

ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநிலத்தின் பெயர். (1)	1991–92. (2)	1992–93. (3)
	(மெட்ரிக் டன்களில்)	
கேரளா	48,300	16,100
மேற்கு வங்காளம்	10,000	..
மத்திய பிரதேசம்	99,000	40,000

மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்று கசண்டினை பயன்படுத்துவதற்கான நீண்டகால நடவடிக்கையாக தற்போது இயங்கிவரும் வடிசாலைகளின் விரிவாக்கத்திற்காக கூடுதலாக கருப்பஞ்சாற்று கசண்டு ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டி வந்த கோரிக்கைகளையும்

[1993 ஏப்ரல் 20

அரசு பரிசீலித்தது. கருப்பஞ்சாற்று கசண்டினை ஒதுக்கீடு செய்வதற்காக வழங்கப்பட்ட ஒப்புதல் கடித விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வடிசாலையின் பெயர்.	கருப்பஞ் சாற்றுக் கசண்டின் தற்போதைய ஆண்டு ஒதுக்கீட்டு அளவு.	கருப்பஞ் சாற்றுக் கசண்டின் கூடுதல் ஒதுக்கீடு ஒப்புதல் அளிக்கப் பட்ட அளவு.
(1)	(2)	(3)
	(மெட்ரிக் டன்னில்)	
திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்.	55,350	18,000
திருவாளர்கள் வோரியன் கெமிக்கல்ஸ் அன்ட் டிஸ்டிலரிஸ் லிமிடெட்.	32,000	13,000
திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட்.	78,260	41,000
திருவாளர்கள் திருச்சி டிஸ்டிலரிஸ் கெமிக்கல்ஸ் லிமிடெட்.	75,000	35.000

உபரியாக உள்ள கருப்பஞ்சாற்றுக் கசண்டினை பயன்படுத்துவது தொடர்பான முக்கியக் கொள்கை முடிவாக கூட்டுறவு பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றுடன் தனியார் துறையிலும் புதிய வடிசாலைகளை அமைப்பதற்கு அனுமதிக்கவும், அவ்வாறு அனுமதிக்கும்போது சர்க்கரை ஆலைகளுக்கு முன்னுரிமை வழங்கவும், அதிலும் கூட்டுறவு பொதுத் துறை நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன முடிவின் அடிப்படையில், கருப்பஞ்சாற்று கசண்டு ஒதுக்கீடு செய்வதற்கான ஒப்புதல் கடிதம் வழங்கப்பெற்று புதிதாக வடிசாலைகள் அமைக்கவுள்ள நான்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 20]

(1)	(2)	(3)

தனியார் சர்க்கரை ஆலைகளின் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

	(மெட்ரிக் டன்னில்)
1. திருவாளர்கள் அருணா சுகர்ஸ் அண்டு எண்டர்பிரைஸஸ், தென்னாற்காடு.	50,000
2. திருவாளர்கள் ஆரூரான் சுகர் மில்ஸ், தஞ்சாவூர்.	50,000
3. திருவாளர்கள் கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப் பள்ளி.	40,000
4. திருவாளர்கள் ராஜஸ்ரீ சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், மதுரை.	40,000
	1,80,000

இந்த வடிசாலைகளை நிறுவும் பணி நல்லமுறையில் நடைபெற்று வருவதுடன், அவை ஒரு சில மாதங்களுக் குள் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

தற்போது செயல்பட்டுவரும் வடிசாலைகள், புதிதாக அமைக்கப்பட உள்ள வடிசாலைகள் ஆகியவற்றில் உற் பத்தி செய்யப்படவுள்ள கூடுதல் சாராவி, மாநிலத்தில் சாராவி பயன்படுத்தும் பல்வேறு நிறுவனங்களின் சாராவி தேவையை நிறைவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.

(ii) சாராவி-வடிசாலைகள் :

சாராவி தயாரிக்க வடிசாலைகளில் பயன்படுத்தப்படும் முக்கிய மூலப்பொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். சாராவி தயாரிக்க இம்மாநிலத்தில் பின்வரும் 8 வடிசாலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

(1) திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி (இந்தியா நிறுவனம்), நெல்லிக்குப்பம், தென்னாற்காடு மாவட்டம்.

(2) திருவாளர்கள் திருச்சி டிஸ்டிலரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

[1993 ஏப்ரல் 20

(3) திருவாளர்கள் கெம்பிளாஸ்ட், காடாம்புலியூர், தென்னாற்காடு மாவட்டம்.

(4 திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட், சக்தி நகர் பெரியார்மாவட்டம்.

(5) திருவாளர்கள் ஓரியன் கெமிக்கல்ஸ், செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.

(6) திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம், கோயம்புத்தூர் மாவட்டம்.

(7) திருவாளர்கள் கெம்பிளாஸ்ட், மரிகம்பள்ளி, தருமபுரி மாவட்டம்.

(8) திருவாளர்கள் சதர்ன் அக்ரிபுரேன் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனம், தென்னாற்காடு மாவட்டம்.

இந்த எட்டு வடிசாலைகளில் மொத்த ஆண்டு உரிமத் திறன் 965.30 இலட்சம் லிட்டர் சாராவி ஆகும். டிசம்பர் 1991 முதல் நவம்பர் 1992 வரை உள்ள சாராவி ஆண்டில் 3.93 இலட்சம் மெட்ரிக்டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை பயன்படுத்தி 951.50 இலட்சம் லிட்டர்கள் சாராவி உற்பத்தி செய்யப்பட்டது.

1990-ல் இரண்டு வடிசாலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவ முந்தைய அரசால் ஒப்புதல் கடிதங்கள் வழங்கப்பட்டன, அவை சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகும். ஒவ்வொன்றுக்கும் 55,000 மெட்ரிக்டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே தெரிவித்தபடி, 1992-ம் ஆண்டில், இம்மாநிலத்தில் புதிய வடிசாலைகளை நான்கு தனியார் சர்க்கரை ஆலைகளில் அமைக்க அவற்றிற்கு மொத்தம் 1,80,000 மெட்ரிக்டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒதுக்க இசைவுக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

:

(iii) இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் :

இம்மாநிலத்தில், இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளை தயாரிக்கும் பின்வரும் ஐந்து நிறுவனங்கள் உள்ளன.

(1) திருவாளர்கள் பாலாஜி வடிசாலை நிறுவ்னம்.

(2) திருவாளர்கள் எம்பீ வடிசாலை நிறுவனம்.

1993 ஏப்ரல் 20]

(3) திருவாளர்கள் மோகன் வடிப்பு மற்றும் வடிசாலை நிறுவனம்.

(4) திருவாளர்கள் சிவா வடிசாலை நிறுவனம்.

(5) திருவாளர்கள் சதர்ன் அக்கிரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம்.

ஏப்ரல் 1992 முதல் மார்ச் 1993 வரை இவை மொத்தம் 71.06 இலட்சம் மதுவகை பெட்டிகள் தயாரித்துள்ளன. இது 639.62 இலட்ச பல்க் லிட்டர் சாராவிக்கு நிகரானதாகும்.

(iv) பீர் வடிப்பாலைகள் .

தற்போது இம்மாநிலத்தில் இரண்டு தனியார் நிறுவன வடிப்பாலைகள் உள்ளன. அவை திருவாளர்கள் மோகன் பீர் வடிப்பு மற்றும் வடிசாலை நிறுவனம் மற்றும் எம்பீ வடிசாலை நிறுவனம் ஆகும். 1992 ஏப்ரல் முதல் 1993 மார்ச் வரை 59.49 இலட்சம் பெட்டிகள் பீர் தயாரிக்கப் பட்டன. இது 464.05 இலட்சம் பல்க் லிட்டர்களுக்கு சமம் ஆகும்.

(v) தமிழ்நாடு சாராவிக் கழகம்.

(1) தமிழ்நாடு சாராவிக் கழகம் நிறுவப்பட்டமை

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் ஆகியவைகளைத் தயாரிக்கும் பணியை மேற் கொள்வதற்கென பொதுத் துறையில் தமிழ்நாடு சாராவிக் கழகம் நிறுவப்பட்டது. இக்கழகம் ரூ. 6 கோடி அனுமதிக்கப் பட்ட மூலதனத்துடன் 1989 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 10ஆம் நாளன்று 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் முறையாக அமைக்கப்பட்டது.

(2) பீர் தயாரித்தல். :

தமிழ்நாடு சாராவிக் கழகம், திருவாளர்கள் எம்பீ வடி சாலை நிறுவனத்திடமிருந்து பீர் வடிசாலையை பிணைய பொறுப்புகள் உள்ளிட்ட ரூ. 8.02 கோடிக்கு வாங்கி 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பீர் தயாரித்து புட்டிகளில் அடைக்கும் பணியைத் தொடங்கியது.

[1993 ஏப்ரல் 20

(3) நாட்டுமது தயாரித்தல் :

பின்னர், 1990 ஆம் ஆண்டில் முந்தைய அரசால் நாட்டு மது திட்டம் புகுத்தப்பட்டபோது, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) வாயிலாக நாட்டு மது நுகர்வோர்க்கு விற்பனை செய்வதற்கென, நாட்டு மது தயாரிக்கும் பணி தமிழ்நாடு சாராவிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டது. தமிழ்நாடு சாராவிக் கழகம் தனது நாட்டு மது தயாரிக்கும் பிரிவுகள் வாயிலாக 20-7-1990 முதற் கொண்டு நாட்டு மது தயாரிக்கத் தொடங்கியது.

(4) நாட்டு மது தயாரிக்கும் தொழில் பிரிவுகளை மூடுதல் :

இம் மாநிலத்தில் 16—7—1991-ல் இருந்து நாட்டு மது விற்பனையை தற்போதைய அரசு நிறுத்தியதின் விளைவாக தமிழ்நாடு சாராவிக் கழகத்தைக் கலைத்துவிட்டு, அதன் பீர் வடிப்பாலையை அதன் பங்குகளை பெற்றிருக்கும் நிறுவனமான தமிழ்நாடு வாணிபக் கழகத்துடன் இணைக்க ஆணை பிறப்பித்தது. அதனால் தமிழ்நாடு சாராவிக் கழகம், அதன் நாட்டு மது தயாரிப்பு பிரிவுகளில் நாட்டு மது உற்பத்தி செய்வதை நிறுத்திவிட்டது. நாட்டு மது தயாரிக்கும் பிரிவுகள் மூடப்பட்டபிறகு, புதிதாகப் பணியாளர்கள் எடுக்கும்போது வேலைவாய்ப்பகங்கள் வாயிலாக தேர்ந்தெடுக்க வேண்டும் என விதிக்கப்பட்டுள்ள முறையைத் தளர்த்தி தமிழ்நாடு சாராவிக் கழகத்திலிருந்து ஆட்குறைப்பு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என அரசின் எல்லாத் துறைத்தலைவர்களுக்கும், பொதுத்துறை நிறுவனங்களின் தலைமை நிருவாக அலுவலர்களுக்கும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

(5) பீர் வடிப்பாலை பிரிவை விற்பனை செய்தமை :

பீர் வடிப்பாலை பிரிவின் முந்தைய சொந்தக்காரர்களான திருவாளர்கள் எம்பீ வடிசாலை நிறுவனத்திடமிருந்து பெறப் பட்ட முறையீட்டின் பேரில், அரசு, பீர் வடிப்பாலைப் பிரிவை தமிழ்நாடு மாநில வாணிபக்கழகத்துடன் இணைக்க எடுத்திருந்த முடிவை மறு பரிசீலனை செய்து, தமிழ்நாடு சாராவிக் கழகத்தின் பீர் வடிப்பாலைப் பிரிவை திருவாளர் கள் எம்பீ வடிசாலை நிறுவனத்தினருக்கு விற்றுவிட முடிவு செய்தது. உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், பல முதுநிலை இந்திய ஆட்சிப்பணி (I.A.S.) அலுவலர்கள், மற்றும் நிபுணர் களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழுவின் பரிந்துரை களின் அடிப்படையில் சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனை கள் ஆகியவற்றிற்கு உட்பட்டு திருவாளர்கள் எம்பீ வடிப்

1993 ஏப்ரல் 20]

பாலை நிறுவனத்திற்கு பீர் வடிப்பாலை பிரிவை விற்பதற்கு தமிழ்நாடு சாராயக் கழகத்தின் நிருவாக இயக்குநருக்கு அரசு அனுமதி அளித்தது. இந்த பீர் தயாரிக்கும் தொழிற் பிரிவை 1—7—1989-ல் உள்ளவாறு அதன் பிணைய, பொறுப்புகள் உள்ளிட்ட ரூ. 8.02 கோடிக்கு முந்தைய உரிமையாளரிடமிருந்து அரசு வாங்கியது, அதே தொழில் பிரிவு இப்போது 31-1-92-ல் உள்ளவாறு பிணைய, பிணையமற்ற பொறுப்புகள் உள்ளிட்ட ரூ. 12.24 கோடிக்கு முந்தைய உரிமையாளருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த பீர் தயாரிக்கும் தொழில் பிரிவு 31-1-1992-ல் திருவாளர்கள் எம்பீ வடிசாலை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நிறுவனம் விற்பனைத் தொகைக்காக ரூ. 10.44 கோடி தொகையையும், 1-2-1992 முதல் 9-2-1993 வரையான கால அளவிற்கான வட்டிக்காக ரூ. 94.37 இலட்சம் தொகையையும் செலுத்தியுள்ளது. 31-1-92-ஆம் நாளன்று இந்த தொழில் பிரிவு ஒப்படைக்கப்பட்டபோது நிலுவையாக இருந்த கொடுத்துத் தீர்க்க வேண்டிய ரூ.1.80 கோடி பிணைய, பிணையமற்ற பொறுப்புகள் தொடர்பாக திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனம் பிணையமற்ற பொறுப்பான ரூ. 7.56 இலட்சத்தை கொடுத்துத் தீர்த்து விட்டு, பிணையமற்ற பொறுப்பிற்காக ரூ. 1.57 இலட்சம் தொகையை தமிழ்நாடு சாராயி நிறுவனத்திடம் செலுத்தியுள்ளது. நீண்டகால பொறுப்பு குறித்த அசல், வட்டிக்காக அந்நிறுவனம் ரூ. 1,07,56,000-ஐ பாரத ஸ்டேட் வங்கியிடம் செலுத்தியுள்ளது. நிலுவையாக உள்ள மொத்த பிணைய பொறுப்புகளை திருவாளர்கள் எம்பீ வடிசாலை நிறுவனத்திற்கு மாற்ற பாரத ஸ்டேட் வங்கியின் இசைவைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வெளியில் விற்பனை செய்யும் பொருட்டு போலி ஆயத் தீர்வை வில்லைகளை உபயோகித்து இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளை கள்ளத்தனமாக கடத்திச் சென்று பதுக்கி வைத்தார் என்ற காரணத்திற்காக திருவாளர்கள் எம்பீ டிஸ்டில்லரீஸ் நிர்வாக இயக்குநர் திரு. எம். பி. புருஷோத்தமன் மீது காவல் பிரிவு ஒரு வழக்கினைச் சென்னையில் பதிவு செய்துள்ளது என்பதை இங்கே குறிப்பிடலாம். பறிமுதல் செய்யப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் 20,388 பாட்டில்கள் ஆகும். இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் சிலர் கைது செய்யப்பட்டனர். ஆனால் முதன்மைக் குற்றம் சாட்டப்பட்டவரான திரு. எம். பி. புருஷோத்தமன் கைது செய்யப்படுவதற்கு முன்னரே முன் ஜாமீன் பெற்றுவிட்டார். இவ்வழக்கில் புலனாய்வு முடிந்துவிட்டது. குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. இதற்கிடையில் அவர்களது பீர் மற்றும்

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகை தயாரிக்கும் உரிமங்கள், இறுதி ஆணை பிறப்பிப்பதற்கிடையில் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை ஆணையரால் 29-3-93 அன்று தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (Suspended). ஆயத்தீர்வை அலுவலர்களது கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் தொழிற்சாலை வளாகம் 30-3-93 அன்று 'சீல்' வைக்கப்பட்டது. ஆகவே அன்றிலிருந்து இரு யூனிட்டுகளிலும் உற்பத்தி ஏதும் நடைபெறவில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிகழ்ந்த இம்மாத்ரியான மற்றொரு வழக்கில் திரு. எம். பி. புருஷோத்தமன் 31-3-93 அன்று கைது செய்யப்பட்டு ஜாமினில் விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கிலும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.

(6) நாட்டு மது தயாரிப்பு தொழில் பிரிவுகளை விற்றுவிடல்:

நாட்டு மது விற்பனையைக் கைவிட்ட பிறகு, நாட்டு மது தயாரித்து வந்த 12 தொழிற்பிரிவுகள் செயல்படாததால் அவற்றை விற்றுவிட வேண்டியிருந்தது. இந்த தொழிற்பிரிவுகளை, பெரிய கூட்டுறவு நிறுவனமான 'ஆவின்' நிறுவனம் அதன் பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்வதற்காக அதனிடம் மாற்றிவிடுவது என்று இவ்வரசு முடிவு எடுத்தது. இந்த மாற்றுதலுக்கான வழிவகைகளையும் வரையறை நிபந்தனைகளையும் வகுக்க, உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அரசு செயலாளரைத் தலைவராகவும், ஏனைய 8 அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு சில கூட்டங்களை நடத்தியது. இந்தக் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில், விதிமுறைகள், நிபந்தனைகளுக்கு ஒப்புதல் பெறுமுன் இந்தத் தொழில் பிரிவுகள் 1992 மே திங்களில் 'ஆவின்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இப்போது இந்தத் தொழில் பிரிவுகள் 'ஆவின்' நிறுவனத்திடம் அதன் உபயோகத்தில் உள்ளன.

IV. மதுவகை விநியோக முறைகள் :

(1) மொத்த வணிகம் :

மதுவகைகளை பல்வேறு சில்லறை உரிமைதாரர்களுக்கு வழங்கும் பணியை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மேற்கொள்கிறது. இக் கழகத்திடம் ஒரு மொத்த வணிக கிடங்கு உரிமமும், 32 கிளை கிடங்கு உரிமங்களும் உள்ளன தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் வழங்கும் மதுவகைகள் தவிர வேறெந்த வகை மதுவையும் தமிழ்நாட்டில் உள்ள

1993 ஏப்ரல் 20]

சில்லறைக் கடைகளில் விற்பனை செய்ய இயலாது. வேறு வகையில் கூறின், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் இம்மாநிலத்தின் ஏகபோக மொத்த விற்பனை நிறுவனமாக தொடர்ந்து இருந்து வருகிறது.

(2) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) :

''டாஸ்மாக்'' தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு நிறுவனமாகும். இதுவொன்றே 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து இயங்கி வருகின்ற இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளையும், பீரையும் விற்பனை செய்ய உரிமம் பெற்றுள்ள மொத்த விற்பனை முகமை நிறுவனம் ஆகும். சில்லரை உரிமதாரர்களுக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகளையும், பீரையும் வழங்குவதற்காக இம் மாநிலத்தில் இக் கழகத்திற்கு 5 வட்டார அலுவலகங்களும், 33 மொத்த விற்பனை கிடங்குகளும் உள்ளன.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 5 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் பதிவு செய்யப்பட்டது. இம்மாநில அரசு, இதுவரை, ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 மதிப்புள்ள 34,000 மூலதனப் பங்குகளை வைத்துள்ளது. ரூ. 3.4 கோடி செலுத்தியுள்ளது. இப்பங்குத் தொகை யளிப்புத் தவிர தேவைப்படும் போதெல்லாம் அரசு, வழி வகை முன்பணம் வழங்கியுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைப் பொருட்கள், இம்மாநிலத்திலுள்ள தயாரிப்பாளர்களிடமிருந்தும், ஏனைய மாநிலங்களிலிருந்தும் கொள்முதல் செய்யப் படுகின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகை மொத்த விற்பனை 33 கிடங்குகள் வாயிலாக சில்லறை விற்பனை யாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1992-93 ஆம் ஆண்டில் (28-2-1993 வரை) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைப் பொருட்கள் 70.83 இலட்சம் பெட்டி களும், பீர் 53.72 இலட்சம் பெட்டிகளும் விற்பனை செய்ய பட்டன. இந்நிறுவனம் 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் வரை நாட்டு மது விற்பனையின் மொத்த விற்பனை நிறுவனமாகவும் செயல்பட்டு வந்தது.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 1-6-1992 முதல் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுக்கடை (சில்லரை விற்பனை)களை மூடியுள்ளது. புதியதாக ஆட்களை தேர்ந்தெடுப்பதாக இருந்தால், அவ்வாறு ஆட்தேர்வு செய்யப் படும்போது வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் ஆட்தேர்வு

செய்து, ஆட்களை அனுப்ப வழக்கமாகப் பின்பற்றும் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகளைத் தளர்த்தி, தமிழ் நாடு மாநில வாணிபக் கழகத்தின் இந்தியாவில் தயாரிக்க படும் அயல்நாட்டு மது சில்லரை விற்பனைக் கடைகளைச் சேர்ந்த முன்னாள் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அனைத்துத் துறைத் தலைவர் களுக்கும், மாநில அரசுக்கு சொந்தமான நிறுவனங் களின் தலைமை நிருவாகிகளுக்கும் உத்திரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

(3) சில்லறை விற்பனைக் கடைகள் :

மாநில அரசுக் கருவூலத்திற்கு அதிக வருவாய் திரட்டும் நோக்கத்துடனும், வேண்டப்பட்டவர்களுக்கு சில்லறை விற்பனை உரிமங்கள் அளிக்கப்படுகின்றன என்ற புகார்களைத் தவிர்க்கும் பொருட்டும், அனைவருக்கும் வாய்ப்பளிப்பதற்கும் சில்லறை விற்பனை கடைகளுக்கு எப்.எல். 1 உரிமங்கள் வழங்கப் படும் முறை 31—5—1989-லிருந்து கைவிடப்பட்டது. அதற் குப் பதிலாக பொது ஏலம்—ஒப்பந்தம் என்ற புதிய முறையும், அரசு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு நியமன அடிப்படை ஒதுக்கீடு என்ற முறையும் கொண்டு வரப் பட்டது. 1—6—1989-லிருந்து ஏலம்—ஒப்பந்தம் முறையில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது சில்லறை விற் பனைக் கடைகள் விற்கப்பட்டுள்ளன. புதிய முறை புகுத்தப் படு முன்னர், இம்மாநிலத்தில் 2,037 உரிமம் பெற்ற மதுக்கடை கள் (எப். எல். 1. உரிமம்) இருந்தன உரிமதாரர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் ரூ. 4.20 கோடி வசூலிக்கப் பட்டது. புதிய முறையில், மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட 3,465 கடைகளில் 1989-90-இல் 3,369 கடைகளுக்கு உரிமங் கள் வழங்கப்பட்டன. அதன் விவரம் வருமாறு :—

பொது நபர்களுக்குத் தரப்பட்ட உரிமங்கள் ...	2,428
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட்ட உரிமங்கள்.	150
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங் கப்பட்ட உரிமங்கள்.	334
கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் ...	457

1989–90ஆம் ஆண்டில், விண்ணப்பக் கட்டணம், உரிமைக் கட்டணம் மற்றும் உரிமக் கட்டணம் என்ற வகையில் அரசுக்குக் கிடைத்த வருமானம் ரூ. 35.58 கோடியாகும். 1990–91ஆம் ஆண்டில் 1,840 உரிமதாரர்கள் தங்களது உரிமங்களை, விதி களின்படி புதுப்பித்துக் கொண்டனர். 1990ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் திங்களில் 357 கடைகளும் அவ்வாண்டு டிசம்பர் திங்களில் 175 கடைகளும் ஏலத்தில் விற்பனையாயின. உரிமத் துடன் நடைபெற்ற மொத்தக் கடைகளின் எண்ணிக்கை 2,372.

1993 ஏப்ரல் 20]

உரிமைக் கட்டணம் வகையில் கிடைத்த வருமானம் ரூ. 21.57 கோடியாகும். 1991–92 ஆம் ஆண்டில் தனியார் துறை பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறைகளில் 2,099 உரிமங்கள் புதுப் பிக்கப்பட்டன. இதனுடன் பின்னர், 27 உரிமங்கள் புதுப்பிக்கப் பட்டுள்ளன. அரசு ஆணையின்படி, எல்லா மாவட்டங்களிலும் ஏலம் போகாத 1,339 கடைகள் மறு ஏலத்திற்கு கொண்டுவரப் பட்டன. அவற்றில், 1991ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்க ளில் நடந்த ஏலத்தில் 868 கடைகள் தனி நபர்களுக்கும் 55 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டன. விண்ணப்பக் கட்டணம், உரிமக் கட்டணம் மற்றும் உரிமைக் கட்டணம் வகையில் ரூ. 9.84 கோடி வருமானம் கிடைத்தது. 1991-1992–ஆம் ஆண்டில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபானச் சில்லறைக் கடைகளின் விற்பனையில் விண்ணப்பக் கட்டணம், உரிமைக் கட்டணம், உரிமக் கட்டணம் என்ற வகையில் கிடைத்த வருமானம் ரூ. 32.18 கோடியாகும்.

1992–93ஆம் ஆண்டு 5,000 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகள், ஒப்பந் தம் ஏலத்தின் மூலம் விற்பனைக்கு என அறிவிக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள், நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ் நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியவற்றிற்கு நியமன அடிப் படையில் கடை எதுவும் ஒதுக்கப்படவில்லை. அறிவிக்கப்பட்ட 5,000 கடைகளில், 4,216 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகள், பொது ஏலத் தில் விற்பனை செய்யப்பட்டு உரிமைக் கட்டணம், உரிமக் கட் டணம், விண்ணப்பக் கட்டணம் என்ற வகையில் ரூ. 98.46 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1992ஆம் ஆண்டு மதுபான (பார்களில் சில்லறை யாக விற்பனை செய்தல்) விதிகளின் கீழ் மதுபானங்களை சில் லறையாக விற்பனை செய்வதற்கு உரிமம் பெற்றவர்கள் பார் களைத் திறக்க அரசு அனுமதியளித்தது. இவ்விதிகளைச் சேர்ந்த ஏனைய விதிமுறைகளுக்கு உட்பட்டு, தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளின் கீழ மதுபானங்களை சில்லறையாக விற்பனை செய்வதற்கு அளிக்கப் பட்ட உரிமம் ஒன்றை வைத்துள்ளவர்களுக்கு மட்டுமே உரிமம் வழங்குவதன் மூலம் பார்களைத் திறக்க அனுமதி உரிமம் அளிக் கப்பட்டது. 1992–93ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் 3,332 பார் உரிமங்கள் வழங்கப்பட்டன. உரிமைக் கட்டணம், உரிமக் கட் டணம், விண்ணப்பக் கட்டணம் என்ற வகையில் ரூ. 12.44 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு இடங்களில் மதுக்கடைகள் இருக்கின்ற காரணத் தாலும் உரிமம் பெற்று பார்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங் களில் கள்ளத்தனமாக போலியாக இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபானங்களை விற்பனை செய்வதாலும், பொது

வாக பொது மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு ஏற்படும் தொல்லைகள் குறித்து அரசுக்கு முறையீடுகள் வரப்பெற்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு, 1—6—1993 முதற் கொண்டு 1993–94ஆம் ஆண்டிற்கு புதிய உரிமங்கள் வழங்குவதையும், தற்போதிருக்கும் உரிமங்களைப் புதுப்பிப்பதையும் நிறுத்திவிடவும் அதற்கிணங்க தமிழ்நாடு 1992ஆம் ஆண்டு மதுபான (பார்களில் சில்லறையாக விற்பனை செய்தல்) விதிகளை ரத்து செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

V. விலை நிர்ணயம் :

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்கள், பீர்களுக்கான விலை, உள், மதுவிலக்கு ஆயத்துறையில் 14—2—1989ஆம் நாளிட்ட 217ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு இணங்க, மதுவிலக்கு ஆயத்துன்ற ஆணையாளரால் முன்பு நிர்ணயம் செய்யப்பட்டன. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபானங்கள், பீர்களுக்குரிய விலையை வரையறை செய்யும் அதிகாரங்களை 1990-இல் அரசு எடுத்துக் கொண்டது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தயாரிப்பாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபானங்கள், பீர்கள் தயாரிப்பாளர்கள் விலையை நிர்ணயிப்பது குறித்து 1992 பிப்ரவரியில் அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. மொத்த விற்பனையாளர்களுக்கும், சில்லறை விற்பனையாளர்களுக்கும் உரிய குறைந்த அளவு ஆதாயம் தலா 10 சதவீதம் என்றும், உயரளவு ஆதாயம் தலா 20 சதவீதம் என்றும் அரசு வரையறை செய்துள்ளது.

VI. ஆயத் தீர்வை கட்டணம் விதிப்பு :

1—5—1981 முதல் தெளிந்த சாராவியின் மீதான ஆயத் தீர்வை கட்டணம் புரூப் லிட்டருக்கு ரூ. 8 என இருந்தது. அப்போது விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டருக்கு ரூ. 1 என இருந்தது. இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மது வகை தயாரிப்பு நிறுவனங்கள், அம்மது தயாரிப்பிற்கென பெறும் தெளிந்த சாராவிக்கான ஆயத்தீர்வைக் கட்டணம் மற்றும் விற்பனைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டன. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகை தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட இவ்விலக்களிப்பு, 1989ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் திரும்பப் பெறப்பட்டு, அந் நிறுவனங்கள் பெறும் தெளிந்த சாராவி மீது ஆயத்தீர்வைக் கட்டணம் மற்றும் விற்பனைக் கட்டணம் செலுத்த வேண்டுமென முடிவாயிற்று. இருப்பினும் தொழில் சார்ந்த தெளிந்த சாராவியின் மீது ஆயத் தீர்வை அல்லது விற்பனைக் கட்டணம் விதித்து வசூலிக்க மாநிலத்திற்கு அதிகாரமில்லை, என்ற உச்ச நீதிமன்றத்தின் ஆணையை ஒட்டி, தெளிந்த

1993 ஏப்ரல் 20]

சாராவி மீது விதிக்கப்பட்ட அனைத்துக் கட்டணங்களும் 25—10—1989 ஆம் நாளிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன. தற்போது வடிசாலைகளில் உற்பத்தியாகும் ஒவ்வொரு பல்க் லிட்டர் தெளிந்த சாராவிக்கும் நிர்வாகப் பணிக் கட்டணமாக ஐம்பது காசு விதிக்கப்படுகின்றது. அருந்தத்தக்க மது தயாரிப்பிற்கென ஏற்றுமதி செய்யப்படும் தெளிந்த சாராவின் மீது பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 5 ஏற்றுமதி அனுமதிக் கட்டணம் விதிக்கப்படுகின்றது. இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு அருந்தப்படும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் மீதான ஆயத்தீர்வை புரூப் லிட்டருக்கு ரூபாய் 55-லிருந்து ரூபாய் 60 எனவும் மற்றும் விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டருக்கு ரூ. 2 லிருந்து ரூ. 5 எனவும் 25—10—1989 முதல் உயர்த்தி விதிக்கப்பட்டது. 5—9—1991-லிருந்து ஒவ்வொரு புரூப் லிட்டருக்கும் உற்பத்தியாளருக்கான ஆயத்தீர்வைக் கட்டணம் மீண்டும் ரூ. 70 என உயர்த்தி விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தயாராகும் அயல் நாட்டு மதுவிற்கு விதிக்கப்படும் ஆயத்தீர்வை அளவு திரும்பவும் மறு ஆய்வு செய்யப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளின் விலையைச் சீரமைப்பதனை யொட்டி, 1—6—1992 ஆம் நாளிலிருந்து ஆயத் தீர்வை கட்டண வீதம் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

(i) சாதாரண மதுவகைகள் ('டாஸ்மாக்'' நிறுவனம், தயாரிப்பாளர் விலையைச் செலுத்தத்தக்க மதுவகைகள்; அதாவது, 180 மி.லி. அளவுள்ள சிப்பங்கள் அடங்கிய பெட்டிக்கு ரூ. 300க்கு மேற்படாமல் செலுத்தத்தக்கதாகும்).	புரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 40.
(ii) நடுத்தர மதுவகை ('டாஸ்மாக்' நிறுவனம் தயாரிப்பாளர் விலையைச் செலுத்தத்தக்க மதுவகைகள்; அதாவது 180 மி.லி. அளவுள்ள சிப்பங்கள் அடங்கிய பெட்டிக்கு ரூ. 301 லிருந்து ரூ. 375 வரை செலுத்தத் தக்கதாகும்.)	புரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 70.
(iii) உயர்தர மதுவகை ('டாஸ்மாக்' நிறுவனம் தயாரிப்பாளர் விலையைச் செலுத்தத்தக்க மதுவகைகள்; அதாவது, 180 மி.லி. அளவுள்ள சிப்பங்கள் அடங்கிய பெட்டிக்கு 376 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் செலுத்தத்தக்கதாகும்).	புரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 85.

எப். எல். 2, எப். எல். 3, எப். எல். 4. முதலான உரிமதாரர்கள் உள்ளிட்ட சில்லறை விற்பனை உரிமதாரர்களின் தேவையினை பூர்த்தி செய்வதற்கென இம்மாநிலத்தில் உற்பத்தி

செய்யப்படாத சில இன மதுவகைகளை தொடர்ந்து, இறக்குமதி செய்ய அரசு தொடர்ந்து அனுமதித்தது. இவ்விதம் இறக்குமதி செய்யப்படும் மதுவகைகளுக்கு ஒரு 'புரூப்' லிட்டருக்கு ரூ. 5 என இறக்குமதி உரிமக்கட்டணம் விதிக்கப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் நிலவிய சாராவிப் பற்றாக்குறை காரணமாக, அயல்மாநிலங்களுக்கு. ஏற்றுமதி செய்யப்படும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளுக்கான ஏற்றுமதி உரிமக் கட்டணம் 'புரூப்' லிட்டருக்கு ரூ. 30 என உயர்த்தப்பட்டது.

1992 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், எப். எல். 3 வகை உரிமங்களை வழங்குவதற்குரிய (நட்சத்திர ஓட்டல்களிலுள்ள அனுமதி அறை) உரிமைக் கட்டணங்கள் ஓட்டல்களின் நட்சத்திர நிலை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன :—

ஓட்டல்களின் நிலை/தரம்.	வருடாந்திர உரிமைக் கட்டணங்கள்
(1)	(2)
	ரூ.
(i) 5 நட்சத்திர ஓட்டல்கள் ..	2,00,000
(ii) 4 நட்சத்திர ஓட்டல்கள் ..	1,50,000
(iii) 3 நட்சத்திர ஓட்டல்கள் ..	1,00,000
(iv) 2 நட்சத்திர ஓட்டல்கள் ..	75,000
(v) ஏனையவை ..	50,000

இம்மாநிலத்தில் வடிக்கப்பட்டு அருந்தப்படும் பீர்பானத்தின் மீதான ஆயத்தீர்வைக் கட்டணம் மற்றும் விற்பனைக் கட்டணம் 'பல்க்' லிட்டருக்கு தற்போது முறையே ரூ. 2.50-ம் 50 காசும் ஆகும். ஏற்றுமதி செய்ய 'பல்க்' லிட்டருக்கு 40 காசு என ஆயத்தீர்வை கட்டணம் விதிக்கப்படுகின்றது.

VII. ஆயத்தீர்வை மூலம் கிடைக்கும் வருவாய் :

1992 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய கிடைத்த வருவாய் ரூ. 483.12 கோடியாகும். ஆனால், இதற்கு முந்தைய ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 434.86 கோடியாகும். 1992–93 ஆம் ஆண்டில், 1993 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில் 'மாநில' ஆயத்தீர்வை என்ற தலைப்பில் கிடைத்த வருவாய் ரூ. 522.41 கோடியாகும்.

1993 ஏப்ரல் 20]

16—7—1991 முதல் நாட்டு மது விற்பனையை ஒழித்த தின் விளைவாக, ஆண்டொன்றுக்கு ரூ. 391 கோடி பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மதுவிலக்கை அமல் படுத்தியது காரணமாகவும், நாட்டு மது விற்பனையை ஒழித்தது காரணமாகவும் ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடுகட்டுமாறு மைய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டது. ஆயினும், இவ்வரசுக்கு ஏற்பட்ட அவ்வருவாய் இழப்பை ஈடுகட்ட மைய அரசு மறுத்துவிட்டது.

VIII ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுதல் :

ஆயத்தீர்வை செலுத்தாமல் ஏய்ப்பதைத் தடுக்கவும், உரிமம் பெற்ற கடைகளில் போலிச் சாராயம், கள்ளச்சாராயம் ஆகியவற்றை விற்பனை செய்வதைத் தடுக்கவும், இந்தியா வில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள்/பீர் தயாரிப்பு, ஏனைய மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் வாங்கப்படும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மது வகைகள் மற்றும் பீர் ஆகியவை அடங்கிய புட்டிகளின் மேல் ஒட்டுவதற்குரிய ஆயத்தீர்வைச் சீட்டு களை அச்சிட்டு வழங்க மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. முன்பு, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே செய்து வந்த ஆயத் தீர்வைச் சீட்டுகளை அச்சிடுகின்ற பணியை, 1989-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11-ஆம் நாள் முதல் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையாளருக்கு மாற்றப்பட் டுள்ளது. ஆயத்தீர்வைச் சீட்டுகளை அச்சிடுகின்ற இரண்டு அச்சு இயந்திரங்கள், எழிலகத்தின் வளாகத்தில் உள்ள மதுவிலக்கு ஆயத்துறை ஆணையர் அலுவலகத்தில் நிறுவப் பட்டுள்ளன. இந்த அச்சு இயந்திரங்கள், ஆயத்தீர்வைச் சீட்டுகளின் தேவையை நிறைவு செய்கின்றன.

மாநிலத்திலுள்ள, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளை தயாரிக்கும் தொழில் பிரிவுகளிட மிருந்தும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடமிருந்தும் ஆயத்தீர்வை சீட்டு ஒன்றுக்கு 8.5 காசு வீதத்தில் வசூலிக்கப் படுகிறது.

IX மதுவிலக்குச் செயலாக்கம்

மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு.

கள்ளத்தனமாக சாராயம் வடிப்பது, அரசின் உறுதியான மதுவிலக்குக் கொள்கைக்கு பெரிய அச்சுறுத்தலாகும். இந்த அரசு பதவியேற்றவுடன் மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல் படுத்தும் கொள்கையின் முதல் கட்ட நடவடிக்கையாக,

[1993 ஏப்ரல் 20

தமிழ் நாட்டில், 16—7—1991 முதல் நாட்டு மது விற்பனையை நிறுத்திவிட ஆணையிட்டது. சாராயத்தைக் கள்ளத்தனமாக வடிப்பது, கள்ளச் சாராயத்தை வைத்திருப்பது, விற்பனை செய்வது, எடுத்துச் செல்வது போன்ற நடவடிக்கைகளை தீவிரமாகக் கண்டுபிடித்து அவற்றை அறவே ஒழிப்பதற்காக, அடிப்படை அலுவலர்களான கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களின் நிலைய பொறுப்பு வகிக்கும் அலுவலர் ஆகியவர்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

(1) அரசின் மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவது மற்றும் கள்ளச் சாராயத்தை அறவே ஒழிப்பது ஆகிய இரட்டைக் குறிக்கோள்களை அடைவதற்கு பொது மக்கள் மத்தியில் மதுவிலக்குச் சட்டங்களை செயல்படுத்துவதே மாநில அரசின் முக்கிய பணியாகும். மேற்சொன்ன குறிக்கோள்களை அடையும் பொருட்டு, அனைத்து வசதிகள் உள்ளடங்கிய காவல் துறையின் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு ஒன்று இப்பணிக்கென்றே தனியாக காவல் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையில் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் 15—10—1991 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 240 மூலம் அமைக்கப்பட்டது. மதுவிலக்கு சம்பந்தமான குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் ஏற்கெனவே உள்ள காவல் துறை முறையாக எடுக்கும் முயற்சிகளுடன் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவும் துணை நின்று செயலாற்றுகிறது.

(2) நமது மாநிலத்தில் உள்ள மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு, ஏழு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு காவல் துறை கண்காணிப்பாளரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏழு மண்டலங்களும் 65 மதுவிலக்குப் பிரிவுகளாக 31—3—1993 வரை பிரிக்கப்பட்டிருந்தன. நமது மாநிலத்திற்கு கள்ளத்தனமாகக் கொண்டு வரப்படும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளைத் தடுக்கும் வண்ணம், பாண்டிச்சேரி-காரைக்கால் எல்லைகளில் மூன்று இடங்களிலும், கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநில எல்லைகளில் ஒன்று வீதமாக மதுவிலக்கு சோதனை சாவடிகள் செயல்பட்டன. மற்றும் மாநிலத்தில் 6 பறக்கும் படைகளும், அது தவிர, சென்னை மதுவிலக்குப் பிரிவு காவல் துறைத் தலைவரின் அலுவலகத்தில் ஒரு புலன் ஆய்வுக் குழுவும் செயலாற்றி வருகின்றது.

(3) கள்ளச் சாராயம் காய்ச்சுதல் விற்பது, எடுத்துச் செல்வது போன்ற நடவடிக்கைகளை அறவே ஒழிப்பதும், எரி சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு போலி மதுவகை, பாக்கெட்டு சாராயம் ஆகியவற்றை அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாகக் கொண்டு வருவதை கண்டுபிடித்துத் தடுப்பது போன்ற சவால் விடும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றும் பொருட்டு, தற்போது மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவில் உள்ள காவலர்களின் எண்ணிக்கை

1993 ஏப்ரல் 20]

போதிய அளவுக்கு இல்லை என்பதால், தலைமையிடங்களிலும், மாவட்டங்களிலும் உள்ள மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவை ரூ. 7 கோடி செலவில் வலுப்படுத்த அரசு முடிவு செய்தது. அதன்படி, மார்ச் 1993இல் 52 கூடுதல் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவுகளும், 7 மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு மதுவிலக்கு நுண்ணறிவுப் பிரிவும் எல்லாவிதமான அடிப்படை வசதிகளுடன் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. மதுவிலக்குக் காவல் துறைத் தலைவரின் அலுவலகத்தில் ஒரு துணைக் காவல் துறைத் தலைவர் மற்றும் 2 காவல் துறைக் கண்காணிப்பாளர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. மதுவிலக்கு சம்பந்தப்பட்ட குற்றங்களைக் கண்டறிவதற்கென்றே மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதால் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவினர், மாவட்ட காவல்துறையினருடன் இணைந்து, மாநிலம் முழுவதும், நாள்தோறும் திடீர் சோதனைகள் நடத்தி வருகின்றனர். மதுவிலக்குச் சம்பந்தப்பட்ட பணிகளைக் கண்காணிக்கும் பணி, மாநில அளவில் காவல் துறைத் தலைவராலும் (மதுவிலக்கு) மண்டல அளவில் காவல் துறை கண்காணிப்பாளராலும் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு காவல் துறைத் தலைவர் அவ்வப்போது மதுவிலக்கு —ஆயத்தீர்வைத் துறைச் செயலாளரைச் சந்தித்து செய்து முடிக்கப்பட்ட பணிகள் பற்றி அவருக்கு விளக்குகிறார்.

(4) கள்ளச் சாராயம் காய்ச்சுவது மற்றும் அது தொடர்பான குற்றங்கள் நிகழாவண்ணம் தடுப்பதற்கு, வழக்கமாகக் காய்ச்சப்படும் முக்கிய பகுதிகளில் தொடர்ந்து திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வழக்கமாக நடத்தப்படும் திடீர் சோதனைகள் தவிர, மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவினர் மாவட்ட காவல் துறையினருடன் வாரத்திற்கொரு முறை இணைந்து பெரிய அளவில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். மதுவிலக்குச் சம்பந்தப்பட்ட குற்றங்கள் பரவலாக நிலவி வந்த சேலம், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். (கிழக்கு) மற்றும் (மேற்கு), வடாற்காடு-அம்பேத்கார், விழுப்புரம், திருநெல்வேலி-கட்டபொம்மன், இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் தர்மபுரி போன்ற சில காவல் துறை மாவட்டங்களுக்கு மாநிலம் முழுவதும் உள்ள மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவினரை அவர்களது வாகனங்களுடன் வரவழைத்து, மாவட்டங்கள் முழுவதும் முனைப்பான திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

(5) பெரும் திருவிழாக் காலங்களிலும் மற்றும் மதச்சார்பான திருவிழாக் காலங்களிலும், மதுவிலக்குச் சம்பந்தப்பட்ட குற்றங்கள் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்ள, மதுவிலக்கு கொள்கைக்கு எதிரான குற்றம் புரிவோர் மீது திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தீபாவளிப் பண்டிகைக்கு முன்

[1993 ஏப்ரல் 20

கூட்டியே, அதாவது, 7—10—1992 முதல் 24—10—1992 வரையில், தமிழ்நாடு முழுவதும் முனைப்பான வகையில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

(6) தீபாவளிக்கு முன்னர் பெருமளவுக்கு அதிரடி நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. அப்போது 27, 570 மதுவிலக்கு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில், சம்பந்தப்பட்ட கள்ளக் கடத்தல் பொருட்களும், வண்டிகளும் கைப்பற்றப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு :—

	லிட்டர்கள்.
(அ) சாராய ஊறல்கள்	13,26,607
(ஆ) கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயம்	2,37,449
(இ) எரி சாராவி	20,486
(ஈ) கள்	6,856
(உ) ஆந்திரப்பிரதேச சாராய பாக்கெட்டுகள்	7,86,740
(ஊ) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகைகள்—	
முழு புட்டி	1,684
அரை புட்டி	764
கால் புட்டி	79,952
(எ) கார்கள்	9
(ஏ) லாரிகள்	13
(ஐ) ஆட்டோ ரிக்சா	10
(ஒ) வேன்கள்	3
(ஓ) இரு சக்கர வண்டிகள்	46
(ஔ) சைக்கிள்கள்	157

1993 ஏப்ரல் 20]

பொங்கல் விழாவுக்கு முன்னர் (அதாவது 5—1—1993 லிருந்து 13—1—1993 வரையில்) தீவிரமாக மேற்கொள்ளப் பட்ட திடீர் சோதனையில் கண்டுபிடித்து பின்வருபவை கைப் பற்றப்பட்டன :—

கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விபரம்	16,487 வழக்குகள்.

கைப்பற்றப்பட்ட கள்ளக் கடத்தல் பொருட்கள் :

	லிட்டர்கள்
(அ) சாராய ஊரல்கள்	9,74,168
(ஆ) கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயம்	1,16,334
(இ) எரி சாராவி	2,336
(ஈ) கள்	2,684
(உ) ஆந்திரப்பிரதேச சாராய பாக்கெட்டுகள்	1,21,051
(ஊ) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மது வகைகள்—	
முழு புட்டி	2,176
அரை புட்டி	82
கால் புட்டி	10,567
பீர்	8,124

பறிமுதல் செய்யப்பட்ட வண்டிகள் :

(அ) கார்	1
(ஆ) ஆட்டோ ரிக்ஷா	1
(இ) வேன்	1
(ஈ) இருசக்கர வண்டிகள்	13
(உ) மாட்டு வண்டிகள்	2

[1993 ஏப்ரல் 20

இக்கால அளவில் இரு இடங்களில் பரபரப்பூட்டும் பறிமுதல்கள் செய்யப்பட்டன. ஒன்று தூத்துக்குடியில் கலப்பட மது பானத் தயாரிப்பு ஆலை கண்டுபிடிக்கப்பட்டது. மற்றொன்று, சென்னையில் சேத்துப்பட்டில் உள்ள கிடங்கு ஒன்றில் போலி ஆயத்தீர்வை லேபிள்கள் ஒட்டப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு கலப்பட மதுவகைகள் அடங்கிய 20,388 புட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.

7. குறிப்பிடத்தக்க பறிமுதல் தொடர்பான சில சம்பவங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

(அ) 31—7—1992 அன்று, மத்தியப் பிரதேசத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு இரண்டு லாரி டேங்கர்களில் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்பட்ட 21,000 லிட்டர் எரி சாராவியை கோயம்புத்தூருக்கருகில், பாலக்காடு சாலையில், போத்தனூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவல்துறை போக்குவரத்து உதவி ஆய்வாளர் கைப்பற்றினார்.

(ஆ) 5—10—1992 அன்று பெங்களூரிலிருந்து கேரளத்திற்குக் கள்ளத்தனமாகக் கொண்டு செல்லவிருந்த எரி சாராவி அடங்கிய 89 பீப்பாய்களுடன் இரு லாரிகளை, கோயம்புத்தூர்-அவினாசி முக்கிய சாலையில் உள்ள கணியூர் என்ற இடத்தில் கோயம்புத்தூர் மண்டலம், மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவைச்சேர்ந்த காவல்துறை கண்காணிப்பாளரும் அவரது குழுவினரும் கைப்பற்றினர்.

(இ) 11—10—1992 அன்று போலி ஆயத்தீர்வை லேபிள்கள் ஒட்டப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் அடங்கிய 19,200 கால் அளவு புட்டிகளுடன் லாரி ஒன்று கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கள்ளத்தனமாக வரும்போது ஒசூரில் கைப்பற்றப்பட்டது.

(ஈ) 21—10—1992 அன்று இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் அடங்கிய 14,400 கால் அளவுப் புட்டிகளை பெங்களூரிலிருந்து தமிழ்நாட்டிற்கு கள்ளத்தனமாக கொண்டு வரும்போது ஒசூர் நகரில் அவை லாரியுடன் கைப்பற்றப்பட்டன.

8. 1991 ஆம் ஆண்டு 129 கள்ளச் சாராயக்காரர்கள், தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். எப்போதும் இல்லாத அளவில், 1992 ஆம் ஆண்டில், தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் 1117 பிரபலமான கள்ளச் சாராயக்காரர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

1993 ஏப்ரல் 20]

9. மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு மாற்று வேலைவாய்ப்புகள் அளிப்பதன் மூலம் அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கள்ளச்சாராயம் காய்ச்சுவது முற்றிலும் ஒழிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள எம். கரிசல்குளம் கிராமம் இந்த முயற்சிக்கு கிடைத்த பாராட்டத்தக்க வெற்றியாகத் திகழ்கிறது. வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டத்தில் சாமந்திபுரம், கூர்மபாளையம் கிராமங்களில் இருந்த கள்ளச்சாராயக் குற்றவாளிகளுக்கும் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

மதுவிலக்குக் குற்றங்களை இணக்க முறையில் தீர்வு செய்தல் :

குறிப்பிட்ட சில மதுவிலக்குக் குற்றங்களை இணக்க முறையில் தீர்வு செய்வதற்கு அதிகாரங்களைப் பெற்றுள்ள ஏனைய அதிகாரிகளுடன் துணைக் கண்காணிப்பாளர்கள், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள், காவல்துறை மண்டல கண்காணிப்பாளர்கள் ஆகிய பதவித் தரத்திலுள்ள காவல்துறை அதிகாரிகளுக்கும் அரசு 1992 அக்டோபரில் குற்றங்களை இணக்க முறையில் தீர்வு செய்ய அதிகாரமளித்துள்ளது.

மதுவிலக்கைச் செயற்படுத்தும் பிரிவைச் சேர்ந்த காவல்துறை அதிகாரிகள் பின்வரும் தொகைகளை பின்வரும் கால அளவுகளில் இணக்க முறைத்தீர்வுக் கட்டணமாக வசூலித்துள்ளனர். விவரம் வருமாறு :

	ரூ.
1992 நவம்பரில்	16,64,600
1992 டிசம்பரில்	36,73,340
1993 ஜனவரியில்	65,59,500

மதுவிலக்கு குற்றங்களில் சம்பந்தப்பட்ட வாகனங்களைப் பறிமுதல் செய்யுமாறு அரசு, மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தர விட்டது. காவல்துறையினர், மதுவிலக்குக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட வாகனங்களைப் பறிமுதல் செய்வது குறித்து இதுவரை 595 அறிக்கைகளை மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பியுள்ளனர்.

X. போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருள்களைத் தடுத்தல்.

போதை மருந்துகள் தொடர்பான சட்டத்தை வலுவுடையதாக (தொகுத்து) விளங்கத்தக்கவகையில் திருத்துவதற்காகவும் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் குறித்த செயல்பாட்டைக் கட்டுப்படுத்தி, முறைப்படுத்துவதற்குமான வழிவகைகளைக் கடுமையாக்குவதற்காகவும் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் ஆகியவைகளின் கள்ளப்

[1993 ஏப்ரல் 20

புழக்கத்தின் மூலமாக அடைந்த சொத்தும் அல்லது பயன்படுத்தப்பட்ட பொருள்களைப் பறிமுதல் செய்யவும், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருள்கள், அவை தொடர்புடைய பொருள்கள் ஆகியவை பற்றி நடந்துள்ள பன்னாட்டு கருத்தரங்கங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை செயல்படுத்தவும், மத்திய அரசு, 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தை (போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், 1985) இயற்றியுள்ளது. இச்சட்டம் மற்றும் இதன் தொடர்பாக உருவாக்கப்பட்ட விதிகளுடன் 14—11—1985 முதல் அமுலுக்கு வந்தது. இச்சட்டம் அபராதம் விதிப்பதற்கும், கடுங்காவல் தண்டனை விதிப்பதற்கும் சில குற்றங்களைப் பொறுத்தவரையில் இது தொடர்பாக ஏற்கனவே குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருந்தால் தண்டனையை அதிகரிப்பதற்கும், மேலும் சில குற்றங்களைப் பொறுத்த மட்டில் ஏற்கனவே குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருந்தால் மரண தண்டனை விதிப்பதற்கும் வகை செய்கிறது.

இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் எந்தத் தண்டனையையும் ஒத்திவைக்கவோ அல்லது ரத்து செய்யவோ அல்லது குறைக்கவோ இயலாது. இச்சட்டத்தின்கீழ் இழைக்கப்படும் ஒவ்வொரு குற்றமும் பிடி ஆணை வேண்டாத, பிணையில் விடத்தகாத குற்றமாகும்.

மத்திய அரசு மற்றொரு சட்டத்தை அதாவது 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருள்கள் கள்ளப் புழக்கத் தடுப்புச் சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நாளிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. இச்சட்டத்தின்படி, போதை மருந்துகளைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்வதில் ஈடுபடுபவர்களை குறைந்த அளவு ஓராண்டு காலத்திற்கும் அதிக அளவாக இரண்டாண்டு காலத்திற்கும் தடுப்புக் காவலில் வைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருள்கள் கள்ளப் புழக்க தடுப்புச் சட்டத்தின்கீழ் அரசு செயலர், மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்களால் பிறப்பிக்கப்படும் தடுப்புக் காவல் ஆணைகளை ஆய்வு செய்வதற்காக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 1–8–1989 ஆம் நாளிட்ட 888 ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளின் படி, ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 1990-ஆம் ஆண்டில் ஒரு குற்றவாளி மட்டுமே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதை ஒப்பிடும்போது 1992 ஆம் ஆண்டில், சென்னை மாநகர் காவல் பிரிவு, தமிழ்நாடு போதை மருந்து நுண்ணறிவுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை, வருவாய் புலனாய்வு

1993 ஏப்ரல் 20]

இயக்ககம், போதை மருந்துக் கட்டுப்பாட்டு பிரிவு ஆகியவை போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருள்கள் கள்ளப் புழக்கத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இதுவரையில் 40 பேரைத் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர். 1991 ஆம் ஆண்டில் எவரும் தடுப்புக் காவலில் வைக்கப்படவில்லை.

இம் மாநிலத்தில், மாவட்ட காவல் துறை, இரயில்வே காவல் துறை, மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு, போதை மருந்து நுண்ணறிவுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை, போதைமருந்து கட்டுப்பாட்டுப் பிரிவு, வருவாய் புலனாய்வு இயக்ககம் ஆகியவை போதை மருந்து தடுப்புச் சட்டத்தை உண்மையாகவும் உணர்வுப் பூர்வமாகவும் செயல்படுத்தி வருகின்றன. போதை மருந்து புலனாய்வுப் பிரிவு, காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையில் இயங்குகிறது. இவருக்கு உதவியாக காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவர், துணைக் கண்காணிப்பாளர் ஒருவர், 8 ஆய்வாளர்கள், 9 உதவி ஆய்வாளர்கள், 10 ஒட்டுநர்கள் உட்பட ஏனைய பதவித் தரத்திலுள்ள 71 பேர் ஆகியோர் பணி புரிகின்றனர். இம் மாநிலத்தில் சென்னை, மதுரை, திருச்சி சேலம், கள்ளக்குறிச்சி, திண்டுக்கல், தேனி ஆகிய இடங்களில் உள்ள ஏழு போதை மருந்து புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவுகளும் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

(i) பின்வரும் இடங்கள், கஞ்சா பயிரிடுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ள இடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன.

1. கல்ராயன் குன்றுகள் — தென்னாற்காடு மாவட்டம்.

2. வத்தல்மலை — தருமபுரி மாவட்டம்

3. கடமலைக்குண்டில் உள்ள மேற்கு மலைத் தொடர். — மதுரை மாவட்டம்

4. கோயம்புத்தூர், திண்டுக்கல்— அண்ணா மாவட்டங்களின் எல்லையில் உள்ள மேற்கு மலைத் தொடர்.

5. வரிசைநாடு — மதுரை மாவட்டத்திலுள்ள மேற்கு மலைத் தொடர்கள்.

6. போடிமெட்டு — மதுரை மாவட்டம்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 20

7. மேற்கு மலைத் தொடர்கள். — காமராசர் மாவட்டம் பிளவுக்கல் அணைக்கு மேலே.

(ii) மருந்துப் பொருள்கள் எடுத்துச் செல்வதற்கு பின்வரும் இடங்கள் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவந்துள்ளன.

1. மீனம்பாக்கம் விமான நிலையம்
2. ஆதம்பாக்கம்
3. பரங்கிமலை
4. மதுரவாயல்
5. பம்மல்
6. பெரியமேடு
7. மூலக்கொத்தளம்
8. இராயபுரம்
9. தூத்துக்குடி
10. திருச்சி

போதை மருந்துகள் புழக்கத்தை குறைப்பது தொடர்பாக மாநிலக் காவல் துறை மற்றும் போதை மருந்து புலனாய்வுப் பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றின் செயல்பாடுகள் பாராட்டத்தக்க வகையில் உள்ளன. இத்தகைய குற்றங்களைக் குறைக்க, தமிழ்நாட்டில் எட்டு தொண்டு நிறுவனங்கள் ஆலோசனை கூறுதல், போதை மருந்து அடிமை நிலையிலிருந்து விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு மையங்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன. அவற்றில் பெரும்பாலானவை மத்திய அரசு மக்கள் நல்வாழ்வு அமைச்சகத்திடமிருந்து 90 சதவிகித மானியம் பெறுகின்றன.

XI. சமூக விரோதிகளைத் தடுப்புக் காவலில் வைத்தல்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், மருந்து - சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் புரிவோர், நில ஆக்கிரமிப்பாளர்கள் என சமுதாயத்தில் அழைக்கப்படும் சமூக விரோத சக்திகளின் பயங்கரமான நடவடிக்கைகள் சமூகத்திற்கு மன உளைச்சல் ஏற்

படுத்துவதாகவும், பொது சுகாதாரத்திற்கும் அமைதிக்கும் கொடிய அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவும், குறிப்பாக நகர் புற மக்களுக்கு அமைந்துள்ளன.

இம் மாநிலத்தில் பொது ஒழுங்கைப் பராமரிக்கவும், இந்த சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைகளை தடுக்கவும், மேற்கூறப்பட்ட ஆறு வகை சமூக விரோத சக்திகளைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கென 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள். மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள் மற்றும் நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982) இயற்றப்பட்டது. இச்சட்டம் 5–1–1982 முதல் அமுலுக்கு வந்தது. 5–1–1982 முதல் 28–2–1993 வரையுள்ள காலத்தில் இச்சட்டத்தின்படி தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சமூக விரோத நபர்கள் குறித்த விவரங்கள் இணைப்பு XII-இல் உள்ள அறிக்கையில் தரப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் 1991 ஆம் ஆண்டில் 372 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 1992 ஆம் ஆண்டில் இதற்கு முன் இல்லாத அளவில் 1909 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

XII. மாநில அளவில் மதுவிலக்குப் பிரச்சாரக்குழுவை அமைத்தல்.

மது நமது மாநிலத்தில் ஏழை மக்களின் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. மதுவை அருந்தி தங்களுடைய வாழ்வை அழித்துக் கொள்ளும் மக்களைக் காப்பாற்றும் நோக்குடன், நாட்டு மதுக்கடைகளை மூடுவதால் அரசுக்கு ஏற்படும் பெருத்த வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாது இவ்வரசு, 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16ஆம் நாள் முதல் நாட்டு மதுக்கடைகளை மூடியது. நாட்டு மதுக்கடைகளை மூடிய அதே நேரத்தில், கள்ளச்சாராயம் தயாரிப்பதில் மற்றும் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுத்தது.

கள்ளமது வருவதற்கான வழிகளை ஒருபுறத்தில் தடுக்கும் அதே வேளையில், குடிப்பழக்கத்தினால் மதுவிற்கு அடிமையானவர்களை விடுவித்து அவர்களை சீர்திருத்தி, சமூகத்தில் மறுவாழ்வு அளிப்பதற்கும் மற்றும் மதுவின் தீமைகளை பரப்புவதற்கும் நடவடிக்கைகளை எடுப்பதும் அதே அளவில் முக்கியம் வாய்ந்தது என உணரப்பட்டது. இந்நோக்கத்திற்காக சீரிய முறையில் நடவடிக்கை எடுக்கக் கருதப்பட்டது மதுவிலக்கின் நன்மைகளையும் குடிப்பழக்கத்தின் தீமைகளையும் பரப்பவும், அதற்கான தகுந்த நடவடிக்கைகளை வகுக்க

[1993 ஏப்ரல் 20

வும் முதலமைச்சர் அவர்களின் தலைமையில், நற்பெயர் உள்ள ஆடவர் மற்றும் மகளிர் கொண்ட மாநில அளவிலான மதுவிலக்கு பிரச்சாரக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான மதுவிலக்கு பிரச்சாரக்குழு 22—10—1991 அன்று நடத்திய கூட்டத்தில் செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைக்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது :—

(1) மதிய சத்துணவுக் கூடங்களை மாலை வேளைகளில் மதுவிலக்குப் பிரச்சாரப் பணிகளுக்காக பயன்படுத்துதல்.

(2) மாநில அளவிலான முதலமைச்சர் மருத்துவ முகாம்களில் மதுவினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளித்தல்.

(3) தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றின் மூலமும், வீடியோ கேசட்டுகளில் சிறிய நாடகங்களை தயாரித்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள பொது மக்களுக்குத் திரையிட்டுக் காட்டுவது மூலமாகவும் மதுவிலக்கு பிரச்சாரத்தை தீவிரப்படுத்துதல்.

(4) குடிப்பழக்கத்தின் தீமைகளை எடுத்துக்காட்டும் ''நீங்க நல்லா இருக்கணும்'' என்னும் மதுவிலக்கு பிரச்சார முழு அளவு வணிக ரீதியிலான திரைப்படம் ஒன்று மொத்தம் சுமார் ரூ. 85 இலட்சம் செலவிலும், 'வெளிச்சம்' என்னும் தமிழ் நாடகம் ரூ. 2.35 இலட்சம் செலவிலும் தயாரிக்கப்பட்டன. நாடகம் 1—5—1992 அன்று நடத்தப்பட்டது. திரைப்படம் 26—11— 1992 அன்று பொதுமக்களுக்காகத் திரையிடப்பட்டது.

(5) மதுவிலக்குக் கொள்கை குறித்து சிறுகதைகள், நாடகங்கள் எழுதும் மாணவர்களுக்கு ரூ. 1,000, ரூ. 600 ரூ. 400 மதிப்புள்ள பரிசுகள் வழங்குதல்.

(6) ''மதுவிலக்கு'' என்னும் பெயரில் முதலமைச்சர் எழுதிய கட்டுரையை 10 ஆவது வகுப்பு தமிழ் பாட புத்தகத்தில் பாடமாகச் சேர்த்தல். ''பெண்ணுரிமை'' என்ற பெயரில் முதலமைச்சர் எழுதிய மற்றொரு கட்டுரையை 12ஆவது வகுப்பு பொது தமிழ் பாட புத்தகத்தில் பாடமாகச் சேர்த்தல்.

(7) செய்தித்தாள்களில் அரசினர் விளம்பரங்களை வெளியிடும்போது மதுவிலக்கு பற்றி இருவரி பிரச்சார வாசகங்களைச் சேர்த்தல்.

1993 ஏப்ரல் 20]

(8) திரைப்படங்களில் மது அருந்தும் காட்சிகளை அனுமதிப்பதைத் தவிர்க்கும்படி தணிக்கை வாரியத்திற்கு தெரிவிக்குமாறு மத்திய அரசுக்கு எழுதப்பட்டது. மத்திய அரசு 16—12—1992 ஆம் நாள் நிலவரப்படி திருத்திய வழி காட்டிக் குறிப்புகளை இணைத்து பதிலளித்துள்ளது. அதில் மது அருந்துவதை நியாயப்படுத்தும் அல்லது பெருமைப்படுத் தும் காட்சிகள் காட்டப்பட வேண்டாம் என்றும், போதைப் பொருளுக்கு அடிமையாவதை ஊக்குவிக்கும், நியாயப்படுத் தும் பெருமைப்படுத்தும் காட்சிகள் காட்டப்பட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவின் பின்வரும் பரிந்துரைகள் அரசின் தீவிர பரிசீலனையிலுள்ளன :

(1) முறைச்சாராக் கல்வித் திட்டத்தின்கீழ் வேலை யற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்து அவர்களிடம் மதுவிலக்கு பிரச்சாரப் பணியை ஒப்படைத்தல்.

(2) தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத் தில் தண்டனை விதித்துறைகள் போதுமான அளவில் உள்ளனவா என்பதை பரிசீலிப்பதற்கு வல்லுநர் குழுவை அமைத்தல்.

(3) தொழில் நிறுவனங்களின் ஆதரவுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் குடிப்பழக்க மீட்பு மையங்களை ஏற்படுத்தல்.

(4) பயன்படுத்தப்பட்ட நீரை மீண்டும் பயன்படுத்து வது போன்று பறிமுதல் செய்யப்பட்ட கள்ளச்சாராயத்தை மீண்டும் பயன்படுத்துவதற்காக சுத்தப்படுத்தல்.

(5) கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் சிறு தொழில்களைத் தொடங்குதலும், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ்நிதியுதவி செய்தலும்.

(6) கணிசமான அளவு பெண் உறுப்பினர் பிரதிநிதிகளைச் சேர்த்து தற்போதுள்ள ஒரத்தநாடு மாதிரி கிராம குழுக்களை மாற்றியமைத்தல். மாநிலத்தில் திறம்பட மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வதற்கு நகராட்சி, வட்டார வளர்ச்சி அள விலும், மாவட்ட அளவிலும் புதிய குழுக்களை அமைத்தல்.

(7) குடிபோதையுடன் வண்டி ஓட்டியதாகக் கண்டறிந்த ஓட்டுநர்களின் உரிமத்தை ரத்து செய்தல்.

(8) குடிப்பழக்கத்தை தடை செய்யும் வகையில் கிராமங் களில் சமூகப் புறக்கணிப்பு முறையைக் கொண்டு வருதல்

[1993 ஏப்ரல் 20

(9) கள்ளச்சாராயம், காய்ச்சுதல், விற்பனை செய்தல், குடித்தல் ஆகியவை இல்லாத தொகுதிகளைச் சேர்ந்த சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு கேடயம் வழங்குதல்.

XIII. முக்கிய கருத்துக்கள் அடங்கிய முடிவுரை

1. அரசுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்படுவதையும் பொருட்படுத்தாது, பொதுவாகப் பொதுமக்களுக்கும், குறிப்பாக மகளிருக்கும் துன்பம் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகை சில்லரை விற்பனைக் கடைகளுடன் இணைக்கப்பட்டுள்ள மது அருந்தும் இடவசதிகள் (பார்) 1—6—1993—லிருந்து நீக்கப்படுகின்றன.

2. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகை சில்லறை விற்பனை மூலம் கிடைத்த ஆயத்தீர்வை 1991—92 ஆம் ஆண்டில் ரூ. 32.18 கோடியிலிருந்து 1992—93 ஆம் ஆண்டில் ரூ. 98.46 கோடியாக உயர்ந்துள்ளது. ஏலம் எடுப்பவர்களிடையே போட்டியை ஊக்கப்படுத்தியதன் மூலமும், அவர்களுக்கிடையே நிலவிய கூட்டணி அமைத்தல் மற்றும் கூட்டுச்சதியையும் முறியடித்தல் மூலமும் வருவாய் அதிகரித்தது.

3. கரும்புச்சாறு கசண்டை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்பவர்களிடையே போட்டியை ஊக்குவித்ததன் மூலம் முன்பு ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. 120 கிடைப்பதற்குப் பதிலாக தற்போது ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. 485 கிடைக்கிறது.

4. உள்ளூர் கரும்புச்சாறு கசண்டைப் பயன்படுத்துபவர்களை ஊக்குவித்தும் இதனை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றதன் மூலமும் உரிய நேரத்தில் திறம்பட நடவடிக்கை எடுத்ததாலும் கரும்புச்சாறு கசண்டு இருப்புச் சேர்ந்துவிடும் பிரச்சினையும் அதனால் மாசுக்கேடு ஏற்படுதவால், சுற்றுச்சூழ்நிலை பாதிக்கப்படும் அபாயமும் தவிர்க்கப்பட்டது.

5. உபரியாக உள்ள கரும்புச்சாறு கசண்டை பயன்படுத்தும் பொருட்டும், மாநிலத்தில் ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்ட இரசாயன தொழிற்சாலைகளின் வளர்ச்சியைப் துரிதப்படுத்த 4 புதிய வடிசாலைகளுக்கு கரும்புச்சாறு கசண்டு ஒதுக்கீடு செய்வதற்கும் ஏற்கனவே உள்ள 4 வடிசாலைகளுக்கு கரும்புச்சாறு கசண்டு அளவை உயர்த்தவும் இசைவுக் கடிதங்கள் அளிக்கப்பட்டன.

1993 ஏப்ரல் 20]

6. மாநிலத்தில் மதுவிலக்கு கொள்கையைத் திறம்பட செயற்படுத்துவதை உறுதி செய்வதற்காக இந்த ஆண்டில் ரூ. 7 கோடி செலவில் கூடுதலாக 52 மதுவிலக்கு செயற்பாட்டு பிரிவுகளுக்கு ஒப்புதலளித்ததன் மூலம் மதுவிலக்கு செயற்பாட்டு துறை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள் மற்றும் நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 14-1982) 1992ஆம் ஆண்டில் 1,909 பேர் காவலில் வைக்கப்பட்டனர்.

8. மதுவிலக்கு-செயற்பாட்டு பிரிவும், காவல் துறையினரும் 1992ஆம் ஆண்டில் 5,03,677 மதுவிலக்கு குற்றங்களைக் கண்டுபிடித்தனர். அவர்கள் திறம்பட எடுத்த நடவடிக்கையினால் முந்தைய ஆண்டைவிட 80 சதவீதத்திற்கும் அதிகமான வழக்குகளைக் கண்டுபிடித்தனர். 1991 ஆம் ஆண்டில் 2,30,884 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. 1992ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 3,44,431 ஆக உயர்ந்தது.

9. பொதுமக்களுக்கு குடியின் தீமையை எடுத்துக்கூறும் பொருட்டு 1—5—1992 அன்று ''வெளிச்சம்'' என்னும் நாடகம் ரூ. 2.35 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது. மேலும் தொடர்ந்து நடத்தப்படுகிறது. ''நீங்க நல்லா இருக்கணும்'' என்ற வர்த்தக ரீதியான திரைப்படம் ரூ. 8[illegible] இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு 26—11—1992 அன்று திரையிடப்பட்டு, தொடர்ந்து காட்டப்படுகிறது. இந்த திரைப்படத்திற்கு , இதர சமுதாயப் பிரச்சினைகள் என்ற வகையின்கீழ் சிறந்த படம் என்று மைய அரசால் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது மனதிற்கு உவகை அளிக்கக்கூடியதாகும். இவ்விருது விரைவில் வழங்கப்பட உள்ளது.

இணைப்பு 1.

1985-86 முதல் 1992-93 வரையில் ஆண்டு வாரியாக தயாரிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட கருப்பஞ் சாற்றுக் கசண்டின் அளவு :

(கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டு—அக்டோபர் முதல் செப்டம்பர் வரை.)

ஆண்டு	தொடக்க இருப்பு.	உற்பத்தி	மொத்த அளவு..	பயன் படுத்தப் பட்ட அளவு.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(இலட்சம் மெட்ரிக் டன்களில்)		
1985-86	0.07	3.66	3.73	3.68	0.05
1986-87	0.05	3.73	3.78	3.01	0.76
1987-88	0.76	3.64	4.40	3.26	1.14
1988-89	1.14	4.37	5.51	4.63	0.88
1989-90	0.88	3.85	4.73	3.70	1.03
1990-91	*1.06	5.88	6.94	4.38	2.56
1991-92	2.56	6.09	8.65	5.79	2.86
1992-93 (10-92 முதல் 2-93 வரை)	2.86	2.18	5.04	3.05	1.99

*1989-90-ம் ஆண்டில் பயனீட்டிற்கு தகுதியற்றது என தள்ளுபடி செய்யப்பட்ட 0.03 இலட்சம் மெட்ரிக் டன் உள்ளடக்கியது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 2.

1987-88முதல் 1992-93 ஆண்டுவரை உள்ள கருப்பஞ் சாற்றுக் கசண்டு ஆண்டுகளில் மாநிலங்களுக்கிடையிலான ஒதுக்கீட்டின் கீழ் மைய அரசு வழங்கிய அனுமதியின்படி பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டின்அளவு விவரம்.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டு.	ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநிலத்தின் பெயர்.	ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்
(1)	(2)	(3)
1987-88	இல்லை.	இல்லை.
1988-89	ஆந்திரப்பிரதேசம்	19,096.000
	கேரளா	23,705,000
	ஒரிசா	998,830
	மேற்கு வங்காளம்	2,727,440
1989-90	கேரளா	950,000
	மேற்கு வங்காளம்	2,493,690
	ஆந்திரப்பிரதேசம்	3,123,000
1990-91	கேரளா	13,665,300
	ஆந்திரபிரதேசம்	451,320
	மேற்கு வங்காளம்	9,998,840
1991-92	மேற்கு வங்காளம்	5,313,000
	கேரளா	10,998,000
	மத்தியபிரதேசம்	12,359,000
(1992-93	கேரளா	14,143,000
21-3-93-ல்	மத்தியபிரதேசம்	50,764,000
உள்ளவாறு)	மேற்குவங்காளம்	686,000

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-3.

1987-88 முதல் 1992-93ஆம் ஆண்டு வரையிலான கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவு :-

(அளவு மெட்ரிக் டன்களில்)

1987-88	இல்லை.
1988-89	85,422
1989-90	20,000
1990-91	99,947
1991-92	39,606
1992-93	20,000*

* ஏற்றுமதி பணி நடைபெறுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - 4.

கருப்பஞ்சாற்றுக் கசண்டின்மீது விதிக்கப்படும் பல்வேறு தீர்வை விவரங்கள்.

(28-2-1993-இல் உள்ளவாறு)

	விலை.	மத்திய ஆயத்-தீர்வை.	சிறப்பு ஆயத் தீர்வை.	விற்பனை வரி 25%	விற்பனை வரி மீது சர்சார்ஜ் 15%	மொத்தம்.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாயில்)			
முதல் தரம்	144	175	25	86.00	12.90	442.90
இரண்டாவது தரம்	115	175	25	78.75	11.81	405.56
மூன்றாம் தரம்	86	175	25	71.50	10.73	368.23

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 5அ.

1980-81 முதல் 1992-93 வரையில் தயாரிக்கப்பட்டதும், உபயோகிக்கப்பட்டதுமான சாராவியின் அளவு.

(சாராவி ஆண்டு : டிசம்பர் முதல் நவம்பர் வரை.)

ஆண்டு.	தொடக்க இருப்பு.	இந்த ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட சாராவி.	அருந்தும் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சாராவி.	தொழில் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சாராவி.	முடிவான இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		(இலட்சம் லிட்டர்களில்.)			
1980-81	26.96	3,77.21	1,23.16	1,94.91	61.47
1981-82	61.47	5,01.74	3,37.91	85.19	1,05.28
1982-83	1,05.28	5,78.51	5,00.18	64.67	74.80
1983-84	74.80	5,60.84	5,64.71	60.17	6.07
1984-85	6.07	5,79.14	4,66.78	93.98	21.16
1985-86	21.16	6,81.87	5,84.80	52.20	54.46
1986-87	54.46	6,32.08	1,97.91	2,97.75	70.28
1987-88	70.28	6,48.03	1,81.66	2,93.01	50.36
1988-89	50.36	7,11.10	1,65.31	3,76.11	1,06.10
1989-90	1,06.10	6,72.09	2,20.94	4,18.81	73.73
1990-91	73.73	7,68.03	3,60.00	3,98.32	51.26
1991-92	51.26	9,51.50	2,66.04	5,78.45	85.51
1992-93 (12/92 முதல் 3/93 வரை.)	85.51	3,88.51	1,09.77	2,65.53	87.41

இணைப்பு-6.

ஆண்டு வாரியாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகள்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள்

(பல்க் லிட்டர்களில்.)

1985-86	90,66,299
1986-87	1,77,58,623
1987-88	3,25,86,089
1988-89	4,01,06,485
1989-90	3,47,52,995
1990-91	2,89,46,786
1991-92	4,41,64,814
1992-93	6,39,62,164

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பீர் உற்பத்தி.

(பல்க் லிட்டர்களில்.)

1985-86	9,71,09,937
1986-87	14,08,20,201
1987-88	14,18,38,663
1988-89	15,20,48,738
1989-90	18,19,37,597
1990-91	24,58,53,511
1991-92	3,36,33,287
1992-93	4,64,04,951

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 7.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள் பீர் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை.

	உள்ளூர்.	இறக்குமதி.	ஏற்றுமதி.
(1)	(2)	(3)	(4)
இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள்.			
ஆயத்தீர்வை	1 புரூப் லிட்டருக்கு ரூ. 40. (சாதாரண வகை)	1 புரூப் லிட்டருக்கு ரூ. 40. (சாதாரண வகை)	1 புரூப்லிட்டருக்கு ரூ. 30.
	1 புரூப் லிட்டருக்கு ரூ. 70 (நடுத்தர வகை)	1 புரூப் லிட்டருக்கு ரூ. 70. (நடுத்தர வகை)	..
	1 புரூப் லிட்டருக்கு) ரூ. 85. (உயர்தர வகை)	1 புரூப் லிட்டருக்கு ரூ. 85. (உயர்தர வகை)	..
விற்பனைக் கட்டணம் (உற்பத்தியாளர்)	1 பல்க் லிட்டருக்கு ரூ. 5	1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.	1 பல்க் லிட்டருக்கு ரூ. 5.
விற்பனைக் கட்டணம் (மொத்த விற்பனையாளர் டாஸ்மாக்)	1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.	1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.	—
கூடுதல் விற்பனைக் கட்டணம் (டாஸ்மாக்)	1 பல்க் லிட்டருக்கு ரூ. 8.29.	..	..

(1)	(2)	(3)	(4)
இறக்குமதி அனுமதிக் கட்டணம்.		1 புரூப் லிட்டருக்கு ரூ. 5.	..
ஏற்றுமதி அனுமதிக் கட்டணம்	..	..	அனுமதி ஒன்றுக்கு ரூ. 10.
<u>பீர் :</u>			
ஆயத்தீர்வை	1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.50.	1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.50.	1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.40.
விற்பனைக் கட்டணம்.	1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50.	1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50.	1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.10
விற்பனைக்கட்டணம் (மொத்த விற்பனையாளர் டாஸ்மாக்)	1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50.	1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50.	..
கூடுதல் விற்பனைக் கட்டணம் (டாஸ்மாக்)	1 பல்க் லிட்டருக்கு ரூ. 4.30.	..	..
இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம்	..	மதிப்பில் 10 சதவீதம்.	
ஏற்றுமதி அனுமதிக் கட்டணம்	..	..	அனுமதி ஒன்றுக்கு ரூ. 10.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 8.

1981-82 முதல் 1992-93 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனை உரிமம் வழங்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை :—

1981-82	1,211
1982-83	1,225
1983-84	1,228
1984-85	1,229
1985-86	1,231
1986-87	2,254
1987-88	2,317
1988-89	2,349
1989-90	3,369
1990-91	2,372
1991-92	3,049
1992-93*	4,216

*1992-93ஆம் ஆண்டில் மாநிலத்தில் 3,334 பார் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 9.

1987ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு வரையிலும் துப்பறியப்பட்ட மதுவிலக்கு வழக்குகள் பறிமுதல் செய்யப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை, பறிமுதல் செய்யப்பட்ட கள்ளக்கடத்தல் பொருட்கள் ஆகியவை பற்றிய விவரங்கள்.

வரிசை எண் மற்றும் விவரம்.	1987	1988	1989	1990	1991	1992
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. துப்பறியப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை.	2,29,014	4,08,326	5,94,929	3,78,298	2,79,318	5,03,677
2. பறிமுதல் செய்யப்பட்ட கள்ளச் சாராய அளவு (லிட்டர்களில்)	27,30,120	35,47,099	57,79,871	38,43,245	25,44,922	40,73,420
3. அழிக்கப்பட்ட ஊறலின் அளவு (லிட்டர்களில்)	2,49,36,679	4,24,80,579	4,08,24,780	1,47,89,457	1,16,88,414	1,99,53,370
4. பறிமுதல் செய்யப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் அளவு (பாட்டில்களில்)						
(அ) முழு பாட்டில்	12,631	1,346	7,680	1,343	6,734	16,205
(ஆ) அரைபாட்டில்	5,491	1,776	6,674	6,255	2,024	10,442
(இ) கால் பாட்டில்	47,722	32,701	1,13,801	38,640	54,083	3,28,532

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5. பதிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் :

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
(அ) கார்	246	285	467	269	201	195
(ஆ) ஜீப்	11	6	11	11	16	14
(இ) வேன்	76	48	55	55	42	64
(ஈ) ஆட்டோரிக்ஷா	90	84	113	98	87	249
(உ) லாரி	43	35	57	36	48	98
(ஊ) மோட்டார் சைக்கிள்.	221	360	658	205	183	620
(எ) படகு	1	..	2	..	4	7
(ஏ) ஸ்கூட்டர்	22	21	62	71	44	40
(ஐ) பஸ்	4	2	24	4	2	6
(ஒ) பார வண்டி-பார கட்டை வண்டி.	8	4	5	..	1	2
(ஓ) சைக்கிள்	..	..	..	1,887	596	2,098
மொத்த வாகனங்கள்.	722	845	1,487	2,646	1,224	3,393

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-10.

போதை மருந்து ஒழிப்பது சம்மந்தப்பட்ட குற்றங்களில் மாவட்ட காவல்துறை மற்றும் போதை மருந்து புலனாய்வு காவல்பிரிவு, சி.ஐ.டி. ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்ட விவர அட்டவணை.

ஆண்டு.	வழக்குகளின் எண்ணிக்கை.	குற்றம் சாட்டப் பட்டவர்களின் எண்ணிக்கை.	மலைப் பிரேதேச திடீர் சோதன எண்ணிக்கை.	கஞ்சா பயிர் செய்யப் பட்ட நிலப் பரப்பு (ஏக்கரில்)	கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் அளவு (கிலோ கிராமில்)					(கிலோ மதிப்பு (ரூபாயில்)
					கஞ்சா.	அபின்.	ஹெராயின்.	மார்ஃபின்.	கஸகஸா விதை.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
1989	2,642	2,642	9	213	3.61,764.000	45.100	11.956	2(ஆம்பியூல்ஸ்)	..	72,51.74,620
1990	2,357	2,453	19	225	1,15,691,430	35,084	4,237	..	..	23,21,57,390
1991	5,207	5,549	28	113,75	60,696.340	7.174	2.293	..	61,600	12,16,94,940
1992	4,497	4,776	30	176,58	1,55,851,752	3,563	17.573	..	21.106	31,25,65,350
1989	164	174	4	91	61,049,431	0.130	11.55	..	..	12,32,55,362
1990	401	474	8	90	70,952,587	10,040	1,392	..	..	14,23,44;700
1991	707	687	14	60,75	52,112,091	1.060	2,157	61,600	..	10,44,51,750
1992	648	780	14	51,08	33,959,750	3.550	16,384	21,100	..	6,96.62,290

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1987 ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு மார்ச் வரையிலும் மதுவிலக்கு செயல்பாட்டு பிரிவு மற்றும் மாவட்ட காவல் துறையினரால் துப்பறியப்பட்டு முடிக்கப்பட்ட மதுவிலக்கு வழக்குகள் பற்றிய விவரங்கள்.

வரிசை எண்ணும் விபரங்களும்	1987	1988	1989	1990	1991	1992	(1993 மார்ச் வரை)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1. துப்பறியப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை.	229,014	408,326	594,929	378,298	279,318	503,678	123,455
2. குற்ற வழக்குகளின் எண்ணிக்கை.	205,633	325,021	555,049	372,685	270,231	483,455	118,946
3. தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	165,827	279,059	537,748	345,464	225,272	336,661	30,275
4. விடுவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	28,476	28,705	1,967	927	496	3,213	114
5. திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	11,094	4,752	759	78	42	..	..
6. விசாரணை முடிவுறாமல் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை.	236	2,505	14,575	26,216	44,421	131,989	40,021
7. நடவடிக்கை எடுக்கப்படாமல் விட்டுவிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	23,369	83,109	39,556	3,516	5,074	4,557	1,166
8. புலனாய்வில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை.	12	196	324	2,007	4013	15765	3,290

இணைப்பு 12.

தமிழ்நாடு சட்டம் 14/1982 (குண்டர்கள் சட்டம்)
5-1-1982 முதல் 1993 பிப்ரவரி வரை குண்டர்கள் சட்டத்தின்படி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை.

(ஆண்டு வாரியாக, தரம் வாரியாக விவரம்.)

வருடம்.	கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள்	மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் வரும் குற்றவாளிகள்.	வனச் சட்டத்தின் கீழ் வரும் குற்றவாளிகள்.	குண்டர்கள்.	விபச்சாரத் தொழில் குற்றவாளிகள்.	நில ஆக்கிரமிப்பாளர்கள்	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1982	62	3	..	76	3	..	144
1983	45	..	..	204	..	..	249
1984	87	..	..	462	1	..	550
1985	100	7	..	367	1	1	476
1986	106	1	..	346	5	..	458
1987	237	..	..	322	3	..	562
1988	349	3	3	284	7	1	647
1989	126	..	2	116	3		247
1990	96	..	2	228	1	..	327
1991	129	..	51	191	1	..	372
1992	1,117	..	267	523	2	..	1,909
(1993 பிப்ரவரி வரை)	184	..	46	64	1	..	295
மொத்தம்	2,638	14	371	3,183	28	2	

இணைப்பு 13.

கடந்த ஐந்தாண்டுகளில் பல்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் ஈட்டப்பட்ட ஆயத்தீர்வை வருவாய் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வருவாய்த் கணக்குத் தலைப்பு.	1988-89	1989-90	1990-91	1991-92	1992-93 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு
	(ரூபாய் இலட்சத்தில்)				
(1)	(1)	(3)	(4)	(5)	(6)
1 நாட்டுச் சாராவி (சாராயம்)	95.08	2,19.39	1,54,64.41	49,16.12	
2 புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்)	3,55,41	1,67.02	12,45.75	17.37	
3 மால்ட் வகை மது (பீர்)	7,39.31	12,15.13	26,79.12	30,42.13	
4 வெளிநாட்டு மது, சாராவி	1,24,43.70	2,52,92.96	2,28,89.08	3,92,47.38	
5 வணிக ரீதியான, இயல்பு மாற்றப்பட்ட சாராவி	6,96,74	25,53.81	96.74	17.43	4,50,00.00
6 மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள்.	60.71	2,54,68	2,39.40	2,98.38	
7 அபின், ஹெம்ப், ஏனைய மருந்துப் பொருட்கள்.	0.95	3.45	2.38	3.79	
8 அபராதங்களும் பறிமுதல்களும்	2.74	1,70.14	40.69	18.68	
9 பணியும், வணிக கட்டணங்களும்.	8.60	47.55	3,39.61	5,03.58	
10 ஏனைய வரவினங்கள்.	3,98,50	2,57.74	4,88.51	2,47.48	
மொத்தம்.	1,48,02.34	3,01,81.87	4,34,85.69	4,83,12.34	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1993 ஏப்ரல் 20

இணைப்பு XIV

(44 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள், வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு.

1992-93.

1. முன்னிலைக் கண்ணோட்டம்.:

சமுதாயம் எப்போதும் ஒரு நிலையான அமைப்பாக விளங்குவதில்லை எனக் கூறலாம். மேலும் சமுதாயம் ஒரே சீரான அமைப்பாகவும் இல்லை. பல காலக்கட்டங்களில் அது பல மாற்றங்களை உள்ளடக்கி இயங்கி வருகிறது. மக்களின் மன நிலைகளும் ஆர்வங்களும் அடிக்கடி மாறிக் கொண்டே வருகின்றன. நடைமுறைக் குற்றங்கள் மக்கள் கூட்டத்தின் நடத்தை, பொது வாழ்வின் நிலை, சமுதாயப் பார்வை, தொழில் அமைதியின்மை, அரசியல் ஆர்பாட்டங்கள் ஆகியவை ஒரு வரையறுக்கப்பட்ட நியதியில் இயங்குவதில்லை. சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள தெளிவாகத் தெரியும் சில மாற்றங்கள் சட்ட ஒழுங்கின்மை, அமைதியின்மை, இனக்கலவரம், பயங்கரவாதம், பலதரப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் வளர இடம் அளித்துள்ளன. வளர்ந்து வரும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் பயங்கரவாத சக்திகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவியுடன் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதி தீவிரவாத-பயங்கரவாத குழுக்கள் வளர்ந்து வருவது, பிரிவினை மற்றும் பிரிவினைவாத சக்திகளை ஊக்குவிக்கின்றன. பிரிவினைவாதம் மற்றும் மாநிலம் மற்றும் அது தொடர்பான இனப்பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. சாதி மற்றும் இனப்பிரச்சினைகள் குறையவில்லை. மதம் மற்றும் பழமைவாதிகளின் பாதிப்புகள் அதிகரித்துள்ளது. பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் பல்வேறு இதர காரணங்களினால் சமுதாய அமைதியின்மை அதிகரித்துள்ளன. இத்தீய சக்திகள் பொது வாழ்விற்கும் சட்டம் ஒழுங்கினை பராமரிப்பதற்கும், உள்நாட்டு பாதுகாப்பிற்கும் பெரிய அச்சுறுத்தலை உண்டாக்குகின்றன.

மேலே கூறப்பட்டுள்ள மாறுபட்ட மற்றும் பல்வேறு பரிமாணங்களின் பின்னணியில் காவல் துறையினரின் பணி மிகவும் கடினமானதும், சிக்கலானதும் ஆகும். பல்வேறு மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப, உருவாகும் சவால்களை நேர் கொள்ளவும் பிரச்சினைக்கு ஏற்றவாறும் காவல் துறை தன்னுடைய பணிகளை தயார் செய்துகொள்ள வேண்டும். ஆனால், 1861 ஆம் ஆண்டைய இந்திய காவல் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட காவல் படையின் அமைப்பும் தோற்றமும்

1993 ஏப்ரல் 20]

தற்கால நிலைகளுக்கு ஏற்றதாக அமையாமல் பழமையானதாகவே உள்ளது. இந்தப் பழமையான அமைப்பில் ஏற்படுத்தப்படும் சிறிய மாற்றங்களும் மற்றும் சீரமைப்புகளும் தற்போதைய நிலையைச் சமாளிக்கப் போதுமானதாக இல்லை. பழமையான நடைமுறையில் இயங்கிவரும் காவல் துறை மாறி வரும் சமுதாயத்தின் தேவைகளுக்கு ஈடுகொடுக்க முடியாது. இனி தமிழ்நாடு காவல் துறையின் சமீபகால செயல்பாடுகளை காண்போம்.

II. தமிழ்நாடு காவல் துறையின் தலையாய குறிக்கோள் :

தமிழ்நாடு காவல் துறையினின் அதிகாரங்களையும் பணிப்பொறுப்புகளையும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

பாதுகாப்பு அளித்தல்

தடுப்புப் பணிகள்

துப்புத் துலக்கும் பணிகள்

செயலாக்கத்தை முறைப்படுத்துதல்.

பாதுகாப்பு அளிக்கும் பணிகள் என்பதில் மக்களின் உயிர், உரிமை, மற்றும் உடைமைகளைப் பாதுகாத்தல், சமுதாயத்தின் அமைதியான சூழ்நிலையைப் பாதுகாத்தல் அதாவது சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாத்தல் ஆகியவை அடங்கும்.

தடுப்புப் பணிகள், குற்றங்களைத் தடுத்தல், முன்கூட்டியே தகவல்களை சேகரித்தல், சாதிக்கலவரம் தொழிலாளர் அல்லது மாணவர் கலவரம் ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினைகளின் விளைவுகளை முன் கூட்டியே அறிந்து, சட்டம் ஒழுங்கை காத்திட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தல், ஆகியவை அடங்கும்.

காவலர்களின் துப்புத் துலக்கும் பணியில், குற்றங்களைப் பதிவு செய்து உடனுக்குடன் புலன் விசாரணை, செய்தல் குற்றங்களை கண்டு பிடித்தல், குற்றவாளிகளைக் கைது செய்தல் மற்றும் அவர்களின் மீது வழக்கு தொடர்ந்து அவற்றை வெற்றிகரமாக செயலாக்கம் செய்தல் ஆகியவை அடங்கும். விரைந்து வளரும் தொழில் வளர்ச்சி, நகர்புறங்களின் விரிவாக்கம், கிராமப்புறங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் குடிப்பெயர்தல், பொதுவாக மக்களிடையே ஒழுக்கப் பண்புகள் மாறிவருதல், குற்றவாளிகளின் செயல்வகை மாறுபாடு, புலன் விசாரணையில் பொதுமக்களின் ஈடுபாடின்மை ஆகியவற்றால், பல தடைகளை, மேற்கூறிய பணிகளை மேற்கொள்ளும்போது எதிர்நோக்க வேண்டியுள்ளது. இச்சூழ்நிலையில் குற்றங்களை புலன் விசாரணை செய்வதும்

கண்டுபிடிப்பதும் கடினமாகி விடுகிறது. ஆகவே குற்றங்களைக் கண்டுபிடிக்க காவலர் நவீன கருவிகளையும் தொழில் நுட்ப உத்திகளையும் கையாள வேண்டியுள்ளது.

செயலாக்கப் பணிகள் என்பது நாட்டில் சட்டங்களை அமல்படுத்துதல், போக்குவரத்தை முறைப்படுத்தல், முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், வங்கிகள், தொழிற் கூடங்கள், நிறுவனங்கள் மற்றும் முக்கிய வடிவமைப்புகள் ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு அளித்தல், மதுவிலக்கு சட்டம், வரதட்சிணை ஒழிப்புச் சட்டம், குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், குண்டர்கள் தடை சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம் போன்ற சமூக நலச் சட்டங்களை செயலாக்குவதும் இதில் அடங்கும். இச்சட்டங்களின் வாயிலாக நலிந்த மற்றும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்கள் பாதுகாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் சமுதாய விரோதிகளின் நடவடிக்கைகள் தடுக்கப்படுகின்றன.

சுருக்கமாகக் கூறுவதென்றால், காவலரின் பணிகள் மாநிலத்தின் அமைதியை பேணுதல், பொது மக்கள் பயமின்றி அமைதியான சூழ்நிலையில் வாழ்க்கை நடத்த தகுந்த பாதுகாப்பு அளித்தல், குற்றங்கள் நிகழ்வதைத் தடுத்தல் மற்றும் குற்றங்களைப் புலனாய்வு செய்தல், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு உதவி செய்வதற்காக அரசால் உருவாக்கப் பட்டுள்ள சட்டங்களை அமலாக்குவதில் முனைந்து செயல் படல் ஆகியவை அடங்கும்.

III. நிருவாக அமைப்பும் பணியாளர்களும்.

தமிழ்நாடு காவல் துறையின் நிருவாக அமைப்பை விளக்கும் விபரங்கள் பிற்சேர்க்கை 1-இல் அளிக்கப்பட்டுள்ளன.

(அ) உயர்மட்ட நிருவாக அமைப்பு :

தமிழ்நாடு காவல் துறை, மாநிலத்தில் அதிகமான பணி யாளர்களைக்கொண்ட மிகப் பெரிய அமைப்பாகும்,. இத் துறை காவல் துறை இயக்குநரின் தலைமையில் இயங்கி வரு கிறது. இவர் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதுடன் மாநிலத் தில் காவல் துறையின் நிருவாகப் பொறுப்பினையும் கவனித்து வருகிறார்.

காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு). காவல் துறை இயக்குநருக்கும் இம் மாநிலத்தின் அன்றாட நிருவாகம் மற்றும் முக்கியமாக சட்டம்-ஒழுங்கினை நிலை நாட்டும் பணிகளில் உதவியாக உள்ளார்.

1993 ஏப்ரல் 20]

காவல் துறைத் தலைவர் (பணியாளர்) : துறைப் பணியாளர்களின் பணி அமைப்பின் நிருவாகப் பொறுப்பினை மேற்கொண்டுள்ளார்.

காவல் துறைத் தலைவர் (தலைமையிடம்) : காவல் துறைத் தலைவரிடம் (தலைமையிடம்) அலுவலக நிருவாகம் மற்றும் காவல் துறையின் செயல்பாட்டிற்கான தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பு உள்ளது. அலுவலர்களின் பணிகள் தொடர்பான செயல்களையும் கவனித்து வருகிறார்.

காவல் துறைத் தலைவர் (குற்றம்); மிக முக்கிய வழக்குகளில் துப்பு துலக்குதல் மற்றும் தொழில் நுட்பப் பணிகளில் மேற்பார்வையிடல் ஆகியவற்றை கவனித்து வருகிறார்.

காவல் துறைத் தலைவர் (வனப் பிரிவு): வனவளம் மற்றும் குடிமைப்பொருள் தொடர்பான குற்றங்களைக் கவனித்து வருகிறார்.

காவல் துறைத் தலைவர் (ஊர்க்காவல் படை): தமிழ்நாட்டிலுள்ள குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை ஆகியவற்றைக் கவனித்து வருகிறார்.

போதுமான அளவு பணியாளர்களைக்கொண்ட மதுவிலக்கு அமல் பிரிவு, காவல் துறைத் தலைவர் (மதுவிலக்கு அமல் பிரிவு) தலைமயில் இயங்கி வருகிறது. இப் பிரிவு திறமையுடன் செயலாற்றுவதற்காக மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பணி மற்றும் பாதுகாப்புப் பணி பிரிவுகள் காவல் துறைத் தலைவர் (புலனாய்வு) தலைமையின் கீழ் இயங்கி வருகின்றன.

ரயில்வே பாதுகாப்புப் படை ஒரு காவல் துறைத் தலைவரின் கீழ் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்தியக் காவல் பணிகளின் எண்ணிக்கை 180 ஆகும். 1—1—1993 அன்றைய நிலவரப்படி இந்தப் பணிகளின் எண்ணிக்கை 170 ஆகும். 1992ஆம் ஆண்டில் ஏழு அலுவலர்கள் ஓய்வுபெற்றார்கள். ஐந்து அலுவலர்கள் பதவி உயர்வு ஒதுக்கீட்டின் கீழ் இந்தியக் காவல் பணி பதவித்தரத்தில் நியமிக்கப்பட்டனர்.

பிற்சேர்க்கை இரண்டில் கண்டுள்ளபடி 1—1—1993 நிலவரப்படி தமிழ்நாடு காவல் பணியின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 70,296. 1,370 நிருவாகப்

[1993 ஏப்ரல் 20

பணிப் பதவிகளும், 80 அலுவலகப் பணிப்பதவிகளும், 10 இதரப் பதவிகளும் 1992 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இது பற்றிய விபரங்கள் பிற்சேர்க்கை மூன்றில் தரப்பட்டுள்ளன.

189 படைப் பிரிவினரைக் கொண்ட தமிழ்நாடு சேமக் காவல் படை மற்றும் 9 அணிகளைக் கொண்ட தமிழ்நாடு சிறப்புக் காவல் படை சட்டம்-ஒழுங்கை திறம்பட பேணிக் காத்திட உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி புரிந்து வருகின்றன. ஒரு அணி அயல்பணியில் புதுடில்லியில் பணியாற்றி வருகிறது.

ஆ. ஏனைய அமைப்புகள்:

(i) துப்பறியும் நாய்ப் படைப் பிரிவு :

குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் புலனாய்வு நடத்தும் பணியாளர்களுக்கு துப்பறியும் நாய்ப் படைகள் மிகுந்த உதவிபுரிந்து ஒரு முக்கிய அங்கமாக விளங்குவதால், இவற்றின் பணிகள் தமிழ்நாட்டில் வெகுவாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குற்றங்களில் துப்பு துலக்குவதில் புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவ, சென்னை மாநகர், தென்னாற்காடு மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, வட ஆற்காடு-அம்பேத்கார், சேலம், இராமநாதபுரம் திருநெல்வேலி-கட்டபொம்மன், தஞ்சாவூர், சிதம்பரனார் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒன்று என்ற வீதத்தில், தமிழ்நாட்டில் மொத்தம் 11 நாய்ப் படைப் பிரிவுகள் உள்ளன. 1992 ஆம் ஆண்டில் 1,233 வழக்குகளில் இந்த நாய்ப்படை பிரிவுகளின் பணி பயன் படுத்தப்பட்டது. இதில் 586 வழக்குகளில் இவற்றின் பணி மிகவும் பயனுள்ள வகையில் இருந்தது இவ்வரசு பதவி ஏற்ற பின்பு நலப் பணி நடவடிக்கையாக தமிழ்நாட்டில் உள்ள காவல் படைகளில் உள்ள அனைத்து நாய்களுக்குமான உணவுக் கட்டணம் ஒரு நாளைக்கு ஒரு நாய்க்கு ரூபாய் 12.50 என்று இருந்ததை ஒரு நாளைக்கு ஒரு நாய்க்கு ரூ. 20.00 என்று உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள காவல் படைகளில் உள்ள அனைத்து நாய்களுக்குமான பராமரிப்புச் செலவுத் தொகை ஒரு நாய்க்கு ஒரு மாதத்திற்கு ரூ. 55 என்றிருப்பது ரூ. 145 என உயர்த்தப்பட்டுள்ளது.

(ii) குதிரைப் படைப் பிரிவு :

மாநிலக் காவல் படையிலுள்ள குதிரைக் காவல்படை ஆங்கிலேயர் நிருவாகம் நமக்கு விட்டுச் சென்ற ஒரு பயனுள்ள அமைப்பாகும். போக்குவரத்து ... நெருக்கடிகளை ... முற்றப்

1993 ஏப்ரல் 20]

படுத்துவதிலும் சில விழா நிகழ்ச்சிகளிலும் இப்படை பய னுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. இப்படையிலுள்ள குதிரைகளின் மிடுக்கான தோற்றத்தினாலும் அழகு மிளி ரும் அணி வகுப்பினாலும் இவ்வமைப்பு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஒரு தனிக் கவர்ச்சியை கொடுக்கிறது. இந்தக் குதிரைப் படை பிரிவில் சென்னை மாநகரில் 34 குதிரைகளும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் முறையே 10 குதிரை களும் உள்ளன. இந்தக் குதிரைப் படைப் பிரிவிற்கு புதிய உத்வேகம் அளித்து, சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் அரசு, இப்பிரிவை, மாற்றி அமைத்து வலுப்படுத்த உத்தேசித்துள்ளது. இந்த நோக்கங்களை எய்த 18 குதிரைகளை வாங்கி இப் பிரிவில் சேர்க்கவும், குதிரைகளுக்கான தொழுவம் கட்டவும் ரூ. 15.00 இலட்சம் வழங்க அரசு கருதுகிறது.

(iii) பெண் காவலர்கள் :

தமிழ்நாட்டுக் காவல் படையின் ஒரு முக்கிய அங்கமாக பெண் காவல்படை விளங்குகிறது. பெண் கைதிகளை சோதனையிடுதல் மற்றும் விமான நிலையத்தில் பெண் பயணிகளை சோதனையிடுதல், பெண் குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லுதல் போன்ற பணிகளுக்காகவும், இளங்குற்றவாளிகள் தொடர் பான பணிகளைக் கவனிப்பதற்காகவும், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களிலிருந்து அவர்களைக் காக்கும் பொருட்டு மகளிர் மருத்துவமனைகள், மகளிர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றவும், தமிழகத்தில் நியமிக்கப்பட்டுள்ள பெண் காவலர்கள் தங்களுடைய பணி களை மிகச் சிறப்பாக தொடர்ந்து ஆற்றி வருகின்றனர். 1—1—1993 ஆம் நாள் நிலவரப்படி இம் மாநிலத்தில் பெண் காவலர் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 1,275 ஆகும். இதில் 10 ஆய்வாளர்கள், 110 உதவி ஆய்வாளர்கள், 103 தலைமைக் காவலர்கள், 1,052 காவலர்கள் (நிலை-1) ஆகியோர் அடங்குவர். பெண்களின் வழக்குகள் குறித்த பிரச்சினைகளை மட்டுமே கவனிக்க, முழுவதும் பெண் காவலர்களை மட்டுமே கொண்டு செயல்படும் காவல் நிலையம் ஒன்று சென்னை மாநகரில் 1992 ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு நாளில் தொடங்கப் பட்டது. சோதனை முறையில் தொடங்கப்பட்ட இந்த முயற்சி ஊக்கம் அளிக்கும் வகையில் உள்ளது. ஏனைய பகுதிகளிலும் இதே போன்று காவல் நிலையம் தொடங்க வேண்டுமெனக் கோரப்படுகிறது. அப்போதுதான் பாதிக் கப்படும் பெண்கள், பெண்கள் காவல் நிலையத்தை எவ் வித அச்சமின்றி அணுகி தங்களின் குறைகளைத் தீர்த்துக்

[1993 ஏப்ரல் 20

கொள்ள முடியும். இத்திட்டம் பிரபலமடைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்க பெண் காவலர்களை மட்டுமே கொண்டு செயல்படும் காவல் நிலையங்களை 25 காவல் துறை மாவட்டங்களிலும், சென்னை மாநகரில் இதுபோன்ற மேலும் இரண்டு காவல் நிலையங்களையும் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முயற்சி பெண்களின் நலனைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள ஒரு முக்கிய திட்டமாகும்.

(iv) சிறப்புப் பாதுகாப்புப்படை :

பல்வேறு தீவிரவாத குழுக்கள் இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்குள் ஊடுருவி பரவி இருப்பதும், திரு. பத்மனாபா பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டதும், பாரத முன்னாள் பிரதமரைக் கொடூரமான முறையில் படுகொலை செய்தது போன்ற பயங்கரவாத நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருப்பதும், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல், சில அரசியல் தலைவர்களைக் கொல்வதன் மூலம் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நிலைகுலைய வைப்பதை நோக்கமாகக் கொண்டதாக இது கருதப்படுகிறது. பல்வேறு புகழ்பெற்ற தலைவர்கள், மிக மிக முக்கிய பிரமுகர்கள் ஆகியோரின் உயிர்களுக்குத் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் குறிப்பாக தமிழக முதல்வரின் உயிருக்கு அச்சுறுத்தல் இன்னும் இருந்து வருகிறது. இந்தக் கொடூரமான பயங்கரவாத முறைகளினால் ஏற்பட்டுள்ள சவால்களை உரிய முறையில் சமாளித்தாக வேண்டியுள்ளது. தற்போதுள்ள காவல் துறை படையினர் மாநிலத்தில் குற்றம் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல், சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுதல் போன்ற பணிகளில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளின் மிகுந்த அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள மிக மிக முக்கிய பிரமுகர்களுக்குப் போதுமான அளவிற்குச் சிறந்த பாதுகாப்பு அளிக்க இதே அமைப்பை போதுமான அளவிற்குச் சிறந்த முறையில் பயன்படுத்த இயலாது.

இந்த மிக மிக முக்கிய பிரமுகர்களுக்கு முழு அளவில் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்திலும், மற்றும் தமிழக முதல்வரின் பாதுகாப்பு கருதியும், இந்த அரசு ஒரு தனிப்பாதுகாப்புப் படையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தனிப் பாதுகாப்புப்படை 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு காவல்துறைத் துணைத் தலைவர், 2 காவல் கண்காணிப்பாளர்கள், 11 துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் 500 பலதரப்பட்ட பதவித் தரத்தி

1993 ஏப்ரல் 20]

லுள்ளவர்களைக் கொண்டு துவங்கப்பட்டது. இச்சிறப்புப் படை பாரதப் பிரதமருக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய தேசிய பாதுகாப்புப் படையின் அமைப்பு முறையில் உள்ள வர்களைப் போன்று மன உறுதியும். இப்பணியில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்ளும் தன்மை கொண்ட இளம் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு அமைக் கப்பட்டுள்ளது. இத்தனிச் சிறப்புப் படையினர் தற் காப்பு, கராத்தே, மலை ஏறுதல், எந்தச் சூழ்நிலையிலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் கலை, வெடிகுண்டு களைக் கண்டுபிடித்து அதனைச் செயலிழக்கச் செய்யும் திறமை மற்றும் நவீன ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி ஆகியவற்றைப் பெறுகின்றனர். இச்சிறப்பு படையினர் முதன் முறையாக எந்த மாநிலக் காவல் படையிலும் இல் லாத அளவில் வெளிநாட்டிலிருந்து மிக நவீன தொலைத் தொடர்பு சாதனங்களைப் பெற உள்ளனர். ஆரம்பித்த குறுகிய காலத்திற்குள்ளாகவே இச்சிறப்புப் படை கமோண்டோ பிரிவு, அழிவு வேலை தடுப்புப் பிரிவு, வெடிகுண்டு அழிப்பு பிரிவு, மோப்பம் பிடிக்கும் நாய் பிரிவு, ஓட்டுநர் பள்ளி மற்றும் தனிப் பயிற்சி பிரிவு ஆகியவற்றை உரு வாக்கியுள்ளது. தமிழ்நாட்டில் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் மதிப்பிற்குரிய ஒருவரின் உயிரைப் பாது காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இச்சிறப்புப் படையின் மற்றுமொரு சிறப்பான சாதனை, தன்னுடைய திறமையை தமிழ்நாடு காவல் படையின் அனைத்துப் பிரிவுகளும் பெறு வதற்கு உண்டான செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்ப தாகும்.

(i) இச் சிறப்புப் பிரிவு, களப் பணியாளர்களுக்கு ஆயு தங்கள், தளவாடங்கள் ஆகியவற்றைக் கையாளும் பயிற்சி அளிப்பதன் மூலம் பணியாளர்கள் மற்றும் ஆயுதங்கள் ஆகிய வற்றை நவீனபடுத்தும் முயற்சியில் முன்னணி வகிக் கிறது.

(ii) தற்போதுள்ள, தற்காப்புச் சூழ்நிலைக்கேற்ப 6,000 ஆய்வாளர்கள்/உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு சுடுவதில் பயிற்சி அளிக்க இச்சிறப்புப் பிரிவு ஒரு மேலான திட்டம் தீட்டியுள்ளது. இச்சிறப்புப்படையின் பயிற்சி யாளர்கள் சுமார் 2,000 துணை ஆய்வாளர்கள்/ஆய்வாளர் கள் ஆகியோருக்கு முன்னறிவு ஆய்வு சுடுதலில் நேரடியாக பயிற்சி அளித்துள்ளனர். இப்பயிற்சி இன்னும் நான்கு மாதங்களில் நிறைவுபெறும். நான்கு வகையான துப்பாக்கி களில் பயிற்சி பெறும் அலுவலர்களின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளதால் நமது மாநிலத்தில்தான் இவ்வளவு பெரிய அளவில் காவல்படையினருக்கு இச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது எனக் கூறலாம்.

[1993 ஏப்ரல் 20

(iii) தமிழ்நாட்டுக் காவல் படையின் திறமைகளை இந்த அளவிற்கு இச்சிறப்புப் படை மேம்படுத்தி உள்ளதால் மொத்தத்தில் 1,200 அலுவலர்களைக் கொண்ட, பயங்கரவாதிகளை எதிர்க்கும் பிரிவை இச்சிறப்புப் படை ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கியுள்ளது.

(iv) இப்பயிற்சியின் தற்போதைய திட்டமானது மிகவும் கடினமான ஒரு கமாண்டோ பயிற்சியை 500 தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அளிப்பதாகும்.

(v) இதன் மற்றுமொரு சிறப்புப் பயிற்சி தமிழ்நாட்டு காவல் படையினருக்கு வெடிகுண்டைக் கண்டுபிடித்து அது வெடிப்பதற்குமுன் செயலிழக்கச் செய்ய ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தி உரிய பயிற்சி அளிப்பதாகும்.

இந்தத் தனிச் சிறப்புப்படையைச் சார்ந்தவர்களுக்கு இந்த அரசு வீடு கட்டித்தரும் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இதற்காக ரூபாய் 2.85 கோடி செலவினம் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆய்வாளர்/உதவி ஆய்வாளர்களுக்கு 40 இல்லங்களும், தலைமைக் காவலர்/காவலர் ஆகியோருக்கு 80 இல்லங்களும், ஒவ்வொன்றிலும் 100 காவலர் தங்குவதற்கு வசதியாக இரண்டு படைகுடி இருப்புகளும் கட்டப்படும். இது தவிர ரூபாய் 500-க்கு மிகாமல், அவர்களுடைய சம்பளத்தில் 30 விழுக்காடு என்ற அளவில் சிறப்பு ஊக்கத்தொகையாக அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இச் சிறப்புப் படையில் பணிபுரியும் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் அடுத்த உயர் அலுவலர்களுக்கு ஆயுள் காப்பாக ரூபாய் 5,00,000-ம் ஆய்வாளர்களிலிருந்து காவலர்கள் வரையிலான அலுவலர்களுக்கு ரூபாய் 3,00,000-ம் ஆயுள் காப்பாக அரசு வழங்கியுள்ளது.

(v) குடியுரிமைப் பாதுகாப்புத் தனிப் பிரிவு:

தீண்டாமையை ஒழிக்கவும், ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அகற்றவும், குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்கு அரசு, தொடர்ந்து மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. தற்போது இச்சட்டம், தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களாலும் அமுல்படுத்தப்படுகிறது. சென்னை மாநகர் தவிர, தமிழ் நாட்டிலுள்ள 25 காவல் மாவட்டங்களில் 25 இயலூர்திக் காவல் பிரிவுகள் செயல்பட்டுவருகின்றன. இப்பிரிவுகள், ஒவ்வொன்றிலும் காவல் துறை ஆய்வாளர் ஒருவர், காவல் துறை உதவி ஆய்வாளர் ஒருவர், தலைமைக் காவலர் இருவர்,

1993 ஏப்ரல் 20]

2ம் நிலைக் காவலர் இருவர் ஆகியோர் இருக்கின்றனர். ஒவ்வொரு பிரிவுக்கும் ஜீப் ஒன்றும் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய இயலூர்திக்காவல் பிரிவு ஒவ்வொன்றும், அந்த மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. காவல்துறைத் துணைத் தலைவர் (குடியுரிமைப் பாதுகாப்பு) சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இச்சட்டம் செயல்படுத்தப்படுவதை கண்காணித்து வருகிறார். காவல்துறைத் துணைத்தலைவருக்கு (குடியுரிமைப் பாதுகாப்பு) உதவுவதற்காக சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் மூன்று கண்காணிப்பு படைகள் 1987 நவம்பரிலிருந்து செயல்பட்டு வருகின்றன. மேலும், இந்த இயலூர்திக் காவல் பிரிவுகள் தவிர இச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றத்தை பற்றிய தகவலை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கண்காணிப்பதற்கென்றே ஒவ்வொரு மாவட்டத்திலும், புள்ளி விவர ஆய்வாளர் ஒருவரும், காவல் துறை உதவி ஆய்வாளர் ஒருவரும் உள்ளனர். பொருளாதார நிபுணர் ஒருவர் சமுதாய வளர்ச்சி நிபுணர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட ஆராய்ச்சி-பகுப்பாய்வியல் பிரிவு ஒன்று தீண்டாமை நடைமுறையில் இருப்பதற்கு வாய்ப்புள்ள கிராமங்களில் அதனை ஒழிப்பதற்காக மாதிரி ஆய்வுகளை நடத்தி வருகிறது. இப்பிரிவு குறைகளைத் தீர்ப்பதற்கான அறிக்கைகளைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்புகிறது. இப்பிரிவு ஒரு நல அமைப்பாகச் செயல்பட்டு, ஆதி திராவிடர்களின் நியாயமான குறைபாடுகளைத் தீர்ப்பதற்காக அரசு வகுத்த கொள்கைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதில் பிற துறைகளின் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

இந்த மாநிலத்தில் குடியுரிமைப் பாதுகாப்புப் சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை விசாரிப்பதற்காக, நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்திரேட், அவருக்கு உதவுவதற்குத் தேவையான பணியாளர் ஆகியோருடன் நான்கு தனி நீதிமன்றங்கள் உள்ளன. இவை, தஞ்சாவூர் மேற்கு (கும்பகோணம்), திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி-கட்டபொம்மன், ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய தனி நீதிமன்றங்கள், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளையும், ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் இன்னல்கள், கொடுமைகள், ஆகியவை குறித்த பிற வழக்குகளையும் விசாரிக்கின்றன. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1991 ஆம் ஆண்டில் 861 வழக்குகளும், 1992 ஆம் ஆண்டில் 961 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. இதே

[1993 ஏப்ரல் 20

போன்று ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்பட்ட இன்னல்கள், கொடுமைகள் தொடர்பாக, 1991 ஆம் ஆண்டில் 552 வழக்குகளும், 1992 ஆம் ஆண்டில் 668 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

(vi) தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம்:

காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்புத்துறை உட்பட சார்நிலைச் சீருடை பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறையைச் சீரமைத்து நியாயமாகவும், நேர்மையாகவும், முறையாகவும், சீராகவும் நம்பிக்கைக்குரிய முறையில் பணி நியமனம் செய்யும் நோக்குடன் காவல்துறை தலைமை இயக்குநர் பதவி தரத்திலான காவல் துறை உயர் அதிகாரி ஒருவரைத் தலைவராகவும் காவல் துறைத் தலைவர் பதவி தரத்தில் உள்ள ஒரு அதிகாரியை உறுப்பினராகவும் காவல்துறை துணைத் தலைவர் பதவி தரத்தில் உள்ள ஒரு அதிகாரியை உறுப்பினர் செயலாளராகவும் கொண்ட தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

இச்சீருடைப் பணியாளர்களின் தேர்வு முறையை நேர்மையானதாகவும் நம்பிக்கை உடையதாகவும் ஆக்கும் பொருட்டு, தேர்வு விதிகள் தகுந்த முறையில் திருத்தப்பட்டதுடன் தகுதிவாய்ந்த நபர்களை தேர்வு செய்யும் பொருட்டு, தேசிய உடல் திறப்பாடு, தேர்வு, எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு ஆகியவற்றின் தரம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வு வரையிலான ஒவ்வொரு தேர்வும் மதிப்பெண் அடிப்படையில் தகுதிகாணும் நிலையாகவே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பல ஆண்டுகளாக காலியாக இருந்த இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களுக்குத் தகுதிவாய்ந்த நபர்களை தேர்வு செய்யும் பணியினை இவ்வாரியம் துவக்கியுள்ளது. இத்தேர்வு குறித்து முறையான விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. மாநிலத்தின் மூலை முடுக்குகள் மற்றும் அனைத்து கிராமங்களிலும் உள்ள அனைவரும் இத்தேர்வு குறித்து அறிந்து கொள்ளும் பொருட்டு கவனமாகத் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்ட விண்ணப்ப படிவங்கள் மாநிலத்தில் உள்ள ஸ்டேட் வங்கியின் பெரும்பாலான கிளைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டது. இம்மாபெரும் தேர்வு முறைக்கு கையாளப்பட்ட பெரிய நடவடிக்கை இத்தேர்வினை ஒவ்வொரு நிலையிலும் முழுமையானதாக்கும் பொருட்டு மனுதாரர்கள் குறித்த விவரங்களை கணிப்பொறி மூலம் கணித்ததாகும். 10,000 காலியிடங்களை நிரப்பும் பொருட்டு மனுக்கள் கோரப்பட்டதில் 72,000க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டன. இம் மனுதாரர்கள் தேர்வின் பல்வேறு நிலைகளைத் தாண்டிய பின்னர்,

1993 ஏப்ரல் 20]

10,000 காலியிடங்களுக்கும், காவல்துறையின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய தேவைக்கான பணியாளர்களை தேர்வு செய்யும் பொருட்டும் 11,790 மனுதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு தகுதிபெற்றனர். இவர்களுக்கு மருத்துவ தேர்வு முடிவுற்று தற்போது இவர்களது நடத்தை குறித்த காவல்துறை ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது.

நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்ட நபர்களை ஆய்ந்ததில் சில ருசிகரமான தகவல்கள் வெளிப்பட்டன. அவர்களில் 72 விழுக்காடு நபர்கள் கிராம புறத்தைச் சார்ந்தவர்கள், பெரும்பாலானவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள். இரண்டாம் நிலைக்காவலர் பதவி தேர்வு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. பத்தாவது தேர்வு என்றிருந்த போதிலும், இத்தேர்வுக்கு மனு செய்தவர்களில் 900 பட்டதாரிகளும், 50 பேர் முதுநிலை பட்டதாரிகளும் ஆவர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கை உடையவர்கள் விளையாட்டு வீரர்களாகவும், தேசிய பாதுகாப்புப் படை/தேசிய பாதுகாப்பு பணி முதலானவற்றில் சான்றிதழ் பெற்றவர்கள். 49 விழுக்காடு நபர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பையும், 26 விழுக்காடு நபர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளையும் சார்ந்தவர்கள். இவ்விரு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் 75 விழுக்காடு ஆகும். இது விதிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 50 விழுக்காடு நபர்களை விட மிக அதிகமாகும். அதிக விழுக்காட்டில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களும் இருந்தனர்.

இத்தேர்வு மிக விரைவில் முடிவு பெற உள்ளது. இத்தேர்வு எக்குறையும் சொல்ல இயலாதது மட்டுமின்றி திறமையும், மனுதாரர்களின் செயல்திறனையும் அடிப்படையாகக் கொண்டு நடைபெற்ற தேர்வுகளில் இதுவும் ஒன்றாக இருக்கிறது.

(vii) கோவில் பாதுகாப்புப்படை :

தமிழ்நாட்டிலுள்ள கோவில்கள் வழிபாட்டுத் தலங்களாக விளங்குவது மட்டுமின்றி நமது தொன்மையான பண்பாடு பாரம்பரியம் மற்றும் வரலாற்றுச் சிறப்பு ஆகியவற்றை பணிக்காக்கும் கருவூலங்களாகவும் உள்ளன. ஆலய சொத்துக்களுக்கு எதிரான குற்றங்கள் மிகுந்தும், கோயில் சிலைகள் ஆபரணங்கள், உண்டியலில் இடப்படும் தொகைகள், பொருட்கள் மற்ற பிற மதிப்பு வாய்ந்த பொருட்கள் பெருமளவில் காணாமல் போய்க்கொண்டும் உள்ளன. மேலும் தற்சமயம் இத்தகைய குற்றங்கள் அதிகரித்தபடியும் உள்ளன. எனவே கோயில்களையும், அவற்றின் சொத்துக்களையும், மற்றும் அவற்றின் விலை மதிப்புள்ள பொருட்களையும், பாதுகாப்பதற்காக இவ்வரசு விரைந்து செயல்பட்டு கோயில்கள் பாதுகாப்புப் புப்படை என்ற பெயரில் ஒரு தனிப்படையை இப்பணிக்காக

மட்டும் ஏற்படுத்தியுள்ளது. இப்படையில் 1000 இரண்டாம் நிலைக்காவலர்களும், 3000 முன்னாள் படைவீரர்களும் உள்ளனர். இதிலுள்ள முன்னாள் படைவீரர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 750 வீதம் தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்து அறநிலையத்துறை ஆணையரின் ஆலோசனையின் பேரில் மேற்சொன்ன கோயில்கள் பாதுகாப்புப்படையினர், மாநிலத்திலுள்ள வெவ்வேறு கோயில்களின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இக்கோயில் பாதுகாப்புப் படையினர் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 2,552 கோயில்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இக்கோயில் பாதுகாப்புப் படையினர் அவர்கள் பாதுகாக்கும் கோயில் எந்த காவல் நிலைய சரகத்துக்குட்பட்டுள்ளதோ அந்த காவல் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். கோயில் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்ட பிறகு, கோவில் சொத்துக்கெதிரான குற்றங்கள் பெருமளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு 404 ஆக இருந்த கோயில் சொத்துக்களுக்கெதிரான குற்றங்கள் 204 ஆக குறைந்துள்ளன என்பது மனநிறைவை அளிப்பதாக உள்ளது. இத்தகைய குற்றங்களின் எண்ணிக்கை இனி வரும் ஆண்டுகளில் மேலும் குறையும்.

(viii) ஊர்க்காவல் படை:

1963-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊர்க்காவல் படைச் சட்டம் மற்றும் விதிகளுக்கு இணங்க ஊர்க் காவல்படை அமைப்பு காவல்படைக்கு உதவும், ஒரு துணைத் தொண்டுப்படையாக இயங்கிவருகிறது. காவல்துறைத் தலைவர் ஒருவரின் கீழ் இயங்கிவரும் இப்படையில் வெவ்வேறு தொழில்களிலும், நிலையங்களிலிருந்தும் அரசுப் பணியிலிருந்தும் பெறப்பட்ட 10,010 ஆண் காவலரும் 550 பெண் காவலரும் உள்ளனர்.

தற்சமயம் இப்படையில் 9,142 ஆண் காவலரும், 463 பெண் காவலரும் மட்டுமே உள்ளனர். ஆண் காவலரில் 868 இடங்களும் பெண் காவலரில் 87 இடங்களும் காலியாக உள்ளன. முந்தைய ஆண்டுகளைப் போலவே 1992லும், ஊர்க்காவல் படையினர், வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு, இரவு ரோந்து, கூட்டத்தை முறைப்படுத்தல், மிக முக்கியமானவர்கள் பாதுகாப்பு, சமூக நலப் பணிகள், கோயில் திருவிழாக்கள், பொதுப்பாதுகாப்பு, இடர்பாடு ஏற்பட்ட நேரம் போன்றவற்றில் காவல் படைக்கு பெரும் உதவிகள் புரிந்துள்ளனர்.

ஊர்க்காவல் படை வகையில் ஆண்டொன்றிற்கு 32 இலட்சம் ரூபாய் செலவாகிறது. ஊர்க்காவல் படைக் குறித்தாகும் சில செலவினங்களில் 50 விழுக்காடுத் தொகையை மைய அரசு ஏற்றுக் கொள்கிறது.

1993 ஏப்ரல் 20]

1992-ம் ஆண்டின் மிகச்சிறந்த கடமை பற்றுறுதிக்காக ஊர்க்காவல் படையைச் சேர்ந்த எட்டு காவலர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஊர்க்காவல் படைப் பதக்கமும் பாராட்டத்தக்க பணிக்காக குடியரசு தின நாளன்று இரண்டு ஊர்க்காவலர்களுக்கு குடியரசு தின பதக்கமும், சுதந்திர தின நாளன்று மூன்று ஊர்க்காவலர்களுக்கு சுதந்திசுத தின பதக்கமும் வழங்கப்பட்டன.

ஊர்க்காவல் படையினருக்கு பயிற்சி அளிப்பதற்காக உதகமண்டலத்தில் ஒரு பயிற்சி நிறுவனத்தினை சமீபத்தில் அரசு ஏற்படுத்தியுள்ளது.

(ix) மக்கள் பாதுகாப்பு :

சென்னை மாநகரம் மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டத்திலுள்ள கல்பாக்கம் ஆகிய இரண்டு நகரங்களையும் முதல்வகை மக்கள் பாதுகாப்பு நகரங்களாக இந்திய அரசு அறிவித்துள்ளது. ஆனால், மக்கள் பாதுகாப்புப்படை இது வரை உருவாக்கப்படவில்லை. பணியாளர்கள் தேர்வு, கட்டுப் பாட்டு அறை அமைத்தல் மற்றும் பயிற்சிநிறுவனம் தொடங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

காவல்துறைத் தலைவர் (ஊர்காவல்) ஆகவும் விளங்கும் மக்கள் பாதுகாப்பு படை இயக்குநர், அடிப்படை வசதிகள் இன்னமும் முழு உரு பெறாத நிலையிலிருந்தாலும், மாநிலத் தில் வெள்ளம், புயல் மீட்பு , துயர் துடைப்பு பணிகள் போன்றவற்றில் மக்கள் பாதுகாப்பு உணர்வினை அளித்துள் ளார். ஆண்டுதோறும் அக்டோபர் முதல் சனவரி வரையிலான வடகிழக்கு பருவகாற்று வீசும் காலத்தில் வெள்ளம் புயல் ஏற்படும் போது நடத்தப்பெறும் மீட்பு / துயர்துடைப்பு பணிகளை மேற்பார்வையிட மாநில வெள்ளக்கட்டுப்பாடு மையம் ஒன்று மக்கள் பாதுகாப்புப் பணிகள் இயக்குநரின் அலுவலகத்தில் இயங்குகிறது. இந்த பணிக்காக காற்றடைப்பு படகுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. வெள்ள அபாயம் மற்றும் புயல் சீற்றத்தினால் ஏற்படும் எந்த விளைவுகளையும் சமாளிக்க திறன்கொண்ட பயிற்சி பெற்ற காவலர்கள் காற்றடைப்பு படகு களுடன் சிறப்பு மீட்பு ஊர்திகளுடன் கடல் கரையோர மாவட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ளனர். இத்தகைய ஏற்பாடு கள் கடல் கரையோர மாவட்டங்களில், வெள்ளம் மற்றும் புயலால் ஏற்படும் நிலைமைகளை சமாளிப்பதற்கு மிகவும் உதவியாக உள்ளது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 20

(x) காவலர் பொது மக்களிடையேயான நல்லுறவு.

இரு பிரிவினர்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதற்கு கலந்துரையாடல்களும் சுமுகமான தொடர்பும் முக்கியமாகத் தேவைப்படுகிறது. காவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை செய்யும் பொழுது காவலர்கள் பொதுமக்களிடம் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. குற்றத் தடுப்பு, குற்றக் கண்டுபிடிப்பு மற்றும் போக்குவரத்து போன்ற பணிகளில் பொது மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு காவலர்கள் பொதுமக்களின் நல்லுறவைப் பெறுவது மிக முக்கியமாக கருதப்படுகிறது. முறையான பயிற்சியினால் தமிழகக் காவலர்கள் பொது மக்களின் நல்லெண்ணத்தையும், ஆதரவையும் பெறுவதற்கு நல்ல முறையில் ஊக்குவிக்கப்பட்டுள்ளார்கள். பணிவு, நேர்மை மற்றும் திறமையாக செயல்பட்டு பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதன் மூலம் பொதுமக்களின் பார்வையில் அரசினைப்பற்றியும், காவல்துறையினைப்பற்றியும் நல்லெண்ணத்தை உருவாக்குவது காவல் துறையைச் சேர்ந்த ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ளம், புயல் மற்றும் தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டு உதவிநாடும் மக்களுக்கு உதவுவதற்காக தமிழக காவல்துறை முழுமையானதாக தன்னை அர்ப்பணித்து மக்களின் எல்லா துயரங்களிலும். பங்கெடுத்துகொள்வதோடு அரசு துயர் துடைப்பு பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இனக் கலவரம் மற்றும் அரசியல் சண்டைகளால் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை எழும் நேரங்களிலும் மக்கள் பாதிப்பிற்குள்ளாகும் இடங்களிலும் காவல்துறையினர் அவ்விடத்திற்கு சென்று கலவரத்தை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவந்து சட்டப்படியான நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். தவிரவும் பிரச்சனையைச் சுமுகமாகத்தீர்ப்பதற்கு வழிகோலும், இணக்க பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்யவும் அவர்கள் பொறுப்பேற்கின்றனர். எண்ணிலடங்கா நேர்வுகளில் பிரச்சனைக்குரிய தரப்பினர் மனநிறைவடையும் வகையில் குடும்ப சண்டைகள், திருமண தகராறுகள் முதலியவற்றை திறம்படவும் வெற்றிகரமாகவும் தீர்த்து வைத்த பெருமையும் காவல்துறையினருக்கு உண்டு. இவ்வாறாக காவலர்கள் சேவை மனப்பான்மையுடன் செயல்படுகின்றார்கள்.

கிராம விழிப்புக்குழு மாவட்ட போக்குவரத்து குழுக்கள் ஆகியவற்றை ஏற்படுத்துதல், சாலைபோக்குவரத்துக் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் தேசிய மாணவர் படை, தேசிய நலப் பணித்திட்டம் முதலிய அமைப்புகளைச் சேர்ந்தவர்களையும் ஈடுபடுத்துதல், புறநகர் குடியிருப்பு சங்கத்தினரைச் சுற்றுக் காவல் பணிகளில் ஈடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் காவல

1993 ஏப்ரல் 20]

ருக்கும் பொதுமக்களுக்கும் இடையேயான உறவு மேலும் நெருக்கமாகியுள்ளது. இவ்வாறாக பொதுமக்களிடம் நல்ல இணக்கமான உறவை காவலர்கள் பாதுகாத்து வருகின்றார்கள்.

IV ஆற்றலை மேம்படுத்தும் கருவிகள்.

(i) அறிவியல் சாதனங்கள் :

குற்றம் புரிவோர் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக நடப்பவர்கள் ஆகியோரின் செயல்முறைகள் அடிக்கடியும் மிகத் துரிதமாகவும் மாறி வருவதாலும் மாறி வருவது ஒரு பக்கம் இருக்க மற்றொரு பக்கம் காவலரின் வேலை பளுவும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஆகவே காவல் துறையினர் தொன்று தொட்டு கையாண்டு வரும் நடைமுறைகள் தற்காலத்திற்கு ஏற்றதல்ல. புதிய மனப்போக்கும் நவீன உத்திகளை கையாளும் திறமையும் அவசியமானது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பயியல் துறையில் ஏற்பட்டுள்ள விரைவான வளர்ச்சி மற்றும் கம்ப்யூட்டர்களை பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வசதிகள், இது தவிர, நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் உலகெங்கும் பொறுப்புக்களை முறையாக செயல்படுத்துவதில் ஒரு மாபெரும் புரட்சியையே உருவாக்கியுள்ளது என்று கூறலாம். காவல்படை இதற்கு விதிவிலக்கல்ல. புதிய உத்திகள் மற்றும் அறிவியல் துறையில் காணப்பட்டுள்ள வளர்ச்சி ஆகியவற்றை பயன்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு காவல்துறை நிருவாகம், குற்றங்களைக் கண்டு பிடிக்கும் பணியில் புதிய உத்திகள், கருவிகள் மற்றும் அறிவியல் சாதனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

(ii) கம்ப்யூட்டர் பிரிவு :

காவல் துறையில் 1971 ஆம் ஆண்டு கம்ப்யூட்டர் உதவியுடன் பணிகளை விரைந்து செயல்படுத்தும் முறை துவக்கப்பட்டது. குற்றம் மற்றும் குற்றவாளிகள் ஆகியவைத் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்படுகின்றன. கம்ப்யூட்டர் வங்கியில் பதிவு செய்து இந்த முறை மேலும் மேம்படுத்தப்பட்டு தற்போது மாவட்டத்தின் தலைமையகம் கம்ப்யூட்டருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அமைவிடம் தெரியாத சொத்துக்கள் சம்பந்தமான குற்றங்கள் பற்றிய விவரங்களை, மாவட்டத்திலுள்ள டெலிபிரிண்டர் டெர்மினல் மூலமாக நேரடியாக அறிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. தேசிய குற்ற ஆவணங்கள் செயலகம், இந்தக் கம்ப்யூட்டருக்குப் பதிலாக மிகவும் நவீனமான இந்த தலைமுறை கம்ப்யூட்டர் ஒன்றை வழங்க உள்ளது. இந்த நிலையில் கம்ப்யூட்டர் பிரிவு ஒரு சிறிய கம்ப்யூட்டர் மற்றும் எட்டு நேர்முக கம்ப்யூட்டர்கள் எட்டு மாவட்டங்களில் முதல் தவணையாக மாநிலம் மற்றும்

[1993 ஏப்ரல் 20

மாவட்ட அளவில் குற்ற நெகிழ்வுகளை கம்ப்யூட்டர் மூலம் பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் துவக்கப்பட உள்ளது. இதன் மூலம் காவல்துறையின் கம்ப்யூட்டர்கள் தேசிய இணைப்பாக செயல்படும் வசதிகள் உருவாகும். காவல்துறை கம்ப்யூட்டர் ட்டி.டி.சி. 316, 111 மற்றும் 256 கே. பி. நினைவு திறன் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. மைய அரசால் அளிக்கப்பட்டுள்ள நான்கு நேர்முக கம்ப்யூட்டர்கள் 10-9-1992 அன்று நிறுவப்பெற்று குற்றப் பதிவேடுகள்/குற்றங்கள் பற்றிய விவரங்கள் சேகரிப்புப் பணியில் முழுமையாக பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

iii. தமிழ்நாடு விரல் ரேகைக் கூடம் :

அன்றாடம் கைது செய்யப்படும் குற்றவாளிகள் பற்றிய முந்தையத் தகவல்கள் அளிப்பது மற்றும் குற்ற நிகழ்வு இடங்களில் கிடைக்கும் விரல் ரேகைகளை நல்ல முறையில் பதிவு செய்து கொடுப்பதன் மூலம் கன்னக்களவு, கொலை, வழிப்பறி, கூட்டுக் கொள்ளை போன்றவற்றில் குற்ற நிகழ்விற்குப் பொறுப்பானவர்களை இனங்கண்டு தகவல் அளிப்பது ஆகியவற்றின் மூலம், துப்புத் துலக்கும் அதிகாரிகளுக்கு, சென்னையிலுள்ள தமிழ்நாடு விரல் ரேகைக் கூடம் மற்றும் ஒவ்வொரு காவல் மாவட்ட தலைமையகத்திலும் செயல்படுகின்ற ஒரு விரல் ரேகைக்கூடம் ஆகியவை உதவியாகச் செயல்படுகின்றன. சென்னை விரல் ரேகைக்கூடம் இதுவரையில் 5.47 லட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைகளை பதிவு செய்து வைத்துள்ளது. மாவட்டங்களிலுள்ள 26 ஒரு விரல் ரேகைக்கூடங்களில் 2.16 லட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைகள் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்விதம் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 1,133 வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர். இது நாட்டின் மொத்தம் உள்ள விரல் ரேகைக் கூடங்களின் மத்தியில் குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகத் திகழ்கின்றது.

(iv) தடய அறிவியல் துறை :

தமிழ்நாடு தடய அறிவியல் துறை ஆசிய கண்டத்திலேயே மிகவும் பழமை வாய்ந்த ஒரு முன்னோடி துறையாகும். இத் துறை 1849 ஆம் ஆண்டிலேயே துவக்கப்பட்டுள்ளது. இந்தத் துறையைச் சார்ந்த அறிவியல் நிறுவனம், தடய அறிவியல் வசதிகளை மாநிலத்திலுள்ள சட்டத்தை நிருவகிக்கும் துறைகளுக்கும், மைய அரசின் துறைகளுக்கும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கும் மருத்துவ மனைகளுக்கும் அவைகள் வேண்டிக் கொள்ளும்போது அளிக்கிறது.

1993 ஏப்ரல் 20]

இத்துறையில் சென்னையில் ஒரு தலைமை ஆய்வுக்கூடம் உள்ளது. இதில் பதினான்கு பிரிவுகள் உள்ளன. அதாவது, மானிடயியல், துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், ஆவணங்கள், ஆயத்துறை, நிழல்படம், பௌதீகயியல், மதுவிலக்கு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, குருதி நீரியல், நஞ்சியல், போதைப் பொருள் மற்றும் கருயியல் பிரிவுகளாகும். மதுரை, கோயம் புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் ஆறு வட்டார ஆய்வுக்கூடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. வேலூர் மற்றும் சேலத்திலுள்ள பிரிவுகள் மது விலக்குப் பற்றிய குற்றங்களை மட்டும் கவனித்துக் கொள் கின்றன. களத்தில் குற்றவியல் வசதிகளை வழங்குவதற்காக இம்மாநிலத்தில் 24 நடமாடும் தடய அறிவியல் ஆய்வுக்கூடங்கள் உள்ளன. இது தவிர, சென்னையில் 24 மணி நேரமும் இயங்கும் ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் உள்ளது. இத்துறை தடய அறிவியல் பற்றிய கல்வி அறிவிற்குத் தேவையான வசதிகளை அளிக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக் கப்பட்டுள்ள ஒரே ஒரு அரசுத்துறை இத்துறையாகும். தடய அறிவியலில் எம்.எஸ்.சி. மற்றும் பி.எச்.டி. பாடத்திட்டங்களை இத்துறை அளிக்கிறது. மேலும் சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு மருத்துவத்துறையுடன் இணைந்து இத்துறை குற்றம் மற்றும் நஞ்சியல் சம்பந்தமான வகுப்புகளை நடத்த உதவுகிறது. அதாவது எம்.எஸ்.சி. (சுற்றுச் சூழல் நஞ்சியியல்), எம்.டி. (தடய அறிவியல் மருத்துவம்) மற்றும் எம்.ஏ. (குற்ற வியல்) எம்.எஸ்.சி. தடய அறிவியல் வகுப்பில் ஆண்டுதோறும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தடய அறிவியலில் பி.எச்.டி. ஆராய்ச்சித் திட்டத்திற்கு இத்துறை ஒரு ஆராய்ச்சி மையமாக சென்னைப் பல்கலைக் கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் மற்றும் அண்ணா பல்கலைக் கழகம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது தடய அறிவியலைச் சார்ந்த பல்வேறு பாடப்பிரிவுகளில் 26 மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இத்துறை 50,798 வகையான புகார்களுக்குச் சம்பந்தப்பட்ட 2,58,552 பொருட்களை 1—1—1992 முதல் 31—12—1992-க் கான கால கட்டத்தில் கையாண்டுள்ளது.

சட்டத்தை நிலைநாட்ட பாடுபடும் அமைப்புக்களுக்கு இத் துறை தடய அறிவியல் பணிகளை அளிப்பதோடன்றி சென்னை நகர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள மருத்துவமனை களில் விஷம் அருந்தி பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவர் களுக்கு உதவும் வகையில் நஞ்சியல் வசதிகளையும் வழங்குகிறது. பிரச்சினைக்குண்டான குழந்தைக்கு தகப்பன் யார் என்பதை முடிவு செய்யும் மையம் இத் துறையில் உள்ளதால் இந்த நாட்டில் ஆதரவற்ற பெண்கள் மற்றும் ஏழ்மை நிலையில் உள்ளவர்க்கு உதவும் ஓர் சமூகத் திட்டத்தையும் இத்துறை நடத்துகின்றது.

[1993 ஏப்ரல் 2

(V) தகவல் தொடர்பு அமைப்பு :

காவல்துறை திறமையுடன் பணியாற்றுவதற்கு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தகவலை உடனடியாகத் தெரிவிப்பதும் விரைந்து குறிப்பிட்ட இடத்திற்கு செல்வதும் மிகவும் அவசியமானதொன்றாகும். அதற்காக காவல் துறையில் ஒரு திறமிக்க தகவல் அமைப்பை அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு ஒரு முன்னோடியான மாநிலமாக உள்ளது.

(i) வான் தந்தி :

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள காவல் தகவல் தொடர்பு அமைப்பு நாட்டில் உள்ள சிறந்த அமைப்புகளில் ஒன்றாகும். இந்த அமைப்பில் வான் தந்தி, வானொலி, தொலைபேசி மற்றும் வாக்கி-டாக்கி போன்ற அதிநவீனமான தகவல் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. தற்போதிருக்கும் பழைய அனலாக் (analog) முறையைக் களைந்து டிஜிடல் மைக்ரோவேவ் (Digital Microwave System) என்ற முறைக்கு மாற்றம் செய்ய முனைந்திருக்கும் முதலாவதான முன்னோடியான துறை காவல் துறையாகும். நுண்ணலைத்தகவல் தொடர்புமுறை 545.5 கி.மீ. நீளம் கொண்டது. மாவட்டத் தலைமையிடங்களுக்கான தொடர்பு இணைப்பு வசதிகள் 1,164 கி.மீ. நீளத்திற்கு மீவுயர் அலைமுறையில் உள்ளன. இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்க தேவர், திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் காமராஜர் மாவட்டங்களைத் தவிர தமிழ்நாட்டின் மற்ற அனைத்து மாவட்டங்களின் தலைமை இடங்களும் நுண்ணலை, மீவுயர் அலை, அதி மீவுயர் அலை அமைப்பு முறைகளால் இணைக்கப்பட்டுள்ளன. புதியதாக உருவாக்கப்பட்ட இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருவண்ணாமலை போன்ற மாவட்டத் தலைமையிடங்களில் நுண்ணலை அமைப்பை உருவாக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. 1,090 காவல் நிலையங்களில் 1,015-லும் 117 துணை கோட்டங்களில் 105-லும் அதி மீவுயர் அலை வசதி அளிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 29 கட்டுப்பாடு அறைகளும் இயங்குகின்றன. மேலும் வாகனங்களில் நடமாடும் 346 அதி மீவுயர் அலை வசதியுள்ள கருவிகளும், மோட்டார் சைக்கிள்களில் 155 அதி மீவுயர் அலை வசதியுள்ள கருவிகளும் இணைக்கப்பட்டு இம் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. பழைய அனலாக் நுண்ணலை அமைப்பு முறையைக் களைந்து ரூ. 972.36 இலட்சம் செலவில் டிஜிடல் நுண்ணலை அமைப்பு முறையை நிறுவ அனுமதியளித்ததோடல்லாமல், ''தகவல் தொடர்பு அமைப்பு முறையை மேம்படுத்தும் வகையில் காவல் துறையை நவீனமாக்கும்'' திட்டத்தின்கீழ் 1991-92 ஆம் ஆண்டில் 359 அதி மீவுயர் அலை கருவிகளை வாங்க, இந்த அரசு அனுமதியளித்துள்ளது. இத்தொகையான ரூ. 972.36 இலட்சம் மூன்று காலக்

1993 ஏப்ரல் 20]

கட்டங்களில் செலவிடப்படும். அதன் அடிப்படையில் முதல் கட்டமாக ரூ. 219 லட்சம் செலவிடப்படுகிறது. இத் திட்டத்தை செயல்படுத்தும் பொழுது, மீதமிருக்கின்ற இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்க தேவர், காமராஜர் மற்றும் திருவண்ணாமலை—சம்புவராயர் போன்ற மாவட்டத் தலைமையிடங்களும் புதிய டி.டி.எம்.ஏ. தகவல் தொடர்பு அமைப்பு முறையில் இணைக்கப்படும்.

(ii) இயக்கம் :

காவல் பணியாளர்கள், குறிப்பாக பெருநகர் அல்லாத மாநிலத்தின் பரந்த ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் குறுகியகாலத்தில் இயங்கவேண்டியுள்ளதால், காவல் துறை விரைந்து பல இடங்களுக்கு செல்வதற்கான இயக்கம் மிக முக்கியமானதொன்றாகும். இம்மாநிலத்தின் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஜீப்புகள் வழங்கப்பட வேண்டுமென்ற திட்டத்தை இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதனடிப்படையில் 257 மோட்டார் வாகனங்கள் வாங்க அரசு, கணிசமாக ரூ. 4,15.45 இலட்சம் செலவழிக்க அனுமதியளித்துள்ளது. இதில் 223 ஜீப்புகள் வாங்கப்பட்டன. மேலும் மோட்டார் வாகனங்கள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 95 கழிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்கள் வாங்க ரூ. 1,09 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு முடிவில் காவல் துறையில் உள்ள 3,980 வாகனங்களின் பழுதுகளைக் களையவும், பராமரிக்கவும் ஆவடி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரண்டு இடங்களில் இரண்டு பணிமனைகள் இயங்குகின்றன.

V. காவல் துறையை நவீனப்படுத்துதல் :

மனித நடவடிக்கைகளை அதன் ஒவ்வொரு துறையிலும் நவீனப்படுத்துவதானது, பணியாற்றும் திறமை, மற்றும் முன்னேறிய செயல்பாடு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. குற்றம் புரியும் முறைகள், குற்றவாளிகளின் நடத்தை மற்றும் சமுதாயம் ஆகியவை அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கும் நிலையில், அவை ஏற்படுத்தும் பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள பழமையான வழிவகைகள், நடைமுறைகள் போதுமானதாக இல்லை. எனவே, காவல் துறையை நவீனப்படுத்துதல் என்பது மிக அவசியமானதொன்று என நீண்ட நாட்களாக உணரப்பட்ட ஒன்றாகும். இலங்கைப் போராளிகள், தமிழீழ விடுதலைப் புலிகள், இதர பயங்கரவாதிகள் ஆகியோர் தரும் இன்னல்களைக் கருதிப்பார்த்திடுங்கால், தமிழ்நாடு காவல் துறையை உடனடியாக நவீனப்படுத்துதல் என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

[1993 ஏப்ரல் 20

இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்கும் முன்னர் இப்போராளிகள் தமிழ்நாட்டில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டு வந்தனர். அவர்களது பயங்கரவாத நடவடிக்கைகள் தடுக்கப்படவோ ஒடுக்கப்படவோ இல்லை. அவர்கள் உபயோகப்படுத்திய நவநாகரீகமான புதிய ஆயுதங்கள், சக்தி வாய்ந்த தகவல் தொடர்பு சாதனங்கள் நமது காவல் துறையினருக்கு பழக்கப்பட்டனவையாக இல்லை. தமிழ்நாடு காவல் துறையினருக்கு போதுமான அளவு ஆயுதங்கள் இல்லை. தீவிரவாதிகளின் செயல்களை திறமையாக சமாளிக்கவும் தயாராக இல்லை. மேலும் மிக முக்கியமாக பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்கு அவர்களுக்கு தெளிவான அறிவுரைகள் அரசினால் தரப்படவில்லை.

இவ்வரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் இப்போராளிகளின் பயங்கர நடவடிக்கைகள் அவற்றால் விளைந்த அச்சம் ஆகியவை தீவிரமாக கருத்தில் கொள்ளப்பட்டன. அவர்களை அடக்கி ஒடுக்க, கட்டுப்படுத்தவல்ல போராட்ட முறைகள் வகுக்கப்பட்டன. அவற்றில் முக்கியமான ஒன்று காவல் துறையை வலுப்படுத்துவதோடு, அதன் திறமைகளையும், நுட்பங்களையும் உயர்த்துவது மற்றும் அதன் கருவிகள் மற்றும் பொறிகளை நவீனப்படுத்துவதுமாகும். இதன் தொடர்பாக, போராளிகள், விடுதலைப் புலிகள், பயங்கரவாதிகள் ஆகியோரால் விளையும் ஆபத்துக்களைக் கருத்தில் கொண்டு முன்னுரிமை இனங்களான படைக்கலன்கள் மற்றும் வெடி மருந்துகள், சிறப்புப் பாதுகாப்பு அணி, மோட்டார் வாகனங்கள், வெடி குண்டு அழிப்பு அணி, நுண்ணலைத் திட்டம் போன்றவற்றை நவீனப்படுத்த வேண்டி ரூ. 80.45 கோடி வழங்கக் கோரி இந்தியப் பேரரசுக்கு ஒரு தனி முன்மொழிவு அனுப்பப்பட்டது. இந்தியப் பேரரசும் இதுவரை இதற்கு 10 கோடி ரூபாய் விடுவித்துள்ளது. இதில் ரூபாய் 6 கோடி 1991–92 ஆம் ஆண்டில், படைக் கலன்கள், வெடி மருந்து கருவிகள் மற்றும் வாகனங்கள் வாங்க ஏற்கெனவே உபயோகப்படுத்தப்பட்டு விட்டது. மீதி 4 கோடி ரூபாய் 1992–93 ஆம் ஆண்டிற்கு முன் கொணரப்பட்டது. இதில் சிறப்பு பாதுகாப்பு அணிக்கு சிறப்புக் கருவிகள் வாங்கவும், டிஜிட்டல் நுண்ணலைக் கருவி அமைக்கவும் 3 கோடி ரூபாய் ஏற்கெனவே செலவழிக்கப்பட்டு விட்டது. 10 கோடி ரூபாயில் இன்னமும் மீதமுள்ள 1 கோடி ரூபாய் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், தேவைப்படும் 80.45 கோடி ரூபாய்களைக் கருதிப் பார்க்கும்போது இந்தியப் பேரரசு அளித்துள்ள ரூ. 10 கோடி வெகு சிறு தொகையாகும். எனவே, இவ்வரசு மைய அரசினை மீதமுள்ள தொகையினையும் அளிக்க முறையாக வலியுறுத்தி வருகிறது. மைய அரசும் இது தொடர்பாக அவர்களது பரிசீலனையில் இருந்து வருவதாக முறையாகக் கூறி வருகிறது.

நவீனப் படுத்துதல் என்பது புதிதான ஒன்றல்ல, ஒரு தடவையில் முடிந்து போவதுமல்ல. ஆனால் அது தொடர்ச்சியான ஒன்றாக இருக்க வேண்டும். இந்தியப் பேரரசு காவல்

1993 ஏப்ரல் 20]

துறையை நவீனப் படுத்தும் திட்டத்தை மாநிலங்களில் செயல் படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்காக மைய அரசு மாநில அரசுகளுக்கு கடன் மற்றும் மானியம் போன்ற வழிகளில் நிதியுதவி அளிக்கிறது. ஆனால் இத்தகைய நிதியுதவி, வாகனங்கள், கருவிகள், பயிற்சி, புலனாய்வு போன்றவற்றிற்கு மைய அரசு அளிக்கும் உதவிக்குச் சமமாக மாநில அரசுகளும் நிதி அனுமதிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டான 1992-93-ல் இந்தியப் பேரரசு இம்மாநிலத்திற்கு 196.75 இலட்சம் ரூபாய் களை 50 விழுக்காடு கடன் 50 விழுக்காடு மானியம் என்ற அடிப்படையில் விடுவித்துள்ளது. மைய நிதியுதவியை முழுமையாகப் பயன்படுத்திட வேண்டி தமிழ்நாடு அரசும் உடனடியாக இணை மானியமாக 196.75 இலட்சம் ரூபாய்களை அனுமதித்துள்ளது. தமிழ்நாடு அரசு நவீனப்படுத்தும் திட்டத்தைத் தீவிரமாகச் செயலாக்க ஆர்வம் கொண்டுள்ள போதிலும், போதிய நிதி ஆதாரங்கள் இல்லாமை பேரிடர்ப்பாடாக உள்ளது. இவ்விடர்ப்பாடு மட்டும் இல்லாமலிருந்தால், தமிழ்நாடு காவல் துறை எப்போதோ அது அடைய வேண்டிய தொலை தூர உச்சிகளை அடைந்துவிட்டிருக்கும்.

VI. ஊக்கமளித்தல் மற்றும் ஒழுங்குணர்வு :

ஊக்குவித்தலும் அதனால் ஏற்படும் பலாபலன்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. எனவே ஊக்குவித்தல் என்பது ஒரு அமைப்பை சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படும் திறனை தூண்டி விட ஏதுவாகிறது. ஒரு அமைப்பின் செயல் திறனானது, எதிர்பார்ப்புகள், பணித்தன்மை, பணி சார்ந்த சூழ்நிலைகளைப் பொறுத்து ஏற்புகளையும், விளைவுகளையும், மறு விளைவுகளையும் உண்டாக்குகிறது. அதாவது, ஒருவர் நன்றாகப் பணி செய்ய அவரைத் தூண்டி விடுவதற்குத் தகுந்த சூழ்நிலை உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும் மற்றும் அவரது தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். காவல் துறையினரது பணியில் உள்ள ஆபத்தான, கடினமான, நுட்பமான, சிக்கலான பணி நிலையினைக் கருத்தில் கொண்டு அவர்கள் நல்ல முறையில் பணி செய்வதற்கு அவர்களுக்குப் பலவகையான நல திட்டங்கள் மூலமாகவும், ஊக்குவிப்புகள் மூலமாகவும் பரிசு மற்றும் வெகுமதிப்புகள் வழங்குவதன் மூலமாகவும் அரசு மிகவும் தாராளமாகவும், கனிவாகவும் இருக்கிறது.

(i) நல ஊக்குவிப்புகள் :

(அ) குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம் :

குறைந்த விலையில் உணவு வழங்கும் திட்டமானது 1980 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு 1984 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ்

இன்றியமையா உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, மைதா, பாமாயில், துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவை ஆய்வாளர்கள் பதவித்தரம் வரையிலான அலுவலர்களுக்கும், காவல் வானொலிப் பிரிவில் உள்ள தொழில் நுட்பப் பிரிவு அலுவலர்களுக்கும், சுருக்கெழுத்துப் பிரிவு அலுவலர்களுக்கும் சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. அரசு முன்பு 50 சதவீதம் சலுகையாக விலையில் பொருட்களைக் கொடுத்து ஆனால் சந்தை விலை ஏற்றத்தால் அவர்களுக்கு கொடுக்கப்படும் பொருட்களின் அளவு வெகுவாகக் குறைந்தது. அதாவது முன்பு கொடுக்கப்பட்ட அரிசி, சர்க்கரை, பாமாயில் ஆகியவற்றின் அளவுகள் முன்பு கொடுக்கப்பட்டதை விட குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டன.

இந்த குறைபாட்டினைத் தீர்க்க தற்போதைய அரசு இந் நிலையினை பரிசிலித்து சந்தை விலையில் அல்லாது பொது விநியோக முறையில் சலுகை விலையில் கீழ்க்கண்டவாறு பொருட்களை வழங்க திருத்திய ஆணைகள் வெளியிட்டுள்ளது.

அரிசி, சர்க்கரை, கோதுமை பாமாயில்	..	பொது விநியோக முறையில் உள்ள விலையில் 50 சதவீதம்
துவரம் பருப்பு		ஒரு கிலோ ரூ. 4.00.
உளுத்தம் பருப்பு		ஒரு கிலோ ரூ. 3.00.
ரவா/மைதா		ஒரு கிலோ ரூ. 1.50 பைசா.

இந்தத் திட்டத்தின் கீழ் அரசு 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 2.09 கோடி செலவு செய்தது. இதனால் 68,987 காவல் துறையினர் பயன் அடைந்துள்ளார்கள்.

(ஆ) தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் :

காவலர்களைக் குறுகிய நேரத்தில் ஒன்று சேர்க்கவும், திறம்பட அவர்களது பணியினை பயன்படுத்திக் கொள்ளவும், அவர்கள் அனைவரையும் மிக அருகாமையில் குடியமர்த்துவது மிகவும் இன்றியமையாததாகிறது. காவல்துறைப் பணியாளர்களுக்கு குறிப்பாக கீழ்நிலையிலுள்ள பணியாளர்களுக்குத் தற்போது அளிக்கப்பட்டுள்ள வீட்டுவசதிகள் போதிய அளவிற்கு இல்லை. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி 42சதவீதத்தினருக்கே வீட்டுவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. முன்னதாக 1981 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் இம் மாநிலம் முழுவதிலும் 1,561 வீடுகளையும், 601 குடியிருப்புகளையும் கட்டியது. இக்கழகம் 31—3—1989 அன்று கலைக்கப்பட்டது. இதனால் காவலர்களுக்கான வீட்டுவசதித் திட்டத்தைப் பெரிய அளவில்

1993 ஏப்ரல் 20]

கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் குறைந்தன. காவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை பரிவுடன் உணர்ந்த இந்த அரசு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தை மீண்டும் புதுப்பித்துள்ளது. தற்போது தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் தன்னுடைய நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இக்கழகம் காவல் துறையில் தற்போது பணியாற்றுபவர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டிய முக்கிய நோக்கத்துடன் குறுகிய காலத்தில் அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் சீரிய திட்டம் ஒன்றை நிறைவேற்றக் கருதியுள்ளது. இக்கழகம் நிலம் தயாராகவுள்ள பின்வரும் இடங்களில் 1,000 குடியிருப்புகளைக் கட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக அரசு ஏற்கனவே ஹட்கோ உதவியுடன் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கியுள்ளது :—

	(ரூபாய் கோடியில்.)
அரசின் நிதி 40 சதவீதம்	5.00
ஹட்கோ நிதி 60 சதவீதம்	7.50
மொத்தம்	12.50

வரிசை எண்.	பிரிவு.	இடம்.	தற்போது கட்ட கருதியுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1	தமிழ்நாடு சிறப்பு காவலர் 1-வது அணி.	திருச்சிராப்பள்ளி	200
2	தமிழ்நாடு சிறப்பு காவலர் 3-வது அணி.	மணிமுத்தாறு ..	140
3	ஆயுதம் தாங்கிய காவலர்.	தஞ்சாவூர் ..	150
4	ஆயுதம் தாங்கிய காவலர்.	விழுப்புரம்	60
5	ஆயுதம் தாங்கிய காவலர்.	தருமபுரி ..	60

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
6	புளியந்தோப்பு ..	சென்னை மாநகரம்	100
7	இராஜா அண்ணாமலைபுரம்.	..சென்னை மாநகரம்	130
8	தெற்கு வெளி தெரு	மதுரை மாநகரம் ..	160
		மொத்தம் ..	1,000
			குடியிருப்புகள்.

மேற்கண்ட இடங்களில் கட்டுமான பணியானது நல்ல முன்னேற்ற நிலையில் இருக்கிறது. மற்றும் சில இடங்களில் உள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. அரசு, மேலும் ஆய்வாளர்கள்/உதவி ஆய்வாளர்களுக்கு 40 குடியிருப்புகள், தலைமை காவலர்கள்/காவலர்களுக்கு 80 குடியிருப்புகள் மற்றும் ஒவ்வொன்றும் 100 குடியிருப்புகள் கொண்ட 2 படை குடியிருப்புகள் சிறப்பு பாதுகாப்பு பிரிவினருக்கு கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் ஏற்படும் செலவினம் பின் வருமாறு பகிர்ந்து கொள்ளப்படும்:—

அரசு நிதி	40 சதவிதம்	..	ரூ. 1.14 கோடி
ஹட்கோ நிதி	60 சதவிதம்	..	ரூ. 1.71 கோடி
	மொத்தம்	..	ரூ. 2.85 கோடி

இப்பணியும், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் நிறைவேற்றப்படும். 1993-94 ஆம் ஆண்டு மேலும் 880 குடியிருப்புகளை கீழ்க்கண்டவாறு கட்டுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது :—

	மாவட்டம்/பிரிவு.	குடியிருப்புகள் கட்டுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட இடம்.	பரிந்துரைக்கப்பட்டுள்ள குடியிருப்புகள் எண்ணிக்கை.
	(1)	(2)	(3)
1	தமிழ்நாடு சிறப்புக்காவல் 6 ஆம் அணி.	1 மதுரை ..	200
2	தமிழ்நாடு சிறப்புக்காவல் 8 ஆம் அணி.	2 வீராபுரம்	200

LEGISLATURE ... TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
3	செங்கை எம்.ஜி.ஆர். கிழக்கு மாவட்டம் (சேமக் காவலர்கள்).	3 பரங்கிமலை ..	126
4	திருவண்ணாமலை சம்புவரார்யர்.	4 திருவண்ணாமலை	104
5	சேலம்	5 சேலம் நாமக்கல்	35
		6 வேலூர் ..	6
		7 ஓமலூர் ..	20
6	தஞ்சாவூர்	8 பாபநாசம் ..	22
		9 திருவிடைமருதூர்	13
7	திருநெல்வேலி கட்டபொம்மன்.	10 செங்கோட்டை	16
		11 சிவகிரி ..	20
		12 புளியங்குடி ..	19
		13 வாசுதேவநல்லூர்	6
8	கன்னியாகுமரி ..	14 குழித்துறை ..	21
9	சென்னை	15 கோட்டூர்புரம் ..	72
		மொத்தம் ..	880

முந்தைய ஆட்சியின்போது காவலர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் ஒன்பது ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டவை தற்போதைய அரசால் கடந்த இரண்டே ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் குறிப்பிடலாம். இச்செயலின் வேகம் மற்றும் அயராத முயற்சி தொடரும். இந்த வேகம் மற்றும் முயற்சி மேலும் அதிகரிக்கவும் கூடும்.

(இ) <u>தமிழ்நாடு காவலர் நல நிதி :</u>

காவல் துறையைச் சேர்ந்த சார்நிலைப் பணியாளர்களுக்கு நிதியுதவி அளிக்கும் பொருட்டு 1957ஆம் ஆண்டில், தமிழ்நாடு காவலர் நல நிதியை தமிழ்நாடு அரசு அமைத்தது. இந்நிதிக்கு அரசிதழ் பதிவு பெறாத உறுப்பினர்களிடமிருந்து (தாமாகவே முன்வந்து சேரும் உறுப்பினர்களிடமிருந்து) வசூலிக்கப்படும் ரூ. 12 முதல் 48 வரையிலான ஆண்டுச் சந்தாத் தொகை மூலமும், காவல் துறை அதிகாரிகள் வழங்கும் நன்கொடை மூலமும் நிதி

திரட்டப்படுகிறது. இதைத் தவிர அரசு ஆண்டு மானியத் தொகையாக 1985-ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 5 இலட்சம் வழங்கி வருகிறது. தற்போதைய அரசு 1991-92 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு மானியத் தொகையை ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

இந்நிதி பின்வரும் செயல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது:

(i) இறந்த காவல்துறை பணியாளரின் துணைவி கைம்பெண் என்ற அளவில் அவரைச் சார்ந்திருப்போருக்கு இறந்த பணியாளரின் பதவித் தரத்திற்கு ஏற்ப ரூ. 3,000 முதல் ரூ. 5,000 வரை குடும்ப நிவாரணத் தொகை வழங்குதல்.

(ii) நீண்டகாலமாக நோயால் பீடிக்கப்பட்டவர்கள், கடுமையான காயங்கள் ஏற்பட்டு, நீண்ட காலத்திற்கு சிகிச்சை பெற வேண்டியவர்கள் போன்ற சில தவிர்க்க முடியாத சிறப்பு இனங்களில், அப்பணியாளர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

(iii) மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவது, இருதய அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்கு சிறப்பு மருத்துவ நிவாரணத் தொகையாக ரூ. 5,000 வழங்குதல்.

(iv) காவல்துறையில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகள் கல்லூரிகளிலும், பல் தொழில் பயிற்சி பள்ளிகளிலும் உயர் கல்வியை தொடரும் வகையில், அவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் வழங்குதல்; தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பட்டப்படிப்பு பயிலும் மாணவர்க்கு ஓராண்டிற்கு படிப்புதவித் தொகை ரூ. 500 என்றும், தொழிற்கல்வி பயிலும் மாணவர்க்கு ஓராண்டிற்கு ரூ. 1,500 எனவும் வழங்கப்படுகிறது.

(v) காவலர் குடியிருப்புகளில் உள்ள படிப்பகங்களுக்கு நாளிதழ்கள், பத்திரிகைகள் வாங்க ஆண்டொன்றுக்கு ரூ. 500 வழங்குதல். 1992 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 20.29 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 1,836 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

(ஈ) தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு படிப்புதவி நிதி :—

தமிழ்நாடு காவல்துறைப் பணியாளர்களின் குழந்தைகள் நலனுக்காக உள்ள மற்றுமொரு திட்டம் தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்புதவி நிதி ஆகும். தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்புதவி நிதியிலிருந்து காவல்

துறையில் பணியாற்றும் பணியாளர்கள் அமைச்சுப் பணியாளர்களின் தகுதி வாய்ந்த குழந்தைகளுக்கு அவர்கள் கல்லூரி அளவில் உயர்கல்வி மற்றும் தொழில் நுட்ப கல்வியைத் தொடரும் வகையில் ஆண்டுதோறும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரே சமயத்தில் காவலர் ஒருவரின் இரு குழந்தைகளுக்கு மட்டுமே படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஓய்வு பெற்ற/இறந்த காவல் துறை பணியாளரின் குழந்தைகள் அப்பணியாளர் ஓய்வுபெற்ற/இறந்த நாளிலிருந்து 5 ஆண்டுகால அளவிற்கு படிப்புதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர். 1992 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 1,486 மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகையாக ரூ. 11,36,000 வழங்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு காவல் துறையினர் நல கூட்டுறவுச் சங்கங்கள் :

காவல் துறையினரின் குடும்பத்தினர் பங்குகொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சில நிறுவனங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் முக்கியமானதாக உள்ளது.

காவல் துறை மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் குடும்பத்தினர் மத்தியில் நலத்திட்டங்களை மேற்கொள்வதில் ஊக்கம் கொடுத்து, மேம்படுத்தி அவர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதின் மூலம் அவர்களுடைய வருமானத்தை உயர்த்தி அத்துடன் பொழுதுபோக்கு, கல்வி மற்றும் மருத்துவ வசதிகளை செய்து கொடுப்பதுதான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். காவல் துறை அலுவலர்களது குடும்பத்தினரால் 1992-ம் ஆண்டு நூல் நூற்றல், தையல், பாய் பின்னுதல், தீக்குச்சி தயாரித்தல், கால்நடை மற்றும் கோழி வளர்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

காவல் துறைப் பணியாளர்களுக்கும், சில பொதுத் துறை நிறுவனங்களுக்கும் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கும் சீருடைகள் தைக்கும் பணியில் ஒன்பது தையல் குழுக்கள், 20 மாதர் சங்கங்கள் (பெண்கள் தையல் குழுக்கள்) ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

20 கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. அதன் மூலம் காவல் துறையினரின் குடும்பத்தினர் பனியன்கள், காலுறைகள், ஆடைகள், செர்ஜ் தொப்பிகள், கொசுவலைகள், துர்ரிகல் தரைவிரிப்புகள், கூடைகள், பாலிதின் பைகள் போன்ற பொருட்களைத் தயாரிக்கின்றனர்.

சென்னை இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனம் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்ககம் ஆகியவற்றின் உதவியுடன் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகள் மின்னணுக் கருவிகளைக் கையாளவும் வண்ணத் தொலைக்காட்சிப்

பெட்டிகள், கணிப்பொறிப் பாகங்கள் ஆகியவற்றை இணைக்கும் பணியில் பயிற்சி பெறவும் தமிழ்நாடு காவல் துறை கணிப்பொறி தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. கணிப்பொறி பாகங்கள், கணிப்பொறி அடிப்படைத் தகவல் குறியீட்டுச் சாதனம் ஆகியவற்றைத் தயாரிக்கவும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு கணிப்பொறி நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் பயிற்சி அளிப்பதற்கும் திட்டம் ஒன்று உள்ளது.

அரசு போக்குவரத்து நிறுவனங்கள் அளித்த பணிகளை தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த டயர் புதுப்பிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம் தன்னிடமுள்ள 30 உறுப்பினர்களைக் கொண்டு நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு காவல் துறை விளையாட்டுப் பொம்மைகள் விளையாட்டுப் பொருட்கள் தயாரிப்பு கூட்டுறவுத் தொழில் சங்கம் 20 உறுப்பினர்களுடனும், தமிழ்நாடு காவல் துறை உலோகப் பற்றவைப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் 30 உறுப்பினர்களுடனும் சென்னை புறநகர்ப்பகுதியில் செயல் படுகின்றன.

சிவகாசியிலும், மணிமுத்தாறிலும் உள்ள தீக்குச்சி தயாரிப்புத் தொழிற் பிரிவுகளும், சென்னையிலுள்ள புத்தகம் கட்டும் பிரிவுகளும், காகித உறைகள் தயாரிக்கும் பிரிவுகளும் 1992-ம் ஆண்டில் காவல்துறைப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர் களுக்கு வேலை வாய்ப்புகள் அளித்துள்ளன.

ஆவடியில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக இரண்டு கூட்டுறவுப் பால் பண்ணைகளும், விருதுநகரில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்றும் உள்ளன. இராம நாதபுரம் மாவட்டத்தில் பால் பண்ணைகள் செயல்படுகின்றன. இவ்வாறாகக் காவல்துறையினரின் குடும்பத்தினர் தங்கள் வரு மானத்தைப் பெருக்கும் வகையில் கறவை மாடுகளை வளர்க் கவும், காய்கறித் தோட்டங்களை ஏற்படுத்தவும் ஊக்கப் படுத்தப்படுகின்றனர்.

(ii) பரிசுகளும் வெகுமதிகளும் :

கடமைப் பற்றுறுதியையும், பணிக்குரிய திறமையையும், தகுதியையும் வளர்த்துக் கொள்ள காவல் துறை அதிகாரிகளை யும், காவலர்களையும் ஊக்குவிக்கும் பொருட்டு பரிசுகளும் வெகுமதிகளும் ஏற்படுத்தப்பட்டன. காவலர்கள் தங்கள் பணியின் போது நிகரற்ற கடமைப்பற்றுறுதியையும் பணிக் குரிய திறமையையும் வீர தீர செயல்களையும் வெளிப்படுத்தி யதை பாராட்டும் வகையிலும், அவர்களுடைய தொழில் திறமை மற்றும் அறிவினை வளர்த்துக் கொள்வதை ஊக்கு

1993 ஏப்ரல் 20]

விக்கும் பொருட்டும் தமிழக அரசால் கீழ்க்கண்ட விருதுகள் காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு இந்த ஆய் வாண்டில் வழங்கப்பட்டன.

பொங்கல் திருநாளில் வழங்கப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கம் :

அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று வழங்கப்படும் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் நிகரற்ற கடமைப் பற்றுறுதிக்காக 55 காவல் துறை அதிகாரி களுக்கும், காவலர்களுக்கும் துணிவுடை செயலுக்காக 2 காவல் துறை அதிகாரிகளுக்கும், அண்ணா பிறந்த நாளான 1992 செப்டம்பர் 15 ஆம் நாளன்று தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது. இதன் விவரம் வருமாறு :

துணிவுடைச் செயலுக்கான பதக்கம் :

பதவித் தரம்.	வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை.
காவல் ஆய்வாளர்	1
காவல் உதவி ஆய்வாளர்	1

துணிவுடைச் செயலுக்கான பதக்கம் பெற்றவர்கள், ஒரு மொத்த மானியமாக ரூ. 3,000 பெறத் தகுதியுடையவராவோர்.

நிகரற்ற கடமைப் பற்றுறுதிக்கான பதக்கங்கள் :

பதவித் தரம்.	வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை.
கூடுதல் கண்காணிப்பாளர்	1
துணைக் கண்காணிப்பாளர்கள் ..	7
காவல் ஆய்வாளர்கள்	13
காவல் உதவி ஆய்வாளர்கள் ..	15
தலைமைக் காவலர்கள்	10
காவலர் நிலை-1	1
நாயக்	1
காவலர் நிலை.2	6
பெண்காவலர்	1
மொத்தம் ..	55

[1993 ஏப்ரல் 20

தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம் பெற்றவர்கள் அவரவர் பதவித் தரத்திற்கு ஏற்ப ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை ஒரு மொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவர்.

பாராட்டத்தக்க பணிக்கான காவலர் பதக்கமும் தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவர் பதக்கமும் பின்வரும் பணியாளர்களுக்கு 1992 சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்டன:

காவலர் பதக்கம்.

பதவி		வழங்கப்பட்ட எண்ணிக்கை.
கண்காணிப்பாளர் (இ.கா.ப.)	..	1
ஆய்வாளர்கள்		5
சார்பு ஆய்வாளர்		1
தலைமைக் காவலர்		1
மொத்தம்	..	8

குடியரசுத் தலைவர் காவலர் பதக்கம் :

துணைக் கண்காணிப்பாளர் :

உயிரைக் காப்பாற்றியதற்காக பாரதப் பிரதமரின் காவலர் பதக்கம் முதல் நிலை காவலர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

பாராட்டத்தக்க பணிக்கான காவல் பதக்கமும் தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவர் காவலர் பதக்கமும் 1993 குடியரசு தினத்தன்று பின்வரும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன :—

பாராட்டத்தக்க பணி :

பதவி.		வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை.
காவல்துறை துணைத் தலைவர்	..	2
துணைக் கண்காணிப்பாளர்	..	2
ஆய்வாளர்		3
காவலர்		1
துணைக் கண்காணிப்பாளர் தகைசால் பணி:	..	1

1993 ஏப்ரல் 20]

1993 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளில் காவலர்கள் தலைமைக் காவலர்கள் பதவித் தரத்தில் உள்ள 944 அப்பழுக் கற்ற பணிப்பதிவேட்டுடன் கூடிய காவல்துறை பணியாளர் களுக்கு அவர்களின் 10 ஆம் ஆண்டு பணியினைப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் வழங்கப்பட்டது.

பதவி.	வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை.
காவலர்	745
பெண் தலைமைக் காவலர்	2
தலைமைக் காவலர்	50
நாயக்குகள்	63
லேன்ஸ் நாயக்குகள்	22
ஹவில்தார்கள்	62
மொத்தம் ..	944

இப்பதக்கம் பெற்றவர்கள் மாதாந்திர பதக்கப்படியாக காவலர் ரூ. 20ம், தலைமைக் காவலர் ரூ. 25-ம், 1—2—1993 முதல் பெறுவதற்கு தகுதியுடையோராவர்.

மாநில விருதுகளுடன், இம்மாநிலத்தைச் சேர்ந்த காவல் துறை அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் மத்திய அரசின் பின்வரும் பதக்கங்கள் வழங்கப்பட்டன :—

(அ) சுதந்திர தினத்தன்று / குடியரசுத் தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான காவலர் பதக்கம்;

(ஆ) சுதந்திர தினத்தன்று / குடியரசுத் தினத்தன்று தகைசால் பணிக்காக வழங்கப்படும் குடியரசுத் தலைவர் காவல் பதக்கம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஊர்க்காவல் படைக்கான பதக்கங்கள்.

15—9—1992 அன்று நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவின் போது தமிழ் நாடு முதலமைச்சர் ஊர்க்காவல் படை வீரர்களுக்கான பதக்கம் 8 ஊர்க்காவல் படை வீரர்களுக்கு அவர்களின் நிகரற்ற கடமைப்பற்றுக்காக வழங்கப்பட்டது இப்பதக்கத்தைப் பெற்றவர்கள் அவரவர் பதவித்தரத்திற்கேற்

[1993 ஏப்ரல் 20

ரூ. 1,000 முதல் ரூ 3,000 வரை மொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவர். இம்மாநில விருதுகளுடன் 1992 சுதந்திர தினத்தன்றும் 1993 குடியரசுத் தினத்தன்றும் பாராட்டத் தக்க பணிக்கான ஊர்க்காவல் படை சிவில் பாதுகாப்பு பதக்கங்கள் முறையே 3ம், 2ம் வழங்கப்பட்டன.

VII. செயல் முறை சாதனைகள்.

(அ) சட்டம் ஒழுங்கு :—

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது மாநில அரசின் தலையாய பணியாகும். இப் பணியைச் செவ்வனே செயல் படுத்த மாவட்டங்களில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ளின் கீழ் ஆயுதப் படை பிரிவுகளும், மாநில மட்டத்தில் காவல் துறை இயக்குநரின் கீழ் சிறப்புக் காவல் படை பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

இந்த அரசு பதவி ஏற்பதற்கு முன் இலங்கை தீவிரவாதிகள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மாநிலத்தில் சுதந்திரமாக நடமாடவும், செயல் படுவதற்கும் அனுமதிக்கப் பட்டிருந்ததால், தமிழ் நாடு, அவர்களின் கொடூர மிரட்டலுக்கு உட் பட்டிருந்தது. வன்முறைச் சம்பவங்கள், நாசவேலைகள் குண்டு வெடிப்புகள், மிக அதிநவீன செயல் திறன்களைக் கொண்ட ஆயுதங்கள் / தளவாடங்கள் ஆகியவை பயன்படுத்துதல் போன்றவற்றை இம்மாநிலத்தில் காண முடிந்தது. அவர்களின் செயல்கள் உண்மையிலேயே பீதியையும் மாநிலத்தின் பாதுகாப்பிற்கும் மற்றும் சட்டம் ஒழுங்கு பராமரிப்பவர்களுக்கு பெரும் சவாலையும் ஏற்படுத்தியது. இந்த அரசு பதவி ஏற்ற சில மாதங்களிலேயே அரசின் திடமான அரசியல் நடவடிக்கையினாலும் அவர்களை சமாளிப்பதற்கு வழங்கப்பட்ட அறிவுரைகளின் மூலமாகவும், இத்தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் மற்றும் செயல் பாடுகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு அவர்கள் வெளியேற்றப்பட்டனர் என்பதில் சந்தேகம் இல்லை. இச்செயல் அரசின் முக்கிய சாதனையாக இருந்தாலும் அதோடு திருப்தியடைய முடியாது. அரசின் இத்தீவிர நடவடிக்கைகளுக்குப் பின்னரும் அங்கும் இங்குமாக ஒரு சில தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஊடுருவி அவ்வப் பொழுது வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு தங்கள் லட்சியத்தினை அடைய முயலக்கூடும். அவர்கள் முக்கிய பிரமுகர்களையும் அதிகாரிகளையும் கொலை செய்யவும் முக்கிய நிலையங்களை நாசப்படுத்தவும், சிறைச்சாலைகளை தகர்க்கவும் தயங்க மாட்டார்கள். எனது உயிருக்கு அவர்களால் ஏற்படக்கூடிய அச்சுருத்தல் முடிவடையாமல் இன்னும் தொடர்கிறது. இச்சூழ்நிலைகளை இந்த அரசு முழுமையாக உணர்ந்துள்ளதோடு எவரையும் தப்ப விட்டு விடாத படி விழிப்போடு தீவிர கண்காணிப்புடனும் செயல்பட்டு வருகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1993 ஏப்ரல் 20]

மொத்தத்தில் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ் கிறது. இதர மாநிலங்கள் போலன்றி கொந்தளிப்புகளிலிருந்து விடுபட்டு திகழ்கிறது. இதை விளக்க வேண்டு மெனில் 6—12—1992 அன்று அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப் பட்ட பின்பு நாடே மதவாத வெறிக்கு உட்பட்டு வன்முறை செயல்களில் ஈடுபட்ட போது தமிழ்நாடு மட்டும் ஒரு சில சிறு சம்பவங்கள் தவிர அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்தது. அதே போல காவிரி நதி பங்கீடு தொடர்பாக கர்நாடக மா நிலமே கொலை, கொள்ளை மற்றும் வன்முறைச் சம்பவங்க ளால் கொந்தளித்த போது, தமிழகம் மட்டும் பெரிய அசம்பா விதங்கள் எதுவுமின்றி இப்பிரச்சினையை சமாளித்தது. ஒன் றுக்கொன்று எதிராக பாரதிய ஜனதா மற்றும் அதன் தோழ மைக் கட்சிகள் ஒரு புறமும், முஸ்லீம்கள் மறு புறமும் எத்தகைய இடையூறுகள் மற்றும் மோதலுமின்றி பேரணிகளும் ஊர்வலங் களும் பொதுக் கூட்டங்களும் நடத்த முடிந்த ஒரே மாநிலம் என்ற சிறப்பு தமிழ் நாட்டிற்கு உரியது.

எனினும் தமிழ் நாட்டில் நிகழ்ந்த சட்டம் ஒழுங்கு பிரச்சினை சம்பந்தமாக ஆய்வில் உள்ள ஆண்டில் நிகழ்ந்த முக்கிய சம்பவங் கள் தர வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(I) வகுப்பு வாதக் கலவரம் :—

சில வகுப்பு வாதக் கலவரங்களும் அதன் தொடர்பான வன் முறைச் சம்பவங்களும் ஏற்பட்டன. இவை மதம் மற்றும் சமூகப் பொருளாதாரம் போன்ற காரணங்களினால் தான் ஏற் பட்டன. நீண்ட காலப் பகை, நிலத்தகராறுகள், விழாக்கள் மத ஊர்வலங்கள், பெண்களைக் கேலி செய்தல் போன்ற நிகழ்ச்சிகள் இவ்வகுப்புவாதக் கலவரங்களுக்கு அடிப்படையாக அமைந்து விட்டன. 1992 ஆம் ஆண்டில் 84 வகுப்புவாதக் கலவர நிகழ்ச்சிகள் நடை பெற்று 6 நபர்கள் உயிரிழந்தனர், 241 நபர்கள் காயம் அடைந்தனர். இந்தக் கலவரங்களில் முக் கியமான சில நிகழ்ச்சிகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

சென்னையில் மிலாதுநபி கொண்டாட்டம் தொடர்பாக, 10—9—1992 அன்று 30,000 நபர்களைப் கொண்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. ஊர்வலத்தினர் மீது சில சமூக விரோதிகள் கல்லெறிந்தனர் என்ற வதந்தியின் காரணமாக ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிலர் கோபமடைந்து வன்முறை யில் ஈடுபட்டனர். இவர்கள் வாலாஜா சாலை, அண்ணா சாலை மற்றும் திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையின் பக்கம் உள்ள சந்துகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களை சேதப்படுத்தினர். காவல் துறையினர் கூட்டத்தைக் கலைக்க கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினர். மொத்தத்தில் 61 முஸ்லீம் கடைகள், 34 இந்துக்களின் கடை கள் 8 பல்லவன் போக்குவரத்து வாகனங்கள், 2 காவல் துறை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY — TRUTH ALONE TRIUMPHS

லாரிகள், 2 தீயணைப்புத்துறை வாகனங்கள், 11 டாக்சிகள்/கார்கள், 3 ஆட்டோக்கள், 3 வேன்கள், 10 இரண்டு சக்கர மூன்று சக்கர வாகனங்கள் ஆகியவை சேதமடைந்தன. இந்தச் சமூக விரோதிகள் மேலும் ஒரு சைக்கிள் கடை ஒரு டிங்கர் கடை, ஒரு தையல் கடை, ஒரு டீக் கடை மற்றும் ஐந்து கடைகளுக்குத் தீ வைத்தனர். 11—9—1992 மற்றும் 12—9—1992 ஆகிய நாட்களிலும் வன்முறை தொடர்ந்தது. 12—9—1992 அன்று வாலாஜா மற்றும் பெல்ஸ் சாலை சந்திப்பில் உள்ள ஒரு மசூதி தாக்கப்பட்டு அங்குள்ள மின்சார விசிறிகள் மற்றும் கண்ணாடி சன்னல்கள் உடைக்கப்பட்டதோடு அங்கிருந்து வெளியே வந்து கொண்டிருந்த இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த ஒருவரை சில அடையாளம் தெரியாத நபர்கள் அரிவாளால் தாக்கினார்கள். இச்சம்பவங்களில் 26 இந்துக்கள், 16 முஸ்லீம்கள், 18 காவல் துறையினர் காயமடைய 3 முஸ்லீம்கள் இறந்தனர்.

மொத்தத்தில் சென்னை நகரில் 165 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 141 நபர்கள் (106 இந்துக்கள், 35 முஸ்லீம்கள்) குறிப்பிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இது தவிர தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் 500 நபர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். சொத்துக்களின் மொத்த சேதத்தின் மதிப்பு ரூபாய் 37.81 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 13—9—92 அன்று 30 இந்துக்கள் 30 முஸ்லிம்களைக் கொண்ட அமைதி குழு கூட்டம் நடத்தப்பட்டு பதட்ட நிலமை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டபின் மாநிலத்தில் கல்லெறிதல், கருப்புக் கொடி ஏற்றுதல், கொடும்பாவி எரிப்பு மற்றும் சொத்துக்களை சேதப்படுத்துதல் ஆகிய சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாநிலத்தில் நடந்த 58 சிறிய வகுப்புவாத சம்பவங்களில் 20 முஸ்லீம்கள் 23 இந்துக்கள் மற்றும் 56 காவல்துறையைச் சார்ந்தவர்கள் காயமடைந்தனர். சென்னையில் உள்ள அண்ணா சாலையில், அண்ணா சிலை அருகே 8—12—1992 அன்று தீக்குளிக்க முயன்ற ஐந்து முஸ்லீம் இளைஞர்கள், முன்னதாகவே கைது செய்யப்பட்டு அந்த முயற்சி தடுக்கப்பட்டது. 11—12—1992 அன்றைய நிலவரப்படி 1524 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டனர். மேலும் 2486 நபர்கள் குறிப்பிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டனர். இதுவரையில் தாக்குதல்/எரித்தல் ஆகியவற்றில் சேதப்படுத்தப்பட்டச் சொத்துக்களின் மதிப்பு ரூ. 70.48 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது திருநெல்வேலி—கட்டபொம்மன் . மாவட்டம் மேலபாளையத்தில் ஒரு கூட்டத்தைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் சுட்டதின் பேரில் இருவர் இறந்த சம்பவம் நீங்கலாக மாநிலம் முழுவம் வேறு யாரும் கலவரம் அல்லது வன்முறைச் சம்பவங்களில் இறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1993 ஏப்ரல் 20]

(ii) *தீவிரவாதம் :*

சமுதாயத்தின் பிரிவுகளான தொழிலாளர், மாணவர்கள், வேலையில்லா இளைஞர்கள், விவசாயிகள், மற்றும் அரசுப் பணியாளர்களிடையே இடது சாரித் தீவிரவாதிகள் ஏற்கனவே ஓரளவு ஊடுருவி விட்டனர். இவர்கள் தமிழீழ விடுதலைபுலிகளை வெளிப்படையாக ஆதரித்து திரு. ராஜிவ் காந்தி அவர்களை கொலை செய்ததை நியாயப்படுத்தும் அளவிற்கு சென்று விட்டனர். இவர்கள் தனித் தமிழ்நாடு அமைக்கவும் கோருகின்றனர்.

இடது சாரி தீவிர வாத அமைப்புகளின் தலைவர்கள் மிக அணுக்கமாக கவனிக்கப்பட்டு அவர்களது நடவடிக்கைகள் தடுக்கப்பட்டதின் விளைவாக 1992ம் ஆண்டு ஒரு சில நிகழ்வுகளைத் தவிர அவர்களால் வேறெதுவும் செய்ய இயலவில்லை. அவற்றுள் சில பின்வருமாறு :

கடந்த 11—2—1992 அன்று சொந்த விரோதம் காரணமாக தருமபுரியை சேர்ந்த ஒரு விறகு வியாபாரி புரட்சிகர இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகப்படும் நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதன் தொடர்பாக ஒரு வழக்கு பதியப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்களில் இருவர் கைது செய்யப்பட்டனர். வழக்கு புலனாய்வில் உள்ளது.

கோயம்புத்தூர் ஊரகத்தைச் சேர்ந்த ஈச்சனாரியில் 13—2—1992 அன்று இரண்டு இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. புரட்சிகர இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 30 பேர் சின்னத் தம்பி என்பவரது பண்ணை வீட்டை தாக்கி அவரையும், அவரது குடும்பத்தைச் சேர்ந்த 13 பேர்களையும் தாக்கி காயப்படுத்தினர். பின்னர் சின்னத் தம்பி இறந்து விட்டார். இதன் தொடர்பாக இரண்டு வழக்குகள் பதியப்பட்டு புலனாய்வில் உள்ளன. இதில் குற்றம் சாட்டப் பட்ட 12 நபர்கள் அன்றே கைது செய்யப்பட்டனர்.

கடந்த 20—4—1992 அன்று மதுரை ஊரக மாவட்டத்தைச் சேர்ந்த இராயப்பம்பட்டி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சுருளி மலையில் உள்ள சுருளி தீர்த்தம் என்னுமிடத்தில் அடையாளம் தெரியாத ஒரு பெட்டியிலிருந்த குண்டு வெடித்து ஆசையன் என்பவர் அதே இடத்தில் இறந்துபோனார். ஆண்டவன் என்பவர் காயமடைந்தார். குற்றம் நிகழ்ந்த இடத்தில் மக்கள் விடுதலைப்படை என்ற இயக்கத்தின் சில கையெழுத்து பிரசுரங்கள் காணப்பட்டன.

24—5—1992 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருநீலக்குடி, சீனிவாச நல்லூரிலுள்ள தொலைக் காட்சி அஞ்சல் நிலையத்தில் ஒரு குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது

'தமிழ்நாடு விடுதலைப்படை என்ற அமைப்பால் வெளியிடப் பட்ட கையால் எழுதப்பட்ட சுவரொட்டிகள் குற்றம் நிகழ்ந்த இடத்தில் காணப்பட்டன. 4—6—1992 மற்றும் 05—6—1992 ஆகிய நாட்களில் முறையே இரு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

29—6—1992 அன்று அண்ணாமலை நகர் காவல் நிலைய வளாகத்தினுள் ஒரு சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் சில காவலர்களுககு காயமேற்பட்டது. இதன் தொடர்பாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடந்து வரு கிறது.

05—10—1992 அன்று தருமபுரி மாவட்டத்தில் பாலக் கோட்டிற்கு அருகே இருப்புப்பாதையில் ஒரு குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது. குற்றம் நிகழ்ந்த இடத்திற்கு அருகில் சில கையெழுத்துப்பிரதிகள் கண்டெடுக்கப்பட்டன. இதன் தொடர்பாக தருமபுரியில் மின் வாரியத்தில் கணக்கீட் டாளராக பணிபுரிபவரும் புரட்சிகர இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்தவருமான நிரஞ்சன் என்கிற திலீபன் என்கிற வேலு என்பவர் 9—11—1992 அன்று கைது செய்யப்பட்டார். பின்னர் குற்றம் சாட்டப்பட்ட சிசுபாலன் என்பவர் 17-12-92 அன்று பாலக்கோட்டில் கைது செய்யப்பட்டார். பின்னர் இவர்கள் மீது தடா சட்டத்தின் பிரிவுகள் பிரயோகிக்கப்பட்டன.

24-10-1992 அன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கல்லகம் என்ற இடத்தில் உள்ள இருப்புப் பாதைப் பாலத்தில் ஒரு குண்டு வெடித்து இருப்புப் பாதைக்கு சில சேதங்களை ஏற்படுத்தியது. குற்றம் நிகழ்ந்த இடத்தில் 'தமிழக விடுதலைப்படை' மற்றும் தமிழக மக்கள் படை, ஆகிய இயக்கங்களைச் சேர்ந்த அச்ச டித்த நோட்டீசுகளும், கையெழுத்து சுவரொட்டிகளும், கண் டெடுக்கப்பட்டன. பின்னர் இவ்வழக்கில் 'தடா' சட்டப்பிரிவு களும் சேர்க்கப்பட்டன.

10—12—1992 அன்று பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த காரைக்குடி, கோட்டையூர் இரயில் நிலையத்திற்கு அருகே இரண்டு குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. இவற்றால் இருப்புப் பாதைக்கு சேதமேற்பட்டது. 'தமிழக மக்கள் விடுதலைப்படை' வெளியிட்ட சில கையெழுத்துப் பிரதிகள் குற்றம் நிகழ்ந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டன.

அநேகமாக இவ்வழக்குகள் அனைத்தும் குற்றப் புலனாய் வுத்துறையின் 'க்யூ' பிரிவினால் புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

1993 ஏப்ரல் 20]

(iii) விவசாயிகள் கிளர்ச்சி :

சமீப காலங்களில் பல்வேறு விவசாயச் சங்கங்கள் நடத்திய போராட்டங்கள் பின்வருமாறு :—

9—3—1992 அன்று கரும்பு கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு ரூ. 400 ஆக நிர்ணயம் செய்யக்கோரி, தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் 66 பேர் சென்னையில் தலைமைச் செயலகத்திற்கு தடையுத்தரவை மீறி ஊர்வலமாக சென்றபோது கைது செய்யப்பட்டனர். வழக்கு பதிவு செய்யப்பட்டது. தடுப்பு நடவடிக்கையாக கைது செய்யப்பட்டு அன்று மாலை அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

உரவிலை உயர்வைக் கண்டித்து இந்திய உழவர் உழைப் பாளர் கட்சியினர் (டாக்டர் சிவசாமி பிரிவு), 21—9—92 அன்று தென்னாற்காடு (1200) நாகப்பட்டினம் காயிதேமில்லத் (2530) திருச்சி (35) மற்றும் தஞ்சாவூர் (3500) ஆகிய மாவட்டங் களில் பல்வேறு மையங்களில் ஊர்வலங்கள், ஆர்பாட்டங்களை நடத்தினர். தஞ்சாவூரில் ஊர்வலத்தினர் கற்களை வீசியதில் தனியார் பேருந்து ஒன்றிற்கு சேதம் ஏற்பட்டதோடு ஒரு பயணியும் சிறு காயம் அடைந்தார்.

(iv) தொழிலாளர்கள் அமைதியின்மை :

தமிழ்நாட்டில் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் நல்ல உறவு இருப்பதால் தொழில் துறையில் நல்ல உறவு காக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் சில இடங்களில் தொழில் அமைதியின்மை ஏற்பட்டது. அவைகள் பின்வருமாறு விளக்கப் படுகின்றன:—

நடுவண் அரசின் புதிய பொருளாதார தொழில் கொள்கை களைக் கண்டித்து பல்வேறு மத்திய தொழிற்சங்கங்களின் மாநிலக் கிளைகளின் வேண்டுகோளுக்கிணங்க தமிழகத்தில் ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., எல்.பி.எப்., எச்.எம்.எஸ். போன்ற வற்றின் தொழிற் சங்கங்கள் மற்றும் ஊழியர் சங்கங்களின் உறுப்பினர்கள் 16—6—1992 அன்று 'தொழிற்துறை வேலை நிறுத்தத்தில்' கலந்து கொண்டனர். வேலை நிறுத்தம் மந்த நிலையில் இருந்தது. பொது மக்களின் இயல்புநிலை பெருமளவில் பாதிக்கப்படவில்லை.

ஆக்டராய் வரி நீக்கம் மற்றும் கலால் வரிக்குறைப்பு ஆகியன கோரி அனைத்திந்திய மோட்டார் வாகன சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி மாநில லாரி உரிமையாளர்கள் சங்கம்

தமிழகம் முழுவதிலும் 1—7—1992 முதல் கால வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது. மாநிலத்தில் ஒரு சில இடங்களில் வாகனங்கள் மீது கல்லெறி சம்பவம் நிகழ்ந்ததைத் தவிர பொதுவாக வேலை நிறுத்தத்தின் போது நிலைமை அமைதியாகக் காணப்பட்டது. டெல்லியில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தையில் தீர்வு காணப்பட்டதையடுத்து 8–7–1992 அன்று வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது.

27—9—1992 அன்று, தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த கொம்பூர் என்னுமிடத்திலுள்ள உண்ணாமலை நூற்பாலையில் பணி புரியும் ஒரு பிரிவினர், புதிய தொழிற்சங்கம் (அண்ணா தொழிற் பேரவை) தொடங்குவதைக் கண்டித்தும் சேலம் மாவட்டத்திலிருந்து புதிய தொழிலாளர்கள் நியமனம் செய்யப்படுவதைக் கண்டித்தும் அவ்வாலையின் தொழிலாளர்கள் சுமார் 60 பேர், ஆலையின் பின்புறம் இருந்த கூரைக்குத் தீ வைத்ததோடு ஆலைக்குள் அத்துமீறிப் புகுந்து அங்கிருந்த கண்ணாடிப் பலகைகள், குழல் விளக்குகள், ஒரு ஸ்கூட்டர் மற்றும் ஒரு இயந்திரம் ஆகியவற்றிற்கு சேதம் விளைவித்தனர். ஆலையினுள்ளிருந்த 17 தொழிலாளர்களைத் தாக்கி காயப்படுத்தினர். பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் துறையினர் துப்பாக்கி சூடு நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர். துப்பாக்கி சூட்டில் யாரும் இறக்கவில்லை. யாருக்கும் காயமேற்படவில்லை. காவல் துறையினர் இதன் தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்து ஐந்து பேரை கைது செய்தனர்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் தொழிலாளர்கள் 46 சதவீதம் போனஸ் கோரி 13—10—1992 முதல் கால்வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். திருச்சியில் நிர்வாகத்தினரோடு நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் 17—10—1992 அன்று ஆலையின் முன்பாக அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர். நிலைமை கட்டுக்கடங்காததால் காவல் துறையினர் துப்பாக்கி சூடு நடத்தியதில் 3 தொழிலாளர்களும் அவ்வழியே சென்ற ஒரு பெண்ணும் காயமடைந்தனர். இந்தக் குழப்பத்தில் 3 வாகனங்கள் சேதமடைந்தன. 12 காவலர் காயமடைந்தனர். வழக்கு பதிவு செய்யப்பட்டது.

கூலி உயர்வு உட்பட தங்களது 30 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி சுமார் 65 விழுக்காடு ஆலைத் தொழிலாளர்கள் (ஏ. ஐ. டி. யு. சி., சி. ஐ. டி. யூ., ஐ. என். டி. யு. சி., எல். பீ. எப். ஏ.டி.பி., எச்.எம்.எஸ். மற்றும் என்.எல்.ஓ.) 15–12–1992 முதல் 20—12—1992 வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மேற்படி வேலை நிறுத்தம் மாநிலத்தில் தடையுத்தரவை மீறி நடத்தப்

1993 ஏப்ரல் 20]

பட்டது. எனினும் வேலை நிறுத்தம் அமைதியான முறையில் நடத்தப்பட்டது. ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணிகளை வரன்முறைப் படுத்தக் கோரி தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர் சங்கத்தின் மத்திய அமைப்பு (சி.ஐ.டி.யூ.) உறுப்பினர்கள், 26—8—1992 அன்று தமிழகம் முழுவதும் பல்வேறு மையங்களில் ஊர்வலங்களை நடத்தி மின் வாரிய அலுவலகங்கள் முன்பாக மறியல் செய்ய முற்பட்டனர். இது தொடர்பாக 10,163 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

(v) பயங்கரவாத நடவடிக்கைகள் :

தீவிரவாத குழுக்கள், வெவ்வேறு எண்ணம் மற்றும் நோக்கமுடைய பல்வேறுபட்ட நபர்களை தம்மகத்தே கொண்டுள்ளன. இவைகள், ஒரு கொள்கை ரீதியான திட்டத்துடன் உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் உள்ள அறிவு ஜீவிகள் மற்றும் சாதாரண மக்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. குழப்பத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்துவதற்காக இவைகள் அர்த்தமற்ற கொலைகள், கடத்தல்கள், குண்டு வெடிப்புகள், பயங்கரவாத வன்முறைகளில் ஈடுபட்டு வந்தன. இந்தியாவின் மற்ற மாநிலங்கள் அவற்றில் அளவு கடந்த மற்றும் உயர்ந்துவரும் பயங்கரவாதம் மற்றும் ஆயுத கலாச்சாரத்தினையும் கண்ணுற்று வருகின்றன. பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களுடன் ஒப்பு நோக்கிடுங்கால் தமிழ்நாட்டில் பயங்கரவாதத் தொந்தரவு குறைவாகவே உள்ளது. எனினும், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இடதுசாரி தீவிரவாதிகளாலும், சில இலங்கைப் போராளிகளாலும் தமிழ்நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவற்றுக்கெதிராக பயங்கரவாத சக்திகளை ஒடுக்கும் பொருட்டு, தகுந்த பாதுகாப்பு முறைகள் ஏற்படுத்தப்பட்டும் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டும், வெடி குண்டு தகர்ப்பு ஆகியவற்றில் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது.

.

.

(அ) வெடி விபத்து :

தமிழ் நாட்டில் 1992-ம் ஆண்டு 13 எதிர்பாராத குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகள் உட்பட மொத்தம் 67 குண்டு வெடிப்புச்

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU

[1993 ஏப்ரல் 20

சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. குண்டு வெடிப்புச் சம்பவங்கள் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

குண்டு வெடிப்புகள்.

மாவட்டங்கள். (1)	தீவிரவாதம். (2)	வகுப்புவாதம். (3)	பிளவு சக்திகள். (4)	இதர இனங்கள். (5)	எதிர்பாரா சம்பவங்கள். (6)	மொத்தம். (7)	இறந்தவர்கள். (8)	காயமுற்றவர்கள். (9)
சிதம்பரனார்	..	1	2	6	1	10	..	12
காமராஜர்	..	..	3	..	1	4	..	3
பெரியார்	..	..	..	1	..	1	..	3
சேலம்	..	..	..	1	2	3	2	7
தர்மபுரி	1	1	..	1	..	3	..	1
மதுரை (ஊரகம்)	1	..	..	1	..	2	2	1
மதுரை (நகரம்)	..	..	..	1	..	1	..	2
திண்டுக்கல் அண்ணா	..	..	..	1		1	1	1
தஞ்சாவூர்	..	..	1	1	1	3	..	19
கடலூர்	..	..	..	1	..	1	..	4
திருநெல்வேலி கட்டபொம்மன்	—	5	1	19	8	33	5	45
திருச்சி	1	..	..	..	..	1	..	..
பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர்	1	..	..	..	..	1	..	1
கன்னியாகுமரி	..	..	..	3	..	3	..	1
மொத்தம்	4	7	7	38	13	67	10	100

1993 ஏப்ரல் 20]

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 10 பேர் உயிரிழந்தனர் 100 பேர் காயமுற்றனர். மேற்படி அட்டவணையைப் பார்க்கும்போது, 67 சம்பவங்களில் 4 சம்பவங்கள் தீவிரவாதம் மூலம் நிகழ்ந்துள்ளன. 7 சம்பவங்கள் பிளவு சக்திகளாலும், 7 வகுப்புவாதக் கலவரத்தாலும் மீதமுள்ள 36 சம்பவங்கள் இதர இனங்களின் மூலம் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன, இச்சம்பவங்களின்போது உயிர்ச்சேதம் ஏற்பட்டது பற்றிய விவரம் பின்வருமாறு:—

ஏத்தாப்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, ஆரிப்பாளையத்திலுள்ள ஸ்வர்தி நிறுவனத்தில் (கருங்கல் உடைப்பு குவாரி) 16—7—1992 அன்று கல்லுடைப்பு பணி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது சுமார் 12.30 மணி அளவில் முதல் நாள் விட்டுச் சென்ற ஜெலட்டின் குச்சி வெடித்தது. அச்சம்பவத்தின்போது பழனிவேல் என்பவர் தலத்திலேயே உயிர் இழந்தார். மேலும் பொன்னுசாமி என்பவர், நரசிங்கபுரம் (ஆத்தூர் காவல் நிலைய எல்லை) ராஜாமணி நர்சிங் ஹோமில் உயிரிழந்தார். மற்றும் முப்பது பேர் காயமடைந்தனர். காவல்துறைக்கு தெரியப்படுத்தாமல் இறந்தவர்களது பிணங்கள் எரிக்கப்பட்டுவிட்டன. இதில் காயமடைந்த மாதுர் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் திரு. பாஸ்கரன் மற்றும் 11 பேர் மீது ஒரு வழக்கு பதிவு செய்து ஏத்தாப்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் புலன் விசாரணை மேற்கொண்டார். அனைத்து 12 குற்றவாளிகளும் 20—7—1992 அன்று கைது செய்யப்பட்டனர்.

போடி, திருமங்கலபுரத்தைச் சேர்ந்த அலெக்சாண்டர் என்பவர் மீது 18—6—1992 அன்று 21-00 மணி அளவில் ஆர். ஐ. அலுவலகம் முன்பாக சில அடையாளம் தெரியாத நபர்கள் நாட்டு வெடிகுண்டை வீசியதில், அவர் காயம் ஏற்பட்டு மரணமடைந்தார். இது தொடர்பாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. மொத்தமுள்ள 5 குற்றவாளிகளில் இருவர் 10—8—1992 அன்றும் மற்றொருவர் 12—8—1992 அன்றும் கைது செய்யப்பட்டனர். மீதமுள்ள இருவர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

சுருளிப்பட்டி, கைலாசநாதர் கோவில் தெருவில் 20—4—92 அன்று 11.00 மணி அளவில் ஆசை என்பவர் சிறிய 'டின்' ஒன்றை உதைத்ததில், வெடிவிபத்து நிகழ்ந்து அவர் காயமடைந்து உயிரிழந்தார். இது தொடர்பாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

கள்ளி மந்தயம் காவல் நிலைய எல்லையில் உள்ள வேலு சின்னமநாய்க்கன் புதூர் கிராமத்தில் 3—5—1992 அன்று சுமார் 19.00 மணி அளவில், சின்னசாமி என்பவர் தனது

வீட்டில் உள்ள மின்சார சர்க்யூட்டின் 'வொயரை' பாட்டரி போன்ற ஒரு பொருளோடு இணைத்தபோது, அது வெடி சத்தத்துடன் வெடித்ததில் மேற்படி சின்னசாமி தீப்புண் காயமடைந்து தலத்திலேயே உயிரிழந்தார். அவரது தந்தை பொம்மநாயக்கர் சிறுகாயமடைந்தார். வீட்டின் கதவு மற்றும் மேற்கூரைகள் சேதமடைந்தன. காயமடைந்த பொம்மநாயக்கர் கொடுத்த புகாரின்பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

20—3—1992 அன்று கூடங்குளம் காவல் எல்லைக்குட்பட்ட கூத்தங்குழியில், முன் விரோதம் காரணமாக சாமிதியன் மற்றும் 5 பேர், ஆண்டன்தேவகர் மற்றும் 3 பேரை நாட்டு வெடிகுண்டுகள் வீசி தாக்கியதில் ஆண்டன்தேவகர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார். மற்றும் இருவர் காயமடைந்தனர். இது தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 10 குற்றவாளிகளில் 4 பேர் 26—3—1992 அன்று கைது செய்யப்பட்டனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

3—8—1992 அன்று பாளையங்கோட்டையில் கிருஷ்ணன் மற்றும் முத்துக்குட்டி ஆகியோர் முன்விரோதம் காரணமாக சங்கரன் என்பவர் மீது நாட்டு வெடிகுண்டுகளை வீசி தாக்கியதில் சங்கரன் ஸ்தலத்திலேயே மரணம் அடைந்தார். இது தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 2 குற்றவாளிகளும் 3—8—1992 அன்று கைது செய்யப்பட்டனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

30—6—1992 அன்று பாளையங்கோட்டையைச் சேர்ந்த முகம்மது அலி மற்றும் 5 பேர்கள் முன்விரோதம் காரணமாக சிந்தாமதார் என்பவரை அருவாள் மற்றும் நாட்டு வெடி குண்டுகளைச் கொண்டு தாக்கியதில் அவர் மரணமடைந்தார். இது தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. 2 குற்றவாளிகளும் 6—7—1992 அன்று கைது செய்யப்பட்டனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

9—8—1992 அன்று திருநெல்வேலி நகரைச் சேர்ந்த அப்பாஸ் மற்றும் கடம்பூரைச் சேர்ந்த மற்றும் 2 பேர்களும் சுடலைக் கண்ணு பண்டாரி என்பவர் மீது முன்விரோதம் காரணமாக நாட்டு வெடிகுண்டு வீசி தாக்கியதில் அவர் மரணம் அடைந்தார். இது தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றவாளிகள் இருவரும் 10—8—1992 அன்று கைது செய்யப் பட்டனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

24—8—1992 அன்று திருநெல்வேலி சந்திப்பில் சையது முகம்மது அலி (எ) ரபி மற்றும் சிலர் முன்விரோதம் காரண மாக முகம்மது கவுது என்பவரை நாட்டு வெடிகுண்டுகள்

மற்றும் நாட்டு கைத்துப்பாக்கிக் கொண்டு தாக்கியதில் முகம்மது கவுது மரணம் அடைந்தார். மற்றும் சிலர் காயமுற்றனர். இது தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. 4 குற்றவாளிகள் 28—10—1992 அன்று கைது செய்யப்பட்டனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

(ஆ) தடா சட்டம் :

நாட்டின் பல பகுதிகளிலும், பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து மைய அரசினால் பயங்கரவாதம் மற்றும் அழிவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (தடா சட்டம்) இயற்றப்பட்டது. இது, பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்கவென்றே பிறப்பிக்கப்பட்ட ஒரு சிறப்புச் சட்டமாகும். பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக இவ்வரசு தடா சட்டத்தின் விதிப்பிரிவுகளை பிரயோகிக்கின்றது.

இதன்படி 108 பேரை கைது செய்து 14 வழக்குகள் 1992 டிசம்பர் மாதம் முடிய உள்ள காலத்திற்கு நிலுவையிலுள்ளன. தடா சட்டத்தின் கீழ் பதியப்பட்ட வழக்குகளின் விசாரணையை துரிதப்படுத்த வேண்டி அரசு சென்னையில் மூன்றும், திருநெல் வேலியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும், ஆக ஐந்து சிறப்பு நீதிமன்றங்களை அமைத்துள்ளது. திரு. இராஜீவ் காந்தி அவர்கள் கொலை வழக்கு விசாரணை நடந்து வரும், பூந்தமல்லி தனித்துணைச்சிறை மற்றும் புது நீதி மன்றம் ஆகியவை அமைந்துள்ள பகுதி முழுவதையும் 25—1—1993 லிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு காக்கப்பட்ட பகுதியாகவும் காக்கப்பட்ட இடமாகவும் தடா சட்டத்தின்கீழ் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியப் பேரரசின் அறிவுரைகளுக்கு இணங்க இவ்வரசின் உள்துறைச் செயலர், தடா சட்டத்தின்கீழ் பதியப்பட்ட வழக்குகளை முறையாக ஆய்வு செய்து சில வழக்குகளை வேறு சட்டங்களின்கீழ் விசாரணை செய்வதற்காக 'தடா' நீதி மன்றங்களிலிருந்து மற்ற நீதி மன்றங்களுக்கு மாற்ற ஏற்பாடு செய்துள்ளார். தடா சட்டத்தினை தவறாக பயன் படுத்துவதை தவிர்க்க வேண்டி இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாடு அரசு மட்டுமே இத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டு சரியான வழி வகைகளை மேற்கொண்டு தடா சட்டத்தின்கீழ் பதியப்பட்ட வழக்குகளை மற்ற சட்டங்களின்கீழ் விசாரணை செய்ய வசதியாக வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றி வருகிறது என இந்தியப் பேரரசு பாராட்டியுள்ளது.

மேற்சொன்னவற்றிலிருந்து இவ்வரசு தடா சட்டத்தினை பயன்படுத்துவதில் ஜாக்கிரதையாகவும் பெரும் கவனத்துடனும் நடந்து கொண்டு அவசியமானவற்றில் மட்டும் இச்சட்டத்தினை உபயோகித்து வருகிறது எனத் தெளிவாகிறது.

சட்டம் மற்றும் ஒழுங்கின் பல்வேறு கூறுகளை மேலே விவரித்தவாறு ஆய்வு செய்த பிறகு, சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரை, இதே போல் அளவும் தன்மையும் கொண்ட பிற மாநிலங்களைவிட இந்த மாநிலமே அமைதியோடும், நிம்மதியோடும் திகழ்கிறது எனக் கூறலாம். வலிமையான அரசியல் தலைமை, சட்டத்தை மதித்து அமைதியை நேசிக்கும் பெருவாரியான மக்கள், அரசு அளிக்கும் திறமையான பாதுகாவல் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை ஆகியன, இது போன்ற அமைதியான சூழ்நிலை இம்மாநிலத்தில் நிலவுவதற்கான முக்கிய காரணங்கள் ஆகும்.

(vi) காவல் துறை துப்பாக்கிச் சூடு :

வன்முறை சம்பவங்களைக் கட்டுப்படுத்தவும் கலகக்கார கும்பலை அடக்கவும் அமைதி மற்றும் பொது ஒழுங்கினை நிலைப்படுத்தவும் காவல் துறையினர் கடைசி முயற்சியாக சில நேரங்களில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியுள்ளது.

ஆய்வுக்குட்பட்ட இந்த ஆண்டில் காவல் துறையினர் 40 சந்தர்ப்பங்களில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. அவற்றில் பொது மக்கள் 8 பேர் உயிரிழந்தனர். 78 பேர் காயமுற்றனர், மற்றும் 146 காவல் துறையினர் காயமடைந்தனர். இவற்றில் 15 சந்தர்ப்பங்களில் எவரும் காயமோ/மரணமோ அடையவில்லை. பாபர் மசூதி இடிக்கப்பட்டு, நாடு கொந்தளிப்பான சூழ்நிலையில் இருந்த போது 8-12-1992 அன்று மட்டும் காவல் துறையினர் 12 சந்தர்ப்பங்களில் துப்பாக்கிச் சூடு நிகழ்த்த வேண்டியிருந்தது. பொது மக்கள் இருவர் இறந்து போயினர். இதில் காவல் துறையினரால் எடுக்கப்பட்ட திட்டமிட்ட முன்னேற்பாடான நடவடிக்கை இந்த அபாயகரமான நிலைமையை கட்டுப்படுத்தி நன்றாக சமாளிக்க அரசுக்கு உதவியாக இருந்தது. மற்றும் 27 சந்தர்ப்பங்களில் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பதினோரு சம்பவங்களில், அண்டை மாநிலங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கள்ளத்தனமாக கடத்திய வாகனங்களை நிறுத்த வேண்டி காவல் படையினர் துப்பாக்கிச் சூடு நிகழ்த்த வேண்டியிருந்தது. 4 சம்பவங்கள் கள்ளச் சாராய வேட்டையின் போதும், 4 சம்பவங்கள் காட்டிற்குள் புகுந்து தேடியபோதும், 8 சம்பவங்கள் சமூக விரோதிகள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராகவும் நிகழ்த்தப்பட்டன.

காவல் துறையினர் சட்டம் ஒழுங்கினை பராமரிக்க வேண்டி நிகழ்த்திய மோதல்களில் உயிரிழந்தோர், காயம்பட்டோர், உடமைகள் சேதபப்ட்டோர்களின் குடும்பங்களின் துயர் துடைக்க வேண்டி நிதியுதவியினை நான் கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளேன் :—

(1) மரணமடைந்தோர் .. தலா ரூ. 10,000
(2) காயம்பட்டோர் .. தலா ரூ. 1,000

1993 ஏப்ரல் 20]

வீடு இழப்பு / சேதம் :

(அ) ஆர்.சி.சி. கூரை அல்லது ஓட்டு வீடு.	உண்மையான சேத மதிப்பு அல்லது ரூ. 2,500 இதில் எது குறைவோ அது.
(ஆ) ஓலைக் குடிசைகள் ...	உண்மையான சேத மதிப்பு அல்லது ரூ. 1,500 இதில் எது குறைவோ அது.

கடைகள் சேதம் அல்லது இழப்பு :

(அ) ஓடு வேய்ந்த கடைகள் அவற்றுள் இருந்த பொருட்கள் இழப்பு உள்பட.	உண்மையான சேத மதிப்பு அல்லது ரூ. 2,500 இதில் எது குறைவோ அது.
(ஆ) ஓலைக்கூரை வேய்ந்த கடைகள் அல்லது பங்க் கடைகள் அவற்றுள் இருந்த பொருட்கள் இழப்பு உள்பட.	உண்மையான சேத மதிப்பு அல்லது ரூ. 1,500 இதில் எது குறைவோ அது.
(இ) பொருளீட்ட பயன்பட்ட வாகனங்கள் போன்றவை இழப்பு.	உண்மையான சேத மதிப்பு அல்லது ரூ. 2,000 இதில் எது குறைவோ அது.
(ஈ) வீட்டிற்கு இழப்போ, சேதமோ இன்றி தானியம், துணிமணிகள், இதர வீட்டு உபயோகச் சாமான்கள் போன்றவற்றின் இழப்பு மட்டும் ; அல்லது கடை இருந்த கட்டிடத்திற்கு சேதமோ இழப்போ இன்றி கடையிலிருந்த பொருட்கள் மட்டும் இழப்பு.	உண்மையான சேத மதிப்பு அல்லது ரூ. 1,000 இதில் எது குறைவோ அது.

காவல் துறையின் செயல் திறன் குறித்த இப்பெரும் பகுதியை கண்ணுற்ற பிறகு, அத்துறையின் அடுத்த மிக முக்கியமான செயல்பாடான, குற்றங்களைக் கையாள்வது குறித்து இப்போது காணலாம்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 20

(ஆ) குற்றங்களைக் கையாளுதல் :

குற்றங்கள் மக்களின் உயிருக்கும், உடமைக்கும், அமைதிக்கும், வசதிக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை என்பதால், குற்றங்களை கண்டு பிடித்தலும் தடுத்தலும் தான் காவல் துறையினரின் தலையாய கடமையாகும். மேற்கத்திய பணக்கார நாடுகளில் கூட, குற்ற நிகழ்வுகள் மக்கட் தொகை பெருக்கத்தைவிட அதிக வேகத்தில் அதிகரித்து வருகிறது. அமெரிக்காவில், பலதரப்பட்ட குற்றப் புள்ளிகள் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளன. இங்கிலாந்திலும், குற்றங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன ; இந்தியாவிலும் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதை காண முடிகிறது. ஆனால் இவ்வுயர்வு பெரும்பாலான பணக்கார நாடுகளில் அதிகரித்துக் கொண்டு செல்லும் விகிதத்தோடு ஒப்பிடும்போது, குறைவாகவே உள்ளது. எனவே, குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு என்பது உலகெங்கும் நிகழும் ஒன்றாகும். இந்தியாவில் குற்றப் புள்ளிகள் அதிகரித்தலுக்கு, மக்கட் தொகை பெருக்கம், பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டம், விவசாய அமைதியின்மை, தொழிலாளர் பதட்டம், தொழில் மயமாக்கம், நகர்மயமாக்கம், சமுதாய தகுதியின் மாற்றம், நவீனமயமாக்கம், ஆகியவற்றின் சேர்மானங்கள் காரணமாகும். இளைஞர்கள் குற்றங்களில் ஈடுபட்டு வருவது குற்ற அதிகரிப்புக்கு அச்சமளிக்கும் பிறிதொரு காரணமாகும். வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் எளிய மற்றும், வாழ்வில் சறுக்க வைக்கும் குற்றங்களில் ஈடுபடுவதை மேற் கொள்கின்றனர். அது மட்டுமன்றி, பெரும்பாலான குற்றங்களை, பெருங் குற்றங்களை புரிவதையே நோக்கமாக கொண்ட பெரும் குற்றவாளிகள் புரிகின்றனர். இப்பிரிவினர் பற்றி தான் சமுதாயத்தினர் பெரும் அச்சம் கொள்கின்றனர். இத்தகு கொடூரமான மற்றும் நிரந்தர குற்றவாளிகள், காவலர்கள் குற்றங்களை கண்டுபிடிப்பதில் உள்ள வரையறைகளையும் குற்றவியல் நீதிகளையும் நன்கு அறியத் தொடங்கி இருப்பதாலும் குற்றங்கள் புரிவதன் மூலம் சம்பாதிக்கப்படுபவை அவர்களுக்கு அதிக இலாபகரமானதாகவும் தங்கள் செயலுக்கு ஏற்ற வெகுமதியை அளிப்பது போன்றதாக உள்ளது என்று எண்ணுவதாலும், கைது செய்யப்படுவதில் இருந்து தப்பிக்க அதிக வாய்ப்புகளும் நீதிமன்றங்களினால் நிரபராதி என விடுவிக்கப்படும் வாய்ப்பும் அதிக அளவில் அமைய வாய்ப்புகள் உள்ளது என்பதை உணர்ந்திருப்பதாலும் தற்போதைய குற்றவியல் நீதிகள் இவர்களுக்கு ஒரு அச்சுறுத்தலாக இல்லை. அது மட்டுமன்றி, குற்றம் புரிவதையே தொழிலாக கொண்ட நபர்களுக்கு பண வசதியும் சமுதாயத்தில் செல்வாக்கும் உள்ள நபர்களின் பின்னணியும் உள்ளன. துரதிர்ஷ்டவசமாக, குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் சமயங்களில் எல்லாம், குற்றங்களை குறைப்பதில் காவல்துறையினர் மட்டுமே முழு பங்கு வகிக்க இயலாது என்பதை புரிந்து கொள்ளாமல் காவல்துறையினர் மீது சில தேவை

1993 ஏப்ரல் 20]

யற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. நியாயமான மற்றும் கடினமான சட்ட அமலாக்கம் காலந்தாழ்த்தா அதே சமயம் தகுந்த தண்டனை பெற்றுத்தர தக்க சட்ட நடவடிக்கைத் தொடர்பு, குற்றங்களின் தன்மைக்கேற்ற அளவில் குற்றவாளிக்குத் தண்டனை அளித்தல் ஆகியவை மூலமே குற்றங்களின் எண்ணிக்கையை குறைக்க இயலும். குற்றவியல் நீதியின் மூன்று அங்கங்களான காவல்துறை, நீதித்துறை மற்றும் சிறைத்துறை ஆகியவை ஒன்றிற்கொன்று இணக்கம் அற்ற முறையில் எதிரும் புதிருமாக செயல்படும் முறைக்குப் பதிலாக, ஒன்றுக்கொன்று சுமுகமாகவும் ஒன்றுபட்டும் செயலாற்றுவதன் மூலமே குற்றங்களின் எண்ணிக்கையைக் குறைக்க இயலும். குற்றங்களின் கொடூரத்தைக் கருதாது ஜாமீன் அளித்தல், குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை அளிக்காமல் விட்டுவிடுதல், வழக்குகளை முடிப்பதில் அசாதாரண கால தாமதம், சட்ட நுணுக்கம் மற்றும் குடியுரிமை நடைமுறைகளுக்கு அதி முக்கியத்துவம் அளித்தல், காவல் துறையினர் சார்பான சாட்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தவறுதல் ஆகியவை குற்றங்களை குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவிக்கக் கூடியவை என கருதப்பட வேண்டும்.

ஜனநாயக சமூக அமைப்பில், தனிநபர் சுதந்திரம் மற்றும் தனிநபர் உரிமை ஒரு பக்கமும் இவ்வுரிமைகளை நடைமுறை படுத்த வேண்டிய சட்ட நுணுக்கங்களை மறு பக்கம் ஆய்ந்தும் ஒருங்கிணைக்க வேண்டிய பொறுப்பு காவலர்களுக்கு இருப்பதால், குற்றங்களை கட்டுப்படுத்தும் பணியில் அவர்களது பணி மிகக் கடினமானதாகும். அதனால், ஒரு காவலர் மாநில நன்மைக்காக தனி நபர்களுக்கு எதிராக போரிட வேண்டியது உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக சமுதாயத்தின் முழு ஒத்துழைப்பின்றி குற்றங்களை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை திறம்பட காவலர்கள் நடைமுறைப்படுத்த இயலாது. அநேகச் சூழ்நிலைகளிலும், நிகழ்வுகளிலும் சமுதாயத்தின் பல பிரிவினரிடம் இருந்து காவலர்கள் எவ்வித ஒத்துழைப்பையும் பெற இயலவில்லை.

குற்ற அதிகரிப்பிற்கான பெரும் பின்னணியையும் அவற்றை தடுப்பதில் ஏற்படும் இடையூறுகளையும் விவரிக்க முற்படும் போது ஓரளவு முற்போக்கு எண்ணமும், பல்நோக்கு பரிமாண நோக்கங்களும் தற்போதைய குற்ற அதிகரிப்பின் வேகத்தைக் கட்டுப்படுத்த இயலும். அது மட்டுமல்லாமல். காவலர் பணியின் தொழில் நுட்பங்களை அதிகரித்தல், காவலர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே சுமுக உறவு முறையை வளர்த்தல், நீதிமன்ற சீர்திருத்தங்கள், குற்றங்களை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ள சமூக பொருளாதார அமைப்புகள் மீது தீவிர கண்காணிப்பு ஆகியவை குற்றங்களை குறைக்கத் தேவைப்படும் காரணங்கள் ஆகும்.

[1993 ஏப்ரல் 20

தமிழக காவல்துறையை பொறுத்தமட்டில், குற்றங்களை குறைப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளை எடுப்பதிலும், குற்றவாளிகளை துணிவுடன் பிடிப்பதிலும், திறம்பட தண்டனைக்குட்படுத்துவதிலும் எப்போதுமே சுறு சுறுப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அவர்களின் பணிக்கு மேலும் அவர்களது தொழில் அணுகுமுறையை மேம்படுத்த காவல்துறையினை நவீனமாக்க மைய அரசு அளிக்கும் நிதி உதவியின் கீழ் அதிக வாகனம் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களுடன் நவீனமாக்கப்படுகிறது. குற்ற/புலனாய்வு ஆகிய பணிகள் பற்றி பயிற்சி நிறுவனங்கள் மூலமும் நடைமுறைப் பயிற்சியும் காவல் துறை பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. குற்றப் புலனாய்வுப் பிரிவு, சிலை திருட்டு தடுப்புப் பிரிவு, குடிமைப் பொருள் வழங்கல் புலானய்வுப் பிரிவு, வன புலனாய்வுப் பிரிவு, வணிக குற்ற புலனாய்வுப் பிரிவு போன்ற சிறப்புப் பிரிவுகள் சிறப்புத் தன்மை வாய்ந்த குற்றங்களை கையாள்வதில் சிறப்புத் திறனை வளர்த்துள்ளன.

தமிழகக் காவல்துறையினர் குற்றத் தடுப்பு/கண்டுபிடிப்பு செயல்களில் தங்கள் திறனை நன்கு வெளிப்படுத்தி, இந்தியாவிலேயே இப்பணியில் முதலிடம் வகிக்கின்றனர். குற்றவாளிகளின் செயல்களை கட்டுப்படுத்துவதில் அவர்களின் முயற்சி எப்பொழுதுமே தளர்ந்ததில்லை. அவர்களது செயல்திறனை கீழ்க்காணும் அட்டவணை தெள்ளத் தெளிவாக விளக்கும்: —

தமிழ்நாட்டில் தெரிவிக்கப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்ட சொத்து குறித்த குற்றங்கள் :

குற்றத்தின் தன்மை.	1991 தெரிவிக்கப் பட்டவை.	1991 கண்டு பிடிக்கப் பட்டவை.	1992 தெரிவிக்கப் பட்டவை.	1992 கண்டு பிடிக்கப் பட்டவை.
(1)	(2)	(3)	(4)	(5)
ஆதாயத்திற்காக கொலை.	112	48	89	40
கொள்ளை	116	40	167	55
வழிப்பறிக் கொள்ளை.	515	198	502	288
வீட்டை உடைத்து திருடுதல்.	8,510	3,974	7,442	2,831

பெரும் திருட்டு.	25,850	17,534	23,842	20,098
சிறு திருட்டு	1,531	1,469	1,469	1,394
கால்நடை திருட்டு	649	591	679	613
மொத்தம்	37,283	23,854	34,190	24,671

